அகத்தியர் ஞானம்

டாக்டர் வீ. ஞானசிகாமணி

அகத்தியர் ஞானம்

(விளக்கவுரை)

உரையாசிரியர்

தமிழ்மாமணி

இரட்சணிய யாத்திரிகச் சான்றோன்

முனைவர் வீ. ஞானசிகாமணி

எம்.ஏ., பிஎச்.டி., டிப்.தெலு.,

தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம்

சென்னை.

அகத்தியர் ஞானம்

முதல் பதிப்பு : 1981

இரண்டாம் திருத்திய பதிப்பு : 1983

மூன்றாம் திருத்திய பதிப்பு : 2001

நான்காம் பதிப்பு : 2014

© தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம்

அச்சிட்டு வெளியிடுபவர்

வே. பென்னி, M.Sc., M.A., (Theo.), M.A., M.Phil. (Chr. Studies)

தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம் (CMSI)

20, 2வது தெரு, கொங்குநகர்,

முகப்பேர், சென்னை-600 037.

புத்தகங்கள் கிடைக்குமிடம்

Word of Christ Ministries

எண்.100/3, நிர்மலா அபார்ட்மெண்ட்ஸ்,

மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,

சென்னை - 600 010.

☎ 044-2661 3242 / 4264 0111

அச்சிட்டோர் : மெய்ப்பொருள் அச்சகம்

சென்னை-23.

AGASTHIYAR WISDOM

Commentary

By

Dr. V. Gnanasikhamani, M.A., Ph.D., Dip. Tel.,

Christian Mission of South India
Chennai

AGASTHIYAR WISDOM - COMMENTARY
In Tamil

1st Edition : 1981

2nd Abridged Edition : 1983

3rd Revised Edition : 2001

4th Edition : 2014

© Christian Mission of South India

Printed and Published by

V. Benni M.Sc., M.A., (Theo.), M.A., M.Phil. (Chr. Studies)
Christian Mission of South India (CMSI)
20, 2nd Street, Kongu Nagar,
Mugappair, Chennai - 600 037.

with Assistance from
LATM,
Joplin, M.O., U.S.A.

Printer : Meipporul Achakam,
Chennai-23.

அகத்தியர் ஞானம்

(விளக்கவுரை)

முதல் பதிப்பு

உலகக் கிறித்தவத் தமிழ்ப்பேரவை

நடத்திய

முதல் உலகக் கிறித்தவத் தமிழ் மாநாட்டில்

வெளியிடப்பெற்றது.

திருச்சி

திசம்பர் 28-30, 1981.

“என்னைச் சிநேக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நிரப்பும்படிக்கும்.” நீதி.8:20

★★★

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு” - திருக்குறள், 355

“குணம்நாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்கக் கொளல்” - திருக்குறள், 504

✦✦✦

“காய்த லுவத்த லகற்றி வொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே”

✸✸✸

“மண்ணாதி பூதமுதல் வகுத்ததொரு வான்பொருளைக்
கண்ணாரக் காணக் கருத்திசைத்து போற்றீரே.”

“பொய்ப் பொருளை விட்டுப் புலமறிய வொண்ணாத
மெய்ப்பொருளை நாளும் விருப்புற்று போற்றீரே.”

“பொய்யான கல்வி கற்றுப் பொருள் மயக்கங் கொள்ளாமல்,
மெய்யான ஞானக் கல்வி விரும்புவாய் கன் மனமே.”

இடைக்காட்டுச் சித்தர்:
பலரொடு கிளத்தல் - 51,54,61.

முனைவர் வீ. ஞானசிகாமணி

(1943-2012)

'இரட்சணிய யாத்திரிகச் சான்றோன்', 'இலக்கியச் செல்வர்', 'தமிழ்மாமணி' முனைவர் வீ. ஞானசிகாமணி அவர்கள் 01-07-1943ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி வட்டத்திலுள்ள காயலார்மேடு என்னும் கிராமத்தில் திரு. வீரப்பிள்ளை (வேதநாயகம்) திருமதி. கண்ணம்மாள் (நகோமியம்மாள்) ஆகியோருக்கு முதல் மகனாகத் தோன்றினார்.

தொடக்கக் கல்வியைக் கிராமத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் இராணுவ பள்ளியிலும் படித்தார். நடுநிலை, உயர்நிலைக் கல்வியை பொன்னேரியில் பயின்றார். PUC படிப்பை சென்னை தியாகராயர் கல்லூரியிலும், தாம்பரம் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இளங்கலை வரலாறும் (1962-65) பயின்றார். மாநிலக் கல்லூரியில் முதுகலை தமிழ் இலக்கியம் பயின்றார்.

டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் மேற்பார்வையில் எச். ஏ. கிருஷ்ண பிள்ளையின் நூல்கள் பற்றி முதன்முதலாக ஆய்வு செய்து முனைவர் பட்டம் (1974) பெற்றார். இவர் எபிரேயம், கிரேக்கம், தெலுங்கு முதலிய மொழிகளைப் படிக்கும் காலத்திலேயே கற்றார். இளங்கலைப் பட்டம் படிக்கும் காலத்திலேயே 'கிறித்தவ உபதேசம்' என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

தமிழ் இலக்கியம் பயின்றதின் காரணமாகவும் கிறித்தவ இலக்கியத்தில் ஆராய்ச்சி மேற்கொண்டதன் விளைவாகவும் 'வேதாகம இலக்கிய நிலையம்' Bible Literature Service என்னும் நூல் வெளியீட்டு நிறுவனத்தை அமைத்து, இலக்கியப் பணி மேற்கொண்டார். பதிப்பகத்தின் நோக்கமாக ஆங்கிலத்திலுள்ள சிறந்த வேத ஆராய்ச்சி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுதல், அறியப்படாமலிருக்கிற கிறித்தவ இலக்கியங்களைப் பதிப்பித்தல், தமிழ்க் கிறித்தவ இலக்கியங்கள் உருவாக ஊக்குவித்தல், வேதாகமத்தின் உண்மைகளை நூல்கள், கைப்பிரதிகள் வாயிலாக நற்செய்திப் பணி செய்தல் என பல நிலைகளில் பொருள் நோக்கமின்றிப் பலதிறப் பணிகளை செயல்படுத்தியிருக்கிறார்.

பதிப்புப் பணி

பதிப்பகத்தின் வழி அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் 5, உரையெழுதி

பதிப்பித்தவை 5, பதிப்பாசிரியராக பதிப்பித்த நூல்கள் 7, மொழிபெயர்த்துப் பதிப்பித்த நூல்கள் 47, ஆங்கில நூல்கள் பதிப்பு 10, ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டது 3, பிறமொழி பதிப்பு 9 (தெலுங்கு, காசி), இதழ்கள் 2, ஆக 88 நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவருடைய சில நூல்கள் மறுபதிப்புகளாக கிறித்தவ இலக்கியச் சங்கம் (CLS), மணிவாசகர் பதிப்பகம் முதலான பதிப்பகங்கள் வழி வெளிவந்துள்ளன. 'இரட்சணிய தேவாரம்' என்னும் இவருடைய உரைநூல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150-வது ஆண்டு வெளியீடுகளுள் ஒன்றாக வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

நற்செய்திப் பணி

பள்ளியில் பயின்ற இளம்வயதிலேயே தன் குடும்பத்தில் முதன்முதல் இயேசு கிறித்துவை ஏற்றுக்கொண்ட இவரைப் பின்பற்றி இயேசு பெருமானின் அன்புக்குள் ஈர்க்கப்பட்ட உடன்பிறந்தோரும் உற்றாரும் மற்றோரும் எண்ணற்றோர். 'இந்திய நற்செய்தி ஊழியம்' என்ற அமைப்பின் வழி வட தமிழகத்திலும் ஆந்திராவிலும் இவரால் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதி மற்றும் திருச்சபைகள் நூற்றுக்கும் மேற்பட்டவை.

'உலகக் கிறித்தவத் தமிழ் இலக்கியப் பேரவை' என்ற அமைப்பு உருவாகப் பெருந்துணையாய் இருந்தவர். தொடர்ந்து நடைபெற்ற உலகக் கிறித்தவத் தமிழ் மாநாடுகளில் இவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

கல்வி - இறையியல் பணி

சென்னையிலுள்ள தென் ஆசியக் கிறித்தவக் கல்லூரியில் 12 ஆண்டுகள் சமய ஒப்பாய்வு (Comparative Religion) கற்பித்துள்ளார். சென்னையிலுள்ள நற்செய்திக் கல்வி நிலையத்தில் ஆறு ஆண்டுகள் திருச்சபை வரலாறு பயிற்றுவித்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் கிறித்தவ இலக்கிய இருக்கையில் கௌரவப் பேராசிரியராகப் பணியாற்றிய சமயத்தில் பல்கலைக்கழகத்தில் பல தமிழ் கிறிஸ்தவ அறக்கட்டளைகள் நிறுவப்படுவதற்குக் காரணமாய் விளங்கினார். கிறித்தவத் தமிழ் இலக்கிய இருக்கைக்கும் கிறித்தவ இலக்கியத்திற்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உயிரூட்டியவராகவும் திகழ்ந்தார்.

ஞானசிகாமணி என்ற ஒரு மனிதர் - நற்செய்தியாளர் - கிறித்தவ இலக்கிய அறிஞர் - என்ற இறை அடியாரின் வாழ்வும் பணியும் படைப்பும் அநேகருடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ளது.

நினைவுப் படையல்



பேரா. டான் டீவெல்ட்

(1919–1991)

திருமறைப் பேராசிரியர், விளக்கவுரையாளர்

பொருளடக்கம்

		பக்கம்
I.	முனைவர் வீ. ஞானசிகாமணி	9
II.	படையல்	11
III.	உரையாசிரியர் முன்னுரை	14
IV.	பாகவதர் வேதநாயக சாஸ்திரியார் - அணிந்துரை	16
V.	பேரா. எபி. சுந்தர்ராஜ் - கருத்துரை	17
VI.	முதல் பதிப்பின் முன்னுரை	19
VII.	பேரா. பொ. ஆ. சத்தியசாட்சி முன்னுரை	22
1.	முன்னுரை: 'பாடுகின்றேன் முப்பதுக்குள்'	24
2.	தமிழர் சமயம்	26
3.	பதினெண் சித்தர் ஆராய்ச்சி	32
4.	சுந்தரன், கொங்கணவன், தேரையன்	36
5.	இடைக்காட்டுச் சித்தர், கழாய்ச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர்	46
6.	முப்பது முக்கியம்	51
7.	சுத்த சிவன் இருப்பிடம்	52
8.	கருவூரார் கருத்து	65
9.	நெறி பத்து	74
10.	நம்மைப் படைத்தவரைத் தேடவேண்டும்	85
11.	கயிலாயம் போக இயலுமா?	92
12.	செய்ய வேண்டாதவை	95
13.	அன்பாகத் திறந்துவிட்டேன்	103
14.	அறிவை அழித்துவிடக்கூடாது	123
15.	நினைத்துப் பாருங்கள்	143
16.	நிலையான ஞானக் கண்ணொளி	149
17.	கரை ஏறவேண்டும்	160

18. வேதத்தின் வெளிச்சம் 170

19. வேதாந்த தமிழ் மார்க்கம் 174

20. தினமும் செபம் செய்யவேண்டும் 186

21. தீட்சை பெற்று கடவுளைத் தேடுதல் வேண்டும் 188

22. மெய்ஞ்ஞான பாதையின் அடையாளம் - பத்து மொழி 197

23. செகசோதியானவரை வணங்குவீர்களாக 200

24. ஒன்றான மார்க்கம் 214

25. நூலின் எதிர்காலம் 217

26. மக்கள் தேடவேண்டிய சித்தர்கள் 219

27. கண்ணீரால் கழுவ வேண்டும் 224

28. முக்திபரன் அருகிருப்பாய் 237

29. எச்சரிக்கை 250

30. முடிப்புரை: 'முப்பதுக்குள் பரமகுரு சொன்னபடி பாடினேன்' 265

அடிக்குறிப்புகள் 271

பின்னினைப்பு 278

துணை நூல்கள் 282

மூன்றாம் பதிப்பின் முன்னுரை

முன்னாள் மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரான பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார், "**தமிழ் இலக்கிய வரலாறு**" (சாகித்திய அகாதமி புதுதில்லி, முதல் வெளியீடு, 1972) என்னும் நூலில், பழந்தமிழ் இலக்கணம் செய்த அகத்தியரிலிருந்து **சித்தர் அகத்தியரை** வேறுபடுத்திக் காட்டிய பின்னர் சித்தர்களைக் குறித்து:

இவர்கள் பழைய தமிழிலக்கண மரபுகளையும் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் பாடல்கள் இயற்ற விரும்பிய காரணத்தால், நாட்டுப் பாடல்களில் கண்ட பல செய்யுள் வடிவங்களைப் பயன்படுத்தி எளிய பேச்சு வழக்குச் சொற்களைக் கையாண்டு பாடல்களைப் பாடியிருக்கின்றார்கள். சிலருடைய பாடல்கள் மறைபொருள் உடையவை. வெளிப்படையாகப் பார்க்கும் போது எளிய பொருள் ஒன்று தோன்றும்; ஆழ்ந்து கற்றால் உட்பொருள் ஒன்று உணரப்படும் (பக்.190)

என்று எழுதியுள்ளதற்கு இணங்க **அகத்தியர் ஞானம்** என்னும் நூலினைப் பல ஆண்டுகளாக, கடவுள் அருளுடன் ஆழ்ந்து கற்றதின் விளைவே இந்த உரை.

அகத்தியர் ஞானம் முதன்முதல் வெளியிடப்பெற்ற காலத்தையும், சித்தர்கள் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்பையும் பக்கம் 248இல் காண்க.

அகத்தியர் சித்தர் பரமகுரு சொன்னபடி முப்பது பாடல்களில் மெய்ப்பொருளைப் பாடியுள்ளதை முதல் பாடலில், "பாடுகின்றேன் முப்பதுக்குள் பார்க்கத்தானே" என்றும், ஆறாம் பாடலில், "முகித்திட்டேன் முப்பதுக்குள் முக்கியந்தானே" என்றும், 7ஆம் பாடலில், "முப்பதுக்குள் அடக்கிவிட்டேன் முந்நூல் பார்த்து" என்றும், இறுதியாக 30ஆம் பாடலில், "பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்; பரமகுரு சொன்னபடி பாடினேனே" என்றும் கட்டுக் கோப்புடன் இடைச் செருகலுக்கும், பிறரது வஞ்சக சூழ்ச்சிக்கும் இடம் இராதவாறு அமைத்துப் பாடியுள்ளார்.

இவ்வாறு நூல் செய்த பின்னர்:

"ஒன்றான மார்க்கமதை விரித்துக் காட்டி
உலகமதில் இந்நூலை விரிக்கச் செய்து
தண்டாமல் பொதியமா மலையில் என்னைத்
தாபித்துத் தயங்காமல் இருக்கச் சொல்லி
ஒன்றான பரப்பிரமம் சொன்னாற் சொன்னாற்
ஓகோகோ புலத்தியனே உரைத்திட்டேனே"

என்று (பாடல் -24) தமது வாழ்க்கையின் முடிவு காலத்தைக் குறித்துக் கூறியுள்ளார். "பொதிகை" என்பது அகத்தியர் பாடியுள்ளதுபோல, "மாமலை" பெரிய மலை என்று, சிறு மலையினின்றும் வேறுபடுத்தி, பேராயர் **கால்டுவேல்** தமது தன்னிகரற்ற **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணநூலில்** குறிப்பிட்டுள்ளார். இதற்கு இவர் கொடுத்துள்ள வேர்ப்பொருள்: பொதி, மூடிக்கொள்ளுதல் **(to Cover)** மறைத்துக் கொள்ளல் **(to Conceal)** என்பதாகும். இது **அகத்தியர் சித்தரின்** வாழ்க்கை முடிவாகும். இந்த ஒப்பற்ற ஒப்பிலக்கண நூலின் முதல் பதிப்பு 1865இல் வெளிவந்தது. ஏனைய வாழ்க்கைக் குறிப்புகளை நூலுள் ஆங்காங்கே காண்க.

அகத்தியர் சித்தர் கிறிஸ்துவின் நற்செய்தியினை அறிவதற்குத் துணையாய் இருந்த கி.பி. முதல் நூற்றாண்டின் நற்செய்தி வரலாற்றுச் சூழலைப் பின்னிணைப்பு 1-இல் காண்க.

அகத்தியர் ஞானம் - விளக்கவுரை, 1981ஆம் ஆண்டில் **திருச்சியில்** நடைபெற்ற **முதல் உலகக் கிறித்துவத் தமிழ் மாநாட்டில்** வெளியிடப் பெற்ற பின்னர், மெய்ப்பொருள் அன்பர்கள் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்க, முழுநூலும் வெளியிட இயலாத நிலையில் ஒரு சுருக்கப் பதிப்பு 64 பக்கங்களில் 1983இல் வெளிவந்தது. இதுவும் **வேலூரில்** நடந்த **இரண்டாவது உலகக் கிறித்துவத்** தமிழ் மாநாட்டில் வெளியிடப் பெற்றது (டிசம்பர் 27-29, 1983). இப்பொழுது கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கழித்து முழு நூலும் வெளிவருவதற்குக் கடவுள் அருள் பாலித்திருக்கின்றார்.

பல மெய்ப்பொருள் அன்பர்கள் கடந்த இருபது ஆண்டுகளில் நூற்றுக்கணக்கில் நூல் கேட்டு இருந்தனர். கடவுள் அவர்க்ள செபத்தையும் கேட்டிருக்கின்றார்.

என்னுடைய இளவல் பென்னியின் பெரு முயற்சியினால் இந்த மூன்றாம் திருத்திய பதிப்பு வெளிவருகின்றது. இவருக்கு என் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அச்சுப்படிகளைத் திருத்துவதில் எப்பொழுதும்போல எனக்குப் பெரிதும் துணைபுரிந்த என் துணைவி ரூத் நேசகுமாரி, என் மகள் அன்னாள் ஞா.ஞா.சிகாமணி, பி.எச்.டி, ஆகியோருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிகுந்த அன்புடன் அணிந்துரை அளித்துள்ள பாகவதர் வேதநாயக சாஸ்திரியார் அவர்களுக்கும், கருத்துரை அளித்துள்ள பேரா. எபி சுந்தர்ராஜ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நூலினை மிகுந்த பொறுமையுடனும் சிறப்பாகவும் அச்சிட்டுள்ள **மெய்ப்பொருள் அச்சகத்தார்க்கும்** நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சென்னை, நூலாசிரயன்,
23.02.2001

கிளமென்ட் வேதநாயக சாஸ்திரியார்
பாகவதர் வேதநாயக சாஸ்திரியார்

15/1, கந்தப்ப ஆச்சாரி தெரு,
புரசை, வேப்பேரி அஞ்சல்,
சென்னை - 600 007.

தேதி : 19-2-2001

அணிந்துரை

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என் சகோதரனும் எனது இனிய நண்பருமாகிய முனைவர் வீ. ஞானசிகாமணி அவர்கள் மூன்றாவது முறையாக வெளியிடுகின்ற **"அகத்தியர் ஞானம்"** புத்தகத்திற்காக சில வார்த்தைகளை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப்புத்தகம் கிறிஸ்தவர்களுக்கு வியப்பையும், கிறிஸ்தவரல்லாதோருக்கு தெளிவையும் உண்டாக்கக்கூடிய ஒன்றாக அமைந்திருப்பதால், இவ்விரு சாரரும் விரும்பக்கூடிய நூலாக இந்நூல் செயல்படும் என்பதில் ஐயமில்லை. விசேஷமாய் என்னைப் போன்று தெய்வப் பணியில் தங்களை ஈடுபடுத்தியுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் இப்புத்தகத்தை வாசிப்பதும், இதிலுள்ள அகஸ்தியர் பாடல்களை மனனம் செய்வதும் மிக்க அவசியம் என்றே சொல்லுவேன். இப்படியாக அகஸ்தியர் பாடல்களை மேற்கோள் காட்டி, பொது மக்களிடத்தில் கிறிஸ்தேசுவை மெய்தெய்வமாகவும், ஒரே பாவப் பரிகாரியாகவும் விளக்க முயலும்போது கேட்போரின் சிந்தனைகள் சிந்திக்கத் தூண்டப்படுகின்றன என்பது யான் என் ஊழியத்தில் கண்ட அனுபவம். முன்பதிப்பில் வெளியான இந்நூலை வாசித்து, ருசித்து பயனடைந்த ஒரு சிலர், சமீபகாலத்தில் என்னை அணுகி, இந்நூல் மீண்டும் அச்சில் வர வாய்ப்புண்டா என்று வாஞ்சையோடு கேட்டதும் உண்டு. இக்கூட்டத்தாரின் வாஞ்சையை நிறைவேற்றும் வகையில் மீண்டும் இந்நூல் அச்சிடப்பட்டிருப்பது தெய்வத்தின் எத்தனம் என்றே சொல்ல வேண்டும். கிறிஸ்து இயேசுவுக்கே எல்லாப் புகழும் இன்றும் என்றும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் இறைபணியில்,

ஊழியன் பா.வே. சாஸ்திரியார்.

முனைவர் எபி சுந்தர் ராஜ்

துணை ஒருங்கிணைப்பாளர்,

அனைத்துக் கிறித்துவப் பேரவை.

பாரத் சோதி

1145, 37வது பிளாக்கு,

சீவன் பீமா நகர்,

சென்னை - 600 101.

1-3-2001

கருத்துரை

இந்திய நாட்டுச் சான்றவரை (கிறித்தவரை) மூன்று கூட்டமாகப் பகுக்கலாம். முதல்வர்: ஐரோப்பியக் கிறித்துவமே கலப்பற்ற கிறித்துவம் என அதன் கொள்கை, கோட்பாடுகளை மட்டுமல்லாது, அதன் மொழி, கலாச்சாரம், இலக்கியம், தத்துவம் இவையும் தேவையும், போதுமானதுமென நிலைப்படுத்துவோர். இக்கூட்டம் மிகப்பெரியது. இரண்டாமவர்: ஆரியமே இந்தியம் என வாதாடி, இந்தியக் கிறித்துவத்தை ஆரியத்துடன் இணைப்பவர். இந்தியக் கிறித்துவம் பிழைக்கவோ, தழைக்கவோ வேண்டுமெனில், அது ஆரியம் ஆக்கப்படுதல் இன்றியமையாததென்று நிலைப்படுத்துவோர். இக்கூட்டம் சிறியது.

மூன்றாமவர்: திருமறை காட்டும் குருபரன், பிறவாயாக்கைப் பெரியோன் (ஆதன்) படைப்புத்தொட்டு இந்நாள்மட்டும் அளித்த அருட்பெருஞ்சோதியின் தனிப்பெருங்கருணையைச் சிந்தையிற்கொண்டு, சிந்துவெளி முதல், சிலுவை மொழி, சங்க நூல் வழி, தோமை திருத்தூதுவர் சின்னமலை தொட்டு பொதிய மலைமட்டும் வரைந்த, பறைந்த போதனை அத்துணைக்கும் உள்ள தொடர்பை எடுத்தியம்பி அவற்றில் இழையோடுகின்ற மறைவாக்கைத் திரட்டி நமது ஒருதாய் மக்களாம் திரமிளி (தமிழ்) மக்களுக்குத் தங்கள் மொழிவழி, கலைவழி ஊட்டும் சீரிய தொண்டில் சிக்கியிருப்பவர். இக்கூட்டம், விரல்விட்டு எண்ணும் தொகையான மிக மிகச் சிறு கூட்டம்.

இக்கூட்டத்தில் ஒருவராக, இச்செயற்கரிய செய்கையில் தன் வாணாளை ஈந்து உழைக்கின்ற முனைவர் ஞானசிகாமணி அவர்களைப் பாராட்டுவது தமிழ் உலகின் கடமை.

அகத்தியர் ஞானத்தோடு நின்றுவிடாது அனைத்துத் தமிழ் ஏடுகளிலும் அடங்கியிருக்கும் அருள் ஒளியை வெளிக்கொணர முனைவர் ஆவன செய்ய விழைகின்றேன்.

இத்தொண்டில் இறவா இன்பத்தெமை இருத்த வேண்டிப் பிறந்த பிறவா முதல்வன், முனைவருக்குத் துணைபுரிய வேண்டி நிற்கும்.

எபி சுந்தர் ராஜ்

துணை ஒருங்கிணைப்பாளர்,

முதல் பதிப்பின் முன்னுரை

அகத்தியர் ஞானம் என்னும் சிறு நூல், 16 பக்கங்களுடையதாய் 1969இல் எனக்குக் கொடுக்கப்பட்டது. டாக்டர் டேவிட் சாலமோன், எம்.பி., பி.எஸ்., இதனை என்னிடம் கொடுத்தார். நூல் மிகப் பழமையானதாய் இருந்ததால் ஒவ்வொரு தாளும் தனித்தனி உரையில் போட்டு என்னிடம் கொடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் கழித்தும் இந்நூல் இன்னும் அவ்வாறே என்னிடம் உள்ளது. அதனை அவ்வப்போது படிப்பேன்; ஆனால், அதிகமாக எண்ணுவது இல்லை.

1959இல் முதல் பதிப்பாக வெளிவந்த, "**சித்தர் பெரிய ஞானக் கோவை** என வழங்கும் **சித்தர் பாடல்கள்**" என்னும் மூன்றாம் பதிப்பு (1968) எனக்குக் கிட்டியது. பதிப்பாசிரியர் அரு.ராமநாதன்; பதிப்பித்தோர்: சென்னை பிரேமா பிரசுரம். இதில் அகத்தியர் ஞானம் என்னும் தலைப்பில் பாடல்கள் உண்டு. ஆனால், இந்த நூலின் பாடல்கள் இல்லை. 1979இல் பூம்புகார் பிரசுரத்தார் (பதிப்பாசிரியர்: த. கோவிந்தன்) வெளியிட்ட **சித்தர் பாடல்கள்** என்னும் நூல் முதல் பதிப்பு **(1976)** கிட்டியது. இதிலும் **அகத்தியர் ஞானம்** என்னும் தலைப்பில் பாடல்கள் உண்டு. ஆனால், இந்த நூல் பாடல்கள் இல்லை.

சுத்தப் பதிப்பு என்னும் குறிப்புடன், "பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை" என்னும் தலைப்பில் பி.இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் வெளியிட்ட மற்றும் ஒரு பதிப்புண்டு. அதிலும் இந்தப் பாடல்கள் இல்லை.

திரு. பாகவதர் வேதநாயக சாஸ்திரியார் அவர்கள் சித்தர் பாடல்களில் மெய்ப்பொருளைக் குறித்துப் பேச ஓரிருமுறை கேட்டிருக்கிறேன். அது என்னை என்னிடம் இருந்த நூலின் ஆழத்தை எண்ணிப்பார்க்கத் தூண்டியது. இந்நூலின் உரைக்கு அது ஒரு பெருந்தூண்டு கோலாகும்.

இந்த நூலில் 25ஆம் பாடல் இப்படி ஓடுகிறது:

"உரைத்திட்டேன் என்று சொல்லிச் சித்தர் எல்லாம்
ஒட்டாரமாக என்னைக் கோபிப்பார்கள்;
மறைத்திட்ட பெரியோரும் உலகத்தோரும் மயங்குவார்
என்னையுமே வசையாய்ச் சொல்வார்;
குறைத்திட்டே உரைத்த இந்த நூலைத்தானே
கூசாமல் சொல்லிவிட்டேன் கிழிக்கப் பார்ப்பார்;
அறைந்திட்டேன் புலத்தியனே சமயம் பார்த்து,
அவர்களுக்குக் காண்பிப்பாய் அறியத்தானே."

இந்நூல் ஏனைய பதிப்புகளில் கைவிடப்பட்டதற்கும், பரப்பப்படாமல் போனதற்கும் அகத்தியரே காரணம் சொல்லியிருக்கின்றார் என்பது புலப்பட்டது. "**புலத்தியனே சமயம் பார்த்து அவர்களுக்குக் காண்பிப்பா யறியத்தானே**" என்ற சொற்கள் என்னை வெகுவாய் ஆட்கொண்டன. இந்நூலில் என்னதான் உண்டு பார்க்கலாமே-சிந்திக்கலாமே என்று தொடங்கினேன்.

இன்னும் ஒரு தயக்கம். இதில் மொத்தம் 30 பாடல் உண்டு; இறுதிப்பாடல் 30 என்னும் எண்ணுடன் முடிந்தாலும் 10ஆம் பாடல் கிட்டவில்லை. இந்தப் பாடல் இல்லாமையால், இது கிட்டுமானால் நான் இதைக் குறித்து ஆராய்வது ஆண்டவரின் திருவுளச் சித்தத்திற்கு இசைந்ததாகும். கிட்டவில்லை என்றால் இந்தக் கடமை என்னைச் சாராது என்று நீண்ட காலம் இருந்து விட்டேன். திரு.என்.ஜெ.எஸ். சிவசுந்தரம் என்பவர் எழுதிய **முக்தி வழி** என்னும் நூல் கிட்டியது. இதில் தேவாதீனமாக நான் தேடி வந்த பாடல் கிட்டியது. இதில் ஜெபத்துடனும் ஆவியானவர் துணையுடனும் ஆராய்ந்து அறிய முயன்றேன். விளைவு இந்த உரை.

இதன்கண் உள்ள பொருள் ஒரு சார்புடையதாய்த் தோன்றினாலும், உரை, நூலாசிரியரின் மனத்தை அறிய வேண்டும் என்னும் எண்ணத்துடனேயே எழுதப்பட்டது. உரையாசிரியன், நூலாசிரியரின் எண்ணத்திற்கு ஊறுசெய்தல் அறமாகாதே! **மெய்ப்பொருள்** காண்பதே அறிவு! இந்நூலைக் கற்போர் இக்கருத்தை உள்ளத்தில் கொண்டு என்னைப் பொருத்தருள்வார்களாக.

இரு பதிப்புகள்

இந்நூலின் இரண்டு பதிப்புகள் வெளிவந்துள்ளன. முதல் பதிப்பு மிகப்பழமையானது. சென்னைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தார் துணையுடன் 46ஆம் வரிசையினை உடையதாய் விளங்குகிறது. (M.R.T. & B.S. General Series No.46 in Union with the C.L.S.). ஆண்டு தெளிவில்லை. இதிலே சிறு உரைக்குறிப்புகள் உண்டு. நூல் குறித்து வேறு விவரம் இல்லை. அடுத்த பதிப்பு நாகர்கோயில் **தூதன்** அச்சகத்தில் அச்சு பெற்று, நெல்லை மாவட்டம், விக்கிரம சிங்கபுரம், தெற்குதர வீதியிலிருந்த அ. வள்ளிநாயகம் என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. இதிலும் ஆண்டுக் குறிப்பு இல்லை. பக்.16 (16+iv). பிற பதிப்புகள் இருந்தால் எனக்குத் தெரியாது.மற்ற பதிப்புகளில் உள்ள அகத்தியர் ஞானப்பாடல்கள் விவரம்: 1907ஆம் ஆண்டுப் பதிப்பில் அகஸ்திய மகாமுனிவர் அருளிச் செய்த ஞானம் என்னும் தலைப்பில் 16 பாட்டுகள் உண்டு. இவர் பெயரிலேயே இன்னும் இதில் 6 பாட்டுகள் உண்டு.

1959ஆம் ஆண்டுப் பதிப்பில்: அகத்தியர் ஞானப்பாடல்கள்:

ஞானம் - 1	-	10	பாடல்
ஞானம் - 2	-	1	பாடல்
உயர் ஞானம்	-	1	பாடல்
தனி ஞானம்	-	3	பாடல்
ஞானம்	-	7	பாடல்
ஞானம் - 4	-	16	பாடல்
ஞானம் - 5	-	13	பாடல்

என்று உண்டு. மொத்தப்பாடல் 15. 1976ஆம் ஆண்டுப் பதிப்பில் அகத்தியர் ஞானம் என்னும் தலைப்பில் மொத்தம் 48 பாடல் உண்டு. மூன்று பதிப்புகளிலும் பாடல்களிலும் கலப்புண்டு. இறுதியாகக் குறிப்பிட்ட பதிப்பில் 36 பாடல்கள் உண்டு. ஆனால் நமது நேரடி ஆராய்ச்சிக்குரிய 30 பாட்டுகள் இவற்றுள் இல்லை. இது முன்னரே சுட்டப்பட்டது. இந்த அகத்தியர் அஞ்சியது போல இவை இவர்களாலும் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நூலாசிரியர் பற்றிய குறிப்பு

நூலின் அகச்சான்றின்படி நூலாசிரியர் பெயர் அகத்தியர் என்பதாகும் (1). இவர் பதினெட்டுச் சித்தர்களுள் ஒருவர் (3,5). சித்தர் பதினெட்டுப் பேர் என்னும் மரபு தமிழகத்தில் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. "சித்தர்கள் பதினெண்மர் எனத் தொகுத்துக் கூறுவர் ... சித்தர் வரிசையில் அகத்தியருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது" என்று முன்னாள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே.கே. பிள்ளை கூறுவர். (தமிழக - வரலாறு மக்களும் பண்பாடும், பக்.409-410). சித்தர்களின் வாழ்க்கையைப் பற்றிய விவரமான செய்தி கிட்டுவது அரிதாயிருக்கின்றது என்பதையும் டாக்டர் கே.கே.பிள்ளை தமது நூலுள் குறித்துள்ளார். பதினெட்டுப் பேரைத் தவிர தமிழகத்தில் வேறு பல சித்தர்களும் இருந்திருக்கின்றனர்; சித்தர் பாடல்களும் ஆயிரக்கணக்கில் இருந்திருக்கின்றன. **அகத்தியர்** தமது நூலைச் செய்த பின்னர் தென்பாண்டித் திருநாடாம் திருநெல்வேலியிலுள்ள பொதிய மலையில் சென்று தங்கிவிட்டதாய்க் குறிப்பிட்டுள்ளார் (24).

அகத்தியர் எவ்வாறு பரமகுருவை அறிந்தார்?

பரிசுத்த தாமசு வாயிலாகக் கி.பி. முதல் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்த நற்செய்தியின் மூலம் பரமகுருவை அறிந்தார். விவரம் நூலுள் காண்க.

பாடல் நடை

ஏனைய சித்தர் நூல்களில் காணப்படும் சித்தர் பாடல்களின் நடையை ஒத்தே உள்ளது.

பொருள் கூறும் முறை

சித்தர்களுக்கே உரிய தனிப்பாணியான மறைமுக நிலை. "மறை பொருளான சொற்களைக் கொண்டு எளிய கருத்தை விளக்குவதும் எளிய சொற்களைக் கொண்டு மறைபொருள்களை விளக்குவதும் இவர்கள் கையாண்ட இலக்கிய மரபாகும்."

நான் எழுதிய உரையைப் படி எடுத்துக் கொடுத்த திரு. சீகன் பால்கு குருநாதன், பி.எசி., பி.எட், என்பாருக்கு என் நன்றியும் ஆசியும் உரித்தாகுக.

பேராசிரியர், டாக்டர் பொ.ஆ.ச. அவர்களின் **"இந்த நூல்! இந்த உரை!"** என்னும் நூலின் திறன் காட்டும் அணிந்துரைக்கு நான் அவர்கட்கு என்றும் நன்றி கடப்பாடுடையேன்.

இந்நூல் சிறப்பாகத் தமிழர் சமயம் - சமுதாயம் - பொருளாதாரம்; பொதுவாக இந்திய நாட்டின் சமயம் - தத்துவம் - சமுதாயம் - பொருளாதாரம் இவற்றை சற்று விரிவாய் அறிந்துகொள்ளவும், பண்டிதர் ஜவஹர்லால் அவர்களின் The Discovery of India என்னும் நூலைப் போலத் தமிழ் நாட்டுச் சூழலில் தமிழ்நாட்டையும் ஒரு வகையில் இந்தியாவையும் என்னையும் நான் கண்டுபிடிக்கவும் உதவியது. உங்கள் அன்புக்கும் பொறுமைக்கும் நன்றி. **பரமகுருவின்** அருள் உங்களைச் சூழ்ந்த வழிநடத்துமாக.

26.12.1981 பரமகுருவின் அடியான்,

வீ. ஞானசிகாமணி

இந்த நூல்! இந்த உரை!

பேராசிரியர் சென்னைக் கிறித்தவக் கல்லூரி
டாக்டர் பொ.ஆ. சத்தியசாட்சி **தாம்பரம், சென்னை-600059**

டாக்டர் வீ. ஞானசிகாமணி அவர்கள் வெளியிடுகின்ற **'அகத்தியர் ஞானம்'** தமிழுலகிற்கு வழங்கப்படுகின்ற பெறற்கரிய செல்வமாகும். ஏதையேனும் சொல்ல வேண்டுமே என்ற கடமைக்காகவோ, வறிய புகழுரையாகவோ இவ்வாறு யான் சொல்லவில்லை. இது பெறற்கரிய செல்வம் என்பது முழுமையான உண்மை. தமிழகத்தில் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் உழைப்பும் உள்ளொளியும் நுண்மையும் செறிவும் ஆழமும் அருமையும் ஒருங்கே அமையப் பெற்ற நூல்கள் ஒருசில வெளியிடப்பட்டிருந்தால் அந்த ஒரு சிலவற்றுள் ஞானசிகாமணி அவர்களின் உரையுடன் வெளியாகின்ற இந்த நூலும் ஒன்றாகும். ஞானசிகாமணி ஞானசிகாமணிதான்.

'அகத்தியர் ஞானம்' உரையுடன் வெளியாகின்றது என்ற அளவில் சொல்லி நிறுத்தி விடுவதற்கில்லை. ஞானசிகாமணியின் உரை அகத்தியர் ஞானத்தை நல்லதோர் இலக்கியமாகச் சிறப்பு செய்து காட்டுவதுடன், உரையே ஒரு தனி இலக்கியமாகவும் திகழ்கின்றது. வரலாறு, தத்துவம், அறிவியல், மொழியியல் ஆகிய பல இயலும் கூடியதொரு கருவூலம் என இந்நூலைப் போற்றுவேன்.

சங்க இலக்கியங்களில் கூறப்படுகின்ற அகத்தியர் வேறு. இந்த இலக்கியத்தைப் பாடியிருக்கிற அகத்தியர் வேறு என்பது யாரும் அறிந்த உண்மையாகும். அவருடைய பெயரை இவர் வைத்துக்கொண்டதால் குற்றமொன்றுமில்லை. எடுத்த எடுப்பில் இதனைச் சுட்டிக்காட்டி நகையாடுகின்ற ஆராய்ச்சியறிஞர்களும் இருக்கிறார்கள் இந்த வையகத்தில்! இந்த அகத்தியருக்கென ஒரு தனிநடை உண்டு. அவருடைய நடைக்கென ஓர் எளிமை, ஓர் எழில், ஓர் இசை, ஏன் ஒரு துறவும் உண்டு. எழுத்திலே துறவு! அங்கே ஆரவாரம் இருப்பதில்லை, அச்சம் இருப்பதில்லை; அருள் அடக்கம் அமைதி இருக்கும்.

உரை கிறிஸ்து நெறிச் சார்புடையதாக உள்ளது. பிற நெறிகளும் பேசப்படுகின்றன. விளக்கங்கள் அனைத்தும் ஆராய்ச்சி போக்குடன் காட்டப்படுகிற மேற்கோள்களேயாகும். காய்தலும் உவத்தலும் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்ந்து மெய்ப்பொருளை, மெய்ப்பொருளாம் செம்பொருளைக் காண்பதொன்றனையே தம்முடைய நோக்கமாகக் கொண்டு ஞானசிகாமணி விரிவான கடல் போன்றதோர்

உரை அமைத்திருக்கிறார். உரையின்கண் கடலின் அகலமும் ஆழமும் காணப்படுகின்றன.

அரிய நூல்களைக் கற்றல் வேண்டும் என ஆர்வமுடைய அனைவரும் இந்த நூலை வாங்கிக் கற்றிடலாம். இந்த நாட்டில் பல காலமாக வளர்ந்து விட்டிருக்கிற தத்துவக் கோட்பாடுகள், அவற்றைச் சார்ந்து எழுந்த கதைகள் பலவற்றின் மெய்ம்மையை உணர்ந்துகொள்ள இந்த நூல் உறுதுணையாக அமையும். திருச்சபை மக்களும், அவர்களுக்குள்ளும் திருப்பணிவிடையில் ஈடுபட்டிருக்கிற மறைத்திருவாளர்களும் இந்த நூலை விலைகொடுத்து வாங்கிக் கற்றல் வேண்டுமே என விழைக்கின்றது என் உள்ளம்.

உலகக் கிறிஸ்துவத் தமிழ்ப் பேரவை எடுக்கிற முதலாவது உலகக் கிறிஸ்துவத் தமிழ் மாநாட்டில் இந்த நூல் வெளியிடப்படுவது சாலப் பொருத்தமாகும் நூலுக்கும் பெருமை, பேரவைக்கும் பெருமை.

21-12-1981 **பொன்னு ஆ. சத்தியசாட்சி**

முன்னுரை

பாடுகின்றேன் முப்பதுக்குள்

1. "பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்,
பூமி என்றும் திகிரி என்றும் படைத்தவாறும்
காரணமாய் தேவியரும் நிறைந்தவாறும்,
கற்பம் உண்டு ரிஷிகள் சித்தர் சாகாவாறும்,
வாரணமாம் பறவையோடு நாற்காற் சந்மம்,
மானிடர்கள் கூறுகின்ற குலத்தின்வாறும்,
பாரணமா நால்வேதம் வந்த வாறும்,
பாடுகின்றேன் முப்பதுக்குள் பார்க்கத்தானே!"

கருத்துரை : மும்மூர்த்திகள் எவ்வாறு வந்தனர். அவர்கள் பூமியையும் மலைகளையும் எவ்வாறு படைத்தனர், அவர்களுடைய தேவியர் எவ்வாறு காரணமாய் நிறைந்து இருந்தனர். கற்பம் சாப்பிட்டு ரிசிகளும் சித்தர்களும் எவ்வாறு சாகாமல் இருந்தனர். மாவிலங்கு பறவை ஏனைய மிருகங்கள், மனிதர்கள் கூறும் குலம், நான்கு வேதங்கள் முதலானவை எவ்வாறு வந்தன என்னும் செய்திகளை முப்பது பாட்டுக்குள்ளே (நீங்கள்) பார்ப்பதற்கு பூரணமாக அமைக்கின்றேன் என்றவாறு,

விளக்கவுரை

அகத்தியர் பரமகுருவானவரின் திருவருள் வயப்பட்டு அவரால் ஆட்கொள்ளப்பட்டு ஞானம் பெற்றார். அவர் பெற்ற பேரின்ப ஞானத்தை, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றவாறு மற்றவர்களும் பெறவேண்டும் என்று பருமகுருவானவர் கட்டளையிட்டருளினார். அந்தக் கட்டளையைச் சிறமேற்கொண்டு தாம் கண்டடைந்த மெய்ப்பொருளை **முப்பது** பாட்டுக்குள்ளே அமைத்துப் பாடினார். தாம் கூற வந்த செய்தியை முப்பது பாட்டுக்குள் அமைத்துப் பாடுவதை, ''பாடுகின்றேன் முப்பதுக்குள்'' என்று தொடங்குகின்றார். தமது ஞானநூலை முடிக்கும் போதும்:

"பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்;
பரமகுரு சொன்னபடி பாடினேனே"

என்று கூறியே முடிக்கின்றார். இதனால் நூலின் கட்டமைப்பு விளங்குகின்றது.

தொடக்கத்திலேயே நமது நாட்டில் மனிதர் மெய்ப்பொருளாம் கடவுளை அறிய மேற்கொண்ட முயற்சியில் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட மும்மூர்த்திகள் எவ்வாறு வந்தனர். அவர்கள் பூமி, மனிதர்கள், மனிதர்களின் சாதி-குலம், மற்ற உயிரினங்கள் முதலானவற்றைப் படைத்ததாகக் கூறும் செய்திகள்; இந்தச் செய்திகளின் வளர்ச்சியிலே மும்மூர்த்திகள் முதலான தேவர்களுக்குத் தேவியர் எவ்வாறு நிறைந்து அமைந்தனர்: இவர்களுடைய பரிணாமத்தில் மக்கள் செத்துக்கொண்டிருந்த நிலை; அப்படிச் சாகாமல் இருப்பதற்கு ஒரு மருந்து கண்டுபிடிக்க சிலர் முற்பட்டமை; அதற்குக் கற்பம் என்று பெயரிட்டமை; இதனை அசாதாரணமான மனிதர்கள் என்று கருதப்பட்ட ரிசிகளும் சித்தர்களும்தான் உண்டு சாகாமல் இருந்தனர் என்பதும்; இந்தச் செய்திகளைக் கதையாகவும் கற்பனையாகவும் அறிவிக்கும் நான்கு வேதங்கள் முதலானவை எவ்வாறு வந்தன என்பதும்; மக்கள் பரமகுருவாம் மெய்ப்பொருளை கண்டடைந்து மெய்ஞ்ஞானமும் மெய்வாழ்வும் பெற்று முக்தியடைதல் எவ்வாறு என்பனவற்றையும் இந்த முப்பது பாடல்களில் கூறுகின்றார். இப்பாட்டிலே கூறியுள்ளதுபோல் ஒவ்வொரு கருத்தையும் வரிசையாக மேல்வரும் பாடல்களிலே கூறாமல், அவையவை வரவேண்டிய இடத்திற்கு ஏற்பக் கூறுகின்றார்.

ஒட்டுமொத்தமாக அகத்தியர் கூறப்புகுந்த கருத்தைக் கவனித்த நாம், அவர் அதனைக் கூறியுள்ள வரையறை விரிவுகளையும் கருத்தில் இருத்துதல் வேண்டும். இதனை அவர் தாம் பாடியுள்ள ஆறாம் பாட்டிலே விவரிக்கின்றார். ஆறு இலட்சம் பாடல்களின் பொருளை முப்பது பாடல்களில் வடித்துக் கொடுத்துள்ளார் நூலின் விரிவஞ்சி.

> "கடுகைத் துளைத் தேழு கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்" [1]

என்று இடைக்காரும்,

> "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்" [2]

என்று ஔவையாரும் திருக்குறள் பொருட்செறிவுக்குச் சொன்னதுபோல **அகத்தியர் ஞானம்** முப்பதுக்குக் கூறலாம். எனவே "தொட்டனைத் தூறும் மணற்கேணி"[3] போல இதிலே சிந்திக்க சிந்திக்க மெய்அறிவு விரிந்து பரந்துகொண்டே போகும். எனினும் அகத்தியரே கூறியுள்ளதுபோல அடக்கமாகத் தள்ள வேண்டியவற்றைத் தள்ளி, கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு, பரம்பொருளைக் கண்டடைந்து பேரின்ப முக்தி அடைவதற்கு இன்றியமையாத விளக்கங்களில் மாத்திரமே பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் ஈண்டு உரையில் கவனம் செலுத்தலாம்.

தமிழர் சமயம் என்பது நான்கு வேதங்களின் மயக்கமாகும்

2. "பாரப்பா பூரணத்தின் மனதை யொட்டி,
பரப்பிரம நாதமது சிவத்தில் சேர்த்து
தேரப்பா சக்தியையும் சாம்ப லாக்கி,
சிவசிவா என்ற பொருள் கைக்குள்ளாக்கி,
போரப்பா நால்வேத மயக்க மாக்கி,
பூமியிலே மானிடரை மோசம்போக்கி,
வேரப்பா சித்தரும் பூரணம தாக்கி,
வேடிக்கை போல்கட்டி விடுத்தார்தானே"

கருத்துரை : பூரணமானவரான முழுமுதற் கடவுளாகிய பரப்பிரமனை, அவருடைய குணத்துடன் இசைந்து போவதுபோல அமைத்து சிவனுடன் சேர்த்துவிட்டதைத் தேர்ந்து அறிந்துகொள்; சக்தியையும் சாம்பலாக்கி சிவசிவா என்ற பொருளை கைக்குள்ளாக்கிவிட்டது ஒரு போர். நான்கு வேதங்களை வேடிக்கை போலக் கட்டி எழுதி பூமியிலே மக்களை அவற்றால் மயக்கி மோசம் போக்கிவிட்டனர்; ஆனால், சித்தர்கள் பூரணமாம் முழுமுதலை அறியவும் அறிவிக்கவும் வேறாகத் தனித்து நிற்கின்றனர் என்றவாறு.

விளக்கவுரை

தமிழர் சமயம் என்பது நான்கு வேதங்களை முதலாகக் கொண்டு இணைத்துத் தோற்றுவிக்கப் பட்டதனால் உண்டான ஒரு மயக்கம் என்கிறார் அகத்தியர்.

பரம்பிரம நாதமது சிவத்தில் சேர்த்து: பரப்பிரமமாகிய முழுமுதல் கடவுளைக் குறித்து சில குறிப்புகள் வேதங்களில் வருகின்றன; அவரே எல்லாவற்றிற்கும் மூலகாரணமாவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால் இந்நிலைமை பின்னர் மாற்றம் பெற்று பரப்பிரமம் சிவனுடன் சேர்க்கப் படுகின்றார்.

இது குறித்து வடமொழிப் புலமை மிகுந்தவரும் மகாகவியுமான எ.ஆ.கிருஷ்ணபிள்ளை கூறியுள்ள கருத்தை இங்கு தருகின்றோம்; இந்த விளக்கத்தால் சிவன் பரப்பிரமம் அல்லது கடவுள் அல்லர் என்றும் அதற்கு வேதங்களில் ஆதாரமில்லை என்பதும், பிற்காலத்தில் சிவனுக்கு அந்தக் கருத்தை ஏற்றியே கூறியிருக்கின்றனர் என்பதும் புலப்படும்:

இந்து தேசத்தில், ஏகதேசம் மூவாயிர வருடகாலமாய் வழங்கி வருகிற சைவ, வைணவம் முதலிய சமயங்களுக்கு ஆதாரமாயுள்ள முதனூல் : இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களே. இவைகள் தாம் முக்கிய பிரமாண நூல்களென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள்; அப்படி இந்து சமயிகள் முழுக்கவும் பூரணமாய் ஒப்புக்கொள்ளுகிற நான்கு வேதங்களுக்குள்ளும் பரப்பிரம வஸ்துவே சமஸ்தத்துக்கு மூலகாரணம் என்று சில இடங்களிலும், இன்னும் சில இடங்களில் சோம சூரியாக்கினி, இந்திரன் முதலிய திக்குபாலகர், அஷ்டவசுக்கள் இவர்களே விசேஷித்த தேவர்கள் என்றும், இவர்களாலே உலகபாலனம் நடந்துவருகிறது என்றும், சொல்லப்பட்டு இருக்கிறதே அன்றிச் சிவனைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் இல்லை. ருத்திரன் என்கிற பெயர் வேதத்தின் இடைக்கிடை வழங்கிறதுண்டு. அதினால், இருக்கு வேத காலத்தில் உள்ளவர்கள் ருத்திரன் என்று ஒரு தேவனை வணங்கினார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலும் அவர்கள் வணங்கின ருத்திரனுக்கும் இப்பொழுதிருக்கிற சில பக்தர்கள் வணங்குகிற சிவனுக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. எப்படியெனில், சிவ பக்தர்கள் சிவனே எல்லாத் தேவர்களிலும் பிரதான தேவனென்றும், பிரம்மா, விஷ்ணு முதலான தேவர்களும், சகல லோகங்களும் அவனுக்குள் அடக்கமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற ருத்திரன் பிரதான தேவன் அல்லன். அவன் மருத்துகளுக்குத் தகப்பன். காற்றுகளுக்கு மருத்துகள் என்றும், ருத்திரனுடைய மக்கள் என்றும் பெயர். ஆதலால், அந்த ருத்திரன் காற்றுகளுக்குத் தகப்பன், அவனை அக்கினியின் ஊழியன் என்றும், தானாபதி என்றும், அக்கினி என்றும் சொல்லியிருக்கிறது.

"ருத்திரன் என்பதும், பசுபதி என்பதும் அக்கினிக்குப் பெயர் என்று வேதத்தைச் சேர்ந்த சதபதப்பிரமணத்தில் அறிந்து கொள்ளலாம்; அனலுக்கும் காற்றுக்கும் உண்டாயிருக்கிற சம்பந்தத்தினாலே காற்றுக்குத் தகப்பனாயிருக்கிற ருத்திரனை இப்படி அக்கினியோடே சம்பந்தப்படுத்தி இருக்கலாம் என்று நினைக்கத்தக்கது. ருத்திரன் மருந்துக்கு உதவத்தக்க பூண்டுகளை உண்டாகும்படி செய்து, வைத்தியர்களுக்கு வைத்தியனாக இருக்கிறவன் என்றும் கண்டிருக்கிறது. அவனைச் சில சமயங்களில் தயவுள்ளவனாகவும், சில சமயங்கள் முற்கோப- முள்ளவனாகவும் முகாந்தரமில்லாமல் மனிதரைக் கொல்லுகிறவனாகவும் காட்டி இருக்கிறதன்றிச் சில கவிகளில் அவனைச் சடையனென்றும் காட்டியிருக்கின்றது. அதினால், அவனுடைய சடை தீக்கொழுந்து என்று சிலர் நினைக்கிறார்கள்.

"இருக்கு வேதத்தில் ருத்திரன் என்னப்பட்டவன் சிவன் தானோ அல்லவோ என்று மேற்சொல்லியவைகளை வாசிக்கிற யாவரும் நிதானித்துக் கொள்ளலாம். அவன் சிவன் அல்லவென்றால், இருக்கு வேதகாலத்தில் சிவன் இல்லவே இல்லையென்று நிச்சயமாய் விளங்கும். அந்த ருத்திரன் சிவன்தான் என்றால், இருக்கு வேத காலத்தில் சிவன் நானாவித தேவர்களுக்கும் ஒத்தவனே அல்லாமல் எல்லாத் தேவர்களிலும் பெரிய தேவனல்லன் என்பது கண்கூடாக விளங்கும். முதலாம் மண்டலம் 44-வது சூக்தத்தில் மித்திரனும், வருணனும், ருத்திரனும், சகல தேவர்களும் சந்தோஷப்பட்டு எங்களுக்குத் தயவு செய்வார்களாக என்று சொல்லி இருக்கிறதைப் பார்த்தால், வேதத்தை எழுதின ரிஷிகளும், அக்காலத்திலுள்ள மற்ற இந்துக்களும் ருத்திரனை, மித்திரன் வருணனென்ற ஆதித்தியருக்குச் சமானமாக எண்ணினார்களேயன்றி, அவனையே கடவுள் என்றாவது, இந்திரனுக்குச் சரியானவன் என்றாவது எண்ணினது இல்லை என்று விளங்கும். விஷ்ணு ருத்திரன் என்ற பெயர்கள் எவ்வளவோ தாழ்ந்தவைகள் என்பது, "இருக்கு வேதத்தில் முதலாம் அஷ்டகத்திலுள்ள 121 சுலோகங்களில் இந்திரனுக்கு 45, அக்கினிக்கு 37, மருத்துகளுக்கு 12, உதயத்துக்கு 4, ருத்திரனுக்கு 2, மற்ற சுலோகங்கள் பற்பல சிறுதேவர்களுக்கம் ஏற்பட்டிருக்கின்றன என்பதால் தெரியவரும். விஷ்ணுவுக்குத் தனியாக அந்த அஷ்டகத்திலொன்றும் இல்லை. இதைக்கொண்டும் நிதானிக்கலாம்."[4]

தமிழர் வழிபட்டு வந்த சிவனை ஆரியர்கள் நான்கு வேதங்களில் கூறுவதாக அறியப்படும் பரப்பிரமத்துடன் இணைத்து திராவிடச் சமயப் பண்பாட்டை ஆரியத்துக்குட் படுத்திக்கொண்டது ஒரு போர் என்றே அகத்தியர் கூறுகின்றார். ந.சி. கந்தையா பிள்ளை, தமது **இந்து சமய வரலாறு** என்னும் நூலில் தமிழர் சமயம் என்பது எப்படி நான்கு வேதங்களின் மயக்கமாயிற்று என்பதை வரலாற்று வழியே தெளிவாக அறிவிக்கின்றார்.

"தமிழரிடையே முதன்முதல் கொண்டு வரப்பட்ட அயல் நாட்டவர் செல்வாக்கு வேதமதமாகும். ஒன்றொடு ஒன்று சம்பந்தப் படாத சமயங்களும் நாகரிகங்களும் ஒன்றுபடும்போது என்ன நிகழ்கிறது? சொந்த வழிபாடும் தத்துவ ஞானமும் உடையவர்களாக இருந்த தமிழரிடையே ஆரியர் தமது மதத்தையும் தத்துவ ஞானத்தையும் பரப்ப முயன்றார்கள். வேதமதம் வழக்கம்போல் உள்நாட்டு வழக்கங்களையும், சமயக் கொள்கைகளையும் தழுவிக் கொண்டது. தமிழரின் வீர தெய்வங்களும் (தெய்வங்களாக்கப்பட்ட வீரர்) பிற தெய்வங்களும்

பிரமாணரின் தெய்வங்களாக்கப்பட்டன. இரு மதங்களுக்கும் கலப்பு உண்டாயிற்று. தமிழர் சமயத்தின் மீது அயலவர் செல்வாக்கிருந்ததைப் பற்றி நாம் சங்க நூல்களில் சிறிது அறிகின்றோம்."

"உருத்திரன் வேதங்களில் சிவனென்று கூறப்படவில்லை என்றும், அவர் புயற் கடவுளாகக் கூறப்பட்டுள்ளார் என்றும் வேத ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். சிவ என்னும் சொல் வேதத்திற் காணப்படுகிறதென்றும் அது கடவுளைக் குறியாமல் அருள், சாந்தம் என்பனவற்றைக் குறிக்கிறதென்றும் டாக்டர் போல் கூறியுள்ளார். வேதத்தில் சிவன் என்னும் பெயர் காணப்படவில்லை என டாக்டர் இஸ்டிபின்சனும் காட்டியுள்ளார். உருத்திரனை அக்கினி உனக் காட்ட முடியுமாயின் அக்கினியையும் உருத்திரனையும் சிவனெனக் காட்ட முடியாது. உருத்திரன் ஒரு மூர்க்க தெய்வம். அது மற்றைய வேத தெய்வங்களோடு கூறப்பட்டுள்ளது. வேதங்களுக்குப் பிற்பட்ட காலத்தில் அது மும்மூர்த்திகளுள் ஒன்றான சிவனாகக் கொள்ளப்பட்டது. உருத்திரனையும் மூர்த்திகளுள் ஒன்றாகக் கொண்ட தமிழர் சிவனை மும்மூர்த்திகளிலும் மேலான கடவுளாகக் கொண்டனர். இதற்கு நூற்றுக் கணக்கான சான்றுகளைத் தமிழ் மறைகளிலிருந்து காட்டலாம். "மூவர் கோனாய் நின்ற முதல்வனே," "முழு முதலே ஐம்புலனுக்கும் மூவர்க்கும் என்றனக்கும் வழி முதலே" என்று திருவாசகம் கூறுகின்றது. தமிழரின் சைவ மதம் வடநாட்டுச் செல்வாக்குக்கு உட்பட்டது. அப்பொழுது தமிழர் சைவத்துக்குள் வேதமதத்துக்கு இடமளித்தார்கள். தேவத்திற் காணப்படும் உருத்திரனாகிய புயற்கடவுளைப் பிரித்தெடுத்து அதற்குச் சிவனுக்குரிய தொழில்களைக் கொடுத்துச் சிவனாகக் கொண்டார்கள். ஆரியர் சிவனை உருத்திரன் எனக்கொண்டனர். இவ்வாறு இணைக்கப்பட்ட உருத்திர-சிவன் ஆரியர் தமிழர் கடவுளாகவிருந்தார். தமிழர் தெய்வங்கள் ஆரியர் தெய்வங்களுள் இடம் பெற்றதும் சிவன் மும்மூர்த்திகளுள் ஒன்றாக்கப் பட்டார். வேதங்கள் நான்காக்கப்பட்ட போது உருத்திரன் தேவர்களின் தேவனாக விருந்தார். உபநிடத காலத்தில் வேத தெய்வங்களுக்குப் பதில் உருத்திர-சிவ வழிபாடு இருந்தது.

"அவர் மங்களகரமாக இருந்தபோது மகேசுவரரென்றும், மூர்க்கமாகவும், மாமிசம் புசிப்பவராகவும் இருந்தபோது உருத்திரரெனவும், உலகத்தைக் காப்பவராக இருக்கும்போது மகாதேவரெனவும் அறியப்பட்டார். வழிபடுவோருக்கு வேண்டிய சித்தி அளித்தலின் சிவன் என்னும் பெயருண்டானது என்று மகாபாரதங் கூறுகின்றது. எலும்பு மாலை அணிதல், முதல் யோகியாகிய தோற்றமளித்தல் வரையில் சொல்லப்படும்

சிவனின் வடிவங்கள் மனிதனின் அறிவு படிப்படியே வளர்ச்சியடைந்த காலங்களில் அவர்கள் கடவுளுக்குக் கொடுத்து வழிபட்ட வடிவங்களைக் குறிப்பிடுகின்றன." *[5]

சக்தியையும் சாம்பலாக்கி சிவசிவா என்ற பொருள் கைக்குள்ளாக்கி: சிவனுடன், சாம்பல் ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களில் சம்பந்தப்பட்டுள்ளது. சிவன் தன் உடலெல்லாம் சாம்பல் பூசிக்கொண்டு பன்னிரண்டாண்டுகள் சுடுகாட்டில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. பத்மாசூரனுக்கு, அவன் மற்றவர்கள்மீது தன் கையை வைத்தால் சாம்பலாகப் போக வரம் தந்தது; திரிபுரத்தை எரித்துச் சாம்பலாக்கியது; பின்னர் சாம்பல் வழி வந்த திருநீற்றின் தத்துவம் உண்டானது என்பன இங்கு குறிக்கத்தக்கன.

நால்வேத மயக்கம் : சைவம், வைணவம் முதலான எல்லாச் சமயங்களுக்கும் முதல் ஆதாரம் நான்கு வேதங்களே என்று கொண்டும், அவற்றில் காணப்படாமல் பின்னர் தோன்றிய சாத்திரங்களிலும் புராண இதிகாசங்களிலும் காணப்படும் காரியங்களுக்கும் வேதங்களில் ஆதாரங்கள் இல்லாத நிலையில், அவற்றை அவைகளிலே கற்பித்தும், அப்படியும் இயலாத நிலையில் முரண்பாடுகள் ஏற்பட்டும் விளங்குகின்ற நிலையினையும், அவற்றால் மக்களுக்கு நன்மை தீமை தெரியாமலும், நல்வழி தீய வழி தெரியாமலும், நல்லோர் தீயோர் யார் என்பதும் புலப்படாமலும், கடவுள், தேவர், மக்கள், அரக்கர் இவர்களையும் சரிநுட்பமாய்

---

* டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனும் இந்தத் திராவிட - ஆரிய சமயப் பண்பாட்டின் போரினையும் அதன் விளைவான செல்வாக்கையும் குறித்துத் தமது **Hindu View of Life** என்னும் நூலில் கூறியுள்ள கருத்தையும் ஒப்புநோக்கித் தெளிக.

The Vedic culture which resembles that of the Homeric Greeks or the celtic Irish at the beginning of the Christian era, or that of the Pre-Christian Teutans and Slaves becomes transformed in the epics into the Hindu Culture through the influence of Dravidians. The Aryan idea of worship during the earlies period was to call on the Father sky or some other shining one to look from on high on the sacrifices and receive from the offerings of fat or flesh, cakes and drink. But soon Puja or worship which was a striking feature of the Dravidian faith was accepted by the Aryans. The ideals of vegetarianism and non-violence (ahimsa) also developed. The Vedic radition has dominated by the Agamic and today Hindu culture shows the influences of the Agama as much as that of the Vedas.The Aryan and the Dravidian do not exist side by side in Hinduism; "contact with the highly civilized Dravidians led to the transformation of Vedism into theristic religion." R.S.Radhakrishnan, **Hindu View of Life.**

சர். சார்லஸ் எலியட் என்பார் இதன் தொடர்பாகக் கூறியுள்ள கருத்தையும் காண்க.

"We might see that it would be more correct to describe Indian religion as Dravidian religion stimulated and modified by the ideas of Aryan invaders. For the great deities in Hinduism Siva, Krishna, Rama, Durga and some of its most essential doctrines such as metempsychosis and divine incarnations are either totally unknown to the Veda or obscurely adumbrated in it. The cheif charateristics of mature Indian religion are characteristics of an area not of a race, and they are not the characteristics of religion of Persia, Greece or other Aryan Lands." Sir. Charles Elliot.

வேறுபடுத்தி அறியவும் இயலாத நிலையினையும்; இவற்றால் மக்களுக்கு முடிவான நல்லபயன் என்ன என்று எண்ணும்போது வெளிப்படும் வெறுமையும் இந்த மயக்கமாகும் என்று தோன்றுகின்றது.

சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் வேதம் நான்கிலும் விளங்கும் மெய்ப்பொருள் நமச்சிவாயமே என்று பின்வரும் பாடலில் அறிவிக்கின்றார்:

"காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுலார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கிலும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச் சிவாயமே."

திருஞானசம்பந்தர் கூறியுள்ள இக்கருத்தை, அகத்தியர் கூறியுள்ள நால்வேத மயக்கத்தின் சூழலில் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை புலப்படுவதை உணரலாம்.

நால்வேதம் என்னும் வழக்கு இன்னும் ஒரு மயக்கத்தையும் உண்டாக்கியுள்ளது. தவத்திரு. மறைமலையடிகள் "நான்மறை" என்பது தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், திருக்குறள், தேவாரம், சிவஞானபோதம் என்னும் நூல்களைக் குறிக்கும் என்பர். இதற்குப் பல மறுப்புரைகளும் வந்தன. முடிவில் நால் வேதம் அல்லது நான்மறை என்பது ஆரியர்களின் நான்கு வேதங்களாகிய இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என்பனவற்றையே குறிக்கும் என்பது தெளிவானது என்று பெரும்புலவர் ஞா.தேவநேயப் பாவாணர் கூறுகின்றார்.[6] அகத்தியர் கூறிய நால் வேதம் இவைகளேயாம்.

வேரப்பா சித்தரும் பூரணமதாக்கி : சிந்தனை விவேகமும், பகுத்தறிவுமுள்ள சித்தர்கள் மேலே கண்ட மயக்கத்தால் மக்கள் மோசம் போய் இருந்ததை உணர்ந்து, அதினின்று, தாங்கள் தெளிவு பெற்று விடுதலை பெறவும், மக்களையும் தெளிவித்து விடுதலை பெறச் செய்யவும் முயன்றனர். எனவே இவர்கள் அவர்களினின்று வேறுபட்டுத் தோன்றினார்கள்.

இந்த இடத்தில் சித்தர்களின் தோற்றத்தைக் குறித்து ந.சி.கந்தையா பிள்ளை கூறிய கருத்தையும் காண்க.

"கோயில்கள் பிராமணர் கைப்பட்டபின் இன்னொரு கொள்கையும் தலை எடுத்தது. சமய அறிவை வேதங்களிலிருந்து நேரே அறிவதல்லது உள்நாட்டு மொழிகளில் எழுதப்பட்ட நூல்களைக் கற்று அவை மூலம் அறிவதால் பயனில்லை என்னும் கொள்கை எழுந்தது. வடமொழிக் கல்வி பிராமணருக்கு மாத்திரம் ஏக

உரிமையாக இருந்தது. இக்கொள்கையைத் தமிழறிஞர் எதிர்த்தனர். வைணவரில் தென்கலையினர் இதற்குத் தலைசாய்க்கவில்லை. அக்காலத்தில் தமிழ் மறுமலர்ச்சி பெற்றது. உரையாசிரியர்கள் தோன்றிப் பழந்தமிழ் நூல்களுக்கு உரைகள் செய்தனர். சந்தான குரவர்கள் சமய நூல்களை தமிழில் செய்தனர். **சித்தர் நூல்களும் இக்காலத்தை அடுத்து எழுந்தன. சித்தர் நூல்கள் பிராமண ஆதிக்கத்தை எதிர்க்க எழுந்தனை.''**[7]

மேலும் டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை கூறுவதையும் காண்க: "பதினெண் சித்தர் பாடல்கள் சில வைதிகச் சமயத் தத்துவங்களைக் கண்டிக்கின்றன. கடவுள் பெயரால் நடக்கும் தேர் திருவிழாக்களையும் உருவ வணக்கத்தையும் சித்தர்கள் கண்டித்துப் பாடியிருக்கின்றனர். தமிழ் மக்கள் சிலரின் சிந்தனை புதுவழியிற் செல்வதனைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.[7A]

இப்பாடலில் தமிழர் சமயம் என்பது நான்கு வேதங்களின் மயக்கம் என்பதும், இவற்றால் மக்கள் மோசம்போன நிலையும் கூறப்பட்டது அறிக. இந்திய நாட்டின் மிகப் பழைய வேதங்களின் தெய்வ நிலையே இதுவானால், அவற்றை அடிப்படையாய்க் கொண்டும் அவற்றைச் சார்ந்தும் தோன்றிய சமயங்கள், தெய்வங்கள், தத்துவங்கள் இவற்றின் நிலை எத்தகையதாக இருக்கும் என்பதை இந்தப் பாடலில் அகத்தியர் சிந்திக்க வைக்கின்றார். இந்தச் சிந்தனையே சித்தர்களுக்குத் தோன்றியது.

மேலும் 13ஆம் பாடலில் நான்கு வேதங்கள் வந்த வரலாறு கூறப்பட்டுள்ளதையும் கண்டு தெளிக.

பதினெண் சித்தர் ஆராய்ச்சி

3. "விடுத்தார்கள் சித்தர் பதினெட்டுப் போக்கும்
வெவ்வேறே குணமுண்டு, விதிக்கமாட்டேன்;
தொடுத்தான் காண் கொங்கணவன் சொன்ன நூறான்
தொகையப்பா மிச்சமடா சோதித்தாக்கால்

எடுப்பாக வயித்தியத்தில் ஐயாயிரத்துச் சொச்சம்,
என்சொல்வேன் ஞானத்தில் ஐயாயிரத்தொட்டு,

கடுப்பாகப் பலநூலை ஊன்றிப் பார்க்கக்
கவலையினால் கட்டிவிட்டான் கலங்கத்தானே."

கருத்துரை : சித்தர் பதினெட்டுப் போக்கும் வெவ்வேறு குணங்கள் உண்டு; அவற்றைக் கூறமாட்டேன். கொங்கணவன் நூறு செய்தான்; அவற்றை ஆராய்ந்து பார்த்தால் 5000க்கும் மேற்பட்ட பாக்களைப் பாடினான்; ஞானத்தில்

5008 பாடினான்; இப்படிப் பல நூல்களையும் ஊன்றிப் பார்த்தால், நல்வழியைத் தேடிய அவனுடைய கவலையினால் பொருள் தெளிவு பெறாத பல நூல்களைச் செய்து மக்களைக் கலங்கப் பண்ணிவிட்டான்.

விளக்கவுரை

சித்தர் பதினெட்டுப் பேர்க்கும் : சித்தர்களின் தொகை பதினெட்டு என்று அறிகின்றோம். இவர்கள் யாவர்? பதினெண் சித்தர் துதி பாடல் இவர்களைப் பின்வருமாறு கூறுகின்றது:

"நந்தி அகத்தியர், மூலர், புண்ணாக்கீசர்,
நற்றவத்துப் புலத்தியரும், பூனைக் கண்ணர்,
நந்திடைக்காடரும், போகர், புலிக்கையீசர்,
கருவூரார், கொங்கணவர், காலாஞ்சி
சிந்தி எழுகண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி,
தேரையரும், குதம்பையரும், சட்டை நாதர்,
செந்தமிழ்ச் சேர் சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்தி வாழ்வோம்."[8]

அகத்தியர், போகர், கைலாயநாதர், கோரக்கர், திருமூலர், சட்டைமுனி, கொங்கணர், கூன்கண்ணர், இடைக்காடர், நந்தீஸ்வரர், புண்ணாக்கீசர், உரோமரிஷி, மச்சமுனி, கூர்மமுனி, சமலமுனி, வாசமுனி, பிரமமுனி, சுந்தரானந்தர் என்று சித்தர் பதினெண்மர் என்பர். இவர்களையல்லாமல்: கருவூரார், புலத்தியர், புசுண்டர், இராமதேவர், தன்வந்திரி, கபிலர் முதலானோரையும் சித்தர்களில் அடக்கிக் கூறுவர். இவர்களுள் அகத்தியர் குறிப்பிட்டுள்ள பதினெண்மர் யார் என்பதைத் திட்டமாக வரையறுக்க இயலவில்லை. ஆனால் தம் பாக்களில் கொங்கணவன் (3,4), தேரையன் (4), சுந்தரன் (4,5), கருவூரார் (8), புலத்தியன் (7), இடைக்காட்டுச்சித்தர் (5), கழாய்ச்சித்தர் (5), பாம்பாட்டிச் சித்தர் (5), ஆகியவர்களைக் குறித்துக் காட்டுகின்றார்.

அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்களே சித்தர்கள் என்று அழைக்கப்படும் மரபும் உண்டு. அந்த அட்டமா சித்திகளாவன: அணுவைப் போலச் சிறிதாதல் (அணிமா), மேருவைப் போலப் பெரிதாதல் (மகிமா), காற்றுப்போல இலேசாதல் (இலகுமா), பொன் போலப் பளுவாதல் (கரிமா), எல்லாவற்றையும் ஆளுதல் (பிராப்தி), எல்லாரையும் வசப்படுத்துதல் (வசித்துவம்), கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பிரகாமியம்), விரும்பியதெல்லாம் செய்து முடித்து அனுபவித்தல் (ஈசத்துவம்)

என்பன. இவற்றுள் ஆன்ம ஈடேற்றத்திற்குரியது எதுவுமில்லை என்பது தெளிவு. அகத்தியர் இந்தத் தெளிவினைப் பெற்றவர் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தோன்றுகிறது.

வெவ்வேறு குணமுண்டு : சித்தர்களுக்கு வெவ்வேறு குணமுண்டு என்றும் அதனைத் தாம் விரித்துக் கூற விரும்பவில்லை என்றும் அகத்தியர் கூறுகின்றார். இங்கே டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் சித்தர்களைப்பற்றிக் கூறும் கருத்தை அகத்தியர் கருத்துடன் ஒப்பிட்டுக் காண்க. டாக்டர் தெ.பொ.மீ.யின் கருத்தாவது:

> "கடவுளைக் காண முயல்கின்றவர்களைப் பக்தர்கள் என்றும், கண்டு தெளிந்தவர்களைச் சித்தர்கள் என்றும் தேவாரம் வேறு பிரித்துக் கூறும். அனுபூதி ஞானம் பெற்றவர்களை மிஸ்ட்டிக்ஸ் என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும். சித்தர் என்ற சொல்லும் அப்பொருளில் தமிழில் வழங்கக் காண்கிறோம். சித்தர்களின் அனுபூதி அனுபவத்தில் வேற்றுமை இல்லை. அதைக்கூறும் வருணனையிலேயே வேற்றுமை உள்ளது. ஆதலின் சித்தர்கள் எல்லாச் சமயத்திற்கும் அப்பாற்பட்ட சர்வ சமய சமரச சன்மார்க்கத்தினைப் பாடக் காண்கிறோம்."[9]

முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே.கே.பிள்ளை சித்தர்களைக் குறித்துக் கூறியுள்ள கருத்தையும் காண்க:

> "சித்தர் பாடல்கள்:
>
> தமிழகத்தில் சித்தர் பலர் அவ்வப்போது ஆங்காங்கு வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் 'அழியாச் சித்தர்' எனப் பாராட்டப்பட்டுள்ளனர். சித்தர் திருமூலரின் ஞானபரம்பரையில் வந்தவர்கள் என அவர்களுள் சிலர் கூறிக் கொள்ளுகின்றனர். சித்தர்கள் யாவர், அவர்கள் வாழ்ந்திருந்த காலம் எது? அவர்கள் பாடிய பாடல்கள் யாவை, அவர்களுடைய சமயம் எது என்ற கேள்விகளுக்குத் தக்க விடை காணமுடியவில்லை. ஆயிரக்கணக்கான சித்தர் பாடல்கள் தமிழ்நாட்டில் வழங்கி வருகின்றன. யோகம், ஞானம், மருத்துவம், காயகற்பம், இரசவாதம், சோதிடம், மந்திரம், இந்திரசாலம் ஆகிய துறைகள் யாவற்றிலும் சித்தர்கள் பாடியுள்ளார்கள். சித்தர்கள் பதினெண்மர் எனத் தொகுத்துக் கூறுவர். அத்தொகையில் கோரக்கர் போன்ற வடநாட்டுச் சித்தர்களின் பெயர்களும் சேர்ந்துள்ளன. சித்தர் பாடல்கள் பலவற்றுக்கு எளிதில் பொருள் காணவியலாது. மறைபொருளான சொற்களைக் கொண்டு எளிய கருத்தை விளக்குவதும் எளிய சொற்களைக் கொண்டு மறைபொருள்களை விளக்குவதும் இவர் கையாண்ட இலக்கிய மரபாகும். சித்தர் வரிசையில்

அகத்தியருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இடைக்காடர், உரோமர், கொங்கணர், கருவூரார், சட்டைமுனி, சுந்தரானந்தர், நந்தி நாதர், புண்ணாக்கீசர், போகர், இராமதேவர் என்ற யாக்கோபு ஆகியவர்களின் பெயர்களும் இவ்வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன."[10]

இப்பாடலில் **கொங்கணவன்** என்னும் சித்தரைப்பற்றிக் கூறுகின்றார். சித்தர்களுடைய வாழ்க்கையைக் குறித்து செய்திகள் கிட்டுவது அரிதாக இருக்கின்றது; அவர்கள் பாடியதாகக் கிட்டும் பாடல்களிலே அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகள் சில கிட்டுகின்றன.

இவர் வாழ்ந்த காலத்தைக் குறித்தும் திட்டவட்டமான செய்தி கிட்டவில்லை. இவரது நாடு கொங்கு நாடாக இருக்கலாம். இவரை அகத்தியரின் மாணாக்கர் என்று சிலரும், போகர் முனிவரின் மாணாக்கர் என்று சிலரும் கருதுகின்றனர்; இவர் திருவள்ளுவர் காலத்தவர் என்று ஒரு கருத்தும், அதற்கு ஒரு கதையும் உண்டு.

இவர் இயற்றியதாகக் கூறப்படும் நூல்கள்: "கொங்கணர் கடை காண்டம், திரிகாண்டம், ஞானம் நூறு, குளிகை, கொங்கணதேவர் ஐந்நூற்றிரண்டு, கொங்கணதேவர் கலை, கொங்கண நாதர் சூத்திரம், கொங்கணர் கலைஞர் சூத்திரம், துருசு குரு முப்பத்தொன்று, தலைக்காண்டம், நடுக்காண்டம், முப்பூ தீட்சை, கொங்கணர் வாக்கியம் கொங்கணர் தியானம்" முதலியன.[11]

இந்நூல்களுள் ஞானம் நூறும், ஏனைய வைத்தியத்தில் 5000க்கு மேற்பட்ட பாடல்களையும், ஞானத்தில் 5008 பாடல்களையும் குறித்துள்ளார் அகத்தியர். இவற்றுள் எவையும் பதினெண் சித்தர் பாடல்களில் காணப்படவில்லை. **வாலைக்கும்மி** என்னும் நூலிலுள்ள 111 பாடல்கள் மட்டுமே பதினெண் சித்தர்கள் பாடலில் அச்சிடப்பட்டுள்ளன. பின்வரும் ஒரு பாடலில் மரித்தவர்கள் தேவர்களோடு சேருவார்கள் என்னும் குறிப்பைக் காண்கின்றோம்.

"இத்தனைச் சாத்திரம் தாம் படித்தோர், செத்தார்
என்றால் உலகத்தோர் தாம் சிரிப்பார்;
செத்துப் போய்க் கூடக் கலக்கவேண்டும்; அவன்
தேவர்களுடன் சேர வேண்டும்."

- கொங்கணவர், **வாலைக்கும்மி** - 100.

அகத்தியர், கொங்கவணவருடைய நூல்களை எல்லாம் அறிந்தவராகக் காணப்படுகின்றார். முடிவில் மெய்ப்பொருளின் தெளிவு பெறாத கொங்கணவர் நூல்களைப் படைத்து அவர் கலங்கியதுடன், மக்களையும் கலங்க

என்றும் முடிவு செய்கின்றார். கொங்கணவர் செய்த ஞானம் நூறு கஞ்சாவின் மயக்கத்தைப் போன்றது என்றும் பாடுகின்றார்:

"கட்டியதோர் கொங்கணவன் சொன்ன நூறான்
கஞ்சாவின் மயக்கமடா!...."

- அ.ஞா.30:4.

அகத்தியர் பதினெண் சித்தருக்குச் சம காலத்தவராகவும் அவர்களுள் பலரை அறிந்தவராகவும் தோன்றுகின்றது. **சித்தர் வரிசையில் அகத்தியருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது** என்று டாக்டர் கே.கே.பிள்ளை கூறியுள்ளதைக் காண்க.

சுந்தரன் கொங்கணவன், தேரையன்

4. "கட்டினான் என் சீடன் சுந்தரனோ வென்றால்
கலைஞானம் பார்த்திருந்தும் கபடாய்த்தானே
கொட்டினான் பலநூலை வெளியில் போட்டுக்
கோபத்தால் மூன்னூலைக் கொலைத்துப் போட்டான்.
கட்டியதோர் கொங்கணவன் சொன்ன நூறான்
கஞ்சாவின் மயக்கமடா! கருதியேதான்
எட்டினான் தேரையனும் சொன்ன ஞானம்
எட்டில் ஒன்று திட்டமதாய் இயம்பினானே!"

கருத்துரை : என்னுடைய சீடன் சுந்தரனோவென்றால், ஞானத்தைப் பார்த்து அறிந்திருந்தும் கபடாகவே கட்டினான். தன்னுடைய கோபத்தால் முன்னூலை அழித்துப்போட்டான்; பல நூல்களை வெளியிலே கொட்டினான். கொங்கணவன் எழுதிய நூறும் கஞ்சாவின் மயக்கம் போன்றவை. இதனைக் கருதியே தேரையனும் ஞானத்தைக் குறித்து எழுதினான்; அவன் எழுதியதில் எட்டில் ஒன்றுதான் மெய்யாய் விளங்குகின்றது.

விளக்கவுரை

என் சீடன் சுந்தரன் : இவர் பதினெட்டுச் சித்தர்களுள் ஒருவர். இப்பாட்டின் மூலம் அகத்தியருடைய சீடராக இருந்துள்ளார் என்பது தெரிகின்றது. ஆனால் அகத்தியருக்கு உண்மையான சீடராக விளங்கவில்லை என்பதும் புலனாகின்றது. கபடமுள்ள மனத்தினனாக இருந்ததினால், பல நூல்களை வெளியில் போட்டு அழித்ததையும், கோபத்தால் முன்னூலைக் குலைத்துப் போட்டதையும் அறிகின்றோம். 5ஆம் பாடலில் உள்ள குறிப்பையும் காண்க.

முன்னூல் : இஃது என்ன நூல் என்பது வெளிப்படையாகச் சொல்லப் படவில்லை. நூல்களாகவும் இருக்கலாம். அகத்தியர் கூறும் மெய்ப்பொருளுக்குத் துணைசெய்வனவாகவே அவை இருந்திருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடைமலையாம். அகத்தியருடைய போதனையைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு மெய்ச்சீடனாக வாழ மனம் இல்லாததனால் கோபப்பட்டு அந்நூலை அல்லது நூல்களை சுந்தரன் அழித்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. மேலும் சுந்தரன் என்னும் சித்தர் நூல் ஏதும் செய்யவில்லை என்பதை,

"இயம்பினார் வஸ்துநிலை அறிந்து சொன்னார்;
என்னுடைய சுந்தரனும் சொல்லவில்லை"

- 1 அ.ஞா.30:5

என்னும் பாடலடியின் மூலம் அறிகின்றோம். இதற்குப் பெருஞ்சான்றாகச் சித்தர் பாடல்களில் இவருடைய பாடல் எதுவும் இல்லை என்பதையும் காண்க.

இவ்வாறு இருக்க, அகத்தியருடைய சீடன் சுந்தரன் அழித்த முன்னூல் அல்லது நூல்கள் யாவை? "கட்டினான் என் சீடன் சுந்தரனோ வென்றால் கலைஞானம் பார்த்திருந்தும் கபடாய்த்தானே" என்றதால் அகத்தியர் கண்டதுபோல உண்மை ஞானத்தைக் கண்டிருந்தும் கபடாகவே சுந்தரன் நடந்து கொண்டார் என்பது தெளிவு. அகத்தியருடன் உடன்பட விரும்பாத இச்சீடன் பல நூல்களைக் கோபத்தால் அழித்துப் போட்டார் என்கின்றார். "கொட்டினான் பல நூலை வெளியில் போட்டுக் கோபத்தால் முன்னூலைக் கொலைத்துப் போட்டான்." அந்நூல்கள் அகத்தியர் மெய்ப்பொருள் காண்பதற்குத் துணை செய்த பழங்காலத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களே என்று துணிவதன்றி வேறு வழியில்லை. இதற்கு ஆதாரம் என்ன?

கி.பி. முதல் நூற்றாண்டளவிலேயே எருசலேமில் இருந்து கிறிஸ்துவின் நற்செய்தி தமிழகத்திற்கு வந்தது. "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப்.1:8) என்று, பரமகுரு பெரிய திருக்கட்டளை அருளினார். இதன்படி அவருடைய பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவராகிய தாமசு என்பவர் கி.பி.52 அளவிலேயே தமிழகம் வந்து கிறிஸ்து பெருமானின் நற்செய்தியை அறிவித்தார்."* சென்னையிலுள்ள மைலாப்பூரில் அவர் இரத்த சாட்சியாக மரித்தார். எனவே கிறிஸ்துவத்தை மேலை

---

* இக்காலத்தில் தோன்றி வளர்ந்த கிறிஸ்துவத்தைக் குறித்துப் பல நூல்கள் தோன்றியுள்ளன. காண்க : 1. P. Mathew and M.M. Thomas, The Indian Churches of St. Thomas, Delhi: 1. S.P.K., 1967. 2. S.N.Wald, Saint Thomas The Apostle of India, Indor : Sat-Prachar Press, 1952.

நாட்டுச் சமயம் என்றும், வெள்ளையரால் கொண்டுவரப்பட்டது என்றும் கூறுவது உண்மை ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் பொருந்தாது என்பது காண்க.

திரு க.நா.சுப்பிரமணியம் என்பவர் தமது **Catholic Community in India** என்னும் நூலில் 'பரிசுத்த தாமசு இந்தியாவில், அதாவது கேரளத்திலும் (தமிழகத்திலும்), வடபாகங்களிலும், பஞ்சாபிலும் செய்த அப்போஸ்தலத் திருப்பணியின் வரலாற்றை நாம் மறுப்பதற்கு காரணம் இல்லை' என்று எழுதுகின்றார்.[12]

யூல் என்பவர் தாமசு இந்தியாவிலே பிரசங்கம் செய்தார் என்னும் செய்தி மிகப் பழமையானது என்றும் அது உண்மையாகும் என்றும் குறிப்பிடுகின்றார்.[13]

வரலாற்று உணர்வுமிக்கப் பண்டிதர் நேரு தமது **Discovery of India** என்னும் நூலில் கிறிஸ்தவமும் யூத சமயமும் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே இந்தியாவிற்கு வந்தன என்றும் கிறிஸ்தவர்களும் மற்றவர்களைப் போல நாட்டின் ஒரு பங்காவர் என்றும் எழுதியுள்ளார்.[14]

புகழ்பெற்ற உலக வரலாற்று ஆசிரியர்களான எச்.ஜி.வெல்ஸ், ஆர்னால்டு டாயன்பீ ஆகியோர் கிறிஸ்தவம் முதல் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்திருப்பதற்கான ஆதாரச் சூழ்நிலைகளைத் தந்துள்ளனர். கி.பி. முதல் நூற்றாண்டில், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியானது திருவாங்கூர் முதல் மார்சில்லெஸ் வரையில் பேசப்பட்டும் விளங்கிக்கொள்ளப்பட்டும் இருந்தது என்றும் ஆர்னால்டு டாயன்பீ கூறுகின்றார்.[15]

வி.நாகம் ஐயர் என்பவர் 1906 ஆம் வருடத்தின் Travancore State Manual இல் மலபாரில் அப்போஸ்தலர் தாமசுவைக் குறித்தும் அவருடைய ஊழியத்தைக் குறித்தும் எழுதும்போது அவர் நம்பூதிரிக் குடும்பங்கள் சிலவற்றைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.[16]

ஓ.எம்.தாமஸ் என்பவர் தமது Biography of Bishop Sevrin, S.J. என்னும் நூலில் பரிசுத்த தாமசு அப்போஸ்தலர் தமிழகத்தில் செய்த நற்செய்தித் திருப்பணியைக் குறித்துப் பின்வருமாறு எழுதுகின்றார்:

> "கிறிஸ்துவின் பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவரான பரிசுத்த தாமசு என்பவர் முதன் முதல் கிறிஸ்தவத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார். இப்பொழுது மலையாளம் பேசப்படும் பகுதி அப்பொழுது தமிழ் மொழி பேசப்பட்ட பகுதியாகும்; மலையாளம் ஒரு தனிமொழியாக சில நூற்றாண்டுகள் கழித்தே உருவானது. அவர் கி.பி.52ல் ஒரு வியாபாரக் கப்பலில் வந்து கொடுங்கலூர் துறைமுகத்தில் இறங்கி, முதன் முதல் இந்தியாவில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினார். அதன் பிறகு பல

நேரங்களில் சீரியாவிலிருந்து பல கிறிஸ்தவர்கள் மலபாரில் குடியேறி அநேகரைக் கிறிஸ்தவர்களாக்கிக் கிறிஸ்தவ சமுதாயத்தை விரிவுபடுத்தினார்கள்."[17]

மேலும் பரிசுத்த தாமசு திருப்பணியைக் குறித்து ஜெ.எஃப். டிஓர்சே என்பவர் கொடுத்துள்ள செய்தியையும் ஒப்பிட்டுக் காண்க. *

பிளினி (Plini) தமது என்னும் **Natural History** என்னும் நூலிலும், தாலமி (Ptolemy) தமது **Geography** என்னும் நூலிலும் யூதர்களில் தென் இந்தியாவில் குடியேறி இருந்ததைக் குறித்தும், அவர்களின் வாணிபத்தின் பெருக்கத்தைக் குறித்தும் எழுதியிருக்கின்றனர்.[18] தென் இந்தியாவிலே யூதர்கள் குடியிருந்தனர் என்னும் செய்தியும், தமிழகத்தின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் உள்ள அரிக்கமேடு போன்ற இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சியின் வாயிலாக, கி.பி.37-க்கும் 68க்கும் இடைப்பட்டக் காலக் குறிப்பினையுடைய ரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் பரிசுத்த தாமசுவின் தமிழக வருகையை உறுதிப்படுத்துகின்றன. மேலும் காண்க. எபி சுந்தர் ராஜியின் மத மாற்றம் என்னும் மயக்கம், பக்.10-20.[18A]

சென்னை துறைமுகத்தின் வடக்குப் பாகத்தில் தண்டையார்பேட்டையில் உள்ள காசிமேடு இடுகாட்டிற்கு எதிரில், கடற்கரைக்கு மிக அருகில் யூதர்களின் மிகப்பெரிய பழமையான கல்லறை ஒன்று இருக்கின்றது; அது இப்பொழுது அழிந்துகொண்டு வருகின்றது. யூதர்கள் தமிழகத்தில் குடியிருந்தமைக்கு இதுவும் ஒரு சான்றாகும். நான் இதனை நேரில் பல தடவை பார்வையிட்டிருக்கிறேன்.

மேலும் புதிய ஏற்பாட்டிலுள்ள அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் வரும் பெருந்தெகொஸ்தே திருநாளிலே முதன்முதல் திருச்சபை ஏற்படுத்தப்பட்டபோது வானத்தின் கீழ் எங்கும் உள்ள நாடுகளிலிருந்து தேவபக்தியுள்ள யூதர்களும் யூத மார்க்கத்தைத் தழுவிய புறவினத்தவர்களும் அப்பொழுது எருசலேமில் வந்திருந்தார்கள் என்று அறிகின்றோம் (அப்.2:5-11). இவர்களுள் இந்தியாவிலிருந்து, குறிப்பாக வாணிபத்தில் சிறந்து செல்வாக்கு

---

* 'Amidst the clouds which cover the traditions of the christians of St. Thomas, the following account seems to possess the greatest amount of possibility and the nearest approach to truth. After having established Christianity in Arbia Felix, and in the island of Dioscorides (now called Socotia) the holy Apostle landed at Cranganore: at the time the residence of the most powerful king on the Malabar Coast. We know from the historians of the Christian people, from Jospeus and from the Sacred Books themselves, in the account of the miracle of Pentecost, that before the birth of Jesus scattered throughout Egypt, Greece and several countries of Asia. St. Thomas learnt that one of these little colonies had settled down in a country adjacent to Cranganore. Love for his nation inflamed his zeal and faithfullness to the command of Jesus Christ who had enjoined his Apostles to proclaim the faith.to the Jews before turning to the Gentiles, he repaired

மிக்கவர்களாகப் பழந்தமிழகத்தில் வாழ்ந்த யூதர்கள் சிலரும் பெந்தெகொஸ்தே திருநாளிலே எருசலேமுக்குச் சென்றிருக்க மிகுந்த வாய்ப்புண்டு; அவ்வாறு சென்றவர்கள் தமிழகத்திற்குத் திரும்பி வந்து தாங்கள் புதியதாய்ப் பெற்ற கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பி இருக்க வேண்டும்; மேலும் அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதற்கு வழிவகைகளைத் தேடியதன் விளைவாகவும் ஆவியானவரின் நடத்துதலின்படியும் அப்போஸ்தலனாகிய தாமசு இங்கு வந்தமைக்கு நிரம்ப ஏதுவிருக்கின்றன. ஒ.நோ.எஸ்தர் 1:1; 1 இரா.4:34.

1498இல் வாஸ்கோடகாமா முதன்முதல் இந்தியாவிற்கு வந்து கள்ளிக்கோட்டை (Calicut) சேர்ந்தபோது அங்கிருந்த கிறிஸ்தவர்கள் 200,000க்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் அந்த நிலப்பரப்பில் இருப்பதாக அவரிடம் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து கேட்டபோது அவர்களால் சொல்ல முடிந்தது எல்லாம் அவர்கள் செயின்ட் தாமஸ் கிறிஸ்தவர்கள் என்பது தான். அவர்களுடைய முன்னோர்களின் மாதிரியைப் பின்பற்றி பரிசுத்த தாமசு இரத்த சாட்சியாக மரித்த இடத்திற்கு (மைலாப்பூர்) ஆண்டுதோறும் யாத்திரை செய்து வந்தனர். வாஸ்கோடகாமா 1502 இல் இரண்டாம் முறையாக இந்தியாவுக்கு வந்து கொச்சி (Cochin)யில் இறங்கியபோது 30,000 செயின்ட் தாமசு கிறிஸ்தவர்கள் அவரைச் சந்தித்ததாக அறிகின்றோம்.[19]

இந்தக் கிறிஸ்தவர்களுக்கு ரோமாபுரியிலிருந்து பரவிய கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தைக் குறித்து ஒன்றும் தெரியவில்லை என்பதையும் அறிகின்றோம். ஏனென்றால் தாமசு அப்போஸ்தலன் இந்த மக்களுக்கு அறிவித்தது புதிய ஏற்பாட்டுக் கால நற்செய்தி தானே! திருச்சபை வரலாற்றிலே கத்தோலிக்கத்தின் முழு வளர்ச்சியைக் கிட்டத்தட்ட கி.பி.600ஆம் நூற்றாண்டு அளவில்தானே அதன் அடையாளத்தோடு காண்கின்றோம்.

Christianity in India. Very Soon, this precious seed, cultivated by the holy Apostle bore fruit a hundred fold; the faith was carried to cranganore, to Coulan (Quilon), a celebrated city of the same coast, and to several kingdoms of Southern India. The converted Gentiles were united to the Jews; Churches were multiplied and the Syriac language accepted in divine service. St.Thomas, after having given a constitution to these infant churches, proceeded to new conquests. He directed his steps to the coast of Coromandel, and reached Meliapur. The fame of his miracles and of his wonderful success had preceeded him; the Rajah's eyes were opened to the faith; he received baptism. And by his example a part of his subjects embraced the Gospel. These numerous conversions excited the hatred and jealousy of the Brahmins, two of whom urged the populace to stone the Apostle; one o fthe priests observing some trace of life in the Saint, pierced him with his lance and St. Thomas received the reward of his love and devotion as missionary, the crown of martyrdom.

(Quoted, Catholic Community in India, p.3-4. Alex JF.D'Orsay in Portugese

கால வெள்ளத்திலே அவர்கள் புதிய ஏற்பாட்டு உபதேசங்களையும் திருக்கட்டளைகளையும் மறந்த மக்களாய், தங்களுக்கு நற்செய்தியை அறிவித்த அப்போஸ்தலனாகிய தாமசுவை மாத்திரம் நினைவில் வைத்துக் கொண்டிருந்ததை அறிகின்றோம். அவர்களுடைய விசுவாசத்திற்கு ஆதாரமான இலக்கியங்களும் இல்லாமல் அழிக்கப்பட்டு விட்டன!

கி.பி.1323-1330இல் இந்தியாவிற்கு வந்த ஜோர்டனஸ் என்னும் யாத்திரிகர், இந்தியாவிலே தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் மக்கள் இங்கும் அங்குமாக சிதறி இருந்தார்கள் என்றும் அவர்கள் ஞானஸ்நானத்தையோ, விசுவாசத்தைக் குறித்தோ எதுவும் அறிந்தவர்களாக இல்லை என்றும், ஆனால் பரிசுத்த தாமசைக் கிறிஸ்துவாக எண்ணினார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார். இச்செய்தியை சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட **Foreign Notices of South India** என்னும் நூல் வாயிலாக அறிகின்றோம்.[20]

தாமசு அப்போஸ்தலன் நம்பூதிரி பிராமணர்கள் பலரைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார் என்று அறிகின்றோம். தாமஸ் மலிகாயில் என்பவர் தாமசு மூலம் 3000 இந்துக்கள் இரட்சிப்படைந்தனர் என்று தெரிவிக்கின்றார். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தார்கள் என்றும், தாமசுவின் ஊழியத்திற்குத் துணைபுரிந்தார்கள் என்றும் அறிகின்றோம். *[21]

1940இல் கொச்சின் அரண்மனையின் கியுரேட்டர் கண்டுபிடித்த ஒரு சுவடியில் கி.பி.317இல் ஒரு கிறிஸ்தவ அரசன் ஆட்சி புரிந்ததாக மறைமுகமான குறிப்பு கிடைக்கிறது.[22]

அப்போஸ்தலராகிய தாமசு தமிழகக் கடற்கரையை ஒட்டிய நிலையிலே ஏற்படுத்திய ஏழு திருச்சபைகளைக் குறித்த செய்தி நமக்குக் கிடைக்கின்றது. திருச்சபை ஏற்படுத்தி இடங்களாவன: பல்லூர், முசிறி, பரூர் (இது கொச்சியிலுள்ள ஒரு சிறிய நகரம்), கொத்தமங்கலம், காயல், நிர்னம், கொல்லம்.[23]

---

* Of all the christianities founded by the Apostles in India, the only one that survived was that of Malabar, observes Aloysius Soares, 'though some claim that there were Christians on the Konkan coast right down to Portuguese times. The northern Christianity must have been engulfed when wave after wave of invasions swept over the Indus Valley. The Christians of Bartholomew, cut off from contacts with other Christian communities, must have gradually yielded to the influence of their surroundings. The converts of St. Thomas in Tamilnadu and on the coromandel coast are said to have fallen victims to Hindu intolerance. The more Probable explanation is that they aroused the suspicion of the Cholas and the Pandyas because their co-religionists in Kerala were the strong arms of the kings of Chera with whom the Cholas and the Pandyas were constantly at war. To use a contemporary expression, they may have been

தாமசு அப்போஸ்தலன் சோழமண்டலக் கடற்கரை வழியாகப் பயணஞ்செய்து நற்செய்தியை அறிவித்துக்கொண்டு வந்து இப்பொழுது சென்னை என்று அறியப்படும் இடத்திற்கு வந்தார். இங்கு நற்செய்தியை அறிவித்து பலரைக் கிறிஸ்துவுக்குள்ளாக்கினார். இங்கிருந்த கோயில் பூசாரிகளின் கோபத்துக்கு ஆளாகி கி.பி.72 சூலை மாதம் 3ஆம் நாள் இரத்த சாட்சியாகக் கொல்லப்பட்டார். சின்னமலை, பெரிய மலை (இப்பொழுது செயின்ட் தாமஸ் மலை) மயிலாப்பூர் என்று அறியப்படும் இடங்கள் முதலானவற்றுடன் அவர் தொடர்புடையவராக இருந்த செய்தியும் கிடைக்கின்றது.[24]

ஜே.எஸ். மாசிலாமணி என்பவர் தமது இந்த மத சங்கிரகம் என்னும் நூலில் பழந் தமிழகத்திலிருந்த கிறிஸ்துவத்தைக் குறித்துக் கூறியுள்ள செய்தியையும் ஒப்பிட்டுக் காண்க:

> "இயேசு நாதருடைய பன்னிரு சீஷர்களில் ஒருவராகிய தோமா என்பவர் தென் இந்தியாவில் மலையாளக் கரையில் வந்திறங்கி, அங்கே கிறிஸ்து மதத்தைப் பிரசங்கித்து, அநேக சபைகளை ஸ்தாபித்தார் என்றும், அவருடைய சுவிசேஷ கைங்கரியத்தின் பலனாக சீரிய கிறிஸ்தவர்கள் எனவும், தோமைக் கிறிஸ்தவர்களெனவும் பெயர் பெற்றிருக்கிற மலையாளக் கிறிஸ்தவர்கள் தோன்றினார்களென்றும் அநேகக் கல்விமான்கள் சொல்லுகின்றனர். சீரிய கிறிஸ்தவர்களுடைய பாரம்பரியம் இதுவே .... அலெக்சாந்திரியாப் பட்டணத்து அத்தியட்சராகிய திமித்திரே என்பவர் பிராமணரைக் கிறிஸ்தவர்களாக்கும் பொருட்டு பாண்டனேயு என்பவரை இந்தியாவிற்கு அனுப்பினார் என்பது சரித்திர சம்மதம் பெற்ற விஷயம். ஆகவே அதிபூர்வீக காலத்திலேயே இந்தியாவில் கிறிஸ்து மதம் ஸ்தாபமாயிற்று. ஐரோப்பாவில் பெரும்பாகம் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்து, தற்காலத்தில் அதிக நாகரீகம் பெற்றவர்களென்று எண்ணப்படுகிற ஆங்கிலேயர், ஜெர்மானியர்

If the Malabar community survived, it was because it maintained close ecclesiastical links with the well organised churches of the Persian Gulf and party because it had earned the favour of the local Rajas, who showered many distincitons on it. The Christians also provided the best and the most loyal recruits for the King's armies, and handsome revenue for his treasury through cultivation of pepper and various spices.

A document discovered in 1940 by the curator of the Cochin palace dates, somewhat indirectly, a Christian Raja of that region as having reigned in 317 A.D. On 14th February 317 A.D. according to the chronogram 'two non-Hindus proceeded to Cranganore, the capital, and made known to the king their sastra (doctrine)' and the king was converted and insisted that every one about him accept this doctrine. This king is known as Pallivanavar, meaning one who resided in 'palli', a non-Hindu place of worship. The tomb of this Pallivanavar as opened in 1888 and in it was found a bronze statuelte seven and a half inches long of the convert King with a conspicuous Greek cross on his chest."

முதலியோரெல்லாம் சாக்கனி தேசக் காடுகளில் சஞ்சாரஞ் செய்து கொண்டிருந்த காலத்திலேயே இந்தியாவில் கிறிஸ்து மதம் ஸ்தாபிதமாகி விர்த்தியடைந்து வந்தது நாம் நோக்கத் தக்க ஓர் விஷயம்.

கிறிஸ்தவ சபைகள் மலையாளத்தில் மாத்திரமல்ல, இந்தியாவின் பல இடங்களிலும் உண்டாயின. சென்னைக்குப் பக்கத்திலிருக்கிற மைலாப்பூர், கூர்ஜரம் முதலிய இடங்களில் சிறந்த கிறிஸ்தவ சபைகள் இருந்தன. இந்தக் கிறிஸ்தவர்களுக்குப் பலவித துன்பங்கள் உண்டானபோதிலும் இவர்கள் தங்களைச் சூழ இருந்தவர்கள் மேல் பல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களாயிருந்தார்கள். இதற்குப் பிந்திய நூற்றாண்டுகளில் கிறிஸ்து மதம் இந்து மதத்தின்மேல் இன்னும் அதிகச் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாயிற்று."[25]

இங்கு மலபார் என்று குறித்துக் காட்டப்பட்ட நிலப்பரப்பு பழந்தமிழகம் என்பதை நினைவில் வைக்கவேண்டும். தமிழ்மொழி மலபார் மொழி என்று அழைக்கும் வழக்கும் இருந்துள்ளது. தாமசு, பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பெற்றவராக இருந்ததால் (அப்.2:1-11), பல மொழிகளைப் பேசும் வரம் பெற்றிருந்தார். மேலும் தாம் தெரிவித்த பரமகுருவின் நற்செய்தி விண்ணக அதிகாரத்தினால் உண்டானது என்பதை நிரூபிப்பதற்கு அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையும், புதிதாகக் கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்ற விசுவாசிகள்மீது கைகளை வைத்து ஆவிக்குரிய அற்புதமான வரங்களை அருளும் பாக்கியமும் பெற்றிருந்தார் (அப்.8:16-17). எனவே தாமசு அப்போஸ்தலர் கி.பி. முதல் நூற்றாண்டுத் தமிழகத்தில் தமிழில் பரமகுருவின் நற்செய்தியை அறிவித்து, அதன் உண்மையுடைமையை அற்புத அடையாளங்களினால் நிறுவினார். இதன் விளைவாக தமிழகத்தில் கிறிஸ்து பெருமானின் திருச்சபைகள் பல தோன்றின (மத்தேயு 16:18; ரோமர் 16:16). அந்த நற்செய்தி இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கும் பரவின. இன்று காணும் பிரிவினைத் திருச்சபைகள் அன்று இல்லை. பின்னர் இந்தியாவில் திருச்சபை வரலாறு எழுதியவர்கள் அக்காலத்தில் தோன்றிய திருச்சபைகளைப் பரிசுத்த தாமசு திருச்சபைகள் (St. Thomas Churches) என்றும் கிறிஸ்தவர்களைப் பரிசுத்த தாமசு கிறிஸ்தவர்கள் (St. Thomas Christians) என்றும் குறிப்பிட்டார்கள். கி.பி. முதல் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய திருச்சபை பிரிவினைக் குற்றத்திற்கு விலகி இருந்தது. (யோவான் 17:21-22; 1 கொரி.1:12,13). பிரிவினை இல்லாமல் தமிழகத்தில் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்த கிறிஸ்துவத்தை திரும்பப் பெற்றால்தான் உண்மையான திருச்சபை ஒற்றுமை நாட்டிலே இன்றும் உண்டாகும்.

மேலும் வின்சுலோ தமது அகராதியின் முன்னுரையில் பல தமிழ் இலக்கியங்கள் அழிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றார். இச்செய்தியை கருணாமிர்த சாகரம் என்னும் தன்னிகரற்ற தமது தமிழிசை ஆராய்ச்சி நூலில் ராவ்சாகிப் ஆபிரகாம் பண்டிதர் மேற்கோள் காட்டுகிறார்.[25A]

மேலும் கி.பி.522இல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த கோஸ்மோஸ் **(Cosmos)** என்னும் அலெக்சாந்திரியா நாட்டுப் பயணி சிரியன் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பெற்ற 5,70,000 பேர் கொண்ட ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தைச் சந்தித்த செய்தியைக் கூறியுள்ளார்.[25B]

பரமகுருவின் பரிசுத்தமான நற்செய்தி முதல் நூற்றாண்டில் தமிழகத்தில் வேரூன்றியதனால், நிரம்ப தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் தோன்றின. கிறிஸ்தவத்தின் செல்வாக்குப் பிற இலக்கியங்களிலும் காணப்படலாயிற்று. அக்காலத்திலேதான் திருக்குறள் இயற்றிய திருவள்ளுவரும் தமாசுவைச் சந்தித்தார் என்ற செய்தியும், இதனால் கிறிஸ்தவத்தின் செல்வாக்கு திருக்குறளில் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் காட்டுவதையும் இந்நாள்களில் அறிகின்றோம்.*

பழந்தமிழகத்தில் புகுந்து பரவிய சமண சமயமும், பௌத்த சமயமும் பல தமிழ் நூல்களைத் தோற்றுவித்தன. இந்தச் சமயங்களின் கொள்கைகளை அறிவித்தும், காத்தும் நூல்கள் இயற்றப்பட்டன. இச்சமயத்தவரால் பல இலக்கண நூல்களும் இயற்றப்பட்டன. அவற்றுள்ளும் அழிந்தவைபோக எஞ்சியவை இன்றும் இருக்கின்றன.

தமிழிலக்கிய வரலாற்றின் வளர்ச்சியை வகுத்துக்காணும்போது முற்பட்ட சங்க காலத்தை - இயற்கையைப் போற்றிக் காதல் வாழ்விலும் வீர வாழ்விலும் மிகுந்திருந்த காலத்தை - இயற்கை நெறிக்காலம் என்றும், அடுத்து சமண பௌத்த தாக்குறவால் தோன்றிய நூல்களின் காலத்தை அறநெறிக்காலம் என்றும், இதனை அடுத்த காலத்தை, பக்தி நெறிக்காலம் என்றும் வகுத்துக் காண்பர். சமண பௌத்த இலக்கியங்கள் நமக்குக் கிடைத்திருக்க, கி.பி. முதல் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றி வளர்ந்த கிறிஸ்தவம், தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு என்னவாயிற்று என்னும் வினா இயல்பாக எழுகின்றது. அக்காலத்தில் தோன்றிய இம்மானுவேல் கிறிஸ்துவின் திருச்சபைகள் என்னவாயின என்பதும் அடுத்து இயல்பாக வரும் வினாவாகும். அக்காலக் கிறிஸ்தவர்கள் என்ன ஆயினர்? கிறிஸ்தவர்களும் திருச்சபைகளும், எந்த மக்கள் திராவிடர்களையும் அவர்கள் பண்பாட்டையும் தமிழையும் தங்கள் நோக்கத்திற்கு அடிமைப்படுத்தி அழித்தார்களோ அதே மக்களால் துன்புறுத்தப்பட்டு அழிக்கப்பட்டனர் என்று கொள்வதைவிட வேறு வழியில்லை. மேலும் அக்காலத் தமிழகத்தில் இருந்த ஏனைய சமயங்களும்

* இத்தொடர்பு குறித்து விவரமாக அறிவதற்கு செல்வி காமாட்சி சீனிவாசன், டாக்டர் மு. தெய்வநாயகம், மயிலை

கிறிஸ்தவத்தை ஆரியர்களுடன் சேர்ந்து எதிர்த்து அதன் மொத்த அழிவுக்குக் காரணமாக அமைந்திருக்க வேண்டும்.*

எனவே கி.பி. முதல் நூற்றாண்டை ஒட்டிய காலங்களைத் தொடர்ந்து தமிழில் நிரம்ப கிறிஸ்தவ இலக்கியங்கள் தோன்றின என்பதும் அவைகள் ஒருவாறு அழிக்கப்பட்டன என்பதும் தெளிவாகின்றது. அகத்தியருடைய சீடன் சுந்தரன் அழித்துவிட்ட முன் நூல்கள் இவைகளாகவே இருக்க வேண்டும் என்பது இதனால் உறுதிப்படுகின்றது. மேலும் பழந்தமிழ் இலக்கியங்களை அண்மை நூற்றாண்டுகளில் பதிப்பித்தவர்கள் தங்கள் கொள்கைக்கு அப்பாற்பட்ட பல இலக்கியங்களை அழித்த செய்தியையும் அறிகின்றோம். இயற்கையாலும் செயற்கையாலும், பரம குருவின் நற்செய்தியைத் தழுவி வேறு வடிவம் கொடுத்து அமைத்துக் கொண்டதாலும் பழந்தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் அழிந்தன என்பது புலப்படுகின்றது. தமிழில் இன்று இருப்பது போல பைபிள் மொழி பெயர்க்கப்பட்டிராத காலத்தில் பரமகுருவை அறிவதற்கு அகத்தியருக்குத் துணைபுரிந்த நூல்கள் அவைகளே என்று துணியலாம்.

இவ்வாறாக, தொடக்க காலக் கிறிஸ்தவத்தால் தமிழில் தோன்றிய இலக்கியங்கள் உருவநிலையில் அழிந்தாலும் அவற்றின் பொருள் நிலையில் அழியவில்லை. சத்தியத்தைப் பின்பற்றிய மக்களும் அவர்கள் பண்பாடும் அழிக்கப்பட்டாலும் சத்தியம் அழியவில்லை. அதற்குச் சான்றாக விளங்குவது அகத்தியரின் இந்நூல் மட்டுமன்று. தமிழகத்தில் தோன்றிய பக்தி இயக்கமுமாகும். சைவ, வைணவ சமயங்களிலே சமணம், பௌத்தம், வைதீகம் இவற்றின் தாக்குதலுடன் தோன்றியதாகக் கூறப்படும் பக்தி இயக்கத்திற்கு மூலம் என்ன? சைவம் கிறிஸ்தவத்திற்கு உயிர்நிலையாக இருக்கும் அன்பையும் வைணவம் கிறிஸ்தவத்திற்கு உயிர்நிலையாக விளங்கும் இன்னொரு பண்பான அருளையும் அடிப்படையாகக் கொண்டு பக்தி நெறிகளை வளர்த்துள்ளனவே.

இந்தியாவில் உண்டான பக்தி இயக்கம் முதன் முதலில் தமிழகத்திலே தோன்றியது என்கிறார் டாக்டர் ஏ.எல்.பாஷம்.[26] டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தமது தமிழ் இலக்கிய வரலாற்றில், பக்தி தமிழக ஆற்றங்கரையில் பிறந்து மகாராட்டிரத்திலும் வடவிந்தியாவிலும் பெண்மைப் பருவம் அடைந்து, குசராத்தில் முதுமை அடைந்தது என்கிறார்.[27] டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் 'கிறிஸ்தவ மார்க்கம் ஒப்புயர்வற்ற ஒரு பக்தி மார்க்கம்' என்று கூறுகின்றார்.[28] தமிழக மண்ணில் தோன்றி வளர்ந்த பக்தி இயக்கத்திற்கு ஆதாரம், தமிழகத்தில் கி.பி. முதல் நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ந்த கிறிஸ்தவமே என்பது வெள்ளிடை மலையாக விளங்குகின்றது.

---

* தமிழகத்தில் சமயப் பூசல்கள் நூற்றாண்டுகளினூடே வெகுவாக இடம் பெற்று, செல்வாக்குள்ளவர்கள் வெற்றி பெற்று

எனவே பழங்காலத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியம் உருவ அளவில் அழிந்துபோன போதிலும், பொருள் வடிவில் தமிழகத்தில் தோன்றிய பக்தி நெறியாக விளங்குகின்றது என்று தெளிவு பெறலாம் அன்றோ! மேலும் 7ஆம் பாடல் விளக்கவுரையில் **முன்னூல்** என்பதற்குக் கொடுத்திருக்கும் குறிப்பையும் காண்க.

தேரையன் : கொங்கணவன் குறித்து முன் பாட்டிலேயே கூறினோம். இவர் பதிணென் சித்தரில் ஒருவர். இவர் நம் அகத்தியருடைய மாணவர் என்பது தெரிகின்றது. இவர் அகத்தியரிடம் வைத்தியம் கற்றிருக்கின்றார். வைத்தியத் துறையில் இவர் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக விளங்கியிருக்கிறார்.* இதனால் அகத்தியருடைய மருத்து ஞானமும் தெளிவாகின்றது. அகத்தியரிடத்தில் மருத்துவம் படித்த தேரையன் இத்துறையில் மிகவும் சிறந்து விளங்கினார் என்றால், அகத்தியருடைய மருத்துவ ஞானம் என்னவாயிற்று என்னும் கேள்வி எழுகின்றது. அகத்தியர் ஆறு இலட்சம் பாடல்கள் பாடியதை அறிவிக்க அறிந்தோம். இவர் பரம்பொருளைப் பற்றிய ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டபடியினால் ஏனைய அறிவை எல்லாம் பவுல் அடியாரைப் போலக் குப்பையாக எண்ணினார் போலும் (பிலி. 3:11). தேரையன் படைத்த பாடல்களை எல்லாம் நன்கறிந்த அகத்தியர், அவருடைய பாடல்களில் எட்டில் ஒன்று மெய்யாக விளங்கும்படிக் கூறினார் என்று தெரிவிக்கின்றார்.

இடைக்காட்டுச் சித்தர், கழாய்ச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர்

5. “இயம்பினார் வஸ்துநிலை அறிந்து சொன்னார்,
   என்னுடைய சுந்தரனும் சொல்லவில்லை;

   நயம்பெறவே இடைகாட்டுத் சித்தர்தானும்
   ஞானமது கோடி சொன்னார் நன்மையாக;

   கயம்போல மயங்கிடவே வைத்தாரப்பா;
   கழாய்ச் சித்தனும் அப்படியே சொன்னான்.

   பயம்புடைய பாம்பாட்டிற்குச் சித்தர் மற்ற
   பதினெட்டுப் பேர்களுக்கு மென்னோடாச்சே.

கருத்துரை : மெய்ப்பொருளின் நிலையினை அவரவர்கள் அறிந்த அளவில் சொன்னார்கள்; என்னுடைய சுந்தரனும் சரியாகச் சொல்லவில்லை; இடைக்காட்டுச் சித்தர் நன்மையாக நினைத்து ஒருகோடி ஞானம் சொன்னார்; அவற்றால் மக்களை யானையைப் போல மயங்கச் செய்தார்; கழாய்ச் சித்தனும் அப்படியே செய்தான்; என்னோடு சேர்ந்த மற்ற பதினேழு சித்தர்களும் அப்படியே செய்தார்கள்.

*தேரையன் என்னும் சித்தரின் மருத்துவ ஞானம் முதலானவை குறித்து மதுரைத் தமிழ்ப் பேரகராதியில்

விளக்கவுரை

2-5 பாடல்களில் அகத்தியர் தவிர மற்ற சித்தர்கள் மெய்ப்பொருளைத் தேடியதில் பூரணமாய் அறியாமல் அவர்களும் மயங்கி, மக்களையும் மயக்கத்துக்குள்ளாக்கிச் செய்த நூல்களைக் கூறினார்.

என்னுடைய சுந்தரனும் சொல்லவில்லை: சுந்தரன் என்னும் சித்தர் நூல்களையும் பாடல்களையும் அழித்தார்; மெய்ப்பொருளின் நிலையினை அவர் கூறவில்லை. இவர் சுந்தரானந்தர் என்றும் அழைக்கப்பட்டுள்ளார். 4ஆம் பாடலில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பையும் காண்க.

இடைகாட்டுச் சித்தர் : இடைக்காட்டுச் சித்தர் கொங்கணச் சித்தரின் சீடர். இவருடைய காலத்தைக் குறித்தும் திட்டமான செய்தி இல்லை. இடையர்களையும் ஆடுமாடுகளையும் முன்னிறுத்திப் பெரிதும் பாடல் இயற்றி இருப்பதால், அல்லது மலையாள நாட்டைச் சேர்ந்த இடைக்காடு என்னும் ஊரினைச் சேர்ந்தவராக இருந்ததினால் இப்பெயர் பெற்றவரா என்பது திட்டமாகத் தெரிவில்லை. இவரைக் குறித்துப் பல கதைகள் வழங்குகின்றன.[29]

இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள் சிலவற்றை இங்கே மாதிரிக்குக் காட்டுகின்றோம்:

"காலா காலங் கடந்திடும் சோதியைக்
கற்பனை கடந்த அற்புதத்தை
நூலாற் பெரியவர் சொன்னநுண் பொருளை
நோக்கத்திற் காண்பது கோனாரே!"

"பஞ்ச விதமாய்ச் சஞ்சலம் பறக்க
பற்றற்று நின்றதைப் பற்றி அன்பாய்,
நெஞ்சத்து இருத்தி இரவு பகலுமே
நேசித்துக் கொள்ளுவீர் கோனாரே!"

- தாண்டவராயக் கோனார் கூற்று-6,10

"மண்ணாதி பூதமுதல் வகுத்ததொரு வான்பொருளைக்
கண்ணாரக் காணக் கருத்திசைந்து போற்றீரே.

பொய்ப் பொருளைவிட்டுப் புலமறிய வொண்ணாத
மெய்ப்பொருளை நாளும் விருப்புற்றுப் போற்றீரே!"

"பொய்யான கல்வி கற்றுப் பொருள் மயக்கங்கொள்ளாமல்,
மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் கன் மனமே!"

- பலரொடு கிளத்தல்-51,54,61.

"இருவினையாம் மாடுகளை ஏகவிடு கோனே! - உன்
அடங்குமன மாடொன்றை அடக்கிவிடு கோனே!
விண்நாடி வத்துவை மெய்யறி விற்காணுங் கோனே-என்னும்
மெய்யே மெய்யில் கொண்டு மெய்யறிவில் செல்லுங்கோனே"

– கிடைகட்டுதல் 113,125.

கிடைத்திருக்கும் இடைக்காட்டுச் சித்தர் பாடல்களைப் படிக்கும்போது,

"...ஞானமது கோடி சொன்னார் நன்மையாக,
கயம்போல மயக்கிடவே வைத்தாரப்பா"

என்று அகத்தியர் கூறியதுபோலவே சொல்ல வேண்டியுள்ளது. அவரது கூற்றுகள் ஞானம் போலக் காணப்படினும், மெய்ப்பொருளைத் தேடுவதுபோலக் காணப்படினும் அவைகள் யானையைப் போல மயக்கமாகவே இருக்கின்றன.

கழாய்ச் சித்தர் : இவரைப் பற்றிய குறிப்பேதும் கிட்டவில்லை; ஆனால் இவர் கூறிய ஞானத்தைக் குறித்துச் சொல்லும்போது இடைக்காட்டுச் சித்தரைப்போலவே இவரும் கூறினார் என்று அகத்தியர் முடிக்கின்றார்.

பாம்பாட்டிச் சித்தர் : இவர் பாண்டி நாட்டில் இருந்ததாகவும், கொங்கு நாட்டில் மருதமலை அடிவாரத்தில் தவஞ்செய்ததாகவும் கூறுவர். ஞானப்பாடல்களுடன் சித்தராரூடமும், சில வைத்திய நூல்களும் இயற்றியதாக அறிகின்றோம். இவர் பாம்மைப் பிடித்தாட்டி பாடி வந்ததனால் பாம்பாட்டிச் சித்தர் என்று காரணப்பெயரால் அழைக்கப்பட்டுள்ளார் என்பது தோன்றுகின்றது. சில பாடல்கள்:

"அண்டபிண்டம் தந்த எங்கள் ஆதிதேவனை
அகலாம லேநினைத்தே அன்புடன் பணிந்து
எண்திசையும் புகழ்ந்திட ஏத்தி மேத்தியே
ஏகமன மாகநாடி ஆடு பாம்பே!
சோதிமயமான பரி சுத்தவத்துவைத்
தொழுதழு தலற்றித் தொந் தோம்தோம் எனவே
நீதி தவறா வழியில் நின்று நிலையாய்
நினைந்து நினைந்துருகி ஆடுபாம்பே!
காற்று உடன் பொருள் ஆவி தத்த மாகவே
தானம் வாங்கி நின்ற எங்கள் சற்குருவினைப்
போற்றி மனம் வாக்குக்காயம் மூன்றும் பொருந்தப்
புகழ்ந்து புகழ்ந்து நின்று ஆடு பாம்பே!
பொய்ம் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்

மெய்ம்மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
    மெய்க் குருவின் பதம் போற்றி ஆடு பாம்பே!
வேதப் பொருள் இன்னதென்றும் வேதம் கடந்த
    மெயப் பொருளைக் கண்டு மனம் மேவி விரும்பிப்
போதப் பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
    பூரண சற்குருதாள் கண்டு ஆடுபாம்பே!
உள்ளங்கையிற் கனிபோல உள்ள பொருளை
    உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்
கள்ளமனந் தன்னைத் தள்ளிக் கண்டு கொண்டு அன்பாய்
    களித்துக் களித்து நின்று ஆடுபாம்பே!
அங்கையிற் கண்ணாடிபோல ஆதி வத்துவை
    அறிவிக்கும் எங்கள் உயிரான குருவைச்
சங்கையறச் சந்ததமும் தாழ்ந்து பணிந்தே
    தனியப் படம் எடுத்து ஆடுபாம்பே!
நீரில்எழும் நீர்க்குமிழி நிலைகெடல் போல
    நில்லாது உடல் நீங்கிவிடும் நிச்சயம் என்றே
பாரிற்பல உயிர்களைப் படைத்த வன்தனைப்
    பற்றவேநீ பற்றித் தொடர்ந்து ஆடுபாம்பே!
தாமரையின் இலையிலே தண்ணீர் தங்காத
    தன்மைபோலச் சகத்தாசை தள்ளிவிட்டெங்கும்
தூமணியாய் விளங்கிய சோதி பதத்தைத்
    தொழுது தொழுது தொழுது ஆடுபாம்பே!
எண்ணரிய புண்ணியங்கள் எல்லாம் செய்தும் என்
    ஏகன் அடி நெஞ்சமதில் எண்ணா விடிலே?
பண்ணரிய தவப்பயன்பத்தி இல்லையேல்
    பாழ்படும் என்று துணிந்து ஆடுபாம்பே!"

- பாம்பாட்டிச் சித்தர் பாடல்-5,10,11,12,13,14,64,70,100:7.

இந்தச் சித்தருடைய பாடல்தான் நற்செய்திக் கவிமன்னர் வேதநாயக சாத்திரியாரை

"ஆடுபாம்பே யெழுந்தாடுபாம்பே கிறிஸ்
தண்ணலைக் கொண்டாடி பண்பாடு பாம்பே"

என்று பாடச்செய்தது. பின்வரும் அவருடைய சிலபாடல்களையும் ஒப்பிட்டுக் காண்க:

28. "பாம்புலகை சுமந்து தாங்குமானால்
பராபர வஸ்துலகைத் தாங்க வில்லையோ
பராபர வஸ்துவைத் தாங்காவிடில்
பாம்பினாற்றாங்குதற்கு வல்லமையுண்டோ
பாம்பு பொசிப்பெடுத்துத் தூங்கி விழுந்தால்
பாருலகந்தவறி வீழ்ந்திடாதோ
பாம்புலகைத் தாங்குதென்ற சாஸ்திரிகளே
பாம்புக்கு நிலையே தென்றாடு பாம்பே!

29. பாம்பையணிந்தவன் தேவனாமோ
பாம்பிற்கிடந்தவன் தேவனாமோ
பாம்பிற்கிடந்தவன் தேவனானாற்
பாம்பாட்டியுங்கூட தேவனாவான்
பாம்பாட்டி பாம்புனக்கு நன்மை செய்ததோ
பாம்பையடித்துக் கொன்ற நீயே
பாம்பைப் பணிந்தாயென்றாடு பாம்பே!

30. பாம்புனக்கு மெய்யான தேவனானாற்
பாம்பிருக்கும் புத்தல்லோ சொர்க்கமாச்சு
பாம்பு விஷந்தருமோ நன்மைதருமோ
பாராமற் பாராமல் மோசம் போறாய்"[30]

மேலும் ஒய்.எம். சாலமோன் என்பவர், தமது **சத்தியானந்தப் பாடல்** என்னும் நூலில்:

"ஆடு பாம்பே எழுந்தாடு பாம்பே! கிறிஸ்
தண்ணலைக் கொண்டாடிப் பண்பாடு பாம்பே"

என்று பாடியிருப்பதையும் காண்க.[30A]

பாம்பாட்டிச் சித்தரும் மற்றவர்களைப் போலவே மெய்ப்பொருளை நாடித்தேடி அறிவிப்பதுபோலக் காணப்பட்டாலும் முடிவில் மயக்கத்திற்குட்பட்டே நின்றுவிட்டார் என்கிறார் அகத்தியர்.

பதினெட்டுப் பேர்களுக்கு என்னோடாச்சே:

தம்முடன் சேர்த்து சித்தர்கள் பதினெண்மர் என்று கூறுகின்றார். இதனால், அகத்தியர் பதினெட்டுச் சித்தர்களில் ஒருவர் என்பது திட்டமாக விளக்கமாகின்றது. இவருடைய பாடல்கள் பதினெண் சித்தர் பாடல் தொகுப்பில் காணப்படாதது வியப்பாகவே இருக்கிறது. அகத்தியர் ஞானம் என்னும் பெயரில் 1,2,3,4,

5[31],6,16[32] என்னும் எண்களில் தனித்தனியே பாடல்கள் சித்தர் ஞானக்கோவையில் உண்டு.

சித்தர்கள் பதினெண்மர் என்று தொகுத்துக் கூறுவதையும், அவர்கள் வரிசையில் அகத்தியருக்கு முதல் இடம் அளித்துள்ளதையும் டாக்டர் கே.கே.பிள்ளை குறிப்பிட்டுள்ளதை முன்னரே கண்டோம்.

2 முதல் 5 பாடல்களில் பதினெண் சித்தர்களுள் சிலர் மெய்ப்பொருளை அறிவதற்குச் செய்த முயற்சியில் எழுதிய நூல்களையும் அவர்கள் கூறும் செய்தியின் மயக்கத்தையும் தெளிவுபடுத்தினார் என்றறிக.

முப்பது முக்கியம்

6. "ஆச்சப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு;
ஆறு லட்சம் கிரந்தமதை அருளிச் செய்தேன்;
பேச்சப்பா பூரணத்தின் மூன்று லட்சம்
பேசினேன் ஆயிரத்துள் அடக்கிப்போட்டேன்;

காய்ச்சப்பா ஆயிரத்தை ஐந்நூ றாக்கிக்
கட்டினேன் ஐந்நூற்றை நூற்றுக்குள்ளே
மூச்சப்பா நூறதுவை ஐம்பதாக்கி
முகித்திட்டேன் முப்பதுக்குள் முக்கியத்தானே!"

கருத்துரை : புலத்தியனே நான் கூறுவதை நன்றாகக் கேளு; ஆறு இலட்சம் கிரந்தங்களை எழுதினேன்; அவற்றை பூரணப்படுத்த ஆராய்ந்தபோது அவற்றுள் மூன்று இலட்சம் வெறும் பேச்சு என்பதை அறிந்தேன்; அந்த மூன்று இலட்சத்தை ஆராய்ந்து பார்த்து ஆயிரத்துக்குள் அடக்கினேன்; அவற்றையும் நுணுகி ஆராய்ந்து ஐந்நூறு ஆக்கினேன்; அந்த ஐந்நூற்றையும் நூறாக்கினேன்; நூற்றையும் ஐம்பதாக்கினேன்; முடிவில் அவற்றின் முக்கியம் கருதி முப்பது பாட்டுக்குள்ளே அடக்கி விட்டேன்.

விளக்கவுரை

ஆச்சப்பா புலத்தியனே : புலத்தியன் என்னும் பெயருடன் ஒரு சித்தர் இருந்ததை அறிகின்றோம். பிரமனது மானச புத்திரருள் ஒருவன் என்னும் கதையுமுண்டு. இவருக்கு அவிர்புக்குவினிடத்திலே அகத்தியன் என்று ஒருவனும், விசிரவசு என்று ஒருவனும் பிறந்தார்கள் என்பர். கும்பமுளி என்பார் இந்த அகத்தியரினின்று வேறு பிரித்துக் காட்டப்படுகின்றார். இந்தப் புலத்தியன் புராணங்களை முதன்முதலாக வெளியிட்டவர் என்றும் கூறப்படுகின்றது. [32A]

புலத்தியருக்கு பிறந்தவர் இந்த அகத்தியர் என்றால், இவரை அகத்தியர் '**அப்பா புலத்தியனே**' என்று அழைப்பது பொருத்தமே யாம். பிள்ளைகள் பெற்றோர்களைவிட ஞானவான்களாக விளங்குவார்கள் என்று கடவுளின் திருவாக்காகிய வேதமும் கூறுகின்றது. பல பாடல்களில் **அப்பா! அப்பா!** என்று விளிக்கின்றார். (6,10,14,15,22). மைந்தா! மைந்தா! என்றும் விளித்துப் பேசுகின்றார். (7). மேலும் புலத்தியன் என்னும் பெயர் ஞானமுள்ளவன் என்னும் பொருளையும் தருகின்றது. இதன்படி இந்நூலினைப் படிப்போர் எல்லாரையும் இது குறிக்கலாம். லூக்கா தேயோப்பிலுவே என்று விளிப்பதுபோல் இது அமைந்துள்ளது. (லூக்கா 1:1; அப்.1:1).

இப்பாடலில் தாம் நான்கு வேதங்கள் முதலானவைகள், 'முன்னூல்கள்', உடன் சித்தர்களின் நூல்கள் ஆகியனவற்றை ஆராய்ந்து கண்ட உண்மைகளை ஆறு இலட்சம் பாடல்களில் இயற்றியதைக் கூறுகின்றார். இவற்றுள் இவருடைய வைத்திய நூல்கள் முதலான பலவும் அமைந்திருக்கலாம். ஆனால், **பரம குரு சொன்னபடி** (30) பாட முற்பட்டதில் பரம்பொருளை அறிவிக்கும் செய்தியையே மையமாகவும் கருவாகவும் எல்லாமாகவும் கொண்டு முப்பது பாட்டிற்குள் சுருக்கிக் கொடுத்துள்ளார் என்பது புலப்படுகின்றது.

முன்னுரையாக அறிவித்த முதல் பாடலைத் தவிர 2 முதல் 5 பாடல்களில் உடன்சித்தர்கள் பகுத்தறிவுக்கு உட்பட்டு தமக்கு முன்னிருந்த சமய சாத்திரங்களிலும், தாம் கண்ட உலகத்திலும் மெய்ப்பொருளைத் தேடி தெளிவு பெறாமல் அவர்கள் மயங்கியதுமட்டுமின்றி, அவர்கள் அறிவித்த செய்தியால் மக்களையும் மயக்கியதையும் கூறினார். இந்தப் பாடல் முதலாக தாம் கண்ட மெய்ப்பொருளையும் பரமகுருவையும் உலகத்தவர்க்கு அறிவிக்கின்றார்.

சுத்த சிவன் இருப்பிடம்

7. "முகிவாகச் செய்துவிட்டேன் மைந்தா! மைந்தா!
முப்பதுக்குள் அடக்கிவிட்டேன் முன்னூல் பார்த்து

அகிலமதில் விரித்துவிட்டேன் இந்த நூலை;
யார்தானும் எந்தனைப்போல் அறையமாட்டார்.

பகிரதியும், கலைமகளும், வாணி தானும்,
பார்வதியும், அறுமுகனும் பலபேர்தானும்,

சகியாத மூர்த்திகளாம் இவர்கள் தானும்
சுத்த சிவன் இருப்பிடமோ சாற்றுவீரே!"

கருத்துரை : மைந்தனே! முப்பதுக்குள் எல்லாவற்றையும் அடக்கிவிட்டேன்; முன்னூலைப் பார்த்து இந்நூலை உலகத்தில் செறிவாக எழுதிவிட்டேன்;

என்னைப் போல யாரும் சொல்ல இயலாது. பகிரதி, கலைமகள், வாணி, பார்வதி, அறுமுகன், இன்னும் பலரும், சகிக்க இயலாத மும்மூர்த்திகளும் சுத்த சிவனுடைய இருப்பிடமாவாரா சொல்லுங்கள்!

விளக்கவுரை

முப்பதுக்குள் : முப்பது பாடல்களில் தமது ஞான நூலைப் படைத்திருப்பதை அகத்தியர் நான்கு முறை சொல்லுகிறார் (1,6,7,30). இதனால் சற்குரு தமது 30ஆம் வயதில் திருமுழுக்குப் பெற்று ஊழியம் தொடங்கியதை நினைவில் வைத்து இதனை அமைத்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இம்முப்பது பாடல்களைக் கற்று முடிக்கும் தருவாயில், கற்போர் சற்குருவால் தடுத்தாட்கொள்ளப்பட்டு ஒரு புதிய வாழ்வு தொடங்குவதற்கும் திறந்த வாசலும் வாய்ப்பும் இந்நூல் வாயிலாகத் தெளிவாகிறது. மேலும் இவற்றுள் இடைச்செருகல் வருவதற்கு வழி இல்லாமல் தடுக்க இந்த 30 எண்ணிக்கையும், பொருட் கோர்வையும், பாடல்களின் ஓட்டமும் துணை செய்கின்றன.

முன்னூல் பார்த்து : இந்த முப்பது பாடல்களைப் பரமகுரு சொன்னபடி பாடுவதற்கு அகத்தியருக்கு ஆராயச்சிக் களமாக இருந்தது. இந்த முன்னூல் அல்லது நூல்கள் என்பது தெரிகின்றது. 4ஆம் பாடலில் முன்னூல் என்பதற்குக் கொடுத்திருக்கும் ஆராய்ச்சிக் குறிப்பையும் காண்க.

இந்த முன்னூல் பட்டியலில் நான்கு வேதங்கள், நான்கு வேதங்களிலிருந்து தோன்றியவை என்று அறியப்படும் ஆறு சாத்திரங்கள், பதினெண் புராணங்கள், நான்கு மதங்களிலிருந்து தோன்றிய சாத்திரங்கள், இதிகாசங்கள், இன்னும் மற்ற சாத்திரங்கள்,[33] ஏனைய பதினேழு சித்தருடைய நூல்கள், ஒழுக்க நூல்கள், தமிழகத்தில் முதல் நூற்றாண்டை ஒட்டித் தோன்றிய கிறிஸ்தவ நூல்கள்-சுயவேதம் என்னப்படும் கடவுளின் திருவாக்காகிய வேதம் தரும் செய்திகள் ஆகிய எல்லாவற்றையும் அடக்கிக் கூறுகின்றார். இவ்வளவு நூல்களையும் கற்று நூல் செய்ய முற்பட்டபோது ஆறு இலட்சம் பாடல்களாக அமைந்ததில் வியப்பொன்றும் இல்லை. இச் சித்தர் வடமொழிப் புலமையும் நிறைந்தவர் என்பதும் வெளிப்படை மேலும் தம்மைப்போல யாரும் கூறமாட்டார்; கூறவில்லை என்பதையும் அறுதியிட்டுத் துணிவாக உரைக்கின்றார்; இங்கே செருக்கு உண்டு என்று எண்ணுவதற்கு இடமில்லை; துணிவே காணப்படுகின்றது. தாம் கண்ட **மெய்ப்பொருளை** அறிவித்ததால் தமக்குத் துன்புறுத்தல்களும், வசைகளும் பிறவும் வரலாம் என்றும் இவர் பாடியுள்ளார்.[34]

சுத்த சிவன் இருப்பிடமோ சாற்றுவீரே! சிவன் என்பதால் கடவுளைக் குறித்துக் காட்டுவதை ஏற்றுக்கொள்ளும் இச்சித்தர், சுத்த சிவன் என்றதால் நான்கு

வேதங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலானவற்றிலிருந்து கூறும் சிவனிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

முதல் பாடலிலேயே மும்மூர்த்திகளுக்குத் தேவியர் நிறைந்த வழியினைக் குறிப்பிட்டுள்ளார்; இங்கே, பகிரதி, கலைமகள், வாணி, பார்வதி, அறுமுகன் ஆகியவர்களைக் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்ட தேவிமாருடன் அறுமுகன் முதலான பலபேரும், ஏனைய மூர்த்திகளும் சுத்த சிவன் இருப்பிடமல்ல என்று முழு முதற் கடவுளிடத்திலிருந்து அவர்களைக் குணத்தாலும் தகுதியாலும் வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

மேலும் சுத்த சிவனைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்ட மகாகவி எ.ஆ.கிருஷ்ணபிள்ளை, சிவனைப்பற்றிக் கூறுவதாகக் கூறப்படும் நூல்களில் ஆராய்ந்து கூறியுள்ள பின்வரும் செய்தியையும் ஒப்பிட்டுத் தெளிக.

"1. சிவன் கடவுள் என்பதற்கு இந்து வேத ஆதாரம் இல்லை என்பதினாலும்,

2. ஆகமங்கள் பிரமாண கிரந்தங்கள் ஆகமாட்டா என்பதினாலும்,

3. சிவன் சரீர சம்பந்தமும், சம்சார பந்தமும் உள்ளவர் என்பதினாலும்,

4. அவர் அறியாமையினால் ஆபத்துக்குட்பட்டவர் என்பதினாலும்,

5. மும்மூர்த்திகளும் நிருவிகற்ப வஸ்து அல்லர் என்பதினாலும்,

6. சிவனுக்குரிய சில திருநாமங்களின் காரணமே அவர் கடவுள் அல்லர் எனக்காட்டுகிறது என்பதினாலும்,

7. சர்வேஸ்வரத்துவம் உடையவரல்லர் என்பதினாலும்,

8. மெய்க்கடவுளுக்குரியனவாய் வேதம் கூறுகிற லட்சணங்களில் ஒன்றேனும் பொருந்தவில்லை என்பதினாலும்,

சிவனுக்கு கடவுள் தத்துவம் இல்லை என்று மெய்ப்படுகிறது. ஆதலின் அவைகளை முறையே விளக்கிக் காட்டுதும்:

"1. சிவன் கடவுள் என்பதற்கு வேத ஆதாரம் இல்லை என்பதைப் பற்றி:

இந்து தேசத்தில் ஏகதேசம் மூவாயிர வருஷக் காலமாய் வழங்கி வருகிற சைவ வைணவ முதலிய சமயங்களுக்கு ஆதாரமாயுள்ள முதனூல் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களே. இவைகள் தாம் முக்கிய பிரமாண நூல்கள் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படி இந்து சமயிகள் முழுக்கவும் பூரணமாக ஒப்புக்கொள்ளுகிற நான்கு வேதங்களுக்குள்ளும் பரப்பிரம வஸ்துவே சமஸ்தத்துக்கு மூல காரணம் என்று சில இடங்களிலும், இன்னும் சில இடங்களில் சோம சூரியாக்கினி,

இந்திரன் முதலிய திக்குபாலகர், அஷ்டவசுக்கள் இவர்களே விசேஷித்த தேவர்கள் என்றும், இவர்களாலே உலக ஆட்சி நடந்துவருகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கின்றதே அன்றி, சிவனைப்பற்றி ஒரு வெளிப்பாடும் இல்லை. ருத்திரன் என்கிற பெயர் வேதத்தில் இடைக்கிடை வழங்குகிறதுண்டு. அதனால் இருக்கு வேத காலத்தில் உள்ளவர்கள் ருத்திரன் என்று ஒரு தேவனை வணங்கினார்கள் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆனாலும் அவர்கள் வணங்கின ருத்திரனுக்கும் இப்பொழுதிருக்கிற சிவபக்தர்கள் வணங்குகிற சிவனுக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. எப்படியெனில் சிவபக்தர் சிவனே எல்லாத் தேவர்களிலும் பிரதான தேவன் என்றும் பிரம்மா, விஷ்ணு முதலான தேவர்களும் சகல லோகங்களும் அவனுக்குள் அடக்கம் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற ருத்திரன் பிரதான தேவனல்லன். அவன் மருத்துக்களுக்குத் தகப்பன். காற்றுகளுக்கு மருத்துக்கள் என்றும், உருத்திரனுடைய மக்கள் என்றும் பெயர். ஆதலால் அந்த ருத்திரன் காற்றுகளுக்குத் தகப்பன், அவனை அக்கினியின் ஊழியன் என்றும், தானாபதி என்றும் அக்கினி என்றும் சொல்லியிருக்கிறது. ருத்திரன் என்கிறதும் பசுபதி என்கிறதும் அக்கினிக்குப் பெயர் என்று வேதத்தைச் சேர்ந்த சதபதப்பிராமணத்தில் அறிந்து கொள்ளலாம். அனலுக்கும் காற்றுக்கும் உண்டாயிருக்கிற சம்பந்தத்தினாலே காற்றுக்குத் தகப்பனாயிருக்கிற ருத்திரனை இப்படி அக்கினியோடே சம்பந்தப் படுத்தியிருக்கலாம் என்று நினைக்கத்தக்கது. ருத்திரன் மருந்துக்கு உதவத்தக்க பூண்டுகளை உண்டாகும்படி செய்து வைத்தியர்களுக்கு வைத்தியனாயிருக்கிறவன் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. அவனைச் சில சமயங்களில் தயவுள்ளவனாகவும், சில சமயங்களில் முற்கோபம் உள்ளவனாகவும், முகாந்தரமில்லாமல் மனிதரைக் கொல்லுகிறவனாகவும் காட்டியிருக்கிறதன்றி, சில கவிகளில் அவனைச் சடையன் என்றும் காட்டியிருக்கின்றது. அதினால் அவனுடைய சடை தீக்கொழுந்து என்று சிலர் நினைக்கிறார்கள்.

இருக்கு வேதத்தில் ருத்திரன் என்னப்பட்டவன் சிவன் தானோ அல்லவோ என்று மேற்சொல்லியவைகளை வாசிக்கிற யாவரும் நிதானித்துக் கொள்ளலாம். அவன் சிவனல்ல என்றால் இருக்கு வேதகாலத்தில் சிவன் இல்லவே இல்லை என்று நிச்சமாய் விளங்கும். அந்த ருத்திரன் சிவன்தான் என்றால் இருக்கு வேதகாலத்தில் சிவன் நானாவித தேவர்களுக்கு ஒத்தவனே அல்லாமல் எல்லாத் தேவர்களிலும் பெரிய தேவன் அல்ல என்பது கண்கூடாய் விளங்கும். முதலாம் மண்டலம் 44-வது சூக்கத்தில் மித்திரனும், வருணனும், ருத்திரனும், சகல

தேவர்களும் சந்தோஷப்பட்டு எங்களுக்குத் தயவு செய்வார்களாக என்று சொல்லியிருக்கிறதைப் பார்த்தால் வேதத்தை எழுதின ரிஷிகளும், அக்காலத்திலுள்ள மற்ற இந்துக்களும் ருத்திரனை மித்திரன் வருணன் என்ற ஆதித்தியருக்குச் சமானமாக எண்ணினார்களேயன்றி அவனையே கடவுள் என்றாவது, இந்திரனுக்குச் சரியானவன் என்றாவது எண்ணினது இல்லை என்று விளங்கும். விஷ்ணு, ருத்திரன் என்ற பெயர்கள் எவ்வளவோ தாழ்ந்தவைகள் என்பது: இருக்கு வேதத்தில் முதலாம் அஷ்டகத்திலுள்ள 121 சுலோகங்களில் இந்திரனுக்கு 45, அக்கினிக்கு 37, மருத்துவர்களுக்கு 12, உதையத்துக்கு 4, ருத்திரர்களுக்கு 2, மற்ற சுலோகங்கள் பற்பல சிறுதேவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதினால் அறியலாம். விஷ்ணுவுக்குத் தனியாக அந்த அஷ்டகத்தில் ஒன்றும் இல்லை. இதைக்கொண்டும் நிதானிக்கலாம்."

2. ஆகமங்கள் பிரமாணம் ஆகமாட்டா என்பதைப்பற்றி, வேதங்களில் ஆதாரம் இல்லை என்றாலும், வேதங்களொடு ஒத்த பெருமையுள்ள காமிகமுதல் வாதுளம் ஈறாக 28 சைவ ஆகமங்கள் இருக்கின்றனவே, அவைகளில் சிவபிரானே சர்வத்துக்கும் மேலான அநாதிக் காரணமாயுள்ள பரப்பிரம வஸ்து; அவனே மெய்க் கடவுள் என்றும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பதங்களை அநுஷ்டித்து நின்று அவனை வழிபட்டு உபாசிக்கும் உபாசனை முறை இவையிவை என்றும், 28 கோடி கிரந்தங்கள் கூறுகின்றனவே என்றால்: பிராமணர் முதலிய இந்துமார்க்கத்தார் யாவரும் பிராமண கிரந்தங்களாக ஒப்புக்கொள்வது நான்கு வேதங்களே; அவைகளுக்கு அவிரோதமாய் எம்மட்டுக்கு ஒத்து வருகிறதோ அம்மட்டுக்கும் ஸ்மிருதியையும் பிரமாண கிரந்தமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவற்றிற்குப் பொருந்தியிராத எந்த நூலும் தள்ளத்தக்கவைகள் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆதலால் ஆகமங்கள் ஆகட்டும், எட்டு தலபுராணங்கள் ஆகட்டும், இதிகாசங்கள் ஆகட்டும், சுருதி ஸ்மிருதிகளுக்கு நேர்விரோதமான கொள்கைகளையும், வழிபாடுகளையும் கற்பிக்கிற நூல்களானதால் அவைகள் பிரமாணங்களாக மாட்டா. ஆனால் அவைகள் பூர்வத்தில் இருந்த சமஸ்கிருத வித்துவான்களாலே பிழைக்கும் வழிக்காக உண்டாக்கப்பட்ட கட்டுப்பாடான நூல்கள் என்று அறிக."

3. சிவன் சம்சார பந்தமுள்ள தேகியாயிருத்தலில் அவருக்குக் கடவுள் தன்மை பொருந்தாது என்பதைப்பற்றி, கடவுள் அருவருப்பொருளாயும், அதரிசியாயும் ஐம்புலன்களின் நுகர்ச்சியற்றவராயும் இருக்கிறவர் என்று இந்து வேதங்கள் தெளிவாய் தொனித்துக் கொண்டிருக்கையில் ஐந்து முகமும், எட்டுத் தோளும்,

ஜடாதாரமும், முக்கண்களும், புலித்தோலுடையும், யானையுரிப் போர்வையும், திரியம்பகம், திரிதலைச்சூலம், மழு முதலிய ஆயுதங்களைப் பரிசுத்த அஸ்தங்களாகவும், அக்கினி நிறமான திருமேனியும், விபூதிதூளிதமும் உடையவராய்ப் பார்வதி தேவியை மணந்து பிள்ளையார், ஆறுமுகர், வீரபத்திரர் முதலிய அநேக புத்திரரைப் பெற்று அவர்களுக்குச் சம்பந்தமும் செய்து பேரன் பேத்திகளையும் கண்டுகளித்துக் கைலையங்கிரி வாசியாய், மூன்று உலகங்களும் வணங்க வீற்றிருக்கின்ற சிவபிரானைக் கடவுள் என்கிற கொள்கையும் கைக்கொள்ளுதலும் தப்பு என்றாக வேண்டும். எது சரி என்று நிதானியுங்கள். சூரர்களை அழிக்கும் பொருட்டுச் சிவன் கல்லாக மரத்தடியில் தட்சணாமூர்த்தமாய் எழுந்தருளியிருந்து பதினாயிரம் தேவ வருஷம் தபசு செய்திருந்தார் என்றால் சர்வ வல்ல கடவுளுக்கு மேற்பட்ட கடவுளுண்டாயிருப்பது எப்படி? மற்றபடி தம்மை நோக்கித் தாமே தபசு செய்திருந்தார் என்று சொல்ல வேண்டுமேயன்றி வேறு யாது சொல்லக் கூடும்?

கந்தபுராணம், மோனநீங்கு படலம் 19:11-

"நோற்றுமாயவன் முதலினோர் யாவரு நுனதாளைப்
போற்றி யர்ச்சனைபுரிய வித்திருவெலாம் புரிந்துற்றாய்
தோற்றமின்றியே யைந்தொழி லியற்றிய தொல்லோய் நீ
ஆற்றுகின்றதோர் தவநிலை யெம்பொருட்டா லன்றோ!"

என்றும்,

இராமாயணம், தடாகை வதைப்படலம் 12:11-

"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்வுமேன் முடுகினா ரறிவுசென்
றுற்றவா னவனிருந்து யோகுசெய் தனனெனில்
சொற்றவா மனவதோ மற்றிதன் றூய்மையே"

என்றும், கூறியிருப்பவனற்றால் சிவன் தபசு செய்தார் என்பது எடுத்துக் காட்டாகின்றது. இவை போன்ற செய்கையுள்ள சிவபிரானிடத்து உருவமில்லாமை, குற்றமற்றபார்வை, புலனடக்கம் என்ற குணங்கள் உள்ளன என்றால் அது வேடிக்கையான வார்த்தையே என்பதில் சந்தேகம் என்ன இருக்கிறது.

"இல்ல புகழ்தலின் வைதலே நன்று!"

"4. அறியாமையினால் ஆபத்துக்குட்படுகிறார் என்பதைப் பற்றி, கடவுளுக்குரிய சர்வவல்லமை, சர்வஞானம், பரிசுத்தம், நீதி முதலிய குணங்கள் இல்லை என்பது விருகாசுரன் தபசுக்கு வந்து

அவனுக்கு வரங்கொடுத்து ஓடியதையும், விஷ்ணு பிரமசாரி வடிவமெடுத்து வந்து தந்திரமாய் அவனைக் கொன்றதையும் கவனிக்கையில், சிவபிரான் சர்வவல்லமையும் சர்வஞானமும் எங்கே சென்றன? அசுரரை வஞ்சித்துக் கொன்று தேவர்களுக்கு அமிர்தபானம் செய்வித்த விஷ்ணுவாகிய ஜெகந்மோகினியைக் கண்டு மயங்கிப் புணர்ந்து அரியர புத்திரன் என்ற ஐயனார் உதயமானார் என்று வாசனை வீசுகின்றதே! இதில் சிவபிரானுடைய பரிசுத்தமும் நீதி முதலிய தெய்வீக இலட்சணங்களும் எங்கு சென்றிருந்தன? எல்லாம் ஒருங்கே தொலைந்து பாழாயினவோ! இன்னும் உளவோ! மனிதருக்குள்ளும் இப்படிப்பட்ட ஆபாச செய்கை நாற்றமும் அருவருப்புமானது என்று வெறுக்கும்பொழுது இவைகள் சிவக்கடவுளாருக்குத் திருவிளையாட்டு என்னலாமோ! விளையாட்டுத் தனமுள்ள இவரைக் கடவுள் என்று .... பாராட்டுவதும் பட்டங்கட்டுவதும் தகுமா? நிதான புத்தியோடு யோசியுங்கள். மேலே குறிப்பிட்ட இரண்டு கதைகளைப்பற்றி இருசமய விளக்கம், சிவனது இடுக்கண் தீர்த்த பரிச்சேதத்தும், கந்தபுராணம் மகா சாத்தப்படலத்திலும் கண்டு கொள்க.

"**5. பிரமா விஷ்ணு ருத்திரன் மூவரும் ஒருவர், வேறுபாடற்ற பொருள் என்பதைப் பற்றி:** சிவனுக்குச் சர்வேஸ்வரத்தும் உண்டு: "அந்த ஈஸ்வரன் சிருஷ்டி முதலான தொழில் செய்வதைப்பற்றிப் பிரமா விஷ்ணு ருத்திரன் என மூன்று பிரதான நாமங்களால் சொல்லப் படுகிறான். ஆதலால் கர்த்தர் ஒருவரேயன்றி பலர் அல்லர். சைவர்கள் சிவன் என்கிற நாமத்தினால் சொல்லப்பட்ட பொருளே முத்தொழிற்கும் காரணம் என்றும் சொல்லுதலினாலே அவ்விரு சமயத்தாரும் கர்த்தர் ஒருவரென்றே கூறுகின்றார். அல்லாமல் பலர் என்று கூறுகின்றிலர்" என்பது **சமயத் தொகுதி.** இது தவறென்பதற்குச் சான்று:

(அ) பொருள் ஒன்று, நாமம் மூன்றாயிருப்பதில் ஆட்சேபனை யாதும் இல்லை. ஆனால் காரியம் அப்படி இல்லை. பிரமா, விஷ்ணு, சிவன் என்ற மூவரும் ஒருவராய் வேற்றுமை இல்லாமல் இருந்தால் பிரமாவுக்குப் பிறந்தநாள் உரோகணி, விஷ்ணுவுக்குப் பிறந்தநாள் திருவோணம், சிவனுக்குப் பிறந்தநாள் திருவாதிரை என்று இவ்வாறு, பிறப்பு வேறுபாடு செய்திருப்பதாக வருவானேன்.

"வாழி யந்தரங்கமுள்ளாய் மருவு மாதிரையை யாவாய்"

என்று குற்றாலத் தலபுராணத்தும்,

"ஆதிரைநா ளுகந்தானும் ஆரூமர்ந்த அம்மானே"

என்று அப்பர் தேவாரத்தும் வருவனவற்றைக் கண்டு கொள்க.

(ஆ) பிரமாவுக்குச் சரஸ்வதியும், விஷ்ணுவுக்கு இலக்குமியும், சிவனுக்குப் பார்வதியும் தேவிமார்களாயிருக்கும் விதம் எப்படியாகும்!

(இ) பிரமாவுக்குக் காசிபர், புலத்தியர் முதலிய புத்திரரும், விஷ்ணுவுக்குப் பிரமா, மன்மதன் முதலிய புத்திரரும், சிவனுக்குப் பிள்ளையார், சண்முகர் முதலிய அநேக புத்திரரும் உண்டாகி ஒவ்வொருவரும் ஏகதேசம் கடவுள் தன்மையை அடைந்திருக்கிறார்களே. இவர்கள் எல்லாரும் பேதம் இல்லாதவர்களாகவா தோன்றினார்கள்?

(ஈ) நாம விகற்பமே அன்றி பொருள் (வஸ்து) விகற்பம் இல்லாதிருந்தால், தாமரை மலர், திருப்பாற்கடல், வெள்ளியங்கிரி என்ற ஸ்தான விகற்பம், ரூப விகற்பம், வர்ண விகற்பம், உடை விகற்பம், அணி விகற்பம், குண விகற்பம், தொழில் விகற்பம், ஆயுத விகற்பம், வாகன விகற்பம், பெண்டு விகற்பம், பெற்ற பிள்ளைகள் விகற்பம், கோவில் விகற்பம், சிலை விகற்பம், உருவ விகற்பம், ரத விகற்பம், விழா விகற்பம், பூசை விகற்பம், நைவேத்திய விகற்பம், மந்திர விகற்பம், நித்திய கடமை விகற்பம் - அனைத்தும் விகற்பமாகச் சகல நடபடிகளும் நடந்து கொண்டு வரும்போது மூவரும் ஒரே வஸ்துவென்ற போக்கு - வார்த்தை பொருந்தத் தக்கதா?

(உ) ஒருவரையொருவர் பகைத்துப் பொறாமைப்பட்டு நீ சிறியவன் நான் பெரியவன் என்று கோபமூண்டு ஒருவரையொருவர் எதிர்த்துச் சண்டை செய்வதும், ஒருவர் செய்ததை ஒருவர் அழிப்பதும், காரியத்துக்குத் தக்கதாகக் கலந்து கொள்வதும், காரியம் முடிந்தால் காலை வாருவதும், வேறுபாடு இல்லாத வஸ்துவுக்கு இலட்சணமாகுமா? ஈண்டெடுத்துக் காட்டியவற்றில் எதனை .... மறுக்கக்கூடும்? ஆதலால் இவைபோன்ற வீண்வாதங்கள் செல்லத் தக்கன அல்ல.

(ஊ) மும்மூர்த்திகள் ஒவ்வொருவருக்கும் உரியதும் பிறர்க்குரியதாகக் கூடாததுமான தற்கிழமைப் பொருளும், பிறிதின் கிழமைப் பொருளும் தனித்தனிச் சிறப்புடன் அவரவருக்குச் சம்பந்தப்பட்டு அவரவர் கையாட்சியில் இருப்பதை - மூவரும் ஒருவர்தான். பெயர் வேறுபாடே தவிர வேறு வேறுபாடு இல்லை. ஆதலால் பலர் அல்லர் என்ற கட்சியை நிலைப்படுத்தும்பொருட்டு அவரவருக்கு உரிமைப்பட்ட பொருள்களையும் மூவருக்கும் உரிமைப்பட்ட சம்பந்தப் பொருளாக்குவிப்பது எவ்வளவு ஆபாசமும் மேன்மையற்றதுமான முறைப்பிறழ்வு, எவ்வளவு நீதிக்கேடு என்பதை உணரார் போலும்.

"6. சிவனுக்குரிய சில திருநாமங்களைப்பற்றி,

சிவனுக்குரிமையாய் வழங்குகிற சில பரியாய நாமங்களின் காரணத்தைச் சரித்திர சம்பந்தத்தோடு விளக்கிக் காட்டுவதினால் அவருடைய கடவுள் தன்மை எப்படிப்பட்டது என்று தெளிவாய்த் தெரிந்து கொள்ளக்கூடும். அதன்பொருட்டு அவற்றின் காரணத்தைத் தெரிவிக்கிறோம்.

(அ) தாருகாவனத்து முனிவர்கள் தவச் செருக்குற்றனர் என்றும், முனிவர்களின் செருக்கை அடக்க வேண்டுமென்று சிவபிரான் திருவுளங்கொண்டு பிச்சைக்காரன் வேடந்தரித்து நிருவாணியாய் முனிவர்களின் பத்தினிகளை மயக்கி அவர்கள் பதிவிரதா தர்மத்தைக் கெடுத்தனர் என்றும், இந்த அவலட்சண செய்கையை முனிவர் அறிந்து சிவனை வதைக்க விரும்பி அபிசார ஓமம் (தீமையை உண்டு செய்யும் வேள்வி) வளர்த்து அதிலிருந்து தோற்றுவித்த சர்ப்பம், யானை, புலி, மான், மழு, பூதகணம் இவை முதலியவைகளைச் சிவன் பேரிலே செலுத்த, அவர் சர்ப்பத்தை ஆபரணமாகத் தரித்தும், யானையை யுரித்துப் போர்த்தும், புலியதனையுடுத்தும், மழு முதலிய ஆயுதங்களை அஸ்தங்களில் பதித்தும், பூதகணங்களைத் தமது சேனைப் பரிவாரங்களாக்கியும், இவ்வாறாக அவைகளை ஜெயித்து மேற்கொண்டார் என்றும், இந்தக் காரணத்தால் நக்கன், திகம்பரன், யானையுரித்தோன், புலித்தோலுடையன், மானிடமேந்தி, மழுவாளி, அழலேந்தி, பூதநாதன் என்ற பெயர்கள் ஏற்பட்டன என்றும் **கந்தபுராணம்** கூறுகின்றது.

(ஆ) சிவனுக்குப் பித்தன், கபாலி என்கிற பெயர்களும் உண்டு. பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா என்று விசேஷமான ஒரு பக்தர் இந்த விசேஷமான பெயரைச் சொல்லிப் பக்தி பூர்வகமாய் விளித்து முன்னிலைப்படுத்துகிறார். இந்தத் திருநாமங்கள் சிவனுக்கு வந்த வரலாறு என்னவென்றால்: பூர்வத்தில் பிரமாவின் செருக்கை, அவமானம் செய்யும்பொருட்டு அவர் சிரசில் ஐந்தில் ஒன்றை தன் கையால் கிள்ளி எறிய, உடனே பிரமஹத்தி தோஷம் பிடித்துக் கிள்ளுண்ட தலை கையை விடாமல் பற்றிக் கொண்டதிநிமித்தம், சிவபெருமானுக்குப் பயித்தியமுண்டாகி எங்குந்திரிந்தனர் என்றும், பலிக்குழன்று காசியை அடைந்தபோது விஷ்ணுவானவர் அந்தப் பிரமஹத்தியைப் போக்கி முன்போலப் பார்வதியுடன் கூடியிருக்க வரம் அளித்தனர் என்றும் **கந்தபுராணம், இரு சமய விளக்கம், அரங்கத்தந்தாதி** முதலிய நூல்களிற் கூறியிருக்கின்றது. இவ்வாறே சில திருநாமங்கள் உள்ளன. "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்கிற நியாயத்தின்படி

மேலும் கூறாமல் ஈண்டெடுத்துக்கூறிய இவைகளே அமையும் என்று நிறுத்துகிறோம்.

"7. சிவன் சர்வேஸ்வரத்துவம் (எப்பொருட்கும் இறைவன்) உடையவரல்லர் என்பதைப் பற்றி.

"தேகாதிகளை (உடல் முதலானவற்றை) சிருஷ்டி செய்வதற்கு வேறு சமர்த்தர்கள் இல்லாமையால் (சிவனுக்குச்) சர்வேஸ்யவரத்துவமுண்டு" என்று சமயத் தொகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. இது மெத்த விநோதம், வேறு சமர்த்தர்களிலிருந்தால் சிவனுக்குச் சர்வேஸ்வரத்துவம் நீங்கிவிடுமாப் போலும். "ஆளில்லாத ஊரில் நரி அம்பலம் செய்வது போல" என்றபடி கண்கூடாக மெய்க் கடவுள் கண்ணுக்குத் தெரியாதவராய் இருப்பதனால் சைவசமயிகள் கடவுளிலர் என்று கருதி எப்படியும் பேருக்காவது நமக்கொரு கடவுள் வேண்டும்; அதற்கு, இருக்கிறவர்களுக்குள் சம்போ மகா தேவன் என்று "சொல்லாமற் சொன்னவனை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்" எனத் தீர்மானித்து சிவனுக்குக் கடவுட்பட்டங்கட்டி வணங்குகின்றார் போலும்! அந்தச் சிவனும் காலம் சென்றுபோனபின் மேலும் முடிவடையாமல் இருத்தற்பொருட்டு, எங்கும் கருங்கல் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து சிவாலயங்களை ஏற்படுத்தி, ஆறுகால அபிஷேகம், பூஜை, நைவேத்தியங்களை நியமித்து, விழாவெடுத்து வணங்குகின்றனர் போலும் என்றல்லவோ உண்மையை விரும்புவோர் யாவரும் நினைக்க இடங்கொடுக்கிறது. மெய்யாகவே சிவனுக்குச் சர்வேஸ்வரத்துவம் உளவானால் விருகாசுரன் முதலியோருக்கு புறமுதுகிட்டது எதினாலே? வாணாசுரனுக்குத் துணைசெய்து நின்ற யுத்தத்தில் முறிபட்டு "முக்கணீசன் மக்களைத் தேடியோட" என்று வசைபாட நேரிட்டது ஏன்? சர்வேஸ்வரத்துவம் போகட்டும். ஈஸ்வரத்துவத்துக்காவது பொருந்தத்தக்கதா? அன்று, ஆதலால் சிவபிரானுக்குக் கடவுள் தன்மை இல்லை என்று வெளியாகிறது.

"8. மெய்க்கடவுளுக்குரியவராய் இந்து சமய வேதங்கள் கூறுகின்ற இலட்சணங்களில் ஒன்றேனும் பொருந்தவில்லை என்பது.

மெய்க்கடவுளுக்குரிய இலட்சணம்	**சிவனுக்குப் பொருந்தாது என்பதற்குச் சான்று**
1. அரூபி (உருவம் இல்லாதவர்);	திருவாதிரையிற் பிறந்தவர்; சம்சார பந்தமுள்ளவர்; தாருகா வனத்து ரிஷிகள் அவரைக் கொல்ல அபிசார ஓமம் செய்தலில் மரிக்கத்தக்கவர். இவற்றால் பிறப்பு இறப்புக்குட் பட்ட சம்சாரியாகிய தேகி. ஆதலின் அரூபி அல்லர்.

2.	நிரவியவி (உறுப்பு இல்லாதவர்);	ஐமுகன், எண்டோளன், திரியம், பகன், சடாதாரி என்ற பெயர்களும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வருகிற ஆசாரமும் உள்ளமையில் உண்மையில் உறுப்புகள் உள்ளவரேயாம்.
3.	விஸ்வ ரூபி (பேருருவம்);	தேகமுடையவர் விபுத்துவராகார்.
4.	ஆனந்த ஸ்வரூபி (மகிழ்ச்சி வடிவானவர்);	பலிக்குழன்றவர், சனியால் பீடிக்கப்பட்டவர், கோபக்காரர், யுத்தங்களில் தோற்றவர், இவ்வெல்லாம் துக்க ஏதுக்களாதலில் ஆனந்த மயமானவர் அல்லர்.
5.	சத் ஸ்வரூபி (அருவத் திருமேனியர்);	தேகதி யாதலில் அருவத் திருமேனியர் அல்லர்.
6.	நன்மையே செய்பவர்;	பதிவிர தர்மத்தைக் கெடுத்தவர்;
7.	தருமமே செய்பவர்;	ஜெந்மோகினியைப் புணர்ந்தவர்; பிரமஹத்தி செய்தவர் ஆதலின் இரண்டும் பொருந்தா.
8.	மங்கள ஸ்வரூபி (சுபகாரியமே செய்பவர்);	நான்காவதைப் பார்க்க
9.	சமான ரகிதர் (ஒப்பில்லாதவர்);	இந்திராதிதேவர் சிவனை விடச் சிறந்தவர் என்று வேதம் கூறுகின்றது. அதுவும் ருத்திரன்தான் சிவன் எனும் கட்சி உறுதிப்படுங்கால்.
10.	பாப ரகிதர் (பாவம் செய்யாதவர்);	ஆறாவதைப் பார்க்க.
11.	ஞான ஸ்வரூபி (பேரறிவினர்);	துஷ்டருக்கு வரத்தைக் கொடுத்துப் படிந்த ஒழுக்கத்தைக் கெடுக்கிறவர் எனப் புராணங்கள் கூறுகின்றன.
12.	திரிகாலரகிதர்; (முக்காலத்தையும் கடந்தவர்);	தேகிகள் யாவருங் காலச் சக்கரத்துக்குட் சுழல்பவர்; இவர் தேகி; ஆதலில் திரிகால ரகிதராகார். ஆனால் முக்காலத்தும் இல்லாதவர் எனல் பொருந்தும்.

13.	காலத்துக்குக் கடவுள்;	காலமில் பொருள்; அதற்கு நியந்தா ஆவது எப்படி? மேலும் தேகி.
14.	மனசுக்கு நிய்ந்தா	அந்தரியாமிப் பொருளுக்கடுத்ததே யன்றி உடல் உள்ளவர்களுக்கு அடுக்காது.
15.	உலகத்துக்கு ஆதாரர்;	தமக்கே கைலையும் இடபமும் ஆதாரம். தாம் உலகத்துக்கு ஆதாரமாவது எங்ஙனம்!
16.	தர்மத்துக்கு ஆதாரர்; (அறத்துக்கு ஆதாரமானவர்);	ஆறாவதைப் பார்க்க.
17.	அநாதி நித்திய ஸ்வயம்பு (என்றென்றும் இருப்பவர்);	தேகிகளுக்கு இந்த இலட்சணம் பொருந்தாது.
18.	சர்வ வியாபகம் (எங்கும் பரவியிருத்தல்);	மேற்படி வகைப்படி.
19.	சர்வ ஞானம் (எல்லா அறிவுடைமை)	மேற்படி வகைப்படி.
20.	சாட்சிமாத்திரர் (சாட்சியின் பிரமாணம்);	தேகிகள் சர்வ சாட்சியாய் இருத்தல் கூடாது. மேலும் மார்க்கண்டன் காரியத்தில் பொய்த்தவர்.
21.	அதி பரிசுத்தர் (மிகுந்த பரிசுத்தர்);	ஆறாவதைப் பார்க்க.
22.	மகோன்னதர் (மிகவும் உயர்ந்தவர்);	உயர்ந்த நற்குணங்கள் இல்லாதவர் எவரும் மகோன்னதர் ஆகார்.
23.	மகிமைப் பிரதாபர்;	இழிவுச் செயலுக்கு அஞ்சாதவருக்கு மகிமையாவது, மகிமைப் பிரதாபமாவது,
24.	அதிருஷ்யர் (பார்வைக்கு எட்டாதவர்)	தேகியாதலில் பார்வைக்கு உட்டபட்ட வரே
25.	பரம காருணியர்;	சங்காரக் கர்த்தர் என்று சொல்லும்போது காருணியம் எவ்வாறு பொருந்தும்? மேலும் கோபக்காரர், மனைவி பிள்ளைகளையும் சபிப்பவர்.
26.	நண்பர்;	காருணியம் இல்லாவிடத்து மெய்யன்பிராது.

27.	நீதியுடையார்;	நீதியுடையவர் என்றால் காலகாலன் என்ற திருநாமம் வருவானேன்?
28.	தயாளர்;	துஷ்டரை ஊக்குவித்துச் சிஷ்டரை உபத்திரவப்படுத்துகிறவருக்கு தயாளம் எப்படி வரும்!
29.	பொறுமையுள்ளவர்;	கதைகளிலுங் கூட பொறுமை காட்டினார் என்று காணோம். உண்டேல் கூறுக.
30.	கிருபாநிதி;	பொறுமை முதுலி குணங்கள் இலல்விடத்துக் கிருபையிராது.
31.	சம்பூரணர்;	தேகிகள் எவரும் சம்பூரண ராகார்.
32.	சர்வ வல்லவர்;	விருகாசுரனுக்குப் புறமுதுகிட்ட சங்கதியை நினைக்க.[36]

சுத்த சிவனைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட திரு. வி. கலியாண சுந்தரனார், சிவனைப் 'பாழ்' என்னும் தத்துவ நிலையிலே காணும் பண்பினை அடைகின்றார். "பாழ் என்பதற்கு அவர் கொடுக்கும் விளக்கம். பாழ் கடவுளின் உண்மைநில என்ற படி" என்பதாகும். அவருடைய பாடலையும அதில் தொனிக்கு மயக்கத்தையும் எண்ணிப் பார்க்க:

"சிவனென்னும் பொருளேநீ திகழுமிடந் தேடித்
திரிந்தலைந்தேன் சிந்தையிலே செப்புதற்கும் எளிதோ
நவகலையைப் பழங்கலையை நாகரிகக் கலையை
நாடோறும் ஆய்ந்து வந்தேன் நண்ணிய தொன்றில்லை
தவமுயற்சி உளங்கொண்டேன் சமயவழக்கற்றேன்
தாக்குபுலன் மனங்கரணம் தணந்து தணந்தழிய
புவனமெலாம் படிப்படியே பொன்றவெறும் பாழாய்ப்
பொலியுமுன்றன் உண்மைநிலைப் புனிதமுணர்ந்தேனே.

அருவல்லை உருவல்லை அளவெல்லை யல்லை
ஆதியல்லை அந்தமல்லை அகண்டவெறும் பாழ்நீ
மருவுமுன்னைப் படைப்பதெது? மாண்புடைய சிவமே
மன்னுமுன்றான் பாழ்வெளியில் மாநிலங்க ளெல்லாம்
அருவுருவாய் ஆங்காங்கே அமைந்தமைந்து கோட்டில்
அசைந்தசைந்தே இயங்கிவரும் அதிசயந்தானென்னே
ஒருபெயரும் ஒன்றுமில்லா உனையுஞ்சிவ மென்றே
உரைத்துவிட்டார் புலவரந்நாள் ஓதுகின்றேன் அதையே."[37]

சித்தர்களுள் ஒருவரான திருமூலர் தமது திருமந்திரத்தில் **சுத்த சிவம்** யார் எனக் கூறும் வரையறை விளக்கத்தையும் கண்டறிக.

"எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்,
எல்லாரும் உய்யக் கொண்டிங்கே அளித்தலால்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே"

- திருமந்திரம் 6:14

"எல்லா உலகங்களுக்கும் அப்பாற்பட்டவராகவும், எங்கும் நிறைந்திருப்பவராகவும், நல்லார் உள்ளங்களில் அருளைப் பொழிபவராகவும், மனிதர் எல்லாம் ஈடேற்றமடைய இவ்வுலகில் தோன்றி அருள்பாலித்தலாலும் சொற்களால் விவரிக்க இயலாத சற்குருவே சுத்த சிவத்தன்மையினர்" என்கிறார் திருமூலர்.

மேலும் சு.தா. இரத்தினர் **சுத்த சிவம்** என்பது குறித்துக் கொடுத்துள்ள செய்தியையும் இங்கே ஒப்பிட்டுக் காண்க.

"சுத்த சிவம் என்னும்போது, அசுத்த சிவம்
உண்டென்பதும் அறியவேண்டும். கொங்கண
மகாரிஷி கூறியதாவது:கடவுளுக்குப்
பெண்டேது? பிள்ளையேது? காமகுணலிலை
முதலானதேது? கடவுளுக்குப் பகடிசீட்டுத்
தாயமேது? காடுகளில் வேட்டைகட்டுத்
திரிவதேது? கடவுளுக்குக் காமிகளின்
தொழிலேயில்லை, காருண்யத் தொழில்
ஒன்றே கடவுள் பாரம். தெய்வகுண
மற்ற தீயோனை கடவுள் எனச் சொல்வது
பாவமும் அறியாமையும் ஆகும்.[38]

கருவூரார் கருத்து

8. "சாற்றுவதற்கு இதின் நியாயம் தெரியக் கேளு:
தந்திமுகனார் என்றும், அயனார் என்றும்,
பார்த்தால் இவ்வுலகமதின் மயக்கம் அப்பா!
பலதேவர் முப்பத்து முக்கோடியோரும்,
வேற்றுருவோடு உருத்திரனோடு ஐந்து பேரும்,
வேதாந்த விருப்பிடத்தின் வெளிச்சமாமோ!
காத்திருப்பார் இவர்கள் தீக்கிடங்கை நாடி
கருவூரார் இப்படியே கருதினாரே!"

கருத்துரை : இதன் நியாயத்தைத் தெரியும்படி சொல்லுகிறேன் கேளுங்கள்: யானை முகனார் என்றும், அயன் என்றும் பார்த்தால், இவர்கள் இவ்வுலகத்தின் மயக்கமாவார்கள்; பற்பல தேவர்களாகிய முப்பத்து முக்கோடி பேரும், ருத்திரனுடன் சேர்ந்த வெவ்வேறு உருவினராகிய ஐந்து பேரும் வேதாந்தத்தின் வெளிச்சமாவார்களா? இவர்கள் தீ நரகத்தை நாடி காத்திருப்பவர்கள் என்று கருவூரார் கருதியிருக்கின்றாரே!

விளக்கவுரை

தந்தி முகனார் என்றும், அயனார் என்றும் பார்த்தால் இவ்வுலகத்தின் மயக்கம் அப்பா! முன்பாட்டில் ஆறுமுகனாரைப் பற்றிக் கூறினார். இப்பாடலிலும் தொடர்ந்து பல தெய்வங்களைச் சீர்தூக்கி நினைத்துப் பார்க்கின்றார். வினாயகர் குறித்து **சாது செல்லப்பா** கூறியுள்ள கருத்தையே இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

> "எப்படியெனில் கைலாயத்தில் சிவபெருமானும், அம்மையும் மகிழ்ச்சியுடன் வீற்று இருந்தார்களாம். அக்கோவிலின் சுவற்றில் இரண்டு யானைகளின் படங்கள் ஆணும் பெண்ணுமாகக் காணப்பட்டதாம். பெருமானுக்குத் தானும் ஒரு யானையாகி அம்மையைப் புணர வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டதாம். இவ்வாசையைக் குறிப்பால் உணர்ந்த அம்மை உடனே யானையாக மாறினாராம். அப்போது பிறந்த பிள்ளைதான் வினாயாகராம். மற்றொன்று: பார்வதி குளிக்கப் போகும்போது தனது உடலில் உள்ள அழுக்கைத் திரட்டி ஒரு பிள்ளையைப் பிடித்து வைத்தாராம். அதைக் காவலுக்காக வைத்துவிட்டுக் குளித்துக் கொண்டிருக்கும்போது பெருமான் உள்ளேவர முயற்சிக்க, காவலுக்கிருந்த அழுக்குப் பிள்ளை தடுத்தாராம். கோபம் கொண்ட சிவன் இப்பிள்ளையின் தலையை வெட்டிவிட்டாராம். அப்போது அங்கு வந்த உமையவள் அழ, பெருமான் ஒரு யானையின் தலையை வெட்டி அப்பிள்ளையின் கழுத்தில் பொருத்தினாராம். அதுவே வினாயகராம். இன்னும் இப்படி எத்தனையோ அருவருக்கத்தக்க கதைகளை பிற்காலத்தில் ஆரியர்கள் கட்டிவிட்டனர். ஒரு முழுமுதற் கடவுளாகிய 'சிவ'த்தை வணங்கி வந்த தமிழர்களை இழிவுபடுத்தவும், ஒரு தெய்வக் கொள்கையை அழிக்கவுமே புராணங்கள் எழுதப்பட்டன."[39]

மேலும் **போக முனிவர்** கூறியுள்ள வினாயகரைப் பற்றிய செய்தியையும் பின்வரும் பாடல்களிலே காண்க.

"சொன்னாரே இன்னொரு மார்க்கங்கேளு
சொல்லுகிறேன் பாரினிலே கணேசருக்கு
மன்னே கேள் திரேதாயின் யுகத்திலப்பா
மகாதேவ ரானவராம் கணேசர் தாமும்
பன்னவே தும்பிக்கை ரூபங்கொண்டு
பாரினிலே பிறந்தாராம் மனுஷரூபம்
என்னவே வெகுகோடி காலந்தானும்
யெழிலான ஞானிபோலிருந்தார் தாமே"

'பாருலகில் கணபதியே தேவனென்றும்
பட்சமுடன் மானிடர்கள் தொழுதுபோற்றி
சீருடனே யஷ்டாங்கம் தனை நினைந்து
சிறப்படுனே யஞ்சலிகள் மிகவுஞ் செய்து
ஊருடனே குடிமக்கள் மிகவுங்கூடி
உத்தமராம் கணபதியை கடவுளாக்கி
பேருடனே வையகத்தில் சுவாமியென்றும்
பேரான புகழ் படைத்தார் ரத்தமாமே.

அதிதமாங் கணபதியு மென்ற நாமம்
அவனிதனில் மனிதரல்லால் வேறொன்றல்ல;
துதிதமுள்ள கடவுளாயிருப்பாரானல்
தொல்லுலகில் உயிரோடே யிருக்காரோதான்
பதிதமுள்ள பாடல்களில் சுவாமியென்றும்
பாடினால் வெகு கோடி மாந்தரப்பா
நிதிதமுள்ள கணபதியின் தேகந்தானும்
நிலையாத அநித்திய மென்னவாச்சே.

என்னவே கணபதியு நீணிலத்தில்
எழிலான தேகத்தை மறந்து போனார்
பன்னவே பாரினிலே தேவனானால்
பாழான தேகமது மண்ணுக்காமோ
துன்னவே காயமது நிலைப்பதற்கு
தொல்லுலகில் கோடான கோடிகற்பம்
முன்னவே காயாதி கற்பமுண்டு
மூதுலகில் கற்றூணாய் இருந்தார்காணே.

காணவே அவர் கூட்டந் தன்னிலப்பா
புதுமையுடனிவருமொரு சித்துமானார்
தோணவே வெகுகோடி காலமப்பா
தொல்லுலகில் காயாதி கற்பமுண்டு

ஈனவே சமுசார வாழ்க்கை நீக்கி
யெழிலுடனே காயத்தை யிருத்திக் கொண்டு
பூணவே புவியுளோர்க்குக் கவியதாக
புகழுடனே வெகு காலமிருந்தார் தாமே." [40]

போகமுனிவர் பாடல்களில், திரோதா யுகத்தில், விநாயகர், தும்பிக்கையுடன் மனித ரூபத்தில் பிறந்தவர் என்றும், குடிமக்கள் அனைவரும் கூடியே இவரைத் தேவனாக்கினார்கள் என்றும், அதனால் தொழுது புகழுண்டானது என்றும், இவர் காய கற்பமுண்டு உலகில் நீண்ட காலம் வாழ்ந்து அதிசயப் பிறவியாய்க் காணப்பட்டு மரித்து மண்ணாய்ப் போன மனிதனேயன்றி கடவுள் அல்லர் என்றும் திட்டமாய்த் தெளிவு படுத்திக் காட்டுகிறது. இன்னும் பல கதைகள் உண்டு. வல்லார்வாய்க் கேட்டுணர்க.

பலதேவர் முப்பத்து முக்கோடி பேரும் : பல தேவர் முப்பத்து முக்கோடி பேர் வரலாறு குறித்து திரு. என்.ஜெ.எஸ். சிவசுந்தரம் திரட்டித் தந்துள்ள கருத்தையே இங்கு தர விரும்புகின்றேன்.

"பூர்வத்திலே, தக்ஷப் பிரஜாப்திக்கு ஐம்பது பெண்கள் பிறந்தார்கள். அதிலே பதின்மூன்று பெண்களை காஷிப மகா ரிஷி கலியாணம் பண்ணிக் கொண்டார். "அதிதி" என்பவள் முப்பத்து முக்கோடி தேவர்களையும், வாமனாவதாரமான விஷ்ணுவையும் பெற்றாள். "தனு" என்பவள் தானவர் முதலானவர்களையும் பெற்றாள்.

"மதி" என்பவள், மனிதர்களையும், அவர்கட்கு இயல்பாகிய வருஷங்களையும் பெற்றாள்.

"சுரபி" என்பவள் பசுக்களையும், சராசரங்களையும் பெற்றாள்.

"குறோதவசை" என்பவள், கழுதை, கடம்பை, ஒட்டகம், முதலானவைகளைப் பெற்றாள்.

"வினதை" என்பவள், காற்று, இடி, மின்னல், அருணன், கருடன், கூகை, பருந்து, பக்ஷி முதலானவைகளையும் பெற்றாள்.

"தாம்பிரை" என்பவள், ஊர்க்குருவி, கவிதாரி, காடை முதலியவைகளைப் பெற்றாள்.

"கழை" என்பவள், கொடிகளையும் செடிகளையும் பெற்றாள்.

"கத்துருவை" என்பவள் பல, பல சிரசுகளை உடைய பாம்புகளைப் பெற்றாள்.

"சுதை" என்பவள், ஓணான், உடும்பு, அணில் முதலியவைகளைப் பெற்றாள்.

"அரிஷ்டை" என்பவள், ஜலசர முதலியவைகளைப் பெற்றாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது."

மேற்காணும் விளக்கத்தின்படி, மனித பூர்வோத்திர வரலாற்றைப் பார்க்கும்போது, தக்ஷப்பிரஜாப்திக்கு, மனைவியும், பிள்ளைகளும் இருந்தது உண்மையானால், தக்ஷப்பிரஜாப்தியையும், ஷேயாரின் மனைவியையும், பெற்றது யார்? என்னும் கேள்வி எழுகிறது. இவர்கள் இருவருக்கும் இரண்டு சந்ததி உண்டாயிருந்து, பின் இவர்கள் ஒருவரை ஒருவர் கல்யாணம் செய்து ஐம்பது பெண்களைப் பெற்று, இவர்களை அல்லாத மற்றொரு சந்ததியாகிய காசிபமகாரிஷி வகுப்பார். இதில் பதின்மூன்று பெண்களை மணம்செய்து, முதல் மனைவி "அதிதி" என்பவளுக்கு முப்பத்து முக்கோடி தேவர்களும், வாமணாவதாரமான விஷ்ணுவும் பிறந்ததாய் தெளிவுபடுத்துகின்றது. இதன்றி மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவும், முப்பத்து முக்கோடி தேவர்களும் மனிதர்களுக்குப் பிறந்தவர்களாகவே காண்கிறது. அப்படியே மற்றும் சிருஷ்டிப் படைப்புகளாகிய ஊர்வன. பறப்பன, நடப்பன, பிறந்ததாகத் தெரிகிறது. மதி என்பவள் மனிதரையும், வருஷங்களையும் பெற்றாள் என்பது கடுகளவேனும் விளங்கிக் கொள்ள முடியாத ஓர் விபரீதமான காட்சி.

உலகத்தில் காற்று இல்லையென்றால், ஜீவன் இல்லை. அப்படியிருக்க காற்றையும் இடிமின்னல்களையும் பெண்யோனி வழியாய்ப் பெறுவதெப்படி? வாசகர்களே, சிந்தியுங்கள்! மழை மிகுதியால் இடிகாணும்போது எவ்வித பயங்கர அதிர்ச்சி, ஆபத்து, மரணம், ஏற்படுகிறது. இதை ஓர் பெண் பெற்றாள், இதை எவ்வகையில் நம்புவதென்று வாசகர்கள் சிந்திக்கவும்.

தக்ஷப்பிரஜாப்தி மகள் வினதை காற்றைப் பெற்றாள் என்றால், இதுவரை தக்ஷப்பிரஜாப்தி தகப்பன், பாட்டன் முதலானோரின் வம்சத்தார் எந்தக் காற்றை சுவாசித்துக் கொண்டு ஜீவனோடு இருந்தார்கள். இரவு, பகல் மாறி மாறிக் கழிந்து நாட்கள், மாதங்கள், வருஷங்கள் கணிக்கும்போது பருவங்களை, பெண்கள் கற்பத்தில் உற்பவித்து பெறுவதெப்படி? நீங்களே சற்று யோசியுங்கள். நாம் பார்க்கும் சகல விதை வகையும் விதைத்து அறுத்து விர்த்தி செய்கிறோம். அப்படியிருக்க செடி, கொடிகளை பெண்யோனி வழியாய்ப் பெறுவதெப்படி? அப்படியே மற்றுமுள்ள ஜீவன்களையும் பெண்கள் பெற்றார்கள் என்றால், இதை நம்புவதற்கு ஏதும் ஆதாரம் உண்டா? அது மாத்திரமல்ல, மனிதர்கள் ஆண்

பெண்களாய் பிறந்த எவ்வளவு காலத்திற்குப் பின் அவர்கள் வயிற்றில் நாம் வணங்கும் தேவர்கள் பிறந்தார்கள்? வணக்கத்திற்குரிய தேவர்களா? அதை வணங்கும் மனிதர்களா? யார் முந்திப் பிறப்பது ஏற்றது? வாசகர்களே தீர்ப்பிடுங்கள். மனித சந்ததியில் பிறந்தோரை தேவர்களாக்கி வணங்குவதால் பயன் உண்டாகுமோ? அதிதி, என்பவளுக்கு முப்பத்து முக்கோடி தேவர்கள் பிறந்தார்கள் என்றால் இவர்களை எத்தனை வருஷத்தில் அல்லது நாட்களில், பெற்றாள் என்பதற்கு விபரம் காணோம். அதுமாத்திரமா, மீன் சினையைப் போல் பெற்றாள் என்பது தேவர்கள் ஆவதெப்படி? இந்த தேவர்கள் பின்னும் பெருகாததற்குக் காரணம் என்ன? அப்படியிருந்தால் இன்று எத்தனையோ கோடித் தேவர்கள் இருப்பார்களே!"[41]

மேலும் மகாகவி எ.ஆ. கிருஷ்ணபிள்ளை ரிக் வேதத்திலிருந்து மொழிபெயர்த்துத் தந்திருக்கும் பின்வரும் புருஷ சூக்கத்தின் கருத்தையும் ஒப்பிட்டுக் காண்க:

சுருதிப்பிரமாணம்	**புருஷசூக்தம்**
7. தஸ்மத் விராட ஜாயத	: அதினின்றும் விராட்டுண்டாயிற்று.
விரோஜா அதிபுருஷ	: விராட்டுக்கு அதிபுருஷனாகிய
ஸஜா தோத்யரிச்ய	: அவன் (ஆதி புருஷன்) பிறந்த மாத்திரத்தில்.
தபச்சாத் பூமிம் அதோ புருஷ	: பூமியை முன்னும் பின்னுங் கடந்தான்.
யத் புருக்ஷேண ஹவிஷா	: புருஷனை ஹவிஷாகக் கொண்டு தேவர்கள் எந்த யக்ஞம் செய்தார்களோ
வஸந் தோஸ்ய ஸீதாஜ்யம்	: அதற்கு (அந்த யக்ஞத்துக்கு) வசந்த ருது நெய்யாயிற்று.
கிரீஷம இதம	: கிரீஷ்மருது சமித்து (விறகு).
சரத் அவி	: சரத்ருது ஹவிது (சோறு) ஆயிற்று.
ஸப்தா ஸயாயஸஜபரிதய திரிஸபதஸ்மிதக்கிருதா	: அதற்கு இருபத்தொரு சமித்துக்களாற் செய்யப்பட்ட ஏழு பரிதிகள் (எல்லைகள்)
தேவா யத் யக்ஞம் தந்வார அபத்நஜபுருஷம் பசும்தம்யக் ஞமபர்ஹீஷிப்ரௌ க்ஷஜ புருஷ	: எப்போதும் யக்ஞம் செய்பவராகத் தேவதைகள் புருஷானாகிய பசுவைக் கட்டினார்களோ முதற் பிறந்த அந்த

மஜா தம் கிருத	:	யக்ஞுமாகிய புருஷனைப் ரோஷித்தார்கள்.
தேநதேவா அயஜந்தஸாத்யா ருஷயச்சயே	:	அவனால் தேவரும் ருஷிகளு சாத்தியரும் யஜித்தார்கள்.
தஸ்மாத்யக்ஞாத் ஸர்வ பூதம் ஸம்ப்ரதம் பரஷதாஜயம்	:	எல்லோருங் கோஷிக்கத் தக்க அந்த யக்ஞுத்தினின்றும் புருஷதாஜ்யம் பரிக்கப்பட்டது.
பஸ்வுர்கம்ஸ்தார் கம்சக் ரேவாயவ்யாந் ஆரண யம்கிராம் ஸாந்ச்சயே,	:	வாயு சம்பந்தமானவும், காட்டிலுள்ளவும் ஊர்களிலுள்ளவும் பசுக்களாக அவைகளைச் செய்தான்.
தஸ்மாத்யக்ஞுயாத்ஸர் வஹீத ருசஸ்ஸாமா நிஜக்ஞுரே	:	அழைக்கத்தக்க அந்த யக்ஞுபுருஷனிடத்தினின்றும் ரிக் வேதமும் ஸாமவேதமுமுண்டாயின.
சசந்தாரகம் ஸிஜக்ஞுரே தஸ்மாத்	:	அதினின்றும் சந்தஸுக்-களுண்டாயின.
யஜீஸ்தஷ்மாத் ஜாயத	:	அதினின்றும் யசுர்வேதங்கள் உண்டாயின.
தஸ்மாதஸ்வாத்ஜயத்	:	அதினின்றும் குதிரைகளுண்டாயின.
ஏகேசோ பயாத்தா	:	காவோ அஜக்ஞுரே தஸ்மாத் : அதினின்றும் இரண்டு வரிசைப் பற்களுடைய ஜந்துக்களுண்டாயின. அதினின்றும் பசுக்களுண்டாயின.
தஸ்மாத்ஜாதா அஜாவய	:	அதினின்றும் ஆடுகளும் பட்சிகளுமுண்டாயின.
யத்புருஷம் வயத்து அதிதாவ் யகல்பயஜ	:	எந்தப் புருஷனை நியமித்தார்களோ அவனை அவ்விதமாய்க் கல்பித்தார்கள்.
முகம் கிம்ஸ்ய	:	முகமெது.
உகெள்	:	கைகளெவை.
காவூருபாத உச்யே	:	தொடைகளும் பாதங்களுமெவை யென்னப்படுகின்றன.
ப்ராஹமணோஸ்யமுக மாஸ்த்	:	அவனுக்குப் பிராமணன்

		முகமானான்.
பாகுராஜந்ய : கிருத	:	க்ஷத்திரியன் கைகளாக்கப்பட்டான்.
ஊருததஸ்ய யத்வைஸ்ய	:	வைசியனெதுவோ அது அவனுக்குத் தொடைகள்.
பத்பார்கமஸூத்ரோத் அஜாயத்	:	பாதங்களினின்றும் சூத்திரனுண்டானான்.
சந்த்ரமாமநஸோஜத	:	மனதினின்றுஞ் சந்திரனுண்டானான்.
சக்ஷோஸ் ஸூர்ரேய அஜாயத்	:	கண்களினின்றும் சூரியனுண்டானான்.
முகாதிந்தரஸவாக்நிச்சே	:	முகத்தினின்றும் இந்திரனும் அக்கினியும்
ப்ராணாத்வாயுரஜாயத	:	பிராணனின்றும் வாயு உண்டாயிற்று.
நாப்ய ஆஸூதந்தரிக்ஷம்	:	நாபியினின்றும் அந்தரிக்ஷ-முண்டாயிற்று.
ஸூரஷணோத்யௌஸ்ஸம்வதாத	:	தலையில் சுவாசமிருந்தது.
பதப்யாம் பூமிர் திஸஸ் ரோத்ராத்	:	பாதங்களினின்று பூமியும் காதினின்றும் திக்குகளும்.
அதாலோகாந்கல்பயந்	:	இப்படி புலகங்களைக் கல்பித்தார்கள் என்று சொல்லியிருக்கின்றது.[42]

இப்பகுதியின் ஆங்கில மொழியாக்கத்தையும் தந்திருக்கின்றோம். இது பொருள் தெளிவுக்குப் பயன்படலாம்.

5. From him Viraj was born; again Purusa from Viraj was born. As soon as he was born he spread eastward and westward o'er the earth.

6. When gods prepared the sacrifice with Purusa as their offering, its oil was spring, the holy gift was autumn; summer was the wood.

7. They balmed (or immolated) as victim on the grass Purusa born in earliest time.

   With him the deities and all Sadhyas and Rishis sacrificed.

8. From that great general Sacrifice the dripping fat was gathered up.

   He formed the creatures of the air, and animals both wild and tame.

9. From that great general Sacrifice Ricas and sama-hymns were born. Therefrom the metres were produced, the Yajus had its birth from it.

10. From it were horses born from it all Creatures with two tows of teeth; From it were generated Kine, from it the goats and sheep were born.

11. When they divided Purusa how many Portions did they make?

What do they call his mouth, his arms?

What do they call his thighs and feet?

12. The Brahman was his mouth, of both his arms was the Rajanya made.

His thighs became the Vaisya, from his feet the Sudra was produced.

13. The Moon was gendered from his mind, and from his eye the Sun had birth,

Indra and Agni from his mouth were born, and Vayu from his breath.

14. Forth from his navel came mid - air; the sky was fashioned from his head;

Earth from his feet, and from his ear the regions. Thus they formed the worlds." [43]

ருத்திரனோடு ஐந்து பேரும் : சிவபிரானுக்குரிய சதாசிவன், மகேசுவரன், ருத்திரன், விஷ்ணு, பிரமன் என்று மூர்த்தங்கள் ஐந்துமாம். சிவனின் ஐந்து மூர்த்தங்களான விநாயகர், முருகன், சிவன், உமை, சண்டேசுவரன் என்னும் ஐவகைக் கடவுளர் என்றுமாகும்.

வேதாந்த விருப்பிடத்தின் வெளிச்சமாமோ!: மேலே விவரித்துக் கூறிய தேவர்கள் எல்லாம் வேதாந்த விருப்பிடத்தின் வெளிச்சம் ஆகமாட்டார்கள் என்றறிக.

கருவூரார் இப்படியே கருதினாரே!: கருவூரார் என்னும் சித்தர் மேற்சொன்னவாறு கருதியதுமட்டுமன்றி அவர்கள் எரிநரகத்தை நோக்கிக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்றும் கூறியதை அகத்தியர் இங்கு அறிவிக்கின்றார்.

இவர் கொங்கு நாட்டில் பிறந்தவர் என்பர். மேலும் இவர் போக முனிவரின் மாணவர் என்றும் ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா என்னும் பகுதியில் இவருடைய பாக்கள் உள்ளன எனவும், இவர் வைத்திய நூல்கள் பலவும் எழுதியிருக்கின்றார் என்றும் கூறுவர். இவரைக் குறித்துப் பல செவி வழிக் கதைகள் வழங்குகின்றன. சாதி சம்பிரதாயங்களை இவர் புறக்கணித்ததால் இவரிடம் வேதியர் வெறுப்புக் கொண்டனர் என்றும், இவரை இழித்தும் பழித்தும் பேசினர், துன்புறுத்தினர் என்றும் தெரிகிறது.[44] 'கருவூரார் கருதினார்' என்று அகத்தியர் கூறிய கருவூராரின் பாடல்கள் ஏதும் கிட்டவில்லை; அவைகள் எல்லாம் இவருடன் முரண்பட்டு இவரைத் துன்புறுத்திய வேதியர்களால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். **பதினெண்சித்தர் ஞானக்கோவையில் கருவூரார் பூஜாவதி** என்னும் தலைப்பில் முப்பது பாடல்கள் மட்டுமே அச்சிடப்பட்டு உள்ளன. அப்பாடல்களுள் ஒன்று வருமாறு:

"புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவுங்கற்றே!
அகலுவார் பெண்ணாசை விட்டோ மென்றே;
அறிவுகெட்டு ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெல்லாம் பெண்ணாசை பூசை தானே."[45]

இப்பாடலைக் கொண்டே இவருடைய சமய சீர்த்திருத்தமுள்ள மனத்தைக் காணலாம். இதன் அடிப்படையிலே அகத்தியர் மேற்கோள் காட்டிய இவர் கூற்றும் உறுதிப்படுதலை உணர்ந்தறியலாம். சங்கராச்சாரியாரும், சிவவாக்கியரும் கருவூராரைப் போலவே கருதியதைக் காண்கின்றோம்.

"உலகிலே பிறந்த முன்னோ
ரோதிய கலைகளெல்லாம்
நிலையதாஞ் சோதி தன்னை
நிசமதாய்ச் சொன்னதில்லை.
பல பல பேதமாகப்
பங்கமாய்க் கூறு செய்து
அலகை போற் பொய்யைப் பேசி
யரு நரகமுந்திப் போனார்."

- சங்கராச்சாரியார்

"அண்ணலாம் பரமசோதி யற்புத மறியாதாலே
கண்ணிலே கண்டதெல்லாங் கதிதருங்கடவுளென்று
மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான்முறைப்படி யிதென்ன
எண்ணியே நடந்து மோட்சமிழந் தெரிநரகில் வீழ்வார்."

- சிவவாக்கியர்

கருவூரார் என்னும் சித்தர் சிந்தனையை இப்பாடலில் தெரிவித்துள்ளார்.

நெறி பத்து

9. "கருதினார் இப்படியே சொன்னேன் அப்பா!
கயிலாய இடம் எங்கே? கருவூர் எங்கே?
பருதியடா உலகமது பனியின் வாழ்வு;
பராபரனார் ஆறுசொயம் பகர்ந்த சோதி!

ஒருவருமே நிகராத வஸ்து அப்பா!

ஓகோகோ மயங்காதே; ஊன்றிப் பார்த்து,

திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து,

தெரிசிப்பாய் நெறி பத்தும் தெரிகிப்பாயே!

கருத்துரை : அவர்கள் கருதியபடியே நான் சொன்னேன் அப்பா. கயிலாயத்தின் இடம் எங்கே இருக்கின்றது? கருவூர் எங்கே இருக்கின்றது? இந்த உலகத்தின் வாழ்வு சூரியன்படும் பனியின் நிலையைப் போன்றது; பராபரனாகியக் கடவுள் ஆறுகுணங்களைக் கொண்ட சோதி; அவருக்கு எப்பொருளுமே ஒப்பாக முடியாது; எனவே மயங்காதே! ஆழ்ந்து கவனித்துப் பார்த்து முப்பொருளை அறிந்து உணர்ந்து பார்; பத்து நெறிகளைக் காண்பாய்.

விளக்கவுரை

இப்பாடலில் உலக வாழ்வின் நிலையாமையையும், உண்மையான பரம்பொருளின் பண்புகளையும், திரிபொருளையும், பத்து நெறிகளையும் தெரிவிக்கின்றார்.

8ஆம் பாடலில் உள்ள கருவூராரின் கருத்தைத் தெளிவித்த பின்னர், இப்பாடலில் கயிலாயமும் கருவூரும் இருக்கும் இடத்தை எண்ணிப் பார்க்கவும் சொல்லுகின்றார்.

கயிலாயம் : கயிலாயம் என்பது ஒரு மலை, சிவபதவி, கைலையங்கிரி, வெள்ளியங்குன்று என்பர். சிவன் என்றும் பொருள் தருவர். சிவனுக்குக் கைலையங்கிரி வாசன் என்னும் ஒரு பெயருமுண்டு. கயிலாசம் என்றும் வழங்கப்பெறும். முக்தியடைதலையும் கயிலாயம் சேர்தல் என்பர். அகத்தியர் 11ஆம் பாடலில் "புகழ்கிரியாம் கயிலாயம்" என்று குறிப்பிடுகின்றார்.

சீனர்களின் கட்டுபாட்டுக்கு உட்பட்டிருந்த கைலாய மலைக்கு யாத்திரை செய்ய இப்பொழுது அனுமதி கிட்டியுள்ளதும், சிலர் மிகுந்த இடர்பாடுகளின் மத்தியில் யாத்திரை சென்றும் வருவதையும் அறிகிறோம்.

பகுதியடா உலகமதுத பனியின் வாழ்வு : மக்களின் வாழ்வு சூரியனுடைய கதிர்கள் பட்டு விரைவாக மறைந்து போகும் பனியின் வாழ்வுக்கு ஒப்பான நிலையாமையை உடையது என்கின்றார். விடியற்காலத்துப் பனியின் நிலையாமையை ஓசியா பின்வருமாறு கூறுகின்றார்.

"எப்பிராயீமே உனக்கு என்ன செய்வேன்?

யூதாவே, உனக்கு என்ன செய்வேன்? உங்கள்

பக்தி காலையில் காணும் மேகத்தை போலவும்,

விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும்

ஒழிந்து போகிறது." ஓசியா 6:4.

"இன்றுளேன் நாளை இலன் என எண்ணவும்

படுவேன்" என்று எ.ஆ. கிருஷ்ணபிள்ளை பாடுகின்றார்.[46]

பின்வரும் வேத வசனங்களையும் காண்க:

"மனிதனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கின்றன வெளியின் பூவைப் போல் பூக்கிறான்." சங்கீதம் 103:15.

"பின்னும் கூப்பிட்டுச் சொல் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று; என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன். அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது." ஏசாயா 40:6.

"மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனிதருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்து அதின் பூவும் உதிர்ந்தது." 1 பேதுரு 1:24.

"நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப் போகிற மனிதனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?" ஏசாயா 51:10.

பராபரனார் ஆறுசொயம் பகர்ந்த ஜோதி: பராபரனாகிய கடவுள் ஆறு குணங்களுடைய சோதியாவார் என்பதாகும்.

கடவுளின் ஆறு குணங்களாவன: (1) சுயம்பு-தாமே எல்லாவற்றையும் செய்ய வல்லவர். (2) அநாதி-தாமே முதல்வராய் என்றென்றும் இருப்பவர். (3) அரூபி-ஐம்பொறிகொண்ட உருவில்லாதவர். (4) அதிகுணர்-நிலைபேறுடைய எல்லா நன்மைகளும் உடையவர். (5) சர்வவியாபி-எங்கும் நிறைந்திருப்பவர். (6) ஆதி-தாமே தாமாய் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணர். பின்வரும் பாடல் இக்குணத்தைப் புலப்படுத்துவதைக் காணலாம்.

"தன்வயத்தனாதல், முதலினதால்,
தகும் பொறி உருவிலனாதல்,
மன் வயத்தெல்லா நலமுள னாதல்,
வயின்றொறும் வியாபகனாதல்,
பின் வயத்தின்றி ஒருங்குட னனைத்தும்
பிறப்பித்த காரணனாதல்,
பொன் வயத் தொளிர்வான் முதலெலா
உலகும் போற்றுமெய் இறைமையினிலையே."

மேற்கூறப்பட்ட ஆறுகுணங்கள் உள்ளவரே பொன்னொளி வீசும் வானுலகு முதல் எவ்வுலகும் வணங்கத்தக்க மெய்க்கடவுள் என்பதாகும்.

இரட்சணிய யாத்திரிகத்தில் இந்த ஆறு குணங்கள் தெளிவாக்கப் பட்டுள்ளதைக் காண்க:

"நீதி கருணை பரிசுத்த நேசஞ் சுயம்பு சாமர்த்தியம்
போத மினைய லட்சணங்கள் பரிபூரணமாய்ப் பொருந்தியணு
ஏத மிலனாய்க் காமாதி யெறிந்து பவத்தை யெரிக்கின்ற
ஆதி தேவன் சரணநிழ லடைய வாரும் செகத்தீரே."[47]

இந்த ஆறு குணங்கள் திரிமூர்த்திகளுக்கோ அல்லது பஞ்ச மூர்த்திகளுக்கோ அல்லது முப்பத்து முக்கோடி தேவர்களுக்கோ பொருந்தி வரவில்லை என்பது வெளிப்படை. எனவே அவர்கள் மெய்க்கடவுள் ஆகார் என்பது அகத்தியர் முடிவு.

இவ் ஆறு குணங்களை முக்குணங்களாக்கியும் கூறுவர்: (1) எல்லாம் வல்லவர் (Omnipotent) (2) எல்லாம் அறிந்தவர் (Omnicient) (3) எங்கும் நிறைந்திருப்பவர் (Omnipresent).

திருவள்ளுவர்,

"கோளில் பொறியில் குணமிலவே என்குணத்தான்
தாளை வணங்காத் தலை."[48]

என்னும் குறளில் கடவுள் எண் குணத்தர் என்கின்றார். அவை வருமாறு: (1) தன் வயத்தனாதல் (2) தூய உடம்பினனாதல் (3) இயற்கை உணர்வினனாதல், (4) முற்றுமுணர்தல் (5) இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல் (6) பேரருளுடைமை, (7) முடிவில்லா ஆற்றலுடைமை, (8) வரம்பில்லா இன்பமுடைமை என்பனவாம் பின்வரும் நிகண்டுப் பாடல் இதனைத் தெளிவுப்படுத்துகின்றது:

"கடைசியலா ஞானத்தோடு காட்சிவீரியமே இன்பம்,
மிடையுறு நாம மின்மை, விதித்த கோத்திரங்களின்மை
அடைவிலா ஆயு ளின்மை, யந்தரா யங்க ளின்மை,
உடயைவன் யாவன் மற்றிவ் வுலகினுக் கிறைவனாமே."

சோதி : கடவுள் ஒளிமயமானவர்.

"ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், காணக்கூடாத வருமாயிருக்கிறவர், அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்." (1 தீமோத்தேயு 6:16)

"தேவன் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை. இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது." (1 யோவான் 1:5)

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்." (யோவான் 12:46)

"நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்." (யோவான் 9:5)

இராமலிங்க அடிகள் சிலை வழிபாட்டைக் கடந்து இறைவனை ஒளி மயமாகக் காணமுற்பட்டார்:

"அருட் பெருஞ் சோதி! தனிப்பெருங் கருணை!
அருட் பெருஞ் சோதி! தனிப் பெருங் கருணை!"

ஒளியாக இருந்தவர் உலகத்துக்கு ஒளியாக வந்தார்; அவருடைய வாழ்வு மனிதருக்கு ஒளியாக இருந்தது (யோவான் 1:4); அந்த ஒளி இருளிலும் பிரகாசிக்கின்றது (யோவான் 1:5). எந்த மனிதரையும் பிரகாசிக்கச் செய்பவரும் அந்த ஒளிமயமான தேவனுடைய திருமைந்தரே (யோவான் 1:9). ஒளியானது உலகத்தில் வந்திருந்தும் மனிதர் ஒளியைவிட இருளை விரும்புவதன் காரணம் மனிதருடைய கிரியைகள் பொல்லாதவைகளாக இருக்கின்றன; பொல்லாங்கு செய்பவன் ஒளியைப் பகைக்கிறான்; தனது செயல்கள் கண்டிக்கப்படாதபடிக்கு அவன் ஒளியினிடத்தில் வராமல் இருக்கின்றான். (யோவான் 3:19,20)

இருளை விரும்பி இருளில் வாழ்கின்றவர்களை ஒளியின் தூதனுடைய வேடத்தைத் தரித்துக் கொண்டிருக்கும் சாத்தான் பலவாறு வஞ்சித்து, தன்வயப்படுத்திக் கொள்ளுகின்றான். (2 கொரிந்தியர் 11:14). உலகத்திலுள்ள ஏனைய தெய்வக் கோட்பாடுகள் ஒளியின் தூதனுடைய வேடத்தைத் தரித்துக் கொண்டவனுடைய வஞ்சகமான தந்திரத்தின் விளைவே என்பதை அகத்தியர் குறிப்பால் உணர்த்துகின்றார் என்பதை அறிக.

இருளின் பிடியினின்று தன்னை நிலையாக விடுவித்துக் காக்க வல்லமையுள்ள ஒரே மெய்யொளியினிடம் கிருஷ்ணபிள்ளை பின்வருமாறு வேண்டுதல் செய்கின்றார்:

"மெய் ஒளியே! வித்தகமே! வேதத்தின்
விழுப்பொருளே! மேசியாவே!
துய்ய பரிசுத்தத் திரித்துவத்தில் ஒன்றாம் தனிச்
சுடரே! துரோக சிந்தை
வெய்ய பொருள் ஆசை நன்றி ஈனம் அன்பு
இலாமை மறம்விடர் சிநேகம்

எய்திஉமை அடியேனும் மறவாமல்
எனக்கருள் செய் திரங்கு வீரே."[48]

பட்டினத்தாரும் கடவுள் ஒளியாக விளங்குவதைப் பாடுகின்றார்;

"எட்டுத் திசையும், பதினாறு கோணமும், எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை,
மூடர் எல்லாம் கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பர்; கருத்தில் வையார்;
பட்டப் பகலை இரவென்று கூறிடும் பாதகரே."[49]

- பட்டினத். பொது.30

"உள்ளிட்ட கல்லையும், ஒப்பிட்ட சாந்தையும், ஊத்தையுறப்
புளியிட்ட செம்பையும், போற்றுகிலேன்; உயர் பொன் எனவே
ஒளியிட்ட தாள் இரண்டுள்ளே இருத்துவது உண்மையென்று
வெளியிட்டு அடைத்து வைத்தேன்; இனிமேல் ஒன்றும் வேண்டிலேனே."[50]

- பட்டினத். பொது.61

ஒருவருமே நிகராத வஸ்துவப்பா : கடவுளுக்கு யாரையும் எதனையும் எப்பொழுதும் எங்கும் ஒப்பிட்டுக் கூற இயலாது என்பதாம். வேதம் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

"யாருக்கு என்னைச் சாயலும் சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்?" (ஏசாயா 46:5)

"இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?" (ஏசாயா 40:18)

"அதற்கு அவன்: நாளைக்கு என்றான். அப்பொழுது இவன்: எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆககடவது." (யாத்திராகமம் 8:10)

"தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர என்றென்றைக்கும் கோபம் வையார்." (மீகா 7:18)

திருவள்ளவரும்,

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ததார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"[51]

என்று இறைவரின் தன்னிகரற்ற நிலையைக் கூறினார். இந்தப் பரம் பொருளையே தாயுமானவர் பொதுவாகத் தேடி ஏங்கி வணங்குகின்றார். அவர் பாடலைக் கவனியுங்கள்.

"அங்கு இங்கு எனாதபடிக்கு எங்கும் பிரகாசமாய்
  ஆனந்த பூர்த்தியாகி,
அருளொடு நிறைந்தது எது? தன்னருள் வெளிக்குளே
  அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
  தழைத்தது எது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
  தம் தெய்வம் எம் தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது?
  எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய்
  என்றைக்கும் உள்ளது எது? உள்ளே
காங்குல்பகல் அறநின்ற எல்லையுளது எது? அது
  கருத்திற்கு இசைந்ததுவே!
கண்டன வெலாம் மோன உருவெளிய தாகவும்
  கருதியஞ் சலி செய்குவோம்"[52]

மெய்ப்பொருளைக் கண்டடைந்து வாழ்ந்த எ.ஆ. கிருஷ்ண பிள்ளை பின்வருமாறு அஞ்சலி செய்கின்றார்.

"நினைத்து முடிக்கின்ற சர்வசா மரத்தியமுள
  நிருமுலச் சித்தை யெங்கும்
நிறைகின்ற பரிபூர ணானந்த வஸ்துவை
  நிராதார மான வொன்றை
எனைத்துமுா சற்றபரி சுத்தநிட் பட்சமோ
  டிலங்கு நீதிப் பிழம்பை
எப்பொருளு மின்றியே சுத்தசூ னியமா
  யிருந் தவக் காலத்தில்
அனைத்துலக மும்விவித பேதங்களாயசர
  வசரங்களும் படைத்த
அளவிலா ஞானவே தாந்தமுத லைத்தமிய
  னாகாமி யத்தை நினையா
தெனைத்தடுத் தாட்கொண்ட கருணைப் பிரவாகத்தை
  யெண்ணரிய மகிமைத் திரி

யேகத்து வத்தையுயர் மாகத்தனைப் பணிந்
தென்று மஞ்சலி செய்குவோம்"[53]

இந்த இடத்தில் மொழி மூதறிஞரும் பெரும்புலவருமான ஞானமுத்து தேவ நேயப்பாவணர் **கடவுள் சமயம்** என்பதற்குக் கூறும் விளக்கத்தை இணைத்துக் காணல் மேலும் தெளிவு தரும்:

"ஊர் பேர் காலம் இடம் வண்ணம் வடிவம் பால் பருவம் முதலிய வரையறையின்றி, எங்கும் நிறைந்து, எல்லார்க்கும் எல்லாவற்றிற்கும் பொதுவாய், எல்லாம் வல்லதாய், என்றும் மாறாதிருக்கும் பரம்பொருளை உள்ளத்தில் அகக் கண்ணாற் கண்டு தொழுது, முக்கரணத் தூய்மையுடன் ஒழுகுவதே கடவுட் சமயமாம்.

பேர் என்றது இயற்பெயரும் பண்பு பற்றிய சிறப்புப் பெயரும் போன்றவற்றை.

கடவுட் சமயம். இல்லறம் துறவறம் என்னும் இருவகை அற வாழ்க்கைக்கும் பொதுவாம். அதனாற் பெறும் பேரின்பமும், இம்மை மறுமையிரண்டிற்கும் பொதுவாம். இம்மையிற பெறுவது உடலிருந்த வீடு என்றும், மறுமையிற் பெறுவது உடலிறந்த வீடு என்றும் பெயர் பெறும்.

எல்லாவற்றையும் கடந்து நிற்பவன் கடவுள். எல்லா உலகங்களையும் ஆள்வதால் **ஆண்டவன்** என்றும், எங்குந் தங்கியிருப்பதால் இறைவன் என்றும், எல்லா உயிர்கட்கும் உணவைப் பகுத்தளிப்பதால் பகவான் என்றும், பெயர் பெறுவன். ஆண்டவன் முதலிய பிறபெயர்கள் பெருந்தேவ மதங்களிலும் வழங்குவதால் கடவுட் சமயத்திற்குத் தனிச் சிறப்பாகவுரிய தெய்வப் பெயர் கடவுள் என்பதே"[54]

ஓகோகோ மயங்காதே! ஊன்றிப் பார்த்து : மெய்ப்பொருளை இவ்வாறு பரமகுருவின் துணையில் தெள்ளத்தெளிய ஆராய்ந்து அறிவிக்கும் அகத்தியர் மக்கள் இங்கே நம்பிக்கைத் தெளிவின்மையால் மயங்க வாய்ப்புண்டு என்று கருதியும், பழமையின் இழுப்பு அவர்களை இழுக்கும் என்பது உணர்ந்தும், மக்களை மயக்க வேண்டாம் என்று எச்சரிப்பதுடன் ஊன்றிக் கவனமாகப் பார்க்குமாறும் அறிவுறுத்துகின்றார்.

திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து : திரிபொருள் (Trinity) என்றதனால் கடவுள் தம்மை மனிதனுக்கு, வெளிப்படுத்தியதில் தந்தையாகவும், இம்மானுவேல் கிறிஸ்துவில் வெளிப்பட்டதை மைந்தராகவும், பரிசுத்த ஆவியானவராகவும் வெளிப்பட்டமையைத் தெரிவிக்கின்றார்; இந்த வெளிப்பாட்டினை வேதத்தின் அறிவினால் உணர்ந்துகொண்டு, அதாவது திரித்துவத்தைக் குறித்து வேதம் கூறும் உண்மைகளை அறிந்து, நம்பி

ஏற்றுக்கொண்டு உணர்ந்து பார்க்க வேண்டும் என்பதாம். இதனை **இரட்சணிய யாத்திரிகத்தில்** எ.ஆ.கிருஷ்ண பிள்ளை இவ்வாறு பாடுகின்றார்.

"தந்தையாகி, உலகனைத்தும் தந்து; மநுக்கள்
தமைப் புரக்க
மைந்தன் ஆகிப், புனிதாவி வடிவாய்
ஞான வரம் அருளிப்
பந்தம் அற நின்று இலங்கும் திரியேக
பரமன் பதாம்புயத்தைச்
சிந்தை யாரத் தொழுது ஏத்திச்
சேரவாரும் செகத்தீரே"[55]

கடவுள் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தியதில்: தந்தையாகி உலகங்களைப் படைத்தார் என்றும், பாவத்தில் விழுந்த மக்களை மீட்க மைந்தரானார் என்றும், பரிசுத்த ஆவியானவராக வந்து ஞான வரமருளினார் என்றும், அவர் பந்தம் ஏதும் இல்லாமல் விளங்கும் திரியேகக் கடவுள் என்றும் தெளிவுபடுத்திய பின்னர்: உலகத்தாரே மயக்கம் தெளிந்து மனமார ஆராதிக்க வாருங்கள் என்றும் அழைப்பு விடுக்கின்றார். **இரட்சணிய சமய நிர்ணயம்,** சத்தியவேதம் வெளிப்படுத்தும் திரிபொருளைக்குறித்துத் தரும் செய்தியையும் இங்குக் காண்போம்:

"திரியேகதேவன் என்ற இந்தத் திருநாமம் மனிதர் மனதுக்கும் புத்திக்கும் எட்டாத பரம ரகசியமானது. ஆயினும் மனதுக்காவது புத்திக்காவது விரோதமானது அன்று. மெய்ச் சுருதியில் கடவுளைத் தனியேக வஸ்து என்றும், அந்தத் தத்துவங்கள் தம்மில் வேறுபாடு இன்றி உள்ள ஏகவஸ்துவே என்றும், ஆதலால் தேவன் ஒருவரே அன்றி மூவர் அல்லர் என்றும், திரித்துவராய மூவரில் ஒருவர் முந்தினவரும் அல்லர் பிந்தினவரும் அல்லர். ஒருவரில் ஒருவர் பெரியவரும் அல்லர் சிறியவரும் அல்லர், மூவரும் சமநித்தியரும் சரி சமானருமாம் என்றும் வெளிப்பட்டிருக்கிறது. ஆதலால் அவ்வாறு விசுவாசித்து வழிபட்டு ஈடேற்றத்துக்குத் தகுதியுள்ளவர்களாக முயலவேண்டுவதே மனிதர் கடமை."

****

"அவ்வாறு தெள்ளிதின் உணர்ந்து வேதம் தெரிவிக்கும் சத்தியத்தை நாம் சந்தேகியாமல் நம்பி விசுவாசிக்க வேண்டுவது சிற்றறிவுடையவர்களான மனிதர்களுக்கு எல்லாம் கடமை. மனிதருக்கு மனிதர் உம் உள்ளத்தை வெளிப்படுத்தாவிடில் ஒருவர் கருத்தை ஒருவர் அறிந்துகொள்ளக் கூடாதே.

அப்படியிருக்க, காட்சிக்குத் தெரியாப்பொருளாகிய கடவுள் தம்மைப்பற்றி தெரிவியாவிட்டால் நாம் எப்படி அறிதல் கூடும்? தேவன் ஒருவராய் இருக்கிறதும் அன்றி, மூவராயும் இருக்கிறார் என்று வேதத்தில் வெளியாகிறது. மூவரும் மூன்று தேவர்கள் அல்லர்; ஒரே தேவன் என்று தெரிகிறது. ஆதலினால்தான், திரியேகத்துவம், ஏகதிரியேகத்துவம் என்று சொல்லுகிறோம். மேலும் அம்மூவரில் ஒருவராகிய குமாரனானவர் தேவவார்த்தை என்றும், அவ்வார்த்தையானவர் மனிதரை இரட்சிக்கும்படி மனிதாவதாரம் செய்தார் என்றும், அவரே தேவகுமாரன் என்றும், இயேசுகிறிஸ்து என்றும் சுருதி வாக்கியங்களில் வெளியாகிறது."[56]

இந்த **இரட்சணிய மனோகரப்** பாடல் பொருளையும் கருத்திற்கொண்டு திரியேகக் கடவுளைக் காண்க:

"அயலொன்றும் இன்றியே சுத்த சூனியமாய்
அகண்ட வெளியாய காலத்து
அநாதியாய் நின்ற பர வஸ்துவே உண்மையும்
அவ்வுண்மையே வஸ்துவும்
மயல்இன்றி அப்பரம வஸ்துவிட நின்றவெளி
வந்ததிரு வாக்கு அநாதி
மைந்தன்என்று ஆகஅவ் வத்துவிலு மைந்தனிலும்
வந்தபரி சுத்தாவியும்
செயலிலே தந்தையாய் மைந்தனாய் ஆவியாய்த்
திகழ்ந்துதிரி யேக பரமன்
சிருட்டித்திதி ரட்சணிய செய்கையினில் மூவராய்ச்
சிந்தையில் ஒருவர் ஆகி
இயலுலகம் யாவும் படைத்தளித்து ஆள்கின்ற
ஈசனே அடியேற்கு அருள்
ஏகநா யகசருவ லோகநா யகக்கிறிஸ்து
யேசு நாயக ஸ்வாமியே."[57]

மொழிபெரும்புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் திரியேக தேவனைக் குறித்து அறிவிக்கும் பாடலையும் ஒப்புநோக்கிக் காண்க:

"எங்கணும் நிறைந்த செல்வத்திறைவனிலொரு கூறன்றோ
கொங்கலர்நறுந்தண்டாராய் குமரனென்றுரைக்குந் தெய்வம்
அங்கவ ரிருவர் கொண்ட ஆவியே பரிசுத்தாவி
தங்குமோ ஆவியின்றித் தம்பிரான் வினையுமுண்டோ!"[58]

மேலும் பின்வரும் திருவசனங்களையும் ஆராய்ந்து தெளிக:

> "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல நாட்டவரையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து..." (மத்.28:19)
>
> "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியானவருடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்." (2 கொரிந்தியர் 13:14)
>
> "பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்." (1 யோவான் 5:7)

தெரிசிப்பாய் நெறிபத்தும் தெரிசிப்பாயே!: கடவுள் மனிதனை மீட்க வகுத்த மீட்பின் திட்டத்தில் இரண்டு ஏற்பாடுகளை வகுத்தருளினார். முன்னது பழைய ஏற்பாடு; பின்னது புதிய ஏற்பாடு. பழைய ஏற்பாட்டில் மக்களை ஆண்டு வழிநடத்துவதற்குக் கடவுள் வகுத்தருளிய பத்துக்கற்பனைகளே இந்தப் பத்து நெறிகளாகும். இவை முறையே யாத்திராகமம் 20:1-20இல் எழுதப்பட்டுள்ளன.

(1) "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்." (யாத்திராகமம் 20:3).

(2) "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்." (யாத்.20:4).

(3) "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார்." (யாத்.20:7).

(4) "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக." (யாத்.20:8).

(5) "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக." (யாத்.20:12).

(6) "கொலை செய்யாதிருப்பாயாக'.' (யாத்.20:13).

(7) "விபசாரம் செய்யாதிருப்பாயாக." (யாத்.20:14).

(8) "களவு செய்யாதிருப்பாயாக." (யாத்.20:15).

(9) "பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக." (யாத்.20:16).

(10) "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக் குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்." (யாத்.20:17).

இந்தப் பத்துக் கற்பனைகளின் விளக்கவிவரம் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து ஆகமங்களில் அடங்கி இருக்கின்றது. கடவுள் இதனை எல்லா உலகத்தவருக்கும் என்று அருளாமல், தாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் மக்களுக்கென்றும், அவர்கள் வாயிலாக உண்மையான சமயத்தை உலகத்தில் மக்கள் வாழ்க்கையில் இயேசு பெருமானின் வருகை வரையிலே நடைமுறையில் வைத்திருந்து, முடிவாகத் தமது திருமைந்தர் வாயிலாகத் தம்மைப் பூரணமாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் திருவுளச் சித்தங்கொண்டார்.

பழைய ஏற்பாடு என்பது இந்தப் பத்துக் கற்பனைகளின் வாயிலாக யூத மக்களுடன். பின்னர் உலக மக்கள் எல்லாருடைய மீட்பையும் நோக்கி, கடவுள் செய்த பழைய உடன்படிக்கையையும், அவர்கள் அந்த உடன்படிக்கையின்கீழ் வாழ்ந்த வரலாறுகளும், அந்த வரலாற்றிலே உலகத்தில் வாழ்ந்த ஏனைய மக்களுடன் யூதர்கள் தொடர்பு கொண்ட வரலாறுகளும், உலகப் படைப்பு முதற்கொண்டு, **பரமகுருவின்** வருகையை முன்னறிவித்து முடியும் மல்கியா ஆகமம் வரையிலும் நமக்குக் கூறப்பட்டுள்ளது.

பத்துக் கற்பனைகளை மையமாகக் கொண்டு பழைய ஏற்பாடு வெளிப்படுத்தும் மெய்க்கடவுளாகிய பரம்பொருளை நாம் அறிந்து தெளிவு பெறவேண்டும் என்று அகத்தியர் இரத்தினச் சுருக்கமாக இப்பாடலில் தந்துள்ளார். இதனை **எபிரெய** எழுத்தாளர்:

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்," (எபிரெயர் 1:1).

என்று கூறுகின்றார்.

நம்மைப் படைத்தவரைத் தேடவேண்டும்

10. "பிறிந்தவர்க்குப் பஞ்ச பட்சி குருவால் கண்டு
பிறிக்கறியார் பொய்யெனவே பேசுவார்கள்;
அறிந்தவர்க்கு மோட்சமுண்டு படைத்தோன் தன்னை
அறியாதார் எரிநாகிலழிந்து போவார்;
வெறிபிடித்த சிவன், பெருமாள், பிரமாதானும்
மேலான தேவரல்ல; மனிதர் அப்பா!

அறிவடைந்து நமைப்படைத்தோன் தன்னைத் தேட
அப்பனே புத்தியுள்ளோர்க்கு அறிவித்தேனே!"

கருத்துரை : நீங்கியவர்களின் வேளையின் நிலையினைப் பஞ்ச பட்சி குறிசாத்திரத்தின் மூலம் ஒரு குருவினிடத்தில் அறிந்துகொள்ள முற்படுதலில் உள்ள மெய்யையும் பொய்யையும் வேறுபடுத்தி அறியும் தகுதி இல்லாதவர்கள் நான் சொன்னதைப் பொய் என்றே பேசுவார்கள்; தன்னைப் படைத்த கடவுளை அறிந்தவனுக்கு மோட்சமுண்டு; அப்படி அறியாதவர்கள் எரி நரகில் அழிந்து போவார்கள். வெறிபிடித்தவர்களாக விளங்கும் சிவன், பெருமாள், பிரம்மா ஆகியோர் மேலான தேவர்கள் அல்லர்; அவர்கள் வெறும் மனிதர் அப்பா! நல்லறிவடைந்து நம்மைப் படைத்த கடவுளைத் தேடும் புத்தியுள்ளவர்களுக்கு இதனை அறிவித்தேன் எ-று.

விளக்கவுரை

இந்தப் பாடல் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ள இரண்டு பதிப்புகளிலும் இல்லை. தேவாதீனமாக இது திரு.என்.ஜெ.எஸ். சிவசுந்தரம் இயற்றிய **முக்திவழி** என்னும் நூலிலிருந்து கிட்டியது.

... ... பஞ்ச பட்சி குருவால் கண்டு ... பொய்யெனவே பேசுவார்கள்: குறியறிவதற்கு உரியனவும், அ,இ,உ,எ,ஒ, என்னும் எழுத்தால் முறையே குறிக்கப்படுவனவுமான வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் ஐந்து பட்சிகளைக் கொண்டு குறிபார்த்தலைக் குறிக்கின்றார். இவற்றின் ஒலிகளைக் கொண்டும் குறிசொல்லுவர். அமாவாசை பூர்ணிமைகளின் இடையே பஞ்ச பட்சிகளின் உண்டி, துயில், நடை, அரசு, சாவுகளினின்றும் குறி அறியப்படும்.

குறி பார்த்தாலும் சோதிடம் பார்த்தலும் மெய்க்கடவுளை அறிவதற்குத் துணை செய்வன அல்ல. இவைகள் சாத்தானின் செயல்களுக் குட்பட்டவை. போகர், சாத்திரம் பார்த்தல் முதலானவைகளைக் கடிந்து கொள்ளுகின்றார்.

"பேசியே வெகு கோடி மாந்தரெல்லாம்
பினாத்தினார் சாஸ்திரத்தின் குப்பை தன்னை
பூசிதங்கள் கொண்டல்லோ பகுடுகாட்டி
புகழுடனே சாஸ்திரத்தை மெய்போற்சொல்லி
ஊசிதமாந் தத்துவங்கள் தியான மார்க்கம்
உறுதியுடன் நாதாக்கள் சொன்னதில்லை
வாசித்து நால் வேத மாறு சாஸ்திரம்
வகையுடனே கதைகட்டி உரைத்திட்டாரே."[48]

- போகர் ஏழாயிரம் 6-ம் காண்டம், 255.

"காண வென்றால் மடிந்தவர்க்கு சாத்திரங்கள்
கைலாயஞ் சென்றவர்க்குப் பார்க்கலாமோ
தோண வேயுடல் பொருளாவி யெல்லாம்
தோற்றாமல் மண்ணோடே மண்ணாய்ப் போச்சு
வேண தொரு சாத்திரங்கள் பார்த்தாலென்ன
பார்த்தாலும் வையகத்தி லிருப்பாருண்டோ
பூணவே யாகாத நாளில் மாண்டோர்
புகழான வாத்துமமு மிருந்ததுண்டோ"[59]

- மரித்தோர்க்கு சாஸ்திரம், 261.

சாஸ்திரம் பார்த்தலை அகப்பேயச் சித்தரும் கண்டம் செய்துள்ளார்.

"சாஸ்திர சூத்திரமும் - அகப்பேய்
சங்கற்ப மானதெல்லாம்
பார்த்திட லாகாதே - அகப்பேய்
பாழ்பலங் கண்டாயே."

- அகப்பேய் சித்தர்.

பறவைகள் முதலானவைகளைக் கொண்டு சாஸ்திரம் பார்ப்பதை தமது **சாஸ்திரக்கும்மியில்** சுவிசேடக் கவிராயர் **வேதநாயக சாத்திரியாரும்** சாடுகின்றார்:

"காகம் பருந்து நரையான் செம்புகங்
காடை கழுகு கரிக் குருவி
ஏகிய நாய் நரி பூனை முயற்கிட
மோ வலமோ நன்று ஞானப்பெண்ணே.

"நட்சத்திரேம் இருபத்தேழென்றும்
நண்ணும் கிரகங்கள் ஒன்பதென்றும்
உச்சித ராசிபன் னிரண்டென்றும் வகுத்
தோதிப் பலன் சொன்னாய் ஞானப்பெண்ணே.

"ஆந்தைக் காதல் நரிக்காதல் தும்
மற் காதல் கவுளிக் காதல்
சேர்ந்த அக்கினிக் கட்டுகள் அட்டமா
சித்திகள் மெத்தவே ஞானப்பெண்ணே

"பஞ்ச பட்சி சினேந்திர மாலை
பாண்டவர் சாஸ்திரம் பறைச்சிசொல்
அஞ்சனம் மந்திரம் சல்லிய மொட்டியும்
அச்சர வித்தைகள் ஞானப்பெண்ணே"[60]

திருவசனம் அஞ்சனம் பார்த்தல் முதலானவற்றைத் தீவிரமாக் கண்டிருக்கின்றது. அது அசுத்த ஆவிகளின் செய்கையாகக் காணப்படுகின்றது.

"யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்க வேண்டாம், குறி கேளாமலும், நாள்பாராமலும் இருப்பீர்களாக." (லேவியராகமம் 19:26).

"தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும்,

"மந்திரவாதியும், சன்னதைக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர் களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம்.

"இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளினிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்தி விடுகிறார்." (உபாகமம் 18:10-12).

"சாமுவேல் இதற்கு முன்னமே மரித்துப்போனான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குத் துக்கங்கொண்டாடி, அவன் ஊராகிய ராமாவிலே அவனை அடக்கம் பண்ணினார்கள். சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் தேசத்திலிராதபடிக்குத் துரத்திவிட்டான்." (1 சாமுவேல் 28:3).

"ஆசாரியனாகிய இல்க்கியா கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை நிறைவேற்றும்படிக்கும், யோசியா அஞ்சனக்காரரையும், குறிசொல்லு கிறவர்களையும், சுரூபங்களையும், நரகலான விக்கிரகங்களையும், யூதாதேசத்திலும் எருசலேமிலும் காணப்பட்ட எல்லா அருவருப்புகளையும் நிர்மூலமாக்கினான்" (2 இராஜாக்கள் 23:24).

"அபத்தமானதைத் தரிசித்து பொய்க்குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு என் கை விரோதமாயிருக்கும்; அவர்கள் என் ஜனத்தின் சங்கத்தில் இருப்பதுமில்லை; இஸ்ரவேல் வம்சத்தாரின் அட்டவணையில் எழுதப்படுவதுமில்லை. இஸ்ரவேல் தேசத்துக்குள் பிரவேசிப்பதுமில்லை; அப்பொழுது நான் கர்த்தராகிய ஆண்டவரென்று அறிந்து கொள்வீர்கள்." (எசேக்கியல் 13:9).

"நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறி சொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.

அவள் பவுலையும், எங்களையும் பின் தொடர்ந்து வந்து; இந்த மனிதர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்.

இப்படி அநேக நாள் செய்து கொண்டு வந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப் பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று." (அப்.16:16-18).

சோதிடம் கிறிஸ்தவர்களுக்கு ஏற்றது அல்ல என்பதற்கு அந்தோணி பிஸ்டோன் என்பவர் தமது: **A Christian Looks at astrology** நூலின் ஆய்வின் முடிவில் பின்வரும் ஐந்து காரணங்கள் கூறுகின்றார்:

(1) வேதாகமத்தில் விளங்கிக் கொள்வதற்கு சோதிடம் எந்தத் துணையும் செய்யவில்லை.

(2) ஆண்டவர் அருளிச் செய்துள்ள வழிமுறைகளில் சோதிடம் இடம்பெறவில்லை.

(3) சோதிடத்தை ஒரு வழிகாட்டியாக எடுத்துக் கொள்வதற்கு வேதாகமம் தடைசெய்கின்றது.

(4) சோதிடத்தால் கிறிஸ்தவருக்குக் கர்த்தரின் சித்தத்தைக் காட்ட முடியாது.

(5) சோதிடத்தை எந்த விதத்தில் உபயோகப்படுத்தினாலும் அது பேய் செல்வாக்கிற்கு வழி திறக்கும்.[60A]

குறிகாணும் மனமுள்ளவர்கள் தாம் கண்டறிந்து அறிவித்த பரப்பிரம்மத்தைப் பற்றிய செய்தியைப் பொய்யென்பார்கள் என்று எச்சரிக்கின்றார் **அகத்தியர்.**

அறிந்தவர்க்கு மோட்சமுண்டு; படைத்தோன் தன்னை அறியாதார் எரி நரகில் அழிந்து போவார்: தாம் ஒன்பதாம் பாடலில் ஆராய்ந்து கூறிய திரிபொருளாம் திரியேகப் பரம்பொருளைத் தேடி அறிந்து வாழ்பவருக்கு மோட்சம் உண்டு என்றும், அந்த மெய்ப்பொருளாம் கடவுளே மக்களைப் படைத்தவர் என்றும் அவரை அறிந்து வாழாதார் எரியும் நரகத்தில் அழிந்துபோவர் என்றும் உணர்த்துகின்றார். **அகத்தியர்.**

ஒப்புநோக்குக:

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்." (யோவான் 17:3)

"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்.

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

"அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; அவரை விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைக் தீர்ப்புக்குட்பட்டாயிற்று." (யோவான் 3:16-18)

சிவவாக்கியர் கூறும் எச்சரிப்பையும் காண்க:

"அண்ணலாம் பரமசோதி அற்புத மறியாதாலே
கண்ணிலே கண்டதெல்லாங் கதி தருங்கடவுளென்று
மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான்முறைப்படியிதென்ன
எண்ணியே நடந்து மோட்ச மிழந்தெரி நரகில் வீழ்வார்."[61]

சிவன், பெருமாள், பிரம்மாதானும் மேலான தேவரல்ல; மனிதர் அப்பா; சிவன், பெருமாள், பிரம்மா முதலானோர் தேவரல்லர் மனிதரே என்பதை அகத்தியரோடு மற்ற சித்தர்கள் சிலரும் சிந்தனை செய்து கூறியிருக்கின்றார்கள்:

"மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டன் அவன் மனிதன் - சிலமுடன்
உற்று உணர்ந்த உகந்த பெரியார்
கற்று மறிந்தாரில்லை காண்,"

- ஔவை.

"பலகலைகளோ துவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால் வேதமாறு சாஸ்திரம்
அலையுடனே தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
அவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்
மலையரசன் சிவன், பிரமா, விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங்காணார்
நிலைபெருக மோட்சவழி காணாததாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே."[62]

- திருமூலர்

அறிவடைந்து நமைப் படைத்தோன் தன்னைத்தேட அப்பனே புத்தி யுள்ளோர்க்கு அறிவித்தேனே:

"கனம் பொருந்தியவனாயிருந்தும் அறிவில்லாத மனிதன் அழிந்து

போகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கின்றான்" (சங்கீதம் 49:20) என்று வேதம் சொல்லுகின்றது.

பரம குருவும் "தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்றார். (மத்தேயு 7:7).

"மனித இனமான சகல மக்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்.

கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே," (அப்போஸ்தலர் 17:26-27).

கடவுள் மனிதனைப் படைத்த வரலாற்றினை ஆதியாகமம் 1:26-28; 2:7இல அறிக:

"பின்பு தேவன் : நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக் அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும்

மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் பிரானிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

தேவன் தம்முடைய சாயலாக மனிதனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவனுடைய சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்." (ஆதியாகமம் 1:26-28).

"தேவனாகிய கர்த்தர் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான்." (ஆதியாகமம் 2:7).

புத்தியுள்ள மக்கள் தங்களைப் படைத்த **மெய்ப்பொருளைத்** தேடி அறிவார்களாக என்கிறார் அகத்தியர். **மெய்ப்பொருளை** மூடத்தனமாக நாம் ஏற்றுக் கொள்ளவில்லை; நாம் அவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கடவுளும் விரும்பவும் இல்லை. கடவுள் மனிதனைப் படைத்தபோது அவனுக்கு

அருளிச்செய்த அறிவு வரத்தால் அவரைத்தேடி அறிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றார். எனவே தான் **பரமகுருவும்**, "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் நித்திய வாழ்வு உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே." (யோவான் 5:39) என்று கூறுகின்றார்.

கயிலாயம் போக இயலுமா?

11. "சங்கமதில் பரப்பிரமம் ஒன்றைப் போற்றி,
சகல பவம் தீர நன்மைதனையே சாற்றி,
துங்கமுறும் இலிங்கம் என்றும் பூசை செய்து
சுணை கெட்ட மாடப்பா சாம்பல்பூசி
எங்கனும் போய்ச் சிவசிவ என்று அலைந்து, ஏங்கி,
எரி நரக அலகை செய்யும் இடர் எண்ணாமல்
பொங்குதிரை கடல் மூழ்கித் தீட்சை பெற்றால்
புகழ்கிரியாம் கயிலாயம் போகலாமோ?"

கருத்துரை : சங்கத்தில் பரப்பிரமம் ஒன்றையே போற்றுவதாக எண்ணி, சகல பாவங்களும் தீர்வதற்கு நன்மையே செய்து, இலிங்கத்தைப் பூசை செய்து (திரிவது) சுணை கெட்டிமாட்டின் நிலையாகும்; எரிநரகத்திற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் சாத்தான் செய்யும் இடர்களை எண்ணாமல், உடம்பெல்லாம் சாம்பல் பூசி, சிவசிவ என்று எங்கும் கூறிக்கொண்டு, அலைந்து திரிந்து, பொங்கும் அலைகளையுடைய கடலில் மூழ்கித் தீட்சை பெற்றால், புகழ்மலையாம் கயிலாயம் சென்று அடைய இயலுமா? இயலாது என்பதாம்.

விளக்கவுரை

சங்கமதில் பரப்பிரமம் ஒன்றைப் போற்றி; சகல பாவம் தீர நன்மை தனையே சாற்றி; அடியார் திருக்கூட்டத்தில் பரப்பிரமமாகிய மெய்ப்பொருளையே போற்றி வழிபடுவதாகக் கொண்டு பாவங்கள் தொலைய தானதர்மங்கள் முதலான நன்மைகள் செய்தால் முக்தியடைய இயலாது. ஏன் என்றால், முக்தி அல்லது பாவ மன்னிப்பு மனிதனுடைய சுய முயற்சியினாலும், மனிதனே வகுத்துக் கொண்ட தானதருமங்கள், அறச்செயல்கள் முதலானவற்றாலும் வருவதன்று; பரம குருவானவரின் வெளிப்பாட்டின்படி பரப்பிரமமாகிய ஒரே மெய்ப்பொருளின் திருவுளச் சித்தத்திற்கு மக்கள் தங்களை ஒப்படைத்து வாழ்தலினால் சகல பாவமும் தீர்வதுடன் மெய்வாழ்வும்

சுதந்தரமாகும். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பான்." (மத்தேயு 7:21)

துங்கமுறும் ... பூசை செய்து ... அலைந்து தேங்கி ... கடல் மூழ்கி தீட்சை பெற்றால் : இலிங்கத்திற்குச் செய்யும் பூசை, சாம்பல் பூசும் பக்தி, சிவ சிவ என்று கூறிக் கொண்டு திருத்தலங்களுக்கு அலைந்து ஏங்குதல், கடலில் மூழ்கி தீட்சை பெறல் இவற்றால் கையிலாயம் செல்லல் இயலாது என்பதைச் சுட்டுகின்றார். இவைகள் மனித விருப்பத்தின்படி வைத்துக் கொண்ட ஆசாரங்கள் அன்றோ!

வால்மீகர் அருளிச்செய்த சூத்திர ஞானத்தில் இதே கருத்தை அறிவிப்பதைக் காண்கின்றோம்:

"தானென்ற வுலகத்தில் சிற்சில் லோர்கள்
சடைபுலித்தோல் காசாயம் தாவடம் பூண்டு
ஊனென்ற வுடம்பெல்லாம் சாம்பூல் பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானி யென்பார்;
தேனென்ற சிவபூசை தீட்சை யென்பார்;
திருமாலைக் கண்ணாலே கண்டோ மென்பார்;
கானென்ற காட்டுக்கு எலைவார் கோடி
காரணத்தை யறியாமல் கதறுவாரே."[63]

சிவவாக்கியரும் இக்கருத்தை வலியுறுத்துகின்றார். பின்வரும் பாடல்கள் அதனைத் தெளிவுபடுத்துகின்றன:

"ஓசை பெற்றக்கல்லை நீர் உடைத்துருக்கள் செய்கிறீர்
பூசை பெற்ற கல்லிலே பூவும் நீறுஞ்சாற்றுரீர்
வாசலிற் பதிந்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
ஈசனுக் குகந்தகல் இரண்டு கல்லு மல்லவே.

கற்றுவார் பெருநூலைப் பார்த்துப் பார்த்துத்
தூடிப்பா ருலகத்தில் சிற்சில் லோர்கள்!
தெற்றுவா ரவர் பிழைக்க அநேக வேடம்
தேகத்தி லணிந்து கொண்டு திரிகுவார்கள்;
பற்றுவார் குருக்களென்பார் சீட ரென்பார்
பையவே தீட்சைவைப்பார் தீமை யென்பார்
கத்துவார் திரிமூர்த்தி தாமே யென்று
காரணத்தை யறியாத கசடற் தானே.

ஈரமான பூவினோடிலை பறித்து வீணிலே
நீரை மொண்டு கல்லிலே நித்தம் விட்டு மாய்கிறீர்

காலமூல நாடியுட் கருத் தொடுங்க வல்விராய்ச்
சீலமாக நாதனுஞ், சிறந்திருப்பானும் முளே.

நட்டு வைத்த தேவரும் நடாது வைத்த தேவரும்
சுட்டு வைத்த தேவரும் சுடாது வைத்த தேவரும்
இட்டு வைத்திடத்தை விட்டெழுந்திராத தேவரை
வட்ட மிட்டு மாந்தர்கள் வணங்கும் வாறு யெங்கனே!

நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பஞ்சாத்துறீர்
சுத்தி வந்து முணு முணுனென்று சொல்லு மந்திரமேதடா
நட்டக் கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்டச் சட்டி சட்டுவங்கறிச் சுவை யறியுமோ?

மாறுபட்ட மணிகிலுக்கி மலரிறைத்து வீணிலே
ஊறுபட்ட கல்லிலே உருக்கள் செய்யு மூடரே
வேறுபட்ட தேவரும் விரும்புகின்ற உண்மையுங்
கூறுபட்ட தேது காண் குருக்கள் பூசை பண்ணுறீர்!

சாவதான தத்துவச் சடங்கு செய்யு மூடர்காள்
தேவர் கல்லு மாவாரோ சிரிப்பதன்றி என்சொல்வேன்
மூவராலு மறிவொணாத முற்றொழில் பகாப் பொருள்
காவலாக வும்முளே கலந்திருப்ப துண்மையே."[64]

சங்கராச்சாரியார் கூறும் கருத்தையும் இங்கு இணைத்து சிந்தனை செய்க:

"எத்தனைதான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ
சுத்தமுடன் தலைமுழுகித் தவஞ்செய்தாலுஞ்
சொல்லறிய பேரின்பந் தோன்றுமா சொல்
பித்தர்களே கல்லுகளை விலைக்கு வாங்கிப்
பிரானென்றே சீலையிலே முடித்துகொண்டு
செத்தபின்பு கயிலாசஞ் சேர்வோமென்றால்,
சேர்வதில்லை எரிநரகஞ் சேர்வீர்தானே."[4]

"சற்குருவை அறியாமலு லகிலேதான்
சண்டாளர் கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்ன புத்தித்தன்னைக் கேட்டு
பூசைசெய்து கற்களையே போற்றி செய்வார்
சொற்குருக்கள் தங்களுட செய்திகேட்டால்
சொற்கமுண்டோ நரகமல்லால் சொல்லும்போது

சற்குருவை அறிந்தவருக்குடனே மோட்சம்
சார்வரென்றே முன்னோர்கள் சாற்றினாரே."

"வட்டமதி இரவிதன்னைப் பூசிப்போரும்
மண்ணை லிங்கமாக வைத்துப் பூசிப்போரும்
சுட்டவுரு மரச்சிலைகள் பூசிப்போருந்
தூய செம்பு கல்லுருவைப் பூசிப்போருந்
திட்டமுட னெட்டெழுத்துப் பொருளென்போரும்
சிறந்த வெழுத் தைந்துமே பொருளென்போரும்
விட்டவிடந்தனை அறியாரிவர் தாமெல்லாம்
விஷ்ணுவென்றுஞ் சிவனென்றும் விளம்புவாரே."[65]

புண்ணிய யாத்திரைகளையும், ஆறுகளில் மூழ்குதலையும் கடுவெளிச் சித்தர் கண்டிக்கின்றார்:

"கச்சிக்கு ஓடில் வினை போமா - அந்தக்
கங்கை யாடில்கதி தானும் உண்டோமோ
பிச்சுகறு கன்மகங்கள் சாமோ - பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ!"[66]

- கடுவெளிச் சித்தர்.

எரிநரக அலகை செய்யும் இடர் எண்ணாமல் : எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் நரகத்திற்குரிய அலகை என்னும் சாத்தான் **மெய்ப்பொருளை** அறியாமலும் அடையாமலும் இருப்பதற்குப் போடும் தடைகள் இவை என்பதை அறியாமல் மேற்கூறப்பட்ட பூசை முதலானவைகளை மக்கள் செய்கின்றார்கள் என்பதாம். சாத்தானுடன் நரகத்திற்குட்படுதலை "**அலகை வசமாவது**" என்றும் 14ஆம் பாடலில் கூறுகின்றார்.

"**நரகத்தின் ஆரம்பத்தைக் கவனிக்க**" லூசிபர் தன்னுடன் சேர்ந்த ஒரு தூதர் கூட்டத்துடன் பரலோகத்தைத் தனக்கென்று பிடித்துக் கொள்வதற்குத் தீர்மானித்தான். அவன் பரலோகத்திலே யுத்தம் தொடங்கினான். தேவன் உடனே இந்தக் கலகத்தை அடக்கினார். நியாயத் தீர்ப்பு வரைக்கும் அவர்களைப் பிடித்து வைக்க ஓர் இடத்தை உண்டாக்கினார். (ஏசாயா 14:10-15)

மத்தேயு 25:41, "அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போடுங்கள்."

நினைவிலே நிறுத்துங்கள், நரகம் சாத்தானுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும், ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறது. **ஒரு**

மனிதன் நரகத்திற்குள்ளே நுழைகிறான் என்றால், அவன் **அழைப்பில்லாமல் நுழையும் ஒருவனே!** ஆனால் பல மனிதர்கள் அதற்குள்ளே செல்வார்கள்; ஏன் என்றால், தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்த சாத்தானுடனும் அவனுடைய தூதர்களுடனும் அவர்கள் சேர்ந்து கொண்டதினால் அப்படியாகும்.[67]

மெய்ப் பரம்பொருளை அறியாமல் மனித விருப்புடன் செய்யப்படும் பூசை முதலான ஆசாரங்களால் முக்தி அடைய இயலாது என்பதை **அகத்தியர்** இப்பாடலில் தெளிவுப்படுத்துகின்றார்.

செய்ய வேண்டாதவை

12. "போக ஒரு தடையுண்டோ அந்த நாட்டில்
போவதற்குப் பொய்கைதனில் முழுகவேண்டாம்;

சாகமுண்டு தலைகீழாய் நிற்கவேண்டாம்;
சத்தலிங்க மலர் எடுத்துச் சாத்தவேண்டாம்;

தாகமுடன் தீ வளர்த்துக் குதிக்க வேண்டாம்;
தாரணியில் பலபேயைத் தொழவும் வேண்டாம்;

ஏகனென்று பிரமாவை நாட வேண்டாம்;
இந்த நூல் பார்த்து அறிவீர் இன்பாய்த்தானே."

கருத்துரை : அந்த நாட்டிற்குப் போவதற்குத் தடை ஏதும் உண்டோ? அங்கே போவதற்குப் பொய்கையில் முழுகவேண்டாம்; இலைக்கறி உண்டு தலைகீழாய் நின்று தவம் செய்யவேண்டாம்; மலர் எடுத்து லிங்கத்திற்கு இட்டு போற்றவும் வேண்டாம்; இந்த நூலில் உள்ள எல்லாச் செய்திகளையும் ஆராய்ந்து பார்த்து இன்பமாய் அறிந்து கொள்ளுங்கள்.

விளக்கவுரை

முக்தி நாட்டிற்குப் போவதற்குத் தடை எதுவும் இல்லை என்பதைக் கூறும் அகத்தியர் பல சமய ஆசாரங்களைக் குறிப்பிட்டு அவைகளைச் செய்யவேண்டாம் என்கிறார். தாம் அவற்றைச் செய்து பயனில்லை என்று கண்டதால் அறிவுறுத்துகின்றார். அவர் விலக்குவனவற்றைச் செய்தல் முக்தி நாட்டிற்குள் போவதற்குள் தடையாகலாம் என்பது தொனிப்பொருளாக அமைந்துள்ளதைக் காணலாம்.

அவர் செய்ய வேண்டாம் என்று சொல்வன : (1) ஆறு, குளங்களில் முழுகுதல், (2) காய்கறிகளை உண்டு தலைகீழாக நின்று தவம் செய்தல், (3) மலர்

தெளித்து லிங்க வழிபாடு செய்தல், (4) விரதம் பூண்டு தீ மிதித்தல், (5) உலகத்தில் பல பேய்களைத் தொழுதல், (5) பிரம்மாவை ஒரே கடவுள் என்று கொண்டு தொழாமல் இருத்தல் என்பன.

தற்காலத்தில் தமிழ் உரை நடையின் தந்தை என்று போற்றப்படும் தமிழ்ப் பெரியார், திரு.வி.கலியாணசுந்தரனார் பின்வரும் பாடல்களில் கிட்டத்தட்ட இதே கருத்தைக் கூறுதலைக் காணலாம்:

“மலரைப் பறிக்கிலென், மாலை புனைந்திலென், மந்திரத்தின்
ஒலியைப் பெருக்கிலென், ஓவெனப் பாக்ளை ஓதிலென்ன!
சிலுவையும் ஆணியும் செந்நீரும் சேர்ந்த திருவுருவம்
பொலியும் உளத்தினில் பொன்றிடும் பாவப் பொருப்புகளே

வாக்கை அடக்கின் வயிற்றை ஒடுக்கின் மயிர்வளர்த்து
மூக்கைப் பிடித்திடின் மூச்சைத் தடுத்திடின் முத்தியின்பம்
தேக்குமோ ஐயோ செகத்தீரு;! அடைமின் சிலுவை உயிர்
போக்கிய ஏசுவின் பொன்னடி இன்பம் புகுந்திடுமே”[68]

சங்கராச்சாரியார் வேண்டாம் என்று அறிவுறுத்தும் சிலவற்றையும் இப்பாடலில் காண்க:

“செகவாழ்வை மெய்யென்று நம்ப வேண்டாம்
தேசத்தைப் பொருளென்றுந் திரிய வேண்டாம்
பகை வாழ்வு சமய மதம் பார்க்க வேண்டாம்
பலகலையைப் பொருளென்று படிக்க வேண்டாம்
மிகையானப் பூசைகளைச் செய்ய வேண்டாம்
வேதாந்தத் தோர்கள் மொழி விரும்ப வேண்டாம்
தொகை யேக பராபரத்தை வணங்கி நிற்றாற்
சுகமாகப் பரம பதஞ்சுகிக்கலாமே”[69]

பட்டணத்தாரும், சிவவாக்கியரும் கூறும் செய்திகளையும் ஒப்பு நோக்கிக் காண்க:

“சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசற்ற வாகாயந்தன்னிலும் ஆய்ந்துவிட்டோர்
இல்லிலும் அன்பரிடத்திலும் ஈசனிருப்ப தல்லாற்
கல்லிலுஞ் செமபிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே.

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகி லேனுயர் பொன்னெனவே
ஒளியிட்ட தாளிரண்டுள்ளே யிருந்தது துண்மையென்று
வெளியிட் டடைத்துவைத்தே னினிமே லொன்றும் வேண்டிலனே.”[70]

- பட்டினத்தார்.

"காணுவேணு மென்றுநீர் கடல் மலைக ளேறுவீர்
ஆணவம தல்லவோ அறிவில்லாத மாந்தரே
வேணுமென்றவ் வீசர்பாத மெய்யுளே தரிப்பிரேல்
தாணுவாக நின்ற சீவன் றான்சிவம தாகுமே.
தீர்த்தலிங்க முத்தியென்று தேடியோடுந் தீதரே
தீர்த்தலிங்க முள்ளினின்ற சீவனைத் தெளியுமோ
தீர்த்தலிங்க மும்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்தலிங்க தானதாய்ச் சிறந்ததே சிவாயமே,
ஆடுகொண்டு கூறுசெய் தமர்த்திருக்கு மாறுபோல்
தேடுகின்ற செம்பினைத் திடப்படப்ப ரப்பியே
நாடுகின்ற தம்பிரானு நம்முளே யிருக்கவே
போடுதர்ப்ப பூசையென்றும் பூசையென்ன பூசையே."[71]

- சிவவாக்கியர்.

இரட்சணிய மகாகவி எ.ஆ.கிருஷ்ணபிள்ளை கூறம் அறிவுரைகளையும் **அகத்தியர்** அறிவுரையுடன் ஒப்பிட்டு அறிக:

"கல்லைச் செம்பைக் களிமண்ணைக் கடவு ளெனவே யுருப்பிடித்துப்
புல்லைப் பூவை நறுங்குழையைப் போட்டுப் பூசை புரிவீர்கள்
தொல்லைப் பவமும் புரிபவமுந் தொலையு மாறு கிறிஸ்து வெனுஞ்
செல்வக் குமரன் திருவடியைச் சேர வாரும் செகத்தீரே."

"கானம் புகுந்து தனையொறுத்துக் காயம் வருத்திக் கண்மூடி
மோனம் புரிந்து தவயோக முயல வேண்டா மவரவர்தம்
தான மிருந்தாத் துமபாவச் சழகைக் கருதித் தன்னைத் தாழ்த்தி
ஞான குருவின் புண்ணியத்தை நாட வாரும் செகத்தீரே."

"நாலு வேத முளதுசெவி நயனங் கண்டு கேட்டதிலை
மாலா தியமுத் தேவருள்ர் மலடி பெற்ற மகார் போல்வர்
மேலு நாலு பதவியுள விண்ணிற் பூத்து விரிந்தமலர்
போலி யிவைமற் றியேசுசரண் போற்ற வாரும் செகத்தீரே"

"மாய வுலக மயக்கைமுற்றும் வரைய வேண்டின் வஞ்சனைசெய்
பேயைப் புறங்கண் டிடவண்டிற் பிடித்த துரிச்சை பிறங்காமல்
தேய வேண்டிற் புனிதமனஞ் சிக்க வேண்டிற் றிகையாமல்
தூய பரிசுத்தாவியருள் சுறுக்காய்த் தேடும் செகத்தீரே."[72]

ஏகன் என்று பிரமாவை நாடவேண்டாம் : பிரமாவைக் கடவுள் என்று நாடவேண்டாம் என்று அகத்தியர் அறுவுறுத்துகின்றார். மும்மூர்த்திகளுள்

ஒருவரான பிரமா தெய்வத்தன்மையுள்ளவர் அல்லர்; மனிதரே என்பதற்கு எ.ஆ.கிருஷ்ணபிள்ளை இருக்கு வேதம், யசுர் வேதம் முதலானவற்றிலிருந்து தரும் பின்வரும் செய்திகளைக் கண்டு சிந்திக்க:

"2. வேதப் பொருள் விளக்கம் 33-ம் பக்கம் யசுர் வேதத்தைச் சேர்ந்த ரிக் வேத வாக்கியம் "யாருக்கு முன் ஒன்றும் பிறக்கப் படவில்லையோ, யார் எல்லா வஸ்துக்களுமாயிருக்கிறாரோ அவரே பதினாறு அவயவங்களோடு ஆகிய சரீரத்துடன் சிருஷ்டி கர்த்தாவாகிச் சிருஷ்டியில் ஆனந்தங் கொண்டார்.'' என்று சொல்லியிருக்கிறது. இதனால் பிரமாவானவர் எல்லாம் வல்ல கடவுள் ஒருவரால் அவயவங்களோடு உலக ஆரம்பத்தில் மானிட வடிவமாகச் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர் என்று முடிவாகிறது. மனிதன் என்று .... கொண்டால் அவன் எல்லா வஸ்துக்களுமாய் இருக்கிற விதம் எப்படியெனில், ஆம் கடவுளுடைய பிரதம நினைப்பு அளவில் உலகத்தில் விருத்தியாகப் போகிற சகல மக்கள் சமுதாயங்களும், அவர்களால் உண்டு படப்போகிற சகலமான சிருஷ்டிகளும், சகலமான கல்விகளும், சகலமான கைத்தொழில் முயற்சிகளும், அவர்களால் நடந்தேறப்போகிற சகலமான நன்மைதீமைகளும், பாவ தோஷங்களும் எல்லாம் ஆதியில் எங்கே அடங்கியிருந்தன? ஆதி மனிதனுடைய செந்நீர் இந்திரிய வித்திலன்றோ மறைந்திருந்தன. 'வித்தில்லாத சம்பிரதாய, மேலுமில்லை கீழுமில்லை' என்பதை அறியீர்களா? பிரமாவின் முகம், புயம், இடுப்பு, பாதம் என்ற ஸ்தானங்களில் நான்கு சாதியாரும் உற்பத்தியானார் என்று நீங்கள் கொண்ட கொளகையின் கருத்துத்தான் என்ன? சற்று யோசித்துப் பாருங்கள். நல்லது; அஃதிருக்கட்டும். சிருஷ்டி கர்த்தாவென்று மனிதனைச் சொல்லலாமா என்றாலோ, அன்றுதொட்டு இன்று வரையும் உலகம் முடியுமட்டும் தோன்றி அழிந்தவும், தோன்றி அழியத்தக்கனவுமான சமஸ்தான மானிட சிருஷ்டிகளுக்கெல்லாம் மூல புருஷனாயிருந்த அவனைச் சிருஷ்டி கர்த்தாவென்று ஏன் சொல்லக்கூடாது. தர்மகர்த்தா, ஆதீனகர்த்தா, குடும்பகர்த்தா, கிரந்தகர்த்தா, புராணகர்த்தா, வியாக்யான கர்த்தா, இவ்வகையான அநேக கர்த்தாக்களும் இருக்கும்போது ஆதிமனிதனைச் சிருஷ்டி கர்த்தா என்பதில் யாது குற்றம்? குற்றம் இல்லை என்று அறிக. இந்த வாக்கியம் உள்ளதென்று கண்டறிந்தும் பிரமாவை மனித சிருஷ்டியென்று தேவசிருஷ்டி என்றும் கடவுள் என்றும் கொள்ளலாமா? அப்படிகொள்வது அறிவுமயக்கம் என்றும் வீண்பிடிவாதம் என்றுந்தானே விவேகிகள் சொல்லத் தக்கது.

"3. முந்திய பிரிவிற் சொன்ன கருத்துக்கிசைவாக யசுர்வேதத்தைச் சேர்ந்த ரிக்வேத வாக்கியம் 90-வது பிரிவில், "சரீரம் பிறப்பதற்கு முன்னதாய் வேறுபாடுள்ள வடிவங்களாக இருந்தன. ஆத்துமா மனித வடிவுகொண்டு

உடனே தன்னைச் சுற்றிலும் பார்த்தான். அந்த ஆதிவஸ்து தன்னைத் தவிர மற்றொன்றுங் காணவில்லை." மேற்படி 92-வது பிரிவில் "அவன் பயமுற்றான், அதனால்தான் மனிதன் தனிமையாயிருக்கும்போது பயப்படுகிறான். ஆனால் அவன் தன்னைவிட வேறொன்றும் இல்லாததினால் நான் பயப்பட வேண்டியது என்னவென்று ஆலோசித்தான். அவனுடைய பயம் அவனை விட்டுப் போய் விட்டது." மேற்படி 93-வது பிரிவில் 'அவனை ஆனந்தப்படவில்லை. ஆகையால் மனிதன் தனித்திருக்கும்போது ஆனந்தப்படுகிறது இல்லை. மற்றொருவர் இருக்கவேண்டுமென்று அவன் கோரினான். உடனே அவன் ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையுமாக ஒருவருக்கொருவர் தழுவிக் கொண்டிருக்கும்படியான அவ்விதமாய் விட்டான். தன்னிலிருந்தே தானே இரண்டாகும்படியான இதைச் செய்தான். இவ்விதமாக ஒரு புருஷனும் ஒரு மனைவியுமானான். அவன் அவளைச் சேர்ந்தான். அதனால் மனிதர் உற்பத்தியானார்கள்' என்று வெகு தெளிவாய் பிராஜாபதியென்றாலும் பிரமாவென்றாலும் முதல் முதல் கடவுளால் உலகத்திற் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதன் என்றே கண்கூடாகத் தெரிகின்றது. ஆதலால் பிரமான கடவுளல்லர்.

"4. இந்து வேதங்களில் சமஸ்தமும் பிரமத்தினிடத்திலிருந்துண்டாகின்றன. பிரமத்தினிடத்தில் ஒடுக்கமாகின்றன என்றே இடங்கள் தோறும் கூறப்பட்டிருக்கின்றது. பிரமம் பிரமன் என்னும் இரண்டு பெயரும் ஏகதேசம் ஒத்திருக்கின்றமையால் வேதத்தில் எடுத்தோதப்பட்டுள்ள அந்தப் பிரமமே இந்தப் பிரமன் என்று வைத்துக் கொண்டால் என்ன குறையென்று ஒரு கேள்வியுண்டாகலாம், பெயரும் எழுத்தும் ஒத்துப்போவதினால் அந்தப் பிரமமே இந்தப் பிரமன் என்று சாதிப்பது முழுத்தவறு. பெயர் ஒத்திருத்தல் போலக் குணங்களும் செய்கைகளும் யாதொரு வேறுபாடுமின்றி ஒத்திருத்தல் வேண்டும். வேதத்தில் சொல்லுகிற பிரமத்திற்கும் தற்காலம்வரை சை வைஷ்ணவ மதஸ்தர் உண்டென்று கொண்டாடுகிற பிரமாவுக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. அவ்வகளை எல்லாம் தெரிவிப்பது கூடாத காரியம். ஆயினும் சிலவற்றை இதனடியில் தெரிவிக்கின்றோம்.

(1) பிரமத்தைப்போல அருவத் தன்மை பிரமாவுக்கு உண்டா? இல்லை. அல்லது பிரமாவைப் போல நாலு முகம் பிரமத்துக் குண்டா? அதுவும் இல்லை.

(2) பிரமத்தைப்போல அநாதிநித்திய பண்பு பிரமாவுக்கு உண்டா? இல்லை, அல்லது பிரமாவைப்போல பிறப்பு இறப்பு பிரமத்துக்குண்டா? அதுவும் இல்லை.

(3) பிரமத்தைப் போலத் தெய்வீகம் பிரமாவுக்குண்டா? இல்லை. அல்லது பிரமாவைப் போல மனுஷீகம் பிரமத்துக்குண்டா? அதுவும் இல்லை.

(4) பிரமத்தைப் போல சர்வஞானம், சர்வ வல்லமை பிரமாவுக்குண்டா? இல்லை. அல்லது பிரமாவைப் போல அறியாமை, பலவீனம் பிரமத்துக்குண்டா? அதுவும் இல்லை.

(5) பிரமத்தைப் போல மிகுந்த பரிசுத்தம் பிரமாவுக்குண்டா? இல்லை. அல்லது பிரமாவைப் போலக் காமாக்கினி பிரமத்தைத் தகித்ததா? அதுவும் இல்லை.

நல்லது பிரமத்துக்குரிய எந்த இலட்சணமாவது பிரமாவுக்குப் பொருந்துமா? பொருந்தாது, அல்லது பிரமாவுக்குரிய எந்தக் குறைவுமீனதையுள்ள இலட்சணமாவது பிரமத்துக்குப் பொருந்துமா? அதுவும் பொருந்தாது. இப்படியிருக்க பிரமந்தான் பிரமாவென்று சொல்லலாமா? சொன்னாலுந் தகுமோ? சொல்லவுங்கூடாது. சொன்னாலுந் தகாது.

"5. பிரமா பிறப்பு மரணத்துக்குட்பட்டவராதலில் அவர் கடவுள் ஆகார். எப்படியெனில் விஷ்ணுவின் உந்தியத் தாமரையில் வெகுகாலம் புருஷ கர்பமாயிருந்து பின்பு வெளிப்பட்டார் என்றும், விஷ்ணு அவரைச் சந்தித்து சிருஷ்டி கர்த்தாவாக ஏற்படுத்தி வைத்தாரென்றும்; 'எண்ணுஞ் சதுர்யுகம் ஈராயிரங் கழியில் நண்ணும் பிரமனுக்கு நாளொன்று:' இந்தக் கால அளவின்படி நூறு வருஷக்காலம் பிரமனாயுளன் என்றும், அந்த ஆயுள் முடியும்போது பிரமாமாண்டு முன்போல விஷ்ணுவின் உந்தியந் தாமரையிற் கர்பமாயிருந்து மறுபடியும் பிறந்து சிருஷ்டித் தொழில் செய்வாரென்றும் விஷ்ணு புராணம் ஓம் அத்தியாயத்திலும் இன்னும் அந்தப் புராணத்தின் பலவிடங்களிலும் கூறியிருக்கின்றது. அல்லாமல்:

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் - யான்முகமாய்
அந்தாதி மேலிட்ட டறிவித்தேன் ஆழ்பொருளைச்
சிந்தாமற் கேண்மினீர் தேர்ந்து,"

என்று திருமழிசையாழ்வார் திருஅந்தாதியிலும் கூறியிருக்கிறது. இவ்வாறு பன்முறை பிறந்தும் இறந்தும் காலச் சக்கரத்தில் பிறப்பு வட்டத்துட்பட்டுச் சுழன்று தடுமாறித் திரியும் இந்தப் பெரிய மனிதனைக் கடவுள் தன்மை உடையவர் எனக் கொள்வது தேவ தூஷணம்; தெய்வத் தன்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவென்பது வீண்புகழ்ச்சி என்று அறிக.

"5. பிரமனைக் கடவுளென்று கூறுகிற் புராணங்களே அவரை இழிவுபடுத்தி அசக்தர், கர்வி, பொய்யனென்று பறையறைகின்றன. விஷ்ணுவும் பிரமாவுந்தகப்பனும் பிள்ளையுமென்பது சைவர் வைஷ்ணவர் யாவரும்

ஒத்துக்கொள்ளும் விஷயம். இவ்விருவருக்குள்ளுந் தான்தான் பெரியவன் என்கிற கர்வமாகிய கெடுபுத்தி ஒருகால் தோன்றியதாம்.

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து"

"பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்."

என்று சொன்ன பிள்ளை ஞான முதலாய்ப் பிரமாவுக்கில்லாமல் போயிற்று; போகட்டும் பிள்ளைக்குத் தானில்லை. பிதாவுக்கு ஆயினும் இருக்கக்கூடாதா? அவரும் அகங்காரத்துக்கு இடங்கொடுத்து இருவருக்குள்ளும் பகைமூண்டு ஒருவரோடு ஒருவர் நெடுநாளாய் யுத்தஞ்செய்யவும், அதனால் உலக காரியம் கவனிப்பாரின்றிப் பாழடையவும் நேர்ந்த சம்பவகங்களையும் அனர்த்தங்களையும் கண்டு, சிவன் இருவருக்கும் ஊடே அக்கினிப்பிழம்பாக அடியும் முடியும் அறிதற்கரிதாய் ஜோதி வடிவம் எடுத்தருளி, வீண்வாதம் வேண்டாம், இந்த அக்கினிப்பிழம்பின் அடி முடியைக் கண்டு முந்திவருகிறவனே பெரியவன்' என்று நடுப்புகன்றார். இருவரும் சம்மதித்து விஷ்ணுவானவர் பன்றி ரூபம் எடுத்துப் பூமியைக் கிண்டிக் கிளறி அடியைத் தேடப்போனார். பிரமாவோ அடியைத் தேடப்போகிறதே அவமானமென விலக்கித் தான் முடி தேடி வருவதாக சம்மதித்து அம்சபட்சி வடிவமாய் உயரப்பறந்து தீவிரமாய்ப் போனார். "உயரப் பறந்தாலு மூர்க்கருவி பருந்தாகுமா? ஆகாது. அவ்வாறே அநேக வருஷக்காலத் தேடிப்போய் மூடியைக் காணக்கூடாமல், அக்கினிரூபமாய் நிற்கிற சிவனுடைய சிரசிலிருந்து தவறி அதோமுகமாய் விழுகிற தாழம்பூவைப் பிடித்து இணக்கப்படுத்தி, தனக்காகப் பொய்ச் சான்று உரைக்கச் சம்மதப்படுத்திக் கொண்டு சிவசந்நிதியில் வந்து, நான் முடியைப் பார்த்து வந்தேன் என்று பிரமக்கடவுள் பொய் சொல்லத், தாழம்பூவும் ஆமென்று கள்ளசாட்சி பகர்ந்தது. விஷ்ணு திரும்பி வந்து நான் வெகுகாலமாய்த் தேடிப்போனேன். அடியைக் காணவில்லை. வந்துவிட்டேன் என்று உண்மை சொன்னார். மார்க்கண்டனுக்குச் சாகாவரம் கொடுத்த சிவனுக்கு கோபமூண்டு பிரமாவுக்கு உலகத்திலெங்கும் பூசையுங்கோவிலும் போகவென்று சாபமிட்டுத், தாழம்பூவை நான் உன்னை இனித் தரிக்கமாட்டேன் என வரைந்து விட்டு விஷ்ணுவைப் பாராட்டினார் என்பது புராணக்கதை. "மெலி யவர் பாலதேயோ வொழுக்கமும் விழுப்பந்தானும் - வலியவர் பிழையே செய்தாற் புகழன்றி வசையுண்டோமா!" உண்டாகாது என்பது இராமாயணம். இந்தக்கதை மெய் என்றால் பிரமா பொய்யனென்றும் பிறரையுங்கள்ளச் சாட்சிக்குப் பயிற்றுவித்தார் என்றுந்தானே ஏற்படுகிறது. "கடவுள் பொய் சொல்ல மனிதரல்ல." இது மெய்ச்சுருதி, பொய் பேசுகிற யாவரும் யாவராயிருப்பினும் மனிதரே. பிரமாவுஞ் சிவனும் பொய் பேசினார்கள். ஆகவே இருவரும் மனிதரேயன்றிக் கடவுளும் அல்லர், தேவரும் அல்லர் என்றுதான் சாத்தியப்படுகிறது."

மக்கள் முக்தி நாடடைய செய்ய வேண்டாதன எவை, செய்ய வேண்யடின எவை என்பதைத் தமது நூலைப்பார்த்து, இன்பமாய் அறிந்து கொள்ளுமாறு **அகத்தியர்** விரும்பிக் கூறுகின்றார்.

அன்பாகத் திறந்துவிட்டேன்

13. "இன்பமாய் நால்வேதம் வந்தவாறும்
எழுதினார் வேதவியா சாத்தான் போல
அன்பாகப் பலவிதத்தில் கட்டிப் போட்டார்;
அதினாலே மானிடர்கள் கெட்டுப் போனார்.
முன்போலச் சித்தர் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம்
மூடினதை திறந்துவிட்டார் முடுகி நானும்
அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்சமாக
அரனார் உத்தரப்படி அறிவித்தேனே"

கருத்துரை : நான்கு வேதங்கள் வந்த வரலாற்றைக் கேட்பதற்கு இன்பமாக இருக்குமாறு வேதவியாசர் சாத்தான்போல எழுதிவிட்டார்; அதனால் மக்கள் கெட்டுப் போனார்கள். எனக்கு முன்னர் சித்தர்கள் எல்லாம் மூடிக்கிடந்த மெய்ப்பொருளைக் கொஞ்சம் கொஞ்சம் திறந்துவிட்டனர்; நான் கடவுளின் உத்தரவுப்படி விரைந்து எல்லாவற்றையும் வெளிச்சமாகும்படி அன்பாகத் திறந்துவிட்டேன்.

விளக்கவுரை

இன்பமாய் நால்வேதம் வந்தவாறும், எழுதினார் வேதவியா சாத்தான் போல: முதல் பாடலிலே பாரணமா நால்வேதம் வந்த வாறும் என்று கூறிய **அகத்தியர்,** இங்கே அவை எவ்வாறு வந்தன என்று கூறுகின்றார். 2ஆம் பாடலில் "நால்வேத மயக்கம்" என்று கூறியதையும் இணைத்து எண்ணுக.

மகாபாரதத்தைக் கட்டித் தொகுத்து அமைத்தவர் வியாசர் என்பர். ஆனால் இந்த வியாசரும் நான்கு வேதங்களைத் தொகுத்து அமைத்தவர் என்று **அகத்தியர்** கூறம் வியாசரும் வேறாக இருத்தல் வேண்டும். சிறந்த நால்வேத ஆராய்ச்சியாளரும், இந்திய நாட்டு வேதங்களின் அறிவை மேலை நாடுகளுக்கும் பரப்பிய பெரும்புகழுடையவருமாகிய மாக்ஸ் முல்லர் இரண்டு வியாசர்களும் வெவ்வேறானவர்கள் எனத் தோன்றுவதாகக் கூறுகின்றார்.[74]

அகத்தியர் கூறும் வியாசரையும் அவர் அமைத்துக் கொடுத்த நால்வேதங்களையும் குறித்து திரு. **N.J.S.சிவசுந்தரம்** கொடுத்துள்ள செய்தியை இங்கே தருகின்றோம்.

> "இவர்கள் விஸ்தாரமாக எழுதி வைத்தவைகளைத் தன் சகோதரன் மனைவியைச் சேர்ந்து இரண்டு பிள்ளைகளைப் பெற்ற வியாசரிஷி வேதத்தை எல்லாம் சேர்த்து, இருக்கு வேதத்தை, பாலி என்னும் பைலன்ரிஷிக்கும், யசுர் வேதத்தை வைசம்பாயனரிஷிக்கும், சாமவேதத்தை சமயமுனி ரிஷிக்கும், அதவர்ண வேதத்தை சோமன் என்னும் ரிஷிக்கும் போதிக்க, இவர்கள் மற்றவர்களுக்குப் போதித்தார்களாம்." "மகா ஞானியாகிய கபில முனிவர் .... அவர் பிறக்கும்பொழுதே, மான்தோல் புலித்தோலுடன் சடாவிரதராகி, காவி, காம்பராய், வேதத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு உதயமானாராம். உடனே வேதவியாசர் தாயை வணங்கி, என் தந்தை எங்கே என்று கேட்க, தாய் அதோ போகிறார் என, தன் தந்தையைப் பின்தொடர்ந்து போய், தவஞ்செய்து, தன் தகப்பன் காலஞ்சென்றபின், உலகத்தில் வேதங்கள் கருத்து வேற்றுமையாய் மாறுபட்டுக் கிடந்ததைச் சிக்கறுத்து, ருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என நான்காய்ப் பிரித்துக் கொடுத்ததுமல்லாமல், ஐந்தாம் வேதமாகப் பிரித்துக் கொடுத்ததுமல்லாமல், ஐந்தாம் வேதாகமப் பதினெண் புராணத்தோடும், பாரதத்தோடும் வெளிப்பட்டது."[75]

வேதநாயக சாத்திரியார் கூறியுள்ள கருத்தையும் இங்கு ஒப்பு நோக்கிக் காண்க:

> "ஒப்பில்லாத பிர்மருக் கூர்வசி
> யென்ற கூத்தி வயிற்றிற் பிறந்த
> தப்பில்லா வசிஷ்டருடைய
> சாதி பேதக மானதில்லையோ.
>
> அதட்டி யதட்டி வேதங்களோதி
> யாகம சாஸ்திரம் படிக்கின்றீர்களே
> வசிஷ்ட்டருக்கு சண்டாளி வயிற்றினில்
> வந்தவர் சாத்திபர் என்றறி யீர்களோ.
>
> சங்கை யறவே புலச்சியோடு
> சாத்திபர் கூடி சேர்ந்ததினாலே
> புங்கனூரின் மரபில் முளைத்துப்
> போதகஞ் சொன்னவர் பராசரல்லவோ.

உச்சமாகிய பராசர் தானென்று
மச்சகந்தி யென்ற மீன் வாணிச்சியை
மிச்சமாக வைத்திருந்தல் லவோ
வேத வியாசரும் பிறந்த காரணம்.

வசிஷ்டர், சாத்திபர், பராசருடனே
வளமை வேத வியாசரினால் வருங்
குதட்டிக்குத் தட்டி, வேதங்க ளோதியே
குலத்தின் வேதியர்க் குயர்த்தி யாயினர்."[76]

மறைந்திரு **ஒய்.எம். சாலமோன்** தமது **மகா பாபேல்** என்னும் நூலில் கொடுத்துள்ள பின்வரும் செய்தியையும் ஒப்பிட்டுப் பார்க்க:

"வியாசர், ஒன்றாகக் கலந்திருந்த வேதத்தை ருக்கு வேதமென்றும், யசுர் வேதமென்றும், சாம வேதமென்றும், அதர்வண வேதமென்றும், நாலாகப் பிரித்து அவற்றுடனே இதிகாச புராணங்களை ஐந்தாம் வேதமாகக் கற்பித்தாரென்று பாகவதம் பிரதம ஸ்கந்தம் 4-ம் அத்தியாயம் சொல்லுகிறது."[77]

இருக்கு வேதத்தில் காணப்பட்ட புருஷ சூக்கத்தில் வேதங்கள் யாகத்திலே தோன்றின என்னும் குறிப்பைக் கண்டோம். இங்கே வியாசர் வேதங்களைக் கொண்டு வந்த முறையை கபிலர் அகவல் வாயிலாக அறிந்தோம். சுவிசேடக் கவிராயர் வேதநாயக சாத்திரியார் கருத்தும் இதற்கிசையவே இருந்ததைக் கண்டோம்.

நால் வேதங்களின் தோற்றத்தைக் குறித்து வெவ்வேறு கதைகள் உண்டு. இங்கு கூறப்பட்ட செய்தியையும் ஒப்புநோக்கி அறிதல் உண்மை காண்பதற்கு நமக்கு உதவும். சாதிகளைப் பற்றிய குறிப்பு இங்கே வருவதால், ஆரியர்கள் சாதிகளைத் தோற்றுவித்தக் காலத்திற்குப் பின்னர் இந்தச் செய்தி தோன்றி இருக்க வேண்டும் என்பதும், வேதங்கள் பிராமணர்களுக்கு மாத்திரமே உரியன அல்ல என்பதை உணர்த்துவதற்கு ஏதுவாகவும் இந்தச் செய்தி உள்ளது. மேலும் பிராமணர், பிராமணர் அல்லாதோர் ஆகிய இரு சாராருக்கும் இடையில் இருந்த இந்தப் போராட்டத்தையும் இதனால் நாம் அறிகின்றோம்.

இனி வரலாற்று வழியே ஆராய்ந்து நான்கு வேதங்கள் முதலானவை உண்டான செய்தியை அறிதல் நாம் **அகத்தியர்** கூறும் **மெய்ப்பொருளை** அறிவதற்குத் துணையாக அமையும்.

நான்கு வேதங்கள் முதலாக மகாபாரதம் ஈறாக உருவாக்கப்பட்ட காலத்தைத் தோராயம் கி.மு.2000-கி.மு.550 ஈறாக அமைத்துக் கூறுவர். மாக்ஸ் முல்லர் கி.மு.2400-லிருந்து கி.மு.1000-க்கும் இடையில் வேதங்கள் தொகுக்கப்பட்டன என்பர். இந்தக்கால கணிப்பில் அறிஞர்களிடையே வேறுபாடுகள் உண்டு. ஆனால்

இந்து சமய நூல்களின் வளர்ச்சியில் சுருதி என்றும், ஸ்மிருதி என்றும் மிகப் பிற்பட்டக் காலத்தில் வகுத்துக் கொண்ட அமைப்பின்படி காணுங்கால் மேலே கூறப்பட்டக் காலம் சுருதி என்று சொல்லப்படும் நூல்கள் உருவான காலத்தையும் அதன் பரிணாமத்தையும் அறிவிக்கும். இக்காலத்தையே **அகத்தியர்** கருத்திற்கொண்டு கூறியதை அறிகின்றோம். மேலும் 'ஸ்மிருதி' என்று பின்னர் தோன்றியவை எல்லாம் 'சுருதி' என்னும் பகுதிக்கு உட்பட்ட சாத்திர நூல்களின் செய்திகளின் அடிப்படையிலேயே தோன்றியதையும் அறிந்து தெளியலாம்.

'ஸ்மிருதி' என்றால் நினைவில் இருந்து மரபு அல்லது பாரம்பரிய வழியாகச் சொல்லப்பட்டு தொகுக்கப்பட்டது என்று பொருளாம். கிட்டத்தட்ட தற்காலத்தை ஒட்டி தெய்வங்கள், தேவதைகள் இவர்களைப் பற்றிய செய்திகளின் தொகுப்பே இவை. பதினெண் புராணங்கள் உப-புராணங்கள் முதலியனவும் இராமாயணம் மகாபாரதம் முதலிய இதிகாசங்களும் இதில் அடங்கும்.

எனவே இங்கு நான்கு வேதங்கள் முதலானவை தோன்றிய வரலாற்றினைச் சுருக்கமாக அறிதல் **அகத்தியர்** கருத்தை நாம் உணர்வதற்குத் துணைபுரியும் என்பதைக் காண்க. இந்த வரலாற்றில் இந்திய நாட்டின் பூர்விகக் குடிகளின் சமயம், பண்பாடு; வெளிநாட்டிலிருந்து வந்த ஆரியர்களின் சமயம், பண்பாடு; ஆசரியர்கள் பூர்விகக் குடிகளை வென்று தங்கள் ஆட்சியையும் அதிகாரத்தையும் அவர்கள்மீது செலுத்தியதில் ஆரியர்களுக்கு உண்டான சுதந்திரமான உயர்வும், இளிச்ச வாயர்களாக ஏமாந்து அந்த உயர்வுக்கு அடிமைகளான திராவிட அல்லது இந்தியப் பழங்குடி மக்களின் பரிதாப நிலையும்: தங்களால் முற்றிலும்; மாற்றி அமைக்க முடியாமல் இருந்த திராவிட மக்களின் நாகரிகம், சமயம் போன்ற இடங்களில் தாங்களும் அவற்றைப் பின்பற்றுவது போல பாவனைச் செய்து, தங்கள் சமயக் கருத்துக்களையம் தாங்கள் வெற்றி கொண்டு ஆதிக்கம் செய்யும் மக்களின் கருத்துக்களையும் கலந்து, அதிலும் தங்களுக்குச் சாதகமாகவே இருக்குமாறு சமயத்தையும் நாகரிகத்தையும் அமைத்துக் கொண்ட நிலைமைகளும் பின்னணியாக அமையும் என்பதை அறிக.

வேதங்களின் காலம் :

வேதங்களாகத் தொகுக்கப்பட்ட பாடல்களின் தோற்ற வரலாற்றை நாம் பார்த்த நிலையில் இருக்கும் நான்கு வேதங்களின் கீதங்கள் எப்பொழுது தொகுக்கப்பட்டன என்பதையும் நம்மால் வரையறுத்துக் கூறுவதற்குப் போதுமான சான்று இல்லை. மேக்ஸ் முல்லர் கி.மு.1500 அளவில் இப்பொழுது இருக்கும் நிலையில் இருக்கு வேதம் உருவாகி விட்டது என்கிறார். அவர் கி.மு.1000 அளவில் கீதங்களைத் தொகுத்தல் நிறைவடைந்து விட்டது என்று கருதுகின்றார். பிராமணங்கள் கி.மு.800-600 காலத்தன எனலாம். சூத்திரங்கள் கி.மு.600-

260 காலத்தன எனலாம். மெர்டோனல் என்பார் வேதகாலம் கி.மு.1500 அளவில் தோன்றியிருக்கலாம் என்பர் டாக்டர் மாரிஸ் புளூம்பீல்டு என்பார் வேதங்களின் மிகப்பெரிய அகராதி ஒன்றினைத் தொகுத்து 1906-இல் வெளியிட்டார். அவர் கி.மு.487-இல் புத்தர் மறைந்ததைக் குறிப்பிட்ட பின்னர் வேத காலத்தின் முடிவுக்கும் பௌத்தத்தின் தொடக்கத்திற்கும் இடையில் ஒன்று அல்லது இரண்டு நூற்றாண்டுகள் கடந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

நான்கு வேதங்களான : இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், இந்த நான்கு வேதங்களுககும் இதிகாசங்கள் என்று அறியப்படும் இராமாயணம், மகாபாரதம் என்பனவற்றிற்கும் இடையில் பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என்பவைகள் தோன்றியதையும் அறிதல் இந்த வரலாற்றை நிறைவு செய்யும். இராமாயணமும் மகாபாரதமும் பின்னரும் வெகுவாக விரிவு செய்யப்பட்டன என்பதை இங்கே குறிப்பிடுதல் நலம்.

ரிக்கா (ricah), துதி பாடல்கள் (பின்னர் இருக்கு வேதம்), யஜீன்ஷி (yajunshi), வழிபாட்டுப் பாடல்களும் சூத்திரங்களும் (யசுர் வேதம் என்றாயிற்று), சாமனி (Samani) இசைப்பாடல்கள் (சாமவேதம்) என்றாயிற்று. அதர்வாங்கிரசா (atharvangirasah), ஆசிகளும், சாபங்களும் (அதர்வண வேதமம் என்றாயிற்று).

இப்பொழுது இருக்கு வேதம் (Rig-Veda) என்று அறியப்படும் பெயரினையுடைய தொகுப்பில், அதன் பிற்பகுதியில் ‘ஆசிகளும் சாபங்களும்’ அப்படியே துதிபாடல்களும், சாம வேதத்தில் இசைப்பாடல்களாக அமைந்துள்ளவற்றின் பெரும்பகுதியும் அடங்கியிருக்கின்றது. அவ்வாறே, அதர்வண வேதத்தில் இருக்கு வேதத்தின் துதிபாடல்களும் அதனதன் நோக்கத்திற்காக இயற்றப்பட்ட வழிபாட்டுப் பாடல்களும் (liturgical) ‘ஆசிகளும் சாபங்களும்’ அடங்கியுள்ளன. யசூர் வேதத்திலும் அதன் முதற்பொருளுடன் மற்ற வேதங்களின் பொருளுள்ள பகுதிகளும் அடங்கியுள்ளன. சாம வேதம் இருக்கு வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட துதிபாடல்களோடு கூட்டிச் சேர்க்கப்பட்ட வெவ்வேறு பகுதிகளுடன் அமைந்துள்ளது. இந்த நான்கு தொகுப்புகளையும் கவனமாக ஆராய்ந்து பார்த்தால் அவை இரண்டு பிரிவாக அமையும். முதல் பிரிவில் இருக்கு, சாம, யசுர் ஆகியன அமையும்; அடுத்த பிரிவில் அதர்வண வேதமட்டும் தனித்து நிற்கும். இந்தப் பகுப்பு வேறுபாடு அவற்றின் பொருள், பண்பு, காலம் இவற்றின் அடிப்படையில் செய்யப்பட்டது.

நான்கு வேதங்களுக்கும் இடையிலுள்ள உறவுகள் :

இருக்கு வேதத்தை அடிப்படையாகக் கொண்டே ஏனைய மூன்று வேதங்களும் தோன்றியுள்ளன. இதனால் அன்றே சிவவாக்கியரும் “வேத நான்கு

மொன்றலோ" என்றும், திருமூலரும் "கடவுளொருவனுண்டே வேதமொன்றோ" என்று கூறியுள்ளனர். இருக்கு வேதம், யசுர்வேதம் இவற்றின் உறவுகளை விளக்குதல் அவ்வளவு குழப்பமானது அன்று. சாம வேதமும் யசுர் வேதமும் இருக்கு வேதத்திலிருந்து தனித்து நிற்கத் தக்கவனல்ல; அவை இரண்டும் பிற்பட்டக் காலத்தவை. இவற்றின் தோற்றங்களைப் பின்வருமாறு கூறலாம்; ஆரம்ப நாள்களில் யார் வேண்டும் என்றாலும் பலியிடலாம். பின்னர், பொதுமக்களிலிருந்து பலியிடும் சிறப்புரிமை உள்ள புரோகிதர்கள் தோன்றினார்கள்; இந்தக் காலத்திலேதான் இருக்கு வேதத்திலுள்ள சங்கீதங்கள் தொகுக்கப்பட்டன. ஆசாரியர்கள் அல்லது பூசாரிகளுக்கு இடையிலேயும், பலிகளும் சடங்குகளும் எவ்வளவு வேகமாக வளர்ந்தனவோ, அவ்வளவு வேகமாக வெவ்வேறு பலி-சடங்கு முறைகளும் வளர்ந்தன (Hotris) என்பார் புரோகிதர்களில் உயர்ந்த வகுப்பாராவர்; சடங்கு நடத்தப்படும்போது பலிசெலுத்தப்பட்டும் தெய்வத்தினைப் போற்றி இந்தப் புரோகிதர் சங்கீதங்களைப் பாடுவார்கள். அவர்கள் ரிக் வேதத்திலிருந்து பாடல்களை ஓதுவார்கள்; அப்பொழுது அவர்களுக்காக சம்ஹிதா செய்யப்படவே இல்லை. கால ஓட்டத்தில், இன்னும் இரண்டு வகுப்பினைச் சேர்ந்த புரோகிதர்களுக்கு இத்தகைய பாடல் தொகுப்புகள் அல்லது சங்கீத புத்தகங்கள் உருவாக்கப்பட்டன. சோம பலியின்போது, உட்காட்ரி (udgatri) புரோகிதர்கள் சில மர்புக்குட்பட்ட விதிகளின்படி பாடல்களை ஓதவேண்டும்; இதற்காக இருக்கு வேதத்திலிருந்து சிறப்பாக 8-வது, 9-வது புத்தகங்களிலிருந்து பாடல்கள் தொகுக்கப்பட்டன. இந்தப் பாடல்களே பின்னர் சாம வேதம் என்று பெயர் பெற்றன. சாமவேதத்திலுள்ள 1549 பாடல்களில் 78 மட்டும் இருக்கு வேதத்தில் இல்லை.

பலி ஆராதனைமுறை புத்தகத்திற்கு இன்னொரு பாடல் தொகுப்பு செய்யப்பட்டது; இதனுடன் எவ்வாறு பலி செலுத்துவது என்று நெறிப்படுத்த பல உரைநடை செய்திகளும் சேர்க்கப்பட்டன; இது அத்வர்யுஸ் (adhvaryus) என்பவர்களுக்குத் துணை நூலாக இருந்தது. இவர்களும் இவர்களுக்குத் துணைசெய்பவர்களும், பலி செலுத்தப்பட்டு, தெய்வத்துக்குப் படைக்கப்படும் பானத்தை ஊற்றும்போது இவற்றைத் தாழ்ந்த குரலில் முணுமுணுத்துச் சொல்லுவார்கள். இதுவே பின்னர் யசுர் வேதமாக அமைந்தது. நமக்கு இரு வேதங்கள் கிடைத்திருக்கின்றன. மிகப்பழமையானதில் அதாவது இருக்கு வேதத்தில் மூல பாடல்களுடன் பலி சடங்குகளை நடத்துவதற்குரிய விவரமான கட்டளைகள் கலக்கப்பட்டு விட்டன. டைட்டிரியன்கள் (Taiittiryans) என்னும் பிரிவினைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதித்து வந்தனர். இதற்குப் பிற்பட்ட காலத்தில் (Vajasaneyins) வாஜசனேயன்கள் என்னும் அறிஞர்கள் தோன்றி, போதனை அல்லது விளக்கவுரையாக அமைந்த பகுதியைச் சங்கீதங்களிலிருந்து பிரித்தெடுத்து அவற்றிற்குத் 'தெளிவான' அல்லது 'வெள்ளை' (சுக்ல) யசுர் வேதம் என்னும்

பேரிட்டனர். மற்றப்பகுதிக்குக் கருப்பு (கிருஷ்ணா) யசுர் வேதம் என்று பெயரிட்டனர்.

யசுர் வேதத்தின் உரைநடைப்பகுதி பிற்காலத்தது. இதனுடைய சங்கீத பகுதி பெரும்பாலும் இருக்கு வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது; ஆனால் தத்துவப் பள்ளிகளும் பௌத்தமும் சமணமும் தோன்றுவதற்கு முன்னர், வளர்ந்து வந்த சிக்கலான பலிச் சடங்குகளுக்குத் தக்க பாடல்கள் இருக்கு வேதத்தில் இல்லாத நிலையில், முதல் ஆரிய நிலைக்குத் தாழ்ந்து காணப்பட்ட புரோகிதக்குழு, மூல இருக்கு வேதப் பாடல்களை விரிவாக்கி அமைத்து விட்டது.

யசுர் வேதம்

எனவே யசுர் வேதத்தின் காலத்தைத் தீர்மானமாக அறிவிப்பது கடினமாகும். அது இருக்கு வேதத்திலுள்ள சங்கீதங்களை உபயோகப் படுத்துகின்றது. ஆனால், அப்பாடல்களை அவற்றின் தொடர்பிலிருந்தும் இடப்பொருத்தத்திலிருந்தும் எடுத்து வெவ்வேறு நோக்கங்களுக்காகப் பொருத்தமாக மாற்றி அமைத்துக் கொண்டனர். பலிகளின் சடங்குகளைக் குறித்துப் பல புதிய பாடல்கள் உள்ளன. இவற்றின் பண்பினைக் குறித்துக் காட்டுவது யஜுஸ் (Yajus) என்னும் உரைநடை வாசகங்களே, இந்தோ ஐரோப்பிய மக்களின் மிகப்பழைய உரைநடையாக நமக்குக் கிட்டுவதும் இதுவே. இவைகள் சில சமயங்களில் சுருக்கமான பலிஜெபங்களாக அல்லது தொடர்களாகவும், சில சமயங்களில் பலி செலுத்தப்படுவனவற்றைக் குறித்து அல்லது பலி சடங்குக்குரியனவற்றைக் குறித்து நீண்ட வாக்கியங்களாகவும், இந்த வாக்கியங்கள் திரும்பத்திரும்ப வருபவைகளாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் எடுத்துக்காட்டாக அமையும் பின்வரும் ஜெபத்தை டாக்டர் புளூம்பீல்டு கொடுத்திருக்கின்றார்.

"இந்தப் பலியின்மூலம் வாழ்வு மலர்வதாக.
இந்தப் பலியின்மூலம் காலம் வளர்வதாக.
இந்தப் பலியின்மூலம் கண் நன்றாக இருப்பதாக.
இந்தப் பலியின்மூலம் காது நன்றாக இருப்பதாக.
இந்தப் பலியின்மூலம் முதுகு நன்றாக இருப்பதாக.
இந்தப் பலியின்மூலம் பலி மலர்வதாக."

இத்தகைய ஜெபங்களை ஆயிரங்கணக்கில், டாக்டர் புளூம்பீல்டு உருவாக்கிய வேதங்களின் அகராதியில் தொகுத்திருக்கின்றார். இவைகள் பொருள் குறைவுடன், "விதிமுறை கண்டிப்புடன் மனவீழ்ச்சியடைந்து கலைந்து அழிந்து போகும் பண்பினவாய் விளங்குகின்றன" என்றும் அவர் கூறுகின்றார். ஆரியர்களின் ஆரம்பகாலத்தில் இருந்த எளிய சமயக் கருத்துக்களைக் கிட்டத்தட்ட அழிக்கும் நிலையில், இந்தியாவின் சமய வரலாற்றிலே சடங்குகளும் பலிகளும்

வளர்ந்திருந்த காலத்திலே மேலே குறித்த இரண்டு பிராமணங்களும் (Brahmans) தோன்றின.

சாம வேதம் :

இதன் தோற்றத்தையும், நோக்கத்தையும் குறித்துத் தெளிவான கருத்துப் பெற இயலாமை அறிஞர்களுக்கு ஒரு பெரிய சிக்கலாக இருக்கிறது. ஒன்றுக்கொன்று தொடர்புடைய சங்கீதங்கள் இல்லை; ஆனால், பொதுவாக இருக்கு வேதத்திலிருந்து தருவிக்கப்பட்டப் பாடல்கள் இதில் உள்ளன; இவைகளை இசையுடன் பாடும்போது சாமானி இசைப் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தப் பாடல்களை ஓதும்போது, இன்றும் இந்திய நாட்டில் செய்யப்படுவதுபோல இடையிடையே ஓம், ஹாய் என்னும் பெரிய சத்தங்கள் எழுப்பப்படும். இருக்கு வேதமும் யசுர் வேதமும் வைக்கப்பட்ட தகுதியில் சாம வேதம் வைக்கப்படவில்லை. சாமன் சத்தம் எழும்பும்போது இருக்கு, யசுர் வேதங்களை ஓதுதல் நின்றுவிட வேண்டும். ஆரியர்களுடைய சமய பழக்க வழக்கங்களைக் குறித்து சாம வேதத்தில் அறியும் செய்தி குறைவானதே. யசுர் வேதத்தைப்போல, ஆரியர்களுடைய ஆராதனையில், சாம வேதம், புரோகிதர்களின் விதிமுறைகளும் சட்டதிட்டங்களும் மேலோங்கி இருந்த காலத்தைச் சேர்ந்ததாக இருக்கின்றது. சாம வேதத்தில் 1549 சங்கீதங்கள் உள்ளன; இவற்றுள் 1472 இருக்கு வேதத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

அதர்வண வேதம் :

இந்த வேதத்தின் கடைசி புத்தகமான இருபதாவது புத்தகம், கிட்டத்தட்ட முழுவதும் இருக்கு வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட மற்ற பாடல்களைச் சேர்த்துப் பிணைத்து உருவாக்கப்பட்ட பாடல்களும் நிறைந்ததாக விளங்குகின்றது. இருக்கு வேதத்தையும் அதர்வண வேதத்தையும் இணைப்பதற்காகவும் அதர்வண வேதத்திற்குத் தக்க அதிகாரம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் பிற்காலத்தவரால் செய்யப்பட்ட உபாயமாகவே இது காணப்படுகின்றது. ஏன் என்றால், மொத்தமாகக் காண்கின்றபொழுது, அதர்வண வேதம் மற்ற வேதங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஆரம்பத்தை உடையதாக விளங்குகின்றது. உண்மையிலேயே அது பல மந்திரங்களின் தொகுப்பாகக் காணப்படுகின்றது. இவற்றுள் சில ஆரியர்களுக்கிடையில் இருந்த சமானிய மக்களின் நம்பிக்கைக்காக இருக்கலாம். இந்த நம்பிக்கைகள் ஆரியர்கள் வெற்றி கொண்ட பூர்விகக் குடிகள் செய்துவந்த பிசாசு - ஆராதனையின் செல்வாக்கினைத் திருத்தி அமைத்துக் கொண்டதாகத் தோன்றுகின்றது. அதர்வண வேதத்தின் மிகச் சிறந்த போதனை என்று சொல்லப்படுவது பலவகையான மந்திரங்களாக விளங்குகின்றன. சில மந்திரங்கள் நன்மையை நோக்கியவனவாக உள்ளன; உடல், நலம், செழுமை, பிசாசுகளிடமிருந்து பாதுகாப்பு, கிராம வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் சமாதானம், விரோதிகள் ஒப்புரவாக்கப்படுதல்

முதலானவைகளைப் பற்றியனவாக இருக்கின்றன. இன்னும் பல பயத்திலும் பயங்கரச் செயல்களினாலும் தோன்றியவைகளாக இருக்கின்றன. எடுத்துக்காட்டிற்குப் பின்வரும் ஒரு மந்திரத்தைக் காண்க.

> "ஆகையால் தூய்மையான பெலத்தினால் நிரப்பப்பட்டு, அக்னியும், சோமனும், வருணனும் ஏந்திரக்கல்லும், பலிபீடமும் புல்லும், ஜீவாலித்து எரிகிற விறகும், காய்ச்சலைத் துரத்துக. வெறுக்கப்பட்ட விஷயங்கள் தூரத்திலே இருக்கட்டும்.
>
> ஓ ஜீரமே! அக்னி எரிப்பதுபோல சகல மனிதரையும் எரித்து அவர்கள் யாவரையும் மஞ்சளாக்குகிறவனே! நீ பலட்சியப்பட்டு சக்தியற்றுப் போவாயாக கீழேயுள்ள பூமிக்குள் போய்விடு. அல்லது மறைந்து போ.
>
> ஓ ஜீரமே! அந்நிய ஜாதியாரண்டை போ. அந்தத் துன்மார்க்கமான சூத்திரப் பெண்ணைத் தேடி அவளை ஆட்டிவை.
>
> ஓ ஜீரமே! நீ உன் சகோதரனாகிய க்ஷயரோகத்தோடும் உன் சகோதரியாகிய இருமலோடும், வாதரோகமாகிய உன் மாமனோடும், அந்த அந்நிய ஜாதியராரண்டைக்குச் சென்றுவிடு."

(அதர்வணவேதம் V, XXII)

அறிஞர்கள் இந்நூலை வெகுகாலமாக வேதமாக ஒப்புக்கொள்ளவில்லை; மிகப்பிற்பட்ட காலத்தில்தான் இது வேதமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. அதர்வண வேதத்தைக் குறித்து மேடம் இராகோசின் (Madame Ragozin) மிகப் பொருத்தமாகக் கூறியுள்ள கருத்தை ஆங்கிலத்திலே இங்கே அப்படியே தருகின்றோம்:

"We have here, as though in opposition to the bright, cheerful pantheon of beneficent deities, so trustingl addressed by the Rishis of the Rig, a weird repulsive world of darkly scowling demons, inspiring aject fear, such as never sprang from Aryan fancy, We find ourselves in the midst of a goblinworship, the exact counterpart of that with which we became familiar in Turanian Chaldea. Every evil thing in nature, from a fever or bad qualities of the human heart, is personified and made the object of terror-stricken propitation, or of attempts at circumvention through witchcraft, or the instrument of harm to to others through the same compelling force. **Here and there, worship takes the form of conjuring, not prayer; its ministers are sorcerers not priest.**"[78]

அதர்வண வேதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த கிரிப்பித் (Giriffith) என்பார் அதனைக் குறித்துத் தம்முடைய கருத்தையும் மற்ற அறிஞர்களின் கருத்தையும் தொகுத்துப் பின்வருமாறு தருகின்றார்:

"அதர்வண வேதத்தை மற்ற மூன்று வேதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் பிற்பட்டது என்று நான் கூறுகிறேன். முதல் மூன்று

வேதங்களிலும் இருக்கு வேதம் மட்டுமே பூர்விகமானதும் வரலாற்று ஆதாரமுடையதுமாக இருக்கின்றது; மற்ற இரண்டும் வெறுமென வழிபாட்டிற்காகச் செய்யப்பட்ட தொகுப்புகளாகவே இருக்கின்றன. அதர்வண வேதம் மொத்தமாக வைத்துப் பார்க்கும்போது பூர்விகமானதுபோலவும், வரலாற்று ஆதாரம் உள்ளதுபோலவும் காணப்பட்டாலும், மொத்தத்தில் அதனுடைய பொருளடக்கம் பழமையானது என்று சொல்லவே இயலாது."[79]

பேராசிரியர் வேபெர் (Weber) அதர்வண வேதத்தின் காலம், பிராமணீயம் தழைத்தோங்கி சமுதாயத்திலே தலைமையிடம் வகித்த காலத்தைச் சேர்ந்தது என்று கூறுகின்றார். ஆராதனை செய்பவர்கள், இதிலே இயற்கையின் அசுத்த ஆவிகளின் பயத்தாலும் அவைகளுடைய மந்திர சக்தியாலும் ஒடுக்கப்பட்டதையும், அதனால் அவர்கள் சடங்காச்சாரங்களில் அடைக்கலம் புகுந்ததையும் காண்கிறார். மேலும் அவர், இருக்கு வேதத்திலே ஆரியர் குடும்பங்களிலே உயர்ந்த பண்பாட்டுடையவர்களின் பாடல்கள் இருக்கின்றன என்றும், இருக்கு வேதத்தின் தொடர்பில்லாத நிலையில் அதர்வண வேதத்தில் காணப்படும் புதிய பகுதிகள் தாழ்ந்த பண்பாடுடைய ஆரியர்களை, அதாவது தாஸ்யுசின் (Dasyus) பிசாசு வழிபட்டால் பாதிக்கப்பட்ட சாமாயனி மக்களுடையதாக இருக்க வேண்டும் என்று கருதுகின்றார்.[80]

> "அதர்வண வேதம் என்பதன் பழைய பெயர் அதர்வாங்கிரஸா (Atharvangirasah) என்பதாகும்; இது இரண்டு புரோகிதர் குடும்பங்களின் பெயர்களின், அதாவது அதர்வணங்கள்(Atharvans), அங்கிராசர்கள் (Angirases) என்பவர்களின் கலப்பால் உண்டான கூட்டுச் சொல்லாகும். முதல் பெயர் 'பரிசுத்த மந்திரங்கள்' அல்லது 'ஆசீர்வாதங்கள்' என்னும் பொருளைக் குறித்துக் காட்டும்; இரண்டாவது பெயர், 'பில்லி சூனிய மந்திரங்கள்' அல்லது 'சாபங்கள்' என்னும் பொருளைக் குறித்துக் காட்டும். இன்னும் சில சமயங்களில், பரிக்வாங்கிர்ஸா (Bharigvangirsah) (Black Yajur Veda) (Satapatha Brahmana) (Dharma) (Trayi-Vidya) (Samhita) என்னும் பெயராலும் அழைக்கப்படும்; பரிகஸ் (Bhrigus) என்னும் சொல் அதர்வண (Atharva) என்னும் இடத்தில் "ஆசீர்வாதங்கள்" என்னும் பொருளுடன் வழங்கப்படுகின்றது."

அது பிரம - வேதம் என்றும், அதாவது பிரமனுடைய* வேதம் என்றும் அழைக்கப்படும்; ஏன் எனில், வேத பலிகளை மேற்பார்வை செய்யும் புரோகிதனுடைய வேதம் என்பது அதன் பொருளாகும். மேலும் பிரமனுடன் (Brahman) தொடர்புடைய வேதப் பாடல்கள் இதில் சேர்க்கப்பட்டிருப்பதாலும் இப்பெயர் பெற்றிருக்கலாம்; 'பிரமன்' என்பது பிற்கால இந்து சிந்தனையில்

---

* பிரமன் என்பது பிராமணன் என்றாயிற்று.

தலைமைக் கோட்பாடாக விளங்கிய ஒரு பொருண்மை வாதத்திற்கு அடிப்படையானது என்பதைக் கருத்தில் வைக்க.

மூன்று வேதங்களும் அதர்வண வேதமும் :

கருப்பு யசுர் வேதத்தின் (Black Yajur Veda) தைத்திரிய சம்ஹிதா இருக்கு, சாமம், யசுர் வேதங்களை மட்டும் பல பகுதிகளில் குறிப்பிடுகிறது. (எ-டு:ii 4.12,7; vii 3, 1,4) சதபதா பிரமணா (Satapatha Brahmana) இருக்கு, சாம, யசுர் வேதங்களைத் த்ரயி-வித்யா (Trayi-Vidya) என்று குறிப்பிடுகின்றது. தர்ம (Dharma) இலக்கியமும் மற்ற வேதங்களைப் பார்க்கும்போது, அதர்வண வேதம் அதன் பண்பிலும் இடத்திலும் கீழ்த்தரமானதாக இருக்கின்றது என்றே ஒப்புக் கொள்ளுகின்றது.

நான்கு வேதங்களுள் ஒவ்வொன்றும் இரண்டு பிரிவுகளாக வகுக்கப் பட்டுள்ளது. அவை : மந்திரங்கள், பிராமணங்கள் என்பன. மந்திரம் என்பதற்குக் 'கருத்துக் கருவி' என்று பொருள்; புனித வாசகம், அல்லது சொற்றொகுதி, ஒரு ஜெபம் அல்லது துதிபாடல்; குறிப்பாக ஒரு வேத சங்கீதம் அல்லது ஒரு பலி சூத்திரம். இன்று மந்திர சக்தி முதலான பல இழிந்த பொருளிலும் வழங்குகின்றது. பழந்தமிழ் இலக்கணம் தொல்காப்பியம்:

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்று கூறுகின்றது. மந்திரங்களின் தொகுப்பு (Samhita)) என்று அழைக்கப்படும்.

வேதத்தின் இரண்டாவது பகுதியான பிராமணங்கள் என்பவை பிராமணர்கள் வகுத்துக்கொண்ட சடங்காச்சார நெறிமுறைகளாகும். உண்மையில் அவைகள் ஆராதனையில் வேதங்களை உபயோகப்படுத்திய புரோகிதர்களின் நெறிமுறைகளே. இப்பகுதியில் மந்திரங்களை எவ்வாறு பயன்படுத்துவது, பலிக்குரிய பலவகை சடங்குகள், ஆரணியங்கள், உபநிடதங்கள் அல்லது வேதாந்தங்கள் முதலிய புத்தகங்கள் அடங்கியுள்ளன. இவை சடங்குகளின் மறைபொருளை விவரிக்கின்றன. தெய்வத்தின் சுபாவத்தையும், இறுதி விடுதலையையும் விவாதிக்கின்றன.

பிராமணர்கள் உருவாக்கித் தொகுத்த வேதங்களில் பிராமணங்களைச் சேர்த்த காலத்தில் (தோராயம் கி.மு.1000-750), வட இந்தியா முழுவதும் ஆரியர்களுடைய ஆளுகைக்கும் நாகரிகத்துக்கும் உள்ளடங்கிவிட்டது. நாடு சிறுசிறு இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பல ஆரிய குல அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இந்த மூன்று நூற்றாண்டுகளும் பிராமணர்களால் மிகவும் செல்வாக்கு நிறைந்த நூற்றாண்டுகளாகும். இக்காலத்தில் பலிகளின் ஆசாரவிதிகள் அகதிமாயின; இதனால் புரோகிதர்களின் செல்வாக்கும் அதிகமாயிற்று.

பிராமணங்கள் இன்று இருப்பதுபோலக் காண்கின்றபோது, வேதங்களின் துதிப்பாடல்களுக்கு மிகப் பிற்பட்டக் காலத்தில் தோன்றியவை ஆகும். அவைகள் ஆரியர்களின் சமயத்தை நமக்குக் காட்டுகின்றன; புரோகிதப்பணி வல்லமையான ஆட்சி பெற்று, மக்கள் மீது புரோகிதர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திய காலத்தில் விவரித்துச் சொல்ல இயலாத அளவுக்கு சடங்காச்சாரங்கள் வளர்ந்து விட்டன. இந்தப் பிராமணங்கள்தான் ஆரியர்களின் மிகப் பழைய உரைநடையாகும்.

ஆரணியங்கள், உபநிடதங்கள்:

ஆரணியங்களும், உபநிடதங்களும் பிரமாணீயம் தழைத்தோங்கி, அரசியல் ஆட்சியிலும், தங்களுடைய பலிகள் ஆசாரங்கள் மூலமாக மக்கள் சமுதாயத்தின்மீது செலுத்திய சமய ஆட்சியிலும் தலைமையான இடத்தில் இருந்தபோது தோன்றியவை. உலக சிந்தனையில் பிராமணீயத்தின் சிறந்த கொடை என்று இவற்றைக் கூறலாம். 'ஆரணியங்கள்' என்றால் 'காட்டில் செய்யப்பட்ட உபதேசங்கள்' என்று பொருள். உலகியலைத் துறந்து காட்டிற்குள் சென்றிருந்து உபதேசம் பெற்று வாழ்வதற்கு வகுத்துக் கொண்ட அமைப்பாக இது தெரிகின்றது. 'உபநிடதம்' என்றால் 'இரகசிய போதனை' என்று பொருள். தகுதி வாய்ந்த மாணாக்கனுக்கு ஆசிரியரால் இவை போதிக்கப்பட்டன. இவைகள் சமுதாயத்தின் சமய வாழ்வை பிராமணீயம் உருவாக்கி வந்த வரலாற்றை நமக்கு அறிவிக்கின்றன.

உபநிடதங்களை வேதங்களின் பகுதி என்றும் வேதங்களின் முடிவு அல்லது வேதாந்தம் என்றும் கருதுவர். இவைகள் இருக்கு வேதத்திற்கு மிகவும் பிற்பட்டக் காலத்தில் தோன்றியவை. இவைகள் ஆரியர்களிடத்திலிருந்து வேறுபட்ட தத்துவக் கருத்துகளும் அடங்கியனவாக இருக்கின்றன. உபநிடதங்களுள் மிகப் பழமையானவை என்று கருதப்படும் பிரிஹதாரணியகா (Brihadarany aka), சண்டோகிய (Chandogya), தைத்ரேயா (Taittriya), ஐயிட்டேரெயா (Aitareya), காவுஷிடகி (Kaushitaki), கென (Kena) உபநிடதங்கள், சுருதி அல்லது வெளிப்படுத்தலைச் சேர்ந்தவைகள் என்று கருதப்பட்டாலும் ஆரம்ப கால ஆரியர்களின் சமய எல்லையின் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டனவாகவே இருக்கின்றன. பிராமணங்கள் வெகுவாக விவரிக்கப்பட்டன; அவற்றுள்ளும் சில இழக்கப்பட்டிருக்கலாம்; என்றாலும், அவை மிகப் பெரிய இலக்கியக் குவியலாக இருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கை அறுபது அல்லது எழுபது என்றும் இவற்றுடன் தொடர்புடைய உபநிடதங்களும் அவ்வளவு எண்ணிக்கை உடையன என்றும் கூறுவர்.

சூத்திரங்கள் :

பிராமணங்கள் உரைநடையில் இருந்ததால், செய்யுளில் இருப்பனவற்றை விரைவாக மனப்பாடம் செய்ததுபோல அவற்றைச் செய்ய இயலாமற்போனது. எனவே அவற்றின் விதிகளையும் போதனைகளையும் மனப்பாடம் செய்வதற்கு எளிதாக இருக்கும்படி நூற்பாக்களாக வடிவாக்கப்பட்டன. நேரடியான வெளிப்படுத்தல் என்று கருதப்பட்ட சுருதி (Suruthi) என்பதுடன் இவை சேர்க்கப்படவில்லை; ஆனால் இவற்றுடன் (Smruti) என்னும் பாரம்பரியம் தோற்றம் பெற்றது. இவை பின்னர் 'வேதாந்தங்கள்' அல்லது வேத உடலின் அங்கங்கள் என்னும் பொருளில் ஆறு தலைப்புகளில் தொகுக்கப்பட்டன. பிராமண வேதப் பள்ளிகளின் வளர்ச்சிக்கேற்ப அவரவர்களுக்கு வேண்டிய சூத்திர வரிசைகளைத் தொகுத்துக் கொண்டனர். இதனால் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சமஸ்கிருத இலக்கணப் புலவர் பாணினியின் சூத்திரங்களும் பிராமணீய இந்து சமயத்தின் பாரம்பரிய இலக்கியத்துடன் சேர்க்கப்பட்டு விட்டது.

வேதங்களின் ஆரம்பம்:

அண்மைக் காலம் வரையில், இன்றும் இந்நாள்களிலும் வேதங்களின் தோற்றத்தைக் குறித்து இந்துக்களின் நம்பிக்கை என்னவென்றால்; இந்த வேதங்கள் எல்லாம் கடவுளுடைய மனத்தில் நித்திய காலமாய் இருந்தன; ஒவ்வொரு கற்பத்திலும் அவை அவரால் தெரிவிக்கப்பட்டன என்பதாகும். ஒரு கற்பம் என்பது 'பிரமாவின் ஒரு நாளாகும்.' ஆயிரம் யுகங்கள் கொண்டது ஒரு கற்பம். இந்த யுகங்கள் நாலு என்பர்; அவை கிரேதாயுகம் - 4800 தேவ வருடங்கள் கொண்டது. திரேதாயுகம் - 3600 தேவ வருடங்கள் கொண்டது. துவாபரயுகம்-2400 தேவ வருடங்கள் கொண்டது. கலியுகம் - 1200 தேவ வருடங்கள் கொண்டது என்பர். மனித வருடம் - 360 கொண்டது ஒரு தேவ வருடம். மேற்கூறப்பட்ட யுகங்கள் நான்கும் சேர்ந்தது ஒரு சதுர்யுகம் என்பர். 432,000,000 மனித வருடங்கள் கொண்டது பிரமனுடைய ஒரு நாள். ஒவ்வொரு கற்பத்தின் தொடக்கத்திலும் இப்பொழுது இருக்கும் உலகங்கள் எல்லாம் படைக்கப்பட்டன. அப்பொழுது வேதங்கள் ரிஷிகள் மூலம் பிரமனால் வெளிப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கற்பத்தின் முடிவிலும் இருக்கும் உலகம் அழிக்கப்படும். புதிய கற்பத்தில் புதிய படைப்பும் புதிய வெளிப்படுத்தலும் உண்டாகும் என்றும் கூறுவர். மேலே கூறப்பட்ட காலங்களின் கற்பனைக் கதை உள்ளங்கை நெல்லிக்கனி.

புனித நூல்களின் பாரம்பரியங்கள் :

இந்து மதத்தின் புனித நூல்களின் மேலே குறிப்பிட்ட நம்பிக்கையைக் குறித்து வெவ்வேறான கருத்துகள் உண்டு. வேதங்களின் தோற்றத்தைப்பற்றிய

கொள்கைகளிலே ஒன்றுக்கொன்று நேர் முரணானவைகளும் உண்டு. இத்தகையனவற்றுள் ஒன்றையே **அகத்தியர்** தமது பாடலில் குறிப்பிட்டுள்ளார் என்பதை அறிந்து தெளிக.

இந்துயிசத்தின் புனித நூல்களில், வேதங்களின் தோற்றத்தின் கோட்பாடுகளைக் குறித்து டாக்டர் ஜான்முயிர் என்பார் பெரிதும் உழைத்து ஆராய்ந்திருக்கிறார். அவருடைய ORIGINAL SANSKRIT TEXTS என்னும் நூலின் மூன்றாம் பகுதியில் இந்தக் கோட்பாடுகள் உருவாவதற்கு அமைந்த சமஸ்கிருத பகுதிகளையும் ஆங்காங்கே தந்திருக்கிறார். வேண்டுவோர் அவைகளைக் கற்றுக் கொண்டு இன்னும் தெளிவு பெறலாம்.

வேதங்களிலே நாம் ஒப்புநோக்கி ஆராய்ந்து பார்த்தால், வேத சங்கீதங்களை எழுதியவர்களின் வரலாறு அல்லது அவர்களுடைய முன்னோர்கள் வடமேற்கு இந்தியாவுக்குள் ஆரம்ப காலத்தில் எவ்வாறு வந்து குடியேறினர். அப்பொழுது அவர்களுடைய சூழ்நிலைகள் என்ன என்பனவற்றைக் குறித்து நமக்கு ஒன்றும் கூறவில்லை. ஆனால் மிகப்பழங்காலத்திலிருந்து மரபு வழி வந்த ஒவ்வொரு வேதத்தின் அனுக்கிரமணியில் அல்லது பொருளடக்கப் பின்னிணைப்பில் ஒவ்வொரு சங்கீதத்தினுடைய ஆசிரியர் பெயர் தரப்பட்டுள்ளது. வேத சங்கீதங்கள் நித்தியமாய் இருப்பவை என்று காத்துப் பேசுபவர்கள், சங்கீதங்களின் ஆசிரியர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள ரிஷிகள் மெய்யாக அவர்கள் அந்தந்தச் சங்கீதங்களின் ஆசிரியர்கள் என்று உரிமை பாராட்டப்படவில்லை என்றும்,[81] ஆனால் அவர்கள் 'கண்ட' சங்கீதங்களையும், வேதங்களின் மற்ற பகுதிகளையும் அப்படியே திரும்ப அறிவித்தார்கள் என்றும் கூறுவர்.

ரிஷிகளின் சொற்களை ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் திட்டமும் தெளிவுமாக அவர்கள்தான் அந்தச் சங்கீதங்களில் ஆசிரியர்கள் என்று பேசுவதை அறியலாம்; இவற்றில் தெய்வீக ஏவுதலுக்கு எவ்விதமான குறிப்பும் காணப்படவில்லை. பிராமணங்களில் விவரிக்கப்பட்டுள்ள புரோகிதச் சூழ்ச்சி முறையின் விரிவான ஒழுங்குக்கு ஆதாரமாக இந்தச் சங்கீதங்களைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, அவைகளுக்கு தெய்வீகப் பண்பு கற்பிப்பதற்கு முன்னால், அந்தச் சங்கீதங்கள் பாடப்பட்டன. டாக்டர் முயிர் என்பவர் ரிஷிகளின் கூற்றுகளில் தாங்கள்தான் உண்மையான ஆசிரியர்கள் என்று உரிமை பாராட்டியுள்ள சங்கீதங்களின் கருத்தினை அறிவிப்பதற்காகக் கையாளப்பட்டுள்ள வினைச் சொற்களை, அடிப்படையில் மூன்று வகுப்பாகப் பிரிக்கின்றார்:

இந்த வினைச் சொற்களாவன:

க்ரி (Kri) - செய்வதற்கு

டக்ஷ் (Taksh) - புனைந்துகட்டு

ஜேன் (Jan) - பிறப்பிக்க, தோற்றுவிக்க அல்லது உண்டாக்க

க்ரி என்னும் வினைச்சொல் அடிக்கடி உபயோகப்படுகின்றது. இதன் பொருள்: செய்தவற்கு, உண்டாக்குவதற்கு, ஆயத்தமாவதற்கு, வேலை செய்வதற்கு, கட்டுவதற்கு, கட்டி அமைப்பதற்கு அல்லது புனைந்து கட்டுவதற்கு என்பவையாகும். ரிஷிகள் இயற்றிய சங்கீதங்களில் இதனை இப்பொருளில்தான் பயன்படுத்தியுள்ளனர். தாங்கள் அப்படியே திரும்பச் சொல்லுகிறோம் என்று அவர்கள் நினைத்தார்கள் என்பதற்கு எவ்வித குறிப்பும் இல்லை. இங்கே சில எடுத்துக்காட்டுக்களைக் கொடுக்கலாம்.

"கண்வாஸொ வாம் ப்ரஹ்ம க்ரிண்வண்டி அத்வரெ
டெஷாம் ஸுஸ்ரினுடம் ஹவம்!"

"கண்வர்கள் உம்மை நோக்கி ஜெபம் செய்கிறார்கள்;
அவர்களுடைய வேண்டுதலை நன்றாகக் கேட்பீராக?"

- இருக்கு வேதம் I. 47.2. Rig Veda, 1-62.13.

"அத்தா ப்ரியம் ஸுஷாம் இந்ராய மன்ம
ப்ரஹ்மக் றிடொ வ்ரிஹதுக்தாட் அவாசசி"!

"கீதங்களைச் செய்யும் (இயற்றும்) விரிஹ துக்தாவால் இந்திரனுக்கு ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதும் வல்லமையுள்ளதுமான கீதம் வாய்விட்டுரைக்கப்பட்டுள்ளது." - இருக்கு வேதம் X. 54.6.

டக்ஷ் என்னும் வினைச்சொல் அவ்வளவு அதிகமாக உபயோகப் படுத்தப்படவில்லை; இதற்கு வெட்டி உருவாக்குதல், அறுவாளால் வெட்டுதல்; ஒரு தச்சன் மரத்தைத் துண்டு போட்டு உருவாக்குதுபோலச் செய்து மனத்தில் உருவாக்குதல் அல்லது கண்டுபிடித்தல் என்பது பொருளாம். டக்ஷக, டக்ஷன் (தமிழில் தச்சன்) என்னும் இரண்டும் சமஸ்கிருதத்தில் தச்சனுக்கு வழங்கப்படும் இரண்டு பெயர்கள். இதிலிருந்து நாம் தெரிந்துக்கொள்வது என்னவென்றால் இந்த வினைச்சொல்லைப் பயன்படுத்தி ரிஷி என்பவர் கீதங்களைச் செய்பவர் அல்லது கண்டுபிடிப்பவர் என்று தம்மை நினைக்கின்றார்; அதாவது ஒரு தச்சன் ஒரு கலப்பையைச் செய்வது போல இவர் ஒரு கீதத்தைச் செய்கின்றார். இங்கேயும் பிற்காலங்களில் தோன்றிய பாரம்பரியங்களை ஊகிப்பதற்கும் இடம் இல்லை. இதற்கு எடுத்துக்காட்டிற்கு இரண்டு உதாரணங்கள் போதும்:

"ஸனாயடே கொடமஹ் இந்த்ர நவ்யம்
அடக்க்ஷட் பிரஹ்ம ஹரியொஜனாய இட்யாடி"!

"இந்திரனே (உமக்காக) கொதமனின் வழித்தோன்றல்களான நொதர்கள் இந்தக் கீதத்தை அமைத்திருக்கின்றார்கள்." Rig Veda, 1-62.13.

"ஓ, வல்லமையுள்ள தெய்வமே, ஒரு திறமையுள்ள வேலைக்காரன் ஒரு வண்டியைக் கட்டி உருவாக்குவது போல, ரிஷியாகிய நான் இந்தக் கீதத்தை உமக்காகப் புனைந்து கட்டி உருவாக்கி இருக்கிறேன்." - இருக்கு வேதம் Rig Veda, V-2.11

ஆனால் ரிஷிகள் எல்லா நேரத்திலும் தாங்கள் இயற்றிய கீதங்கள் முழுவதும் தங்களாலேயே உருவாக்கப்பட்டன என்று நினைக்கவில்லை.

எல்லா நாட்டுப் புலவர்களும் கூறியுள்ளது போல இவர்களும் சில கீதங்களை இயற்றும்போது தெய்வீக உதவியை வேண்டியிருக்கின்றார்கள். அல்லது அவைகள் தெய்வீக உதவியால் இயற்றப்பட்டவை என்று நம்புகிறார்கள். காண்க: (Rig Veda, vi. 47.10; vii.52:4) இந்தப் பகுதிகளையும், இன்னும் பல பகுதிகளையும் நாம் மொத்த காரண காரியத்துடன் வைத்துப் பார்க்கும்போது, இவற்றை எழுதியவர்கள், அவைகள் எழுதப்படும்போது சிறப்பாகத் தெய்வங்களை மகிழ்விப்பதற்காக செய்யப்படும் காரியம் என்று நினைத்தார்கள்; **ஆனால், திட்டமாக அந்தக் கீதங்கள் அவர்களுடைய சொந்தப் படைப்பு என்பதை அறிந்திருந்தார்கள்.**

இருக்கு வேதத்தின் பத்தாவது புத்தகத்திலுள்ள 19-ஆம் கீதம் புருஷசூக்தம் (இதனை முன்னரே தெரிவித்திருக்கிறோம்). வேதங்கள் படைக்கப்பட்டதை அறிவிக்கின்றது. அது இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களும் பலியிலிருந்து தோன்றின என்று கூறுகின்றது. அதர்வண வேதத்தை அது குறிப்பிடவில்லை. சாதிகள் படைக்கப்பட்ட வரலாறும் அதில் உண்டு. எனவே இது மிகவும் பிற்பட்ட காலத்தில் இயற்றிப் பின்னர் வேதங்கள் தொகுக்கப்பட்டபோது இடையே புகுத்தப்பட்டவை என்பதை அறிகின்றோம். இவ்வாறு பிற்காலத்தில் இயற்றி, குறித்த நோக்கத்துடன் சேர்க்கப்பட்ட கீதங்களும் எல்லா வேதங்களிலும் உண்டு.

டாக்டர் முயிர் என்பார் 50-க்கும் மேற்பட்ட பகுதிகளைக் காட்டி, வேத கீதங்களை இயற்றியவர்கள்தாமே, சில பழங்காலத்தவை என்றும் சில பிற்காலத்தவை என்றும் குறிப்பிட்டுள்ளதைத் தெரிவிக்கின்றார்.

அதர்வண வேதத்தின் பத்தாம் மண்டலத்திலுள்ள 7 ஆவது கீதம் இருக்கு வேதத்தின் புருஷசூக்தம் போலவே ஸ்கம்பாவை (Skamba) உலகத்துடன் இணைத்துக் காட்டி அவனிடமிருந்து எல்லாம் உண்டாக்கப்பட்டன என்றும் நான்கு வேதங்களும் அவனிடமிருந்துதான் உண்டாக்கப்பட்டன என்றும் கூறுகின்றது. (Atharva veda X.7.20). அதர்வண வேதத்தின் 11ஆவது மண்டலத்திலுள்ள 7ஆம் பாடல் பலியின் எஞ்சிய பகுதியிலிருந்து வேதங்கள் தோன்றின என்று கூறுகின்றது.

பிராமணங்களில் (கிட்டத்தட்ட கி.மு.600 காலத்தவை) வேதங்களின் தாய், வாக் என்று கூறப்பட்டுள்ளது. (காண்க: தைத்ரேய பிராமணம் II 8:8:5) தைத்ரேய பிராமணத்தின் இன்னொரு பகுதி பிராஜபதியின் தாடியின் மயிர்தான் வேதங்கள் என்று கூறுகின்றது. (தைத்ரேய பிராமணம் III 9.1)

உபநிடதங்களில் (கிட்டத்தட்ட கி.மு.600-480 காலத்தவை) ச்சாண்டோகயா உபநிடதம் பிராஜபதி மூன்று வேதங்களையும் தீ, காற்று, சூரியனுடைய வெளிச்சம் ஆகியவற்றிலிருந்து உண்டாக்கியதாகக் கூறுகின்றது (காண்க:Chhandogya Upanishad iv 17:1,3). **மனு** தம்முடைய படைப்புச் செய்தியில் பிரமன் பலியிலே அக்கினி, வாயு, சூரியன் ஆகிய மூன்றிலிருந்தும் மூன்று வேதங்களை உண்டாக்கினான் என்று கூறுகின்றது. (மானவதர்ம சாஸ்திரம் I 26.23) மகாபாரதம் வேதங்களின் தாய் சரஸ்வதி என்று கூறுகின்றது. (Mahabaratha, Santi Parra 12.920) புராணங்கள் வேதங்களின் தோற்றத்தைக் குறித்து வெவ்வேறு வகையில் கூறுகின்றன. இவைகள் இந்து சமயத்தின் பிற்கால வளர்ச்சியுடன் இசைந்து செல்லுகின்றன. விஷ்ணுபுராணம், அதர்வண வேதத்தை விலக்கிவிட்டு ஏனைய மூன்று வேதங்களையும் விஷ்ணு இயற்றியதாகக் (Vishnu Purna iii.3.19) கூறுகின்றது.

பாகவத புராணம் படைப்புக் கர்த்தாவாகிய பிரமனுடைய வாயிலிருந்து வேதங்கள் வந்தன என்று சொல்லுகின்றது. (Bhagavata Purana iii. 12.34237).

ந.சி. கந்தையா பிள்ளை, "வடமொழி வேதங்கள் கடவுளால் சொல்லப்பட்டனவாக வரலாறில்லை. வேதம் நித்தியம் எனக்கூறும் பூர்வமீமாம்சகரும் அது கடவுளால் சொல்லப்பட்டதெனக் கூறவில்லை"[82] என்று தெரிவிக்கின்றார்.

நால் வேதங்களும் அவற்றின் நான்கு பாகங்களும் வருமாறு:

1. இருக்கு வேதம்:

   இருக்கு வேத கீதம்
   இருக்கு வேத பிராமணம்
   இருக்கு வேத ஆரணியகம்
   இருக்கு வேத உபநிடதம்

2. யசுர் வேதம்:

   யசுர் வேத கீதம்
   யசுர் வேத பிராமணம்
   யசுர் வேத ஆரணியகம்
   யசுர் வேத உபநிடதம்

கி.மு.600 வரையிலான வேத இலக்கியங்களில் வளர்ச்சியை எ.சி.கிலேற்றன் பின்வருமாறு கூறுகின்றார்.[82A]

இந்தியாவுக்கு வெளியே நடந்த நிகழ்ச்சிகள்	இந்திய வரலாறு	மதம்	இலக்கியம்		
இஸ்ரவேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியேறிய காலம் தோராயம் கி.மு.1320	ஆரியர்கள் பஞ்சாபில் இருந்தனர்	புரோகிதர் மூன்று பிரிவாக அமைந்தனர்.	படிப்படியாகக் கீதங்கள் இயற்றப்படல்.		
ட்ரோய் மீது கிரேக்கர் யுத்தம்		புரோகிதர்களின் கல்வி வளர்ச்சி	ரிக்வேதப் பாடல்களின் தொகுப்பு	சாமவேதப் பாடல் களின் தொகுப்பு	யசுர் வேதத்தின் தொகுப்பு
தாவீது, இஸ்ரவேலரின் அரசன், தோராயம் கி.மு.1000	ஆரியர்கள் குருவர்-பாஞ்சால தேசத்தில் நுழைதல்	நான்கு சாதிகளின் கோட்பாடு			
இலியத் இயற்றப்பட்டது	ஆரியர்கள் குருக்கசேத்திரத்தில் இருந்தனர்		பிராமணங்கள்		
			பஞ்சவம்சம்		
எலியா தீர்க்கதரிசி, தோராயம் கி.மு.860		விரிவான பலி சடங்கு முறைகளின் வளர்ச்சி	தைத்ரேயா	படிப்படியாக அதர்வண	
ரோம நாட்டின் தொடக்கங்கள்	ஆரியர்கள் மத்திய இந்தியாவில் இருந்தனர்.	புரோகிதர்களின் ஆட்சி தலைமை இடம் பெறல்	தலவகார கவுஷிடகி	வேதம் தொகுக்கப்பட்டது.	
ஏசாயா தீர்க்கதரிசி கி.மு.737-700			யிதரேயா		
	எழுத்து புகுத்தப்பட்டது		சதபத		
	ரிஷிகளின் தோற்றம்		கோபத		

3. சாம வேதம்:

சாம வேத கீதம்
சாம வேத பிராமணம்
சாம வேத ஆரணியகம்
சாம வேத உபநிடதம்

4. அதர்வண வேதம்:

அதர்வண வேத கீதம்
அதர்வண வேத பிராமணம்
அதர்வண வேத ஆரணியகம்
அதர்வண வேத உபநிடதம்

அன்பாகப் பலவிதத்தில் கட்டிப் போட்டார்; அதினாலே மானிடர்கள் கெட்டுப் போனார்: நாட்டு மக்களின் பக்தி வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்தவை என்று கருதப்படும் நால் வேதங்கள் முதலானவை தோன்றிய வரலாற்றைக் கண்டோம். அகத்தியர், 'இவற்றை எல்லாம் அன்பாகப் பலவிதங்களில் கட்டியமைத்துக் கூறிவிட்டார்கள்; அதன் விளைவாக மக்கள் கெட்டுப்போனார்கள்' என்றும் கூறுகின்றார்.

இந்த இடத்தில் எ.ஆ. கிருஷ்ணபிள்ளை கூறும் கருத்தும் ஒப்பிட்டு எண்ணத்தக்கது:

"அதிபூர்வத்தில் வேதத்தைக் கர்ணபரம்பரையாய்ச் சொல்லுவித்த மகா ரிஷிகள் தங்கள் தங்கள் கருத்துக்குப் புலப்பட்ட உண்மையை வெளிப்படுத்தினார்கள். பிற்காலத்துத் தோன்றியவர்கள் பூர்வ ரிக்வேதத்தில் இல்லாததையும், தங்கள் கருத்துக்கிசைந்ததாயும், அந்தந்தக் காலத்துக்குத் தக்கபடி வழக்கங்களை அநுசரித்தும், சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் வேதத்தின் கடைசியில் சேர்த்து நுழைத்து வைத்தார்கள். இவ்வாறாகப் பலருந் தத்தம் அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் பரஸ்பர விரோதங்களைக் கவனியாமல் காலந்தோறும் பலப்பலவிதமாக எழுதிவைத்தார்கள். வரவர வாழ்க்கைப் பிழைப்பதற்குரிய உபாயங்கள் வேதத்தில் சொருகப்பட்டன."[83]

வேறோர் அகத்தியர் பெயரில் அமைந்திருக்கும் இன்னும் ஒரு பாடலையும் காண்க:

"பாரப்பா நால்வேத நூலும்பாரு
பற்றாசை வைப்பதற்கு ஒப்பனையோ கோடி
வீரப்பா ஒன்றுக் கொன்றைமாற்றி
வீணிலே அவர் பிழைக்கச் செய்த மார்க்கம்

தேரப்பா தெருத் தெருவே புலம்புவார்கள்
தெய்வநிலை ஒருவருமே காணார் காணார்
ஆரப்பா நிலையில் நிற்கப் போறா ரையோ
ஆச்சரியங் கோடியிலே ஒருவன்தானே."[84]

முன்போலச் சித்தரெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் மூடினதைத் திறந்துவிட்டார் : 3,4,5,6 ஆகிய பாடல்களில் பதினெண் சித்தர்களுள் கிட்டத்தட்ட 7 பேர் எவ்வாறு கடவுள் நம்பிக்கையின்பாற்பட்ட மக்களுடைய மூடப்பழக்க வழக்கங்களை அங்குமிங்குமாக வெளிப்படையாகக் கடந்துகூறி மக்களுடைய மனத்தைச் சிந்திக்க வைக்க முற்பட்டதைக் கூறினார். இந்தப் பட்டியலில் சிவவாக்கியர், திருமூலர், போகர், முதலானவர்களையும் இணைத்துக் கொள்ளலாம்.

முடுகிநானும் அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்சமாக; அரனாருத்தரப்படி அறிவித்தேனே. ஏனைய சித்தர்கள் அரைகுறையாக மறைந்து கிடந்த மெய்ப்பொருளை திறந்து காட்டினார்கள். ஆனால், கடவுள் என்னை தமது அன்பால் ஆட்கொண்டது மட்டுமல்லாமல், மெய்ப்பொருளை வெளிச்சமாகத் திறந்து காட்டும்படி எனக்கு கட்டளையும் கொடுத்தார்; எனவே இவற்றை அறிவித்திருக்கிறேன் என்கிறார் **அகத்தியர்.**

மெய்ப்பொருளால் ஆட்கொள்ளப்பட்ட **அகத்தியர்** "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று உணர்ந்து சத்தியத்தை அறிவிக்கமுற்பட்டது ஒரு புறமிருக்க; தம்மைத் தடுத்து ஆட்கொண்ட பரம்பொருளே சத்தியத்தை அறிவிக்க தமக்கு ஆணையிட்டமையையும் கூறுகின்றார். இதனை 21-ஆம் பாடலில், "சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப் போட்டேன்" என்கிறார். தமது நூலின் முடிவில், "பரமகுரு சொன்னபடி பாடினேனே" (30) என்று அறுதியிட்டு உரைக்கின்றார். பரம்பொருளாம் கிறிஸ்து விண்ணுலகம் செல்வதற்கு முன்னர் அருளிச்செய்த பெரிய கட்டளையை இங்கு இணைத்து எண்ணி, கடவுளின் ஆணையைத் தெளிக.

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல நாட்டவரையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்." மத்தேயு 28:18-20.

அறிவை அழித்துவிடக் கூடாது

14. "அறிவித்தேன் என்று சொன்ன வார்த்தை கேட்டு,
ஐயையோ உலகத்தில் அநேகம் பேர்கள்,

பொறியான அறிவு மிக அழிந்து போனார்;
புலத்தியனே நினைத்துப் பார்; பொய்யோ மெய்யோ!

நெறியான பூசை தினம் செய்திட்டாலும்
நிமல பதம் காண்பாரோ நிசமதாக

அறிவான தழிந்திட்டால் அப்பா! அப்பா!
அலகை வசம் ஆவதுவும் அறிக்கைதானே."

கருத்துரை : நான் இவ்வாறு மெய்ப்பொருளை அறிவித்தேன் என்று சொன்ன வார்த்தையைக் கேட்டு, அநேகர் தங்கள் அறிவினை இழந்து அழிந்தனர்; (நான் கூறியது மெய்யா, பொய்யா என்று ஆராய்ந்து பார்க்காமல் அந்நிலைக்கு ஆளாயினர்); ஆனால், ஞானமுள்ளவனே, நான் கூறியது மெய்யா, பொய்யா என்று நீ சிந்தித்துப் பார். நாள்தோறும் நெறி தவறாமல் பூசை செய்தாலும் நிசமாக வீடுபேற்றினை அடைவார்களோ? அப்பா மெய்யறிவு அழிந்து போனால் சாத்தானின் வசம் ஆவது வெளிப்படையாகத் தெரிவதுதானே!

விளக்கவுரை

அறிவித்தேன் என்று சொன்ன வார்த்தை கேட்டு ஐயையோ உலகத்தில் அநேகம் பேர்கள் பொறியான அறிவு மிக அழிந்து போனார். 'கடவுளின் ஆணையின்படி மெய்ப்பொருளை அறிவிக்குங்கால் மக்கள் பொய்ப்பொருளை நம்பி மோசம்போன வழிவகைகளை எல்லாம் தெளிவாக அறிவித்தேன். இதனால், நான் அறிவித்த சத்தியப்பொருளை உண்மையான மனத்துடன் நிதானித்துக் காண விரும்பாத உலக மக்கள் பலர் தங்களுடைய நல்லறிவை இழந்து விட்டார்கள்' என்று **அகத்தியர்** அறிவிப்பதினால், அவர் காலத்தில் அவர் நாட்டில் நிலவியிருந்த பொய்யைக் களைந்து மெய்ப்பொருளை அறிவித்தபோது பலர் அந்த உண்மையை ஒப்புக்கொள்ள விரும்பாததால் தங்கள் மெய்யறிவை இழந்தனர் என்பதைப் பின்னர் நமக்கு இங்கு பாட்டில் வடித்துத் தருகின்றார். இதன் விளைவாக **அகத்தியர்** பல இடர்ப்பாடுகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகி இருக்க வேண்டும் என்பது தெளிவு. ஒப்புநோக்கு பாடல் 19.

புலத்தியனே நினைத்துப் பார், பொய்யோ மெய்யோ! தாம் கூறுவது பொய்யா மெய்யா என்பதை நினைத்து, சிந்தித்து ஆராய்ந்து பார்க்குமாறு

அகத்தியர் சவால் விடுக்கின்றார். பொய்வழியில் வாழும்போது மெய்வழி உபதேசம் கிடைத்து, அது மனிதர் வாழும் பொய்வழி வாழ்வு தவறு என்று காட்டுமானால் உணர்ச்சிவயப்பட்டு கோபமடையக்கூடாது; அறிவை இழக்கக்கூடாது; தன்னைத் தேடிவந்த சத்தியத்தின் ஒளியில் அறிவுடனும் காரணகாரியத்துடனும் உண்மையை நிதானித்துத் தெளிதல் வேண்டும். எது பொய், எது மெய் என்பதைத் தெளிதல் மனித அறிவின் கடமையாகும். **சற்குரு நாதரும்** "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவான் 8:32).

திருவள்ளுவரும் கூறுகின்றார்:

'எப்பொருள் யார்யார் வாயிக்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'[85]

நெறியான பூசை தினம் செய்திட்டாலும் நிமல பதம் காண்பாரோ நிசமதாக: நாளும் நெறியோடு பலவகையான சமயப் பூசைகளையும் சடங்குகளையும் செய்து வந்தாலும், அகத்தூய்மையில்லாத அந்த வெளிப்புற நடத்தை மோட்ச பதவிக்குக் கொண்டு சேர்க்காது என்பதாம்.

பின்வரும் பாடல்களையும் ஒப்பிட்டு உணர்க: சிவவாக்கியர் பாடியுள்ளார்:

"ஓசை பெற்ற கல்லை நீர் உடைத்துருக்கள் செய்கிறீர்
பூசை பெற்ற கல்லிலே பூவும் நீறுஞ் சாற்றீர்
வாசலிற் பதிந்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
ஈசனுக் குகந்த கல்லிரண்டு கல்லு மல்லவே."

"ஈரமான பூவினோடிலை பறித்து வீணிலே
நீரை மொண்டு கல்லிலே நித்தம் விட்டு மாய்கிறீர்
காலமூல நாடியுட் கருத் தொடுங்க வல்லிராய்ச்
சீலமாக நாதனுஞ் சிறந்திருப்பானும் முளே"

"நட்ட கல்லை தெய்வமென்று நாடி புட் பஞ்சாத்துறீர்
சுத்தி வந்த முணுமுணுனென்று சொல்லு மந்திரமேதடா
நட்டக்கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்டச் சட்டி சட்டுவங்கறிச் சுவையறியுமோ?"

"மாறுபட்ட மணிகிலுக்கி மலரிறைத்து வீணிலே
ஊறுபட்ட கல்லிலேயுருக்கள் செய்யுமூடரே
வேறுபட்ட தேவரும் விரும்புகின்ற உண்மையுங்
கூறுபட்டதேது காண்குருக்கள் பூசை பண்ணுறீர்."

சங்கராச்சாரியார் கூறுகின்றார்:

“எத்தனைதான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ
சுத்தமுடன் தலைமுழுகித் தவஞ்செய்தாலுஞ்
சொல்லறிய பேரின்பந் தோன்றுமோ சொல்?
பித்தர்களே கல்லுகளை விலைக்குவாங்கிப்
பிரானென்றே சிலையிலே முடித்துக்கொண்டு
செத்தபின்பு கயிலாஞ் சேர்வோமென்றால்
சேர்வதில்லை எரிநரகஞ் சேர்வீர்தானே!
சற்குருவை யறியாம லுககிலேதான்
சண்டாளர் கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்ன புத்திதன்னைக் கேட்டு
பூசைசெய்து கற்களையே போற்றிசெய்வார்.
சொற்குருக்கள் தங்களுட செய்திகேட்டால்
சொற்கமுண்டோ நரகமல்லாற் சொல்லும்போது
சற்குருவை யறிந்தவருக் குடனே மோட்சம்
சார்வரென்றே முன்னோர்கள் சாற்றினாரே.
‘சற்குருவை வணங்கா மாற்றள்ளி வைத்து
தனையறியா குருக்களையே சார்ந்துகொண்டு
பொய்க்குழியாம் நரகத்தில் வீழ்ந்து போகும்
புருடருக்குப் பொருளுரைந்தாற் புகழுண்டாமோ!
கற்குருவாம் கல்லுகளைத் தொழுதுநின்று
கைகட்டி வாய்புதைத்து கள்ளர்போல
வற்குருவாஞ் சமய மதஞ்சார்ந்து கொண்ட
வகையறியாப் புல்லருக்கு வண்மையுண்டோ!”

சங்கராச்சாரியார் உடலறி விளக்கம் 97 ஆம் பாடல்;

“வட்டமதியிரவதன்னைப் பூசிப்போரும்,
மண்ணை லிங்கமாக வைத்துப் பூசிப்போரும்,
சுட்டவுரு மரச்சிலைகள் பூசிப்போரும்,
தூய செம்பு கல்லுருவைப் பூசிப்போரும்,
திட்டமுட னென்டெழுத்துப் பொருளென் போரும்
சிறந்தவெழுத் தைந்துமே பொருளென் போரும்
விட்டவிடந்தனை யறியாரிவர் தாமெல்லாம்
விட்ணு வென்றுஞ் சிவனென்றும் விளம்புவாரே.”

பேரின்ப மணி மாலை:

"அந்தரவான் கதிபுவனங்கீழ் மேலெங்கும்
மடுக்கடுக்காய் நிறுத்தின வறாரென்றெண்ணிச்
சிந்தையிலே யுணராமற் புவியிலுள்ள
சிலையதனைச் சுயம்புலிங்கத் தேவனென்று
புத்தியற்று பற்பல பூவெடுத்து நித்தம்
பூசைசெய்து பலவிதமாய்ப் புகழ்வதெல்லாம்
எந்தை பரா பரர்க்கிவைகள் ஏர்க்குமோதான்
எரிநரகப் பேய்க்கிணங்கு மென்பதாமே!
'செம்பினால் மரத்தால் மண்ணால்
சிலையினால் செங்கல் தன்னால்
பைம் பொன்னால், மெழுகால் நீற்றால்
படிகத் தாலுருப் படுத்தி
நம்பியே தெய்வ மென்று
நாடோறுந் தொழுவோ ரெல்லாம்
உம்பர் கோன் பதியிழந்து
உழலுவார் நரகில் தானே!"[86]

கிருஷ்ணபிள்ளையும் அறிவிக்கின்றார்:

"கல்லைச் செம்பைக் களிமண்ணைக் கடவுளெனவே யுருப்பிடித்துப்
புல்லைப் பூவை நறுங்குழையைப் போட்டுப் பூசை புரிவீர்காள்
தொல்லைப் பவமும் புரியபவமுந் தொலையு மாறு கிறிஸ்து வெனுஞ்
செல்வக் குமரன் திருவடியைச் சேர வாரும் செகத்தீரே."[87]

திரு.வி. கலியாண சுந்தரனாரும் பாடுகின்றார்:

"மலரைப் பறிக்கிலென் மாலை புனைந்திலென் மந்திரத்தின்
ஒலியைப் பெருக்கிலென் ஓவெனப் பாக்களை ஓதிலென்ன!
சிலுவையும் ஆணியும் செந்நீரும் சேர்ந்த திருவுருவம்
பொலியும் உளத்தினில் பொற்றிடும்பாவப் பொருப்புகளே."[88]

எ.ஆ. கிருஷ்ணபிள்ளை சிலை வழிபாட்டைக் குறித்து ஆதியோடந்தமாகக் கொடுத்துள்ள பின்வரும் செய்தியையும் விறுப்பு வெறுப்பின்றிப் படித்து **அகத்தியர்** கூறும் நெறியான பூசையுடன் ஒப்பிட்டு அறிக.

"விக்கிரக தேவ வணக்கம் ஆரம்ப வரலாறு"

"1. விக்கிரக வணக்கம் உலகத்தில் இப்படி உற்பத்தியாயிருக்கலாம் என்று சில ஏதுக்களைக்கொண்டு உலக சரித்திர நூல்களை நன்குணர்ந்த பெரியோர் அநுமானித்து எழுதியிருக்கிறார்கள். அதன் தாற்பரியத்தை இவ்விடத்துக் காட்டுவோம். பிரளய வெள்ளத்துக்குப் பின்னான காலத்தில், பலவிடங்களிலும் சிதறிக் குடியேறின பழங்கால மக்களுள் சில வகுப்பினர் தங்கள் குடும்பத்தில் நீடித்த ஆயுள் பெற்றிருந்து, நரைதிரை முதிர்ந்த வயோதிகராய்ப் பெலவீனப்பட்டு, இருக்க எழுந்திருக்க நடக்கப் பெலன் குறைந்து மரித்துபோன கிழங்களைப் புதைத்து அழிக்காமல் அப்படியே மருந்திட்டுப் பதனிட்டுத், துர்க்கந்தத்தைப் போக்கிச் சுகந்தமூட்டி, உருக்குலையாமல் பாதுகாத்துப் பெட்டகத்துக்குள் அடக்கி வைப்பார்கள்; வேளாவேளையில் சிறப்பாய்க் கொண்டாடும் சமயங்களில் அந்த முதிய கிழத்தையும் அழைத்து வைத்துத் தக்க மரியாதை செலுத்தித் தங்கள் கொண்டாட்டம் முடிந்தபின், திரும்ப அதன் இடத்துக்கு அனுப்பிப் பாதுகாத்து வைப்பார்கள்; இறந்துபோன பின் அதைச் சமாதி செய்துவிட்டுப் பின்பு அவர்களை நினைப்பூட்டும் அறிகுறியாக எதைக்கொண்டாகிலும் உருவம் செய்து சந்ததி பரம்பரையாய்க் காத்து வைத்திருந்ததாகவும் தெரியவருகின்றது. இந்த வழக்கமே மக்களுக்குள் உண்டாயிருக்கும் விக்கிரக ஆராதனைக்குப் பூர்வ ஆரம்பமாகும். அது நிற்க, இந்தியாவின் பழங்குடி மக்களுக்கும், எதிர்பாராத விதமாய் வெட்டுண்டவர்கள், போர்களத்தில் வீரர்களாய் யுத்தஞ்செய்து மடிந்தவர்கள், பலவித வன்கொலையால் செத்தவர்கள், துன்மார்க்க மரணமாக பிராணனை விட்டவர்கள். கணவனோடு உடன்கட்டையேறின பெண்கள் இப்படிப்பட்டவர்களுடைய உடல்கள்: அக்கினி சமாதி, தண்ணீர் சமாதி, வனசமாதி, பூமி சமாதி செய்யப்பட்டுச் சாம்பலாய், நீரில் வாழ்பவை, பறவைகள், நாய், நரி முதலிய மிருகங்களுக்கு ஆகாரமாய், மண்ணோடு மண்ணாக உருக்குலைந்து, அணுஅணுவாய்ப் பிரிந்து போனபோதிலும், அவரவர்கள் ஆவி மாத்திரம் அந்தந்தக் குடும்பத்தை, அந்தந்தவூரை, அந்தந்த நாட்டைவிட்டுப் பிரிந்துபோகாமல் நின்று, உயிரோடிருக்கிற மற்றவர்களைக் கெடுக்கவும் வாழ்விக்கவும் உரைப்பது தற்காலம் வரை சாதாரண மக்களுக்குண்டு. இதனால் மேற்கூறிய வகையில் மாண்டுபோனவர்களுக்கு அவரவர்கள் பேரால் கல்லாலும், மரத்தாலும், மண்ணாலும் வடிவங்கள் செய்து சிறுசிறு கோவில்களையும் கட்டி அந்த விக்கிரகங்களை வைத்துப் பொங்கிப் பொரித்துப் பலியிட்டுத்

தீபதூபங்காட்டி வணங்கி வருகிறார்கள். இந்தவகை விக்கிரகங்களுக்குத் துஷ்ட தேவதைகள் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கிறது."

"2. இடைக்காலத்தில், ஆரியாவர்த்த மலைப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த ஆரியர் ஏகதேசம் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்போல இந்தியாவில் வந்து குடியேறின பின்பும், அருக சமயத்தினின்று சைவ வைஷ்ணவம் என்ற நவீனக் கொள்கைகள் பிரிந்த பின்பும், அதிலும் பல குடும்பத்தார் கூடி மரத்தடியில் ஓமஞ்செய்து அந்தக் குண்டத்து வெள்ளை மண்ணைத் தங்கள் நெற்றியில் ஊர்த்த கோபியாய் வைத்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டு உறுதியான பின்பும், விஷ்ணு முதலிய சாது தேவதைகளுக்காகவும் யூத மக்களின் தேவாலயத்தைப் போல அந்தப் பிரமாணங்களைத் தழுவி மூலஸ்தானம் அல்லது கர்ப்பகிரகம், விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், மணிமண்டபம், தவசு தம்பம், பிராகாரங்கள், திருமதில்கள், கோபுரங்கள் என்ற வகுப்புகளை அமைத்து, ஆலயங்களைக் கட்டி, விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து, அந்தத் தேவர்களை அந்தந்த விக்கிரகங்களில் அழைத்து, பாமர மக்களுக்குப் பிறப்பு எடுத்ததன் பலன் கிடைத்தற்பொருட்டு என்று ஒரு வீண் ஏதுவை கற்பித்துக்கொண்டு, தங்கள் மக்களின் பிழைப்புக்கு உபாயமாக இந்த முறையை ஸ்தாபித்தார்கள். .... 1850-ம் வருடத்தில் மயிலாப்பூரில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த அப்பர் என்னும் ஒரு பரதேசிக்கும், 1852-ம் வருடத்தில் உஸ்ஸுரில் தாசில்தாராயிருந்த நரசிம்மாச்சாரியார் என்பவருக்கும், விக்கிரகங்கள் வார்பித்துக் கோவில்களும் கட்டப்பட்டு பிரம்மோத்சவம் முதலானவை நடந்து வருகின்றனவெனில் சிலகாலத்துக்கு முன் சற்று எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் விக்கிரகம் ஏற்படுவது ஆச்சரியமல்லவே. இந்த ஆசாரத்தால் இந்து தேசத்தில் தெய்வத்துக்குக் குறிப்பாக என்று எத்தனை பொம்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அத்தனை பக்த விக்கிரகங்களும் உண்டாயின. இவற்றினிடத்தில் அனைவருக்கும் பக்தியுண்டாகும் பொருட்டு பரமபதத்திலிருந்து ஒடிந்து விழுந்த பஞ்சபாத்திரக் கரண்டியின் துண்டு ஒரு பக்தராகவும், விளக்கின் கரி மற்றொரு பக்தராகவும், விஷ்ணுவின் கூத்திமார் கொண்டை புஷ்பம் இன்னொரு பக்தராகவும், இன்னும் இவ்வாறே அவ்விடத்திலுள்ள ஒவ்வொரு சாமானும் ஒவ்வொரு பக்தராகவும் அவதரித்து இவ்வுலகத்தைப் பரிசுத்தமாக்க வந்ததாய்ப் புராணங்கள் எழுதி வைப்பது புதுமையான ஆதாரமல்ல. ஆகையால் அதைக் குறித்து விசேஷமாய் விவரிக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறோம். இவ்வாறு ஆரியராலே இந்தியாவில் விக்கிரக ஆராதனை பரவி நிலைத்தது மாத்திரமல்ல, இந்துக்களுக்குள் நான்கு சாதி

பேதங்களும், ஐந்தாம் சாதிக்குள் தொண்ணூற்றாறு சாதி வேறுபாடுகளும் உண்டாயின. இவை முதலான வித்தியாசங்களுக்குக் காரணராயிருந்த ஆரியராகிய பிரமாணரே தாங்கள் பிரம குலத்தார் என்று தங்களை முதல் சாதியாக்கித் தங்கள் சாதியார்க்கு நன்மையும் பிரயோசனமாயுமுள்ள அநேக நூதன ஏற்பாடுகளையும், சாதிசாதியாகக் கைக்கொள்ளவேண்டிய வெவ்வேறு சடங்காசாரங்களையும், தர்மாதர்மங்களையும், ஏற்படுத்தி குடிமக்களுக்குப் போதித்துப் பயிற்சி செய்ய வைத்துத் தாங்கள் மட்டும் மேன்மையான சாதியார். எனவே தேவாராதனை செய்யப் பாத்திரமானவர்கள். வேதங்கள் தங்கள் ஆதினத்திலேயே இருக்க வேண்டியது. மற்றப்படி இருப்பது தவறாகும். ஏனையர் வேதத்தைத் தீண்டவுங்கூடாது; அந்த ஸ்வரத்தைக் காதாரக் கேட்டாலும் மகாதோஷம் உண்டாகும் என்றும், தாங்களே உலகத்தில் நடமாடித் திரிகிற வையகதேவர், தங்களையே எல்லாரும் வணங்க வேண்டும்; சகலவிதமான தானங்களை ஏற்றுக்கொள்ளவும், மக்களை ஆசீர்வதிக்கவும் தங்களுக்கே சுதந்திரம் உண்டென்றும் மருட்டி எல்லாக் கட்டுப்பாடுகளையும் நடைமுறையில் நிலைப்படுத்தியும் வைத்தார்கள். அதுவே இன்று வரையில் இந்தியாவை அடிமைப்படுத்தி இந்து தேசத்து வைதீக ஆளுகையை இஷ்டப்படி நடத்தியும் வருகிறது. இந்த ஆளுகைக்கு சமஸ்கிருத மொழியிலுள்ள நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், பதினெட்டு ஸ்மிருதிகள், முப்பத்திரண்டு உபநிஷத்துக்கள், பதினெண் புராணங்கள், இரண்டு இதிகாசங்கள், ஆயிரக்கணக்கான ஸ்தல புராணங்கள், அளவிறந்த கோடி ஆகமங்கள் முதலான நூல்களே ஒழுக்கம், வழக்குத் தண்டங்களுக்கு ஆதாரமான பிரமாணத்தை நிர்ணயிக்கிற சட்டங்கள். இவ்வகைச் சட்ட நிரூபணச் சபையாரும் விதிகளை அமைத்தவர்களும், மோட்ச நரக பலபல நுகர்ச்சிகளுக்குத் தீர்ப்புக் கொடுத்து அனுப்புகிற நியாயாதிபதிகளும் எல்லாம் பிராமணரே! இவ்வகையாக வையக தேவரும் பூசுரருமென்று சொல்லப்படுகிற பிராமணர் வைதீக ஆளுகை செய்து வருகிறார்கள்.”

“3. இப்படியாக மக்களின் அறியாமை காரணமாகத் தோன்றி, அவபக்தி காரணமாகத் தடித்து இந்தியா முழுக்கவும் பரவிய விக்கிரகாராதனை இந்துக்களில் பெரும்பாலருடைய இருதயத்தில் யதார்த்தமாகவே வேரூன்றிவிட்டதினால், வரவரப் பலத்து நித்திய விசேடாராதனைகளும்; ஆறுகால, அபிஷேக, அலங்கார, தீபதூப சோடச உபசாரங்களும் நைவேத்தியங்களும், சங்கீத மேள வாத்திய நடன முதலாய வைபவங்களும் ஏற்பட்டு நடந்தேறி வருவது மாத்திரமோ! பலவித விசேஷங்கள், திருவிழாத் தேரோட்டம், அநேகவித வேடிக்கைகள், விநோதங்கள், உல்லாசமான கொண்டாட்டங்கள் முதலிய காரியங்களும்

மிகுதியாகி மென்மேலும் பிரபலமடைந்து வருகின்றன. இந்த விக்கிரகாராதனையானது முதலாவது பிராமண அருத்தமுள்ளதாகவும், அறியாமையுள்ள மிகுந்த மக்களுக்குச் சீவனுக்கடுத்த உபாயமாகவும், மூன்றாவது பரத்தையர் பிழைப்பின் பொருட்டாகவும், நான்காவது கூடிவரும் மக்களுக்குச் சந்தோஷம் என்கிற பிரதி பலன் கொடுக்கக் கூடியதாகவும் உபயோகப்பட்டு வருகிறது. இந்த ஆராதனைக்கு இந்தியாவே முக்கிய இடம்; எனினும், தெற்கு பாகமே மற்ற எல்லாப் பாகங்களிலும் சிறப்புற்ற இடம் என்று திட்டமாய்ச் சொல்லலாம்."

4. விக்கிரக ஆராதனை உண்டானதற்கு மூலம் இவ்வாறாயிருக்க, இதை நன்கு ஆராயாது, அவ்வாறு ஆராதிப்பவர்களில் முக்கியமாய் வைஷ்ணவ சமயத்தின் ஒரு பிரிவாகிய பாஞ்சராத்திரிகர் சர்வத்துக்கு மூலகாரணராயிருக்கிற பரப்பிரமமாகிய விஷ்ணுவுக்கு ஐந்துவிதமான முயற்சி நிலைகள் உள்ளன என்றும், அவை : பரம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சை என ஐந்து வகை என்றும்; அவற்றுள் பரம் என்பது சத்து, சித்து, ஆனந்தமாகிய சச்சிதானந்த பரப்பிரமவஸ்து; வியூகமாவது: வாசுதேவன், சங்கருஷ்ணன், பிரத்தியுமனன், அநுருத்தன் என்ற பிரதான அவதார புருஷர்கள்; இவருள் முந்திய இருவரும் பரத்துவத்தோடு பொருந்தியவர்; பின்னைய இருவரும் அவரிலும் சற்றுத் தாழ்ந்தவர்; இந்த வியூகராலேதான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்கள் நடந்தேறிவருகின்றன. விபவமாவது: நீருண்ட காளமேகம் போன்ற திருமேனியை உடையவராய்ச் சங்கு, சக்கர, சாரங்க, கதா, கட்கமென்ற பஞ்சாயுதபாணியாய், இலக்குமி தேவியை மார்பகத்தில் வைத்துச் சகலவித சம்பிரமத்துடனே சர்வலோக சரணியனாய் ஸ்ரீவைகுந்தத்தில் வீற்றிருந்தும் ஷீராப்தி யென்கிற திருப்பாற்கடலில் சேஷசயனத்தில் ஸ்ரீவைகுந்தத்தில் வீற்றிருந்தும் ஷூராப்தி யென்கிற திருப்பாற்கடலில் சேஷசயனத்தில் யோக நித்திரை செய்துகொண்டும் இருப்பார்; இவரே தேவை ஏற்படும் போதெல்லாம் உலகத்தில் பத்து அவதாரங்களை எடுத்து தர்மத்தை நிலைநிறுத்தி, முடிவில் தன்னடி சோதிக்கெழுந்தருளி விபவத்தோடு பொருந்துபவர் என்பதாம். அந்தரியாமியாவது: மக்களுடைய இருதயங்களில் சாட்சி மாத்திரமாய்த் தங்கி இருப்பவர்; கடைசியாய் அர்ச்சையாவது: பாமர மக்களின் பொருட்டாக விக்கிரக வடிவங்களில் வெளிப்படுத்திச் சேவை செய்வதனால், அவர்களுக்கு ஞானப்பலன் உண்டாக அநுக்கிரகம் செய்யும் அர்ச்சனை செய்வதற்குரிய மூர்த்தி என்றும், இவற்றைத்தானே மிகவும் விரிவாகக்கூறி, இதற்கு ஆதாரமாகச் சில புராணங்களையும், இரு சமயவிளக்க முதலிய நவீனமான சில சில்லரை புஸ்தகங்களையும்; முக்கியமாய் வேதத்தில் புருஷ சூக்தம் என்ற பாகத்திலுள்ள சில வாக்கியங்களையும் கொண்டுவந்து

உதாரணமாக்கி இருக்கிறார்கள். இந்து வேதங்களும் ஸ்மிருதியுந்தவிர மற்ற நூல்கள் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க பிராமண கிரதங்கள் அல்ல என்று முன்னமே நியாயங்காட்டி இருக்கிறோம். ஆதலால் அதைப் போக்கிவிட்டு இந்துக்களில் சிறந்த பாண்டித்தியமும் தீர்க்க ஆலோசனையும் நிதான சக்தியும் உடையவராக இருந்த நியாயவாதி ஒருவர் எழுதிய "வேத சமாஜவிண்ணப்பம்" என்ற பெயரையுடைய ஒரு புஸ்தகத்தில் கண்டபடி விக்கிரக ஆராதனைக்காரர் கூறும் ஆதாரங்களையும், அதன்மேல் அந்த மகாபண்டிதர் கூறும் ஆட்சேப சமாதான நல்ஆலோசனைகளையும் அவசியத்துக்குத் தக்கவண்ணம் ஒன்றுங் கூட்டாமலும் குறைக்காமலும் உள்ளதை உள்ளபடியே ஈண்டு எடுத்துக் காட்டுகின்றோம். ஏனெனில், அர்ச்சனையின் சாதக பாதகங்களைச் சுபக்கத்தாராகிய நாங்கள் எவ்வளவோ விநயமாயும் உண்மையாயும் தெரிவித்தபோதிலும், பரபக்கத்தார்க்கு அவ்வளவு சாந்தத்தை உண்டாக்காது என்ற கருத்தால், பரபக்கத்தாரில் ஒருவராகிய அந்த மகாபண்டிதர் வெளியிட்டிருக்கும் அந்த வாக்கியங்களைக் கொண்டே தெளிவு படுத்துகின்றோம்."

5. முதலில் விக்கிரகத்துக்கு ஆதாரமாயுள்ள பிரமாணங்களை யோசிப்போம். உத்தர கீதையில்:

"அக்நிர் தேவோ த்விஜாதீ நாம்
முநீநாம் ஹிருதி தைவதம்
ப்ரதிமாஸ் வபரபுத்தாநாம்
ஸர்வத்ர ஸமதர்ஸிந:"

இதன் பொருள் : "பிராமணர்களுக்குத் தெய்வம் அக்கினியில், முனிவருக்குத் தெய்வம் இருதயத்தில், புத்தி குன்றியர்வகளுக்கு விக்கிரகத்தில் தெய்வம், சமமான அறிவுள்ளவர்களுக்கு எங்குந் தெய்வம்" என்பதாம். இதன் கருத்தைச் சற்றுத் தெளிவாய் விசாரிப்போமாகில் இதில் நால்வகை மனிதரைக் குறித்துப் பேசப்பட்டிருக்கிறதென்றும், பிரகிருதி சாஸ்திரங்களையும் (இயற்கைப் பொருள் நூல்கள்) ஜீவாத்துமா பரமாத்துமா வடிவங்களையும், அவற்றிற்குரிய பரஸ்பர அநுபவங்களையும், நன்குணர்ந்து சுகதுக்கங்களிலும், செல்வ வறுமைகளிலும், சாவு வாழ்வுகளிலும் சம அறிவை வைத்திருக்கும் மகாத்துமாக்களுக்கு எப்போதும் எவ்விடத்தும் கடவுளின் விசித்திர செயல்கள் விளங்கும்; ஆகையால் அவர்களுக்கு எங்குந்தெய்வம் என்று நான்காம் பாகத்தினாலும், கேவலம் இந்திரிய செயல்களை எல்லாம் ஒழித்துவிட்டு யோகாப்பியாசஞ் செய்யும் முனிவர் தியானத்தினால் கடவுளை அறிவார் என்று இரண்டாம் பாதத்தினாலும்; இவ்விரு வகுப்பாருக்கும் நால்வகை

சாதிக்கும் உரிய ஒழுக்கம் இல்லை என்று மேற்படி சுலோகம் உள்ளமையாலும், வருணாச்சிரம தர்மங்களையுடையவர்களுக்குள் பிராமணர்கள் என்றும், பிரம்ம சத்திரிய வைசியர்களுக்குக் கர்ம சாதனமான அக்கினியில் தெய்வம் விளங்கும் என்று முதல் பாதத்திலும், முற்றுங் கல்வியும் ஞானமும் அற்று மனிதரில் கடையோராகவும், மற்றவர்க்கு அடிமையாகவும், தட்டுமுட்டுகளை ஒத்தவராகவும் ஒதுக்கப்பட்டிருந்த சூத்திரர்கள் ஞானத்துக்காவது கர்மத்துக்காவது அதிகாரிகள் அல்லர் என்று நீக்கப்பட்டிருந்தமையாலும் அவர்களுக்கு மேற்கூறிய வழிகளில் ஆராதிக்க சக்தி இல்லாதவர்களாயிருந்தபடியாலும், ஒருவிதத் தெய்வபக்தியாவது இல்லாவிடில் அவர்களிடத்தில் நீதிமார்க்கமே இராதாகையாலும், அக்காலத்தில் அவர்கள் திறமைக்கு இயைந்தவாறு விக்கிரக ஆராதனம் ஏற்படுத்தப்பட்டதென்று மூன்றாம் பாதத்தில் தெளிவாய் விளங்கும்.

விக்கிரக ஆராதனைக்கு இந்தச் சுலோகத்தில் சொல்லிய ஏதுவெல்லாம் கூடி அறிவின்மையாகவே இருக்கிறது. முற்காலத்தில் சூத்திரர் முற்றும் அஞ்ஞானிகளாய் இருந்தபோதும் தற்காலத்தில் அவர்களில் பலர் பிராமணருக்குச் சமானமான கல்வித் தேர்ச்சியுடையவராகவும் சிலர் பிராமணருக்கும் மேலான ஞானமுடையவராயும் இருக்கையில், இப்போதும் அவர்களுக்கு விக்கிரகத்தை ஆராதித்தல் பொருந்துமோ? மிருகங்களைப் போலன்றி மனிதருக்கு அருட்கவுளானவர் தமது குணங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததும் தமது உருவ குணமாகிய நேரும் நிகருமற்ற ஞானத்தை அளித்ததில், அவருடைய உத்தேசம் என்னவாம்? நாம் அதை தமது சக்தியால் வஞ்சனை இன்றி விருத்தி செய்துகொண்டு, அவருடைய மகிமையை அறிந்து அவருடைய தகுதிக்கு இசைந்தவழியால் அவரைத் தொழுது ஏத்திக் களிக்கவேண்டும் என்பதல்லவா? இதுதான் அவர் கருத்து என்பதற்குச் சந்தேகம் இல்லாமல் சுருதிப்பிரமாணம் பின்னால் உரைக்கப்படும்.

புராணங்களிலும் விக்கிரகத்தைக் குறித்துத் தனித்து விவரிக்குங்கால், அதை ஒருவாறு சிறப்பித்துச் சொல்லிய போதிலும், மற்ற ஆராதனை மார்க்கங்களுடன் இதை ஒப்பிடும்போது விக்கிரகத்தைக் காட்டிலும் இழிவான மார்க்கம் உலகில் இல்லை என்று நிந்திக்கப்பட்டிருப்பதாய் அனைவர்க்குந் தெரியும். ஆகிலும் இவ்வுண்மையை அறியாதவர் யாராவது இருந்தால், அவர்கள் திருப்திக்காக இவ்விடத்தில் சில சான்றுகளை எடுத்துரைக்கிறோம். ஸ்கந்த புராணத்தில் ஞானயோக காண்டத்தில் நாடி சக்கிராத்தியாத்யதில் -

"தீர்த்தே தானே தபோ யக்ஞே
காஷ்டே பாஷாணகேபதா
ஸிவம் பஸ்யதி மூடாத்மா
ஸிவோ தேஹே ப்ரதிஷ்டித"

இதன் பொருளாவது : 'மூடாத்துமாக்கள் தீர்த்தத்திலும், தானத்திலும், தபசிலும், யக்ஞத்திலும், கட்டையிலும், கல்லிலும், சிவனிருப்பதாய் நினைக்கிறார்கள். சிவனோ நமக்குள்ளேயிருக்கிறார்' என்றும்.

"சர்வத்ராவஸ்திதம் ஸாந்தம்
நபஸ்யதி சங்கரம்
க்ஞான சஷுர்விஹீநத்வாத்
அகோமாயா பல முநே."

இ-ள்: 'ஓ முனியே, ஞானக் கண் இல்லாமையாலும் மாயையின் பலத்தாலும் (அல்லவா) எங்கும் வசிக்கும் சாந்த மூர்த்தியாகிய சங்கரனைக் காண்கிறதில்லை' என்றும்,-

"ஸிவம் ஆத்மநி, பஸ்யந்தி, ப்ரதிமாஸு'ந யோகி ந:,
அக்ஞானம் பாவநார்த்தாய ப்ரதிமா பரிகல்பிதா:"

இ-ள்: 'யோகிகள் சிவனைத் தமக்குள்ளே காண்பார்களேயன்றி விக்கிரகங்களில் காணார். அஞ்ஞானிகளுக்குப் பாவனார்த்தம விக்கிரகங்கள் செய்யப்பட்டிருக்கிறதுகள்' என்றும்,-

சாதாதப வசனம்

"அப்ஸு'தேவா மநுஷ்யாணாம்
திவி தேவா மநீஷிணாம்
காஷ்ட லோஷ்டேஷுமுடாநாம்
யுக்தஸ்யாத்மநி தேவதா."

இ-ள்: 'சாதாரண மனிதருக்குத் தெய்வம் நீரில், சற்று தெரிந்தவர்களுக்குத் தெய்வம் ஆகாசத்தில், முட்டாளுக்குத் தெய்வம் கல்லிலுங் கட்டையிலும், யோகிகளுக்குத் தெய்வம் அவர்களுக்குள்ளே' என்றும்,

மஹாநிர்வாணத்தில்

"ஏவம் குணாநுஸாரேண
ரூபாணி விவிதாநிச
கல்பிதாநி ஹதார்த்தாய
பக்தாநி அல்ப மேதஸாம்."

இ-ள்: 'இவ்வித சுபாவங்களை அநுசரித்துப் பலவித உருவங்கள் அற்பப் புத்தியுடையவர்கள் நிமித்தம் கற்பிக்கப்பட்டன' என்றும், வெளிப்படுகின்றன.

இனித் தேவ வழிபாடு அல்லது பூஜாகைங்கிரியம் அல்லது தேவாராதனை எப்படிப்பட்டதெனில்: விலையுயர்ந்த பண்டங்களைக் கொண்டு அவரைத் தொழுவதினால் அவர் சந்தோஷமடைவாரென மயங்க வேண்டாம். இதுபற்றித்தான் பாகவதத்தில், 'ஓ! குற்றமில்லாதவனே! சகல பூதங்களுக்கும் அவமானம் விளையும் படியாக என்னை விக்கிரகமாக்கி உயர்ந்த பதார்த்தங்களைக் கொண்டு பூஜீப்பவரிடத்தில் நான் சந்தோஷமடையவே மாட்டேன்' என்று சொல்லியிருக்கிறது. பலவித தீமையெல்லாம் புரிந்துவிட்டு உத்தியோகஸ்தர்களுக்கு இலஞ்சங்கொடுத்து நன்மை பெற்றுக்கொள்வது போலக் கடவுளுக்கும் பொருளளித்து ஏமாற்றி விடலாம் என்று நினைக்க வேண்டாம். அவரைத் தொழும் வழி தான் என்னவெனில், நமது நிலைமையையும் அவர் தயவையும் மனத்திற்கொண்டு, காமக் குரோதாதிகளுக்கு ஆட்பட்டு நாம் புரிந்த பாவத்தொழில்களை குறித்து உண்மையாய் வருத்தப்பட்டு அவற்றையெல்லாம் மன்னிக்க வேண்டுமென்று கசிந்துருகிப் பிரார்த்தித்து, இனி நல்லவழியில் செல்ல நற்புத்தி அளிக்கவேண்டுமெனக் கேட்டு, வாயினால் கேட்டுக்கொண்டவாறே மனத்தினால் சகல பிரயாசையும்பட்டுத் தீமையை ஒழித்து, நன்மையை இயற்ற முயன்று, கடவுளின் கட்டளைகளைத் தவறாது கைக்கொண்டு நடந்து, அவரளிக்கும் நன்மைகளுக்கெல்லாம் நமது நன்றியறிதலை விளக்குவதே உண்மையான பூசையாகும்.

"கசந்து பவத்தை யுணர்ந்து சொரி கண்ணீர்த் திருமஞ்சனமாட்டி
இசைந்த செபமாலிகை சூட்டி இதயபீடத் தினிதிருத்தி
அசைந்திடாமெய் விசுவாச அன்பின் கிரியை நிவேதித்துப்
பசைந்த மனமோடு யேசு திருப்பாதம் பூசியுமின்செகத்தீரே."

இது ஆத்துமாவுக்குப் பயனளிக்கும் மெய்த் தேவாராம் அன்றோ! பலவித சம்சார பந்தங்களால் பாதிக்கப்பட்ட நமக்கு அவரை இவ்வாறு நிரந்தரமாய் தியானிக்க முடியுமோ என்று நினைக்க வேண்டாம். அவருடைய சிருஷ்டியில் அடங்கிய சகலவித உயிர்களும், பொருள்களும் குறைவின்றி வாழ வேண்டும் என்பதே அவருடைய முக்கிய நோக்கம்; ஆகையால், பெற்றோர், பிறந்தோர், மனைவி, மக்கள்மார், நண்பர், சுற்றத்தார், தேசத்தார், பிராணி, சாமான்யங்கள் முதலிய பலவகையாரிடத்திலும் நமக்குள்ள பல படியான கடமைகளையும் உத்தரவாதங்களையும் மெய்மனச் சோர்வின்றிச் சத்தியமாயும், வஞ்சனையின்றியும் செலுத்துவதே நாம் கடவுளுக்குச் செய்ய வேண்டிய பூஜையில் முக்கியமான பாகமாகும். நமது சரீரம் உள்ளவரையில் அதன் தொடர்பான தர்மங்களும், பிற செயல்களும் ஒழியுமென்பது கனவிலும் முடியாது. ஆகிலும் கல்வியாலும், பயிற்சியாலும் கூடியவரையில் அவற்றை நீக்கி,

குற்றமற்ற வரையில் அவற்றைப் பின்பற்றிப், பாத்திரமறிந்து இரப்பவர்க்கிட்டுப் புலையும் கொலையும் தவிர்த்து நிலைபெற அறத்தின் நுட்பத்தை அறிந்து நிலையாய் நடப்போமாயின், கடவுளிருப்பதாய் மதிக்காவிடினும் நமது தொழிலுக்கு அவர் கூலியளித்தே தீரவேண்டுமாகையால் நீதி தவறா ஒழுக்கமே நாம் அவருக்குச் செய்யும் பூஜைகளிளெல்லாம் சர்வ சிறப்புடையது என்று ஏற்படுகின்றது.

....

26. கடைசியாய் இந்தக் கொடிய மார்க்கத்தினால் விளைகின்ற அளவற்ற தீமைகளை விரித்துரைக்க ஒருவனுடைய ஆயுள் முழுவதும் போதாதாகையாலும், நாங்கள் எழுதிய புஸ்தகம் வெகு சிறிதாகையாலும், அதை இவ்வளவுடன் அமைத்து முடிக்கிறோம். நம்முடைய மக்களுடைய இழிவுக்கு இது ஒன்றே காரணம் என்று நாங்கள் உரைக்கவில்லை. நம் பெண்பாலார் அநுபவிக்குந் துன்பங்கள் முதலிய இன்னும் பல காரணங்கள் இதன்பொருட்டுத் தோன்றியபோதிலும், அவற்றுள் இந்தக் காரியமே பிரதானமானது என்பது எங்கள் கருத்து. இச் சண்டாள மார்க்கத்தினால் அல்லவா நமது உலகம் செத்து நாமெல்லாம் உயிர்ப்பிணங்களானோம்? முடிவில் நாம் நமது அறிவின்மையினால் ஆவது, அயலார் மோசத்தினால் ஆவது, மதிமோசம் போவது, மனிதராகிய நம்மியல்புக்குப் புதுமையல்ல. உண்மை வெளி வந்த இனியாகிலும் கெட்ட எண்ணத்தைத் தூரவிட்டு நன்றாக யோசனை செய்த பிறகாவது நம்மவர் இதுவரை நடப்பித்து வந்த துன்மார்க்கத்தைத் துச்சமாக முழுகிவிட்டு நமது பெருங்காலத்தைப் பாழாக்கினோமே எனறு வருத்தப்பட்டு சலிக்காத சன்மார்க்கத்தை அளிக்க வேண்டும் என்று அவ்வள்ளலைப் பிரார்த்திப்போமாக!"

27. சுபக்கத்துக்கு ஆதாரமாகிய மெய்ச்சுருதி இந்த விக்கிரக வணக்கத்தைப் பற்றி என்ன கற்பிக்கின்றது எனில்: கடவுள் சகல மனிதருக்கும் பொதுவாய் விதித்த கற்பனைகளில் இது ஒன்றாயும், செய்யக்கூடாதென்று விலக்கும் விதிகளில் முக்கியமானதாயும் உள்ளது. இதற்குப் பிரமாணம்: "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்; மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்." (யாத்திராகம் 20:3,4,5)

"கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால் உங்களைக்

கெடுத்துக் கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா மக்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்." (உபாகமம் 4:15-19)

28. விக்கிரக வணக்கம் தேவனுக்கு அருவருப்பானது என்பதற்குப் பிரமாணம்:-

"அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய்; நீ அவைகளால் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை எடுத்துக் கொள்ளாமலும் இருப்பாயாக! அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப் போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய். அது சாபத்திற்குள்ளானது." (உபாகமம் 4:15-19). "யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார்." (உபாகமம் 16:22)

"சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறவினத்தாருடைய இஷ்டத்தின்படி நடந்து கொண்டது போதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர் இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணி, களியாட்டுச் செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்து வந்தோம். அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்." (1 பேதுரு 4:3,4)

"ஆதலால், சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான உன் கிரியைகளால் நீ என் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினபடியால் என் கண் உன்னைத் தப்பவிடாது. நான் உன்னை குறுகிப்போகப் பண்ணுவேன்; நான் இரங்கமாட்டேன்; இதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்." (எசேக்கியேல் 5:11)

"29. விக்கிரக ஆராதனை தேவ கோபத்தையும் சாபத்தையும் விளைவிக்கத் தக்கது என்பதற்குப் பிரமாணம்:-

"அவர்கள் வேறே தேவர்களிடத்தில் (விக்கிரக தேவர்களிடத்தில்) திரும்பி, அவர்களைச் சேவித்து, எனக்குக் கோபமூட்டி, என் உடன்படிக்கையை மீறுவார்கள்." (உபாகமம் 31:20).

"அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும், அவைகளுக்கு ஆராதனை செய்யாமலும், அவைகளைப் பணியாமலுமிருந்து, நான் உங்களுக்குத் தீமைசெய்யாதபடிக்கு உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமூட்டாமலும் இருங்கள்." (எரேமியா 25:6).

"கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்." (உபாகமம் 27:15).

"30. விக்கிரக ஆராதனைக்காரர் இத்தகையரென்றும், விக்கிரகத்தின் அமைவு இவையென்றுங் காட்டுகிற பிரமாணங்கள்:-

"விக்கிரங்களை உருவாக்குகிற யாவரும் வீணர்; அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றும் காணாமலும் ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?

"இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்; தொழிலாளிகள் நர ஜீவன்கள்தானே; அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாயத் திகைத்து வெட்கப்படுவார்கள்." (ஏசாயா 44:9,10,11).

"கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காய வைத்து, சுத்திகளால் அதை உருக்கி, தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்துகிறான். தச்சன் நூல்பிடித்து, மட்டப்பலகையால் மரத்துக்குக் குறிபோட்டு, உளிகளினால் உருப்படுத்தி, கவராசத்தினால் அதை வகுத்து, மனித சாயலாக மனித ரூபத்தின்படி உருவமாக்குகிறான். அதைக் கோவிலிலே நாட்டி வைக்கிறான் அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான்; ஒரு மருதமரத்தையாவது ஒரு கர்வாலி மரத்தையாவது, தெரிந்துகொண்டு, காட்டு மரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான்; அல்லது அசோக மரத்தை நடுகிறான்,

மழை அதை வளரச் செய்யும். மனிதனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப்பணிந்து கொள்ளுகிறான்; ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்; ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குறிருங்காய்ந்து: ஆஆ, அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி, அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து அதற்கு முன் விழுந்து, அதை வணங்கி நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள்; காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதியை அடுப்பில் எரித்தேன்; அதின் தழலின்மேல் அப்பத்தையும் சுட்டு இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன். அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா, ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை; அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை. அவன் சாம்பலை மேய்கிறான்; வஞ்சிக்கப்பட்ட மனம் அவனை மோசப்படுத்தினது; அவன் தன் ஆத்துமாவைத் தப்புவிக்காமலும்: என் வலது கையிலே அபத்தம் அல்லவோ இருக்கிறதென்று சொல்லாமலும் இருக்கிறேன்." (ஏசாயா 44:12-20).

31. விக்கிரக ஆராதனை உணர்வற்றதும் விவேகமற்றதுமான செய்கையென்று காட்டுகிற பிரமாணங்கள்:-

"அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனிதருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது; அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிலிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்." (சங்கீதம் 115:4-8).

"32. விக்கிரக தேவாலயங்களின் ஒழிவைப் ப்றறி மெய்ச்சுருதி வெகுதிட்டமாய் வற்புறுத்திக் காட்டுகிற பிரமாணங்கள்:-

"மனிதன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாயிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளையும்

துரிஞ்சல்களையும் எறிந்து விடுவான்." (ஏசாயா 2:21). இந்த வாக்கியம் கிறிஸ்துவுக்கு முன் 700-ம் வருடத்தில் ஏசாயா தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டது. எழுதின நாளது வரை 2655 வருடமாகிறது. இந்து தேசத்தில் விக்கிரகக் கோவில்கள் உண்டாவதற்கு ஏகதேசம் 600 அல்லது 700 வருடங்களுக்கு முன்னுள்ள தீர்க்கதரிசியின் வாக்கியம் மற்றைய தேசங்களில் நிறைவேறி வருகிற வரலாற்று விவரங்களை ஈண்டெடுத்துக் கூறுவதில இத் தேசத்தாருக்கு அவ்வளவு திருப்தியுண்டாகாது என அதைவிடுத்து, இந்த இந்து தேசத்திலேயே அந்த வாக்கியம் நிறைவேறி வருகிறதைக் கைநெல்லிக்கனிபோல விளங்கக் காட்டுவோம்.

பூர்வீகத்தில் சென்னைப் பட்டணத்திற்கு தெற்கேயுள்ள சதுரங்கப் பட்டணத்தையடுத்து அகோபலம் அல்லது அகோபளம் என்ற பெயருள்ளதும், அக்காலத்து அதிக பிரபலமுள்ளதுமான ஒரு விஷ்ணு ஸ்தலத்தில் சமுத்திர எல்லையை ஒட்டியிருந்த ஒரு மலையைக் குடைந்து வெகு விநோதமான வேலைப்பாடுள்ளதாய் விஷ்ணு சமய ஐதீகங்களுக்கு ஒத்ததாய் அந்த மலைச் சுவரில் மகா திறமையுள்ள சிற்பிகளால் சமைத்த அநேக விக்கிரகங்கள் நிறைந்த கோவில் ஒன்று இருந்ததைக் கண்டார்கள். அக்காலத்தில் இந்தியா முழுவதிலும் உள்ள சைவ வைஷ்ணவ முதலிய சமயத்தவர் எவரும் தல யாத்திரை செய்துவந்து, இந்த அகோபள தலத்திலுள்ள நரசிங்கப்பெருமாளை வெகு கொண்டாட்டமாகச் சேவித்து வணங்கி ஆராதித்து வந்திருக்கிறார்கள். இப்போது அந்த சேத்திரம் எங்கே? "ஆறு கொண்டது பாதி, நூறு கொண்டது பாதி" என்ற வண்ணமாய்ச் சமுத்திர தீரத்து அலையில் மொத்துண்டு மொத்துண்டு பெருமாள் குடிபோய் விட்டார் போலும், பிரபலமான அந்தச் சேத்திரம் சில நூறு வருடங்களாகப் பாழ்பட்டுக்கிடக்கின்றது பலருமறிந்த விசயம், அல்லாமல் வைஷ்ணவ சமய சத்துருவாயிருந்த சோழ தேசத்தரசன் ஒருவன் காலத்தில் அநேகமான விஷ்ணு தலங்களை இடித்துப் பாழாக்கினான். இதுவும் உலகம் அறிந்த காரியம். மகம்மதியர் அரசாண்ட காலத்து இடிப்பட்டுப் பாழான சிவத் தலங்கள் எத்தனை, விஷ்ணு தலங்கள் எத்தனை? கணக்குண்டா? கணக்கிட்டால் இந்தியா முழுவதும் பாழ்பட்டுக் கிடக்கிற விக்கிரக ஆலயங்களில் எத்தனை என்று அறியக்கூடும். இவ்வகையாக மெய்வேதத்தில் ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வாக்கியத்தின்படி நிறைவேறியுமிருக்கிறது; நிறைவேறியும் வருகிறது என்று தெளிவாய் அறிந்து கொள்ளலாம்.

"33. மேலே விளக்கங்காட்டிய வேத வாக்கியங்களில் முக்காலத்தையும் ஆண்டு வருகின்ற எல்லா ஞானமுமுள்ள தேவன் முன்கூட்டியே

உற்பாதமாக செய்யவேண்டியதும் செய்ய வேண்டாததுமாகப் பிரமாணங்களை மக்களுக்கு ஏற்படுத்திய அன்றே விக்கிரக வணக்கம் விலக்கப்பட்டுள்ளது என்றும், இந்தப் பிரமாணத்தை மீறுவது உணர்வற்றதும், விவேகமில்லாததும் வீணானதுமுமான செய்கை என்றும், அதற்கு வரத்தக்க சாபமோ, தண்டனையோ, கெடுதிகளோ, பொல்லாங்குகளோ, அப்பாலுள்ள கதியோ ஆகிய இத்திறத்த தீயப்பலன்கள் இவையென்றும், இந்த நீசத்தனமான வணக்கத்தைத் தேவன் பகைத்து அருவருத்து வெறுக்கிறார் என்றும், இந்தத் தீய ஒழுக்கத்தைக் கட்டோடே தள்ளிவிட்டு மனந்திரும்பி மெய்த் தெய்வ வழிபாட்டு நெறியை அதாவது தியானமார்க்கத்தைப் பிடிப்பவருக்கு தேவ ஆசீர்வாதம் உண்டாகும் என்றும், விக்கிரக ஆலயங்களுக்கு வரப்போகிற கதி இவ்வாறென்றும் மிகத்தெளிவாய்ப் புலப்படுகிறது. இந்தப் பிரிவில் இம்மட்டும் விக்கிரக ஆராதனையைப்பற்றி மெய்வேதத்தின் கருத்து இத்தகையது என சிறப்பாக எடுத்துரைத்தோம். இனிப் பொதுவான நியாயங்கள் சில ஈண்டு கூறுகின்றோம். அவற்றுள்:-

34. மெய்த் தேவனையன்றி மற்றவர்களையாவது யாதொரு விக்கிரகத்தையாவது வணங்குவது மகா பாவம். எப்படியெனில், தேவ கட்டளையை மீறிச் செய்யுங் கிரியைகளே பாவமாம். விக்கிரக வணக்கம் தேவ கற்பனைக்கு விரோதம். ஆதலால் அது பாவம்."

"35. நம்முடைய மனசுக்கும் அறிவுக்கும் எட்டாத ஆவியாயிருக்கின்ற கடவுளின் சுபாவத்தைப் பற்றி நாம் அறிய விரும்பினால் தெய்வம் வெளிப்படுத்திய வேதஞ் சொல்லுகிறதையே நம்பி நாம் மனத்தியானம் செய்து திரிகரண சுத்தியாய் வணக்கம் செலுத்த வேண்டியதே அல்லாமல் அதைவிட்டு யானைத் தலையையாவது, காளியின் நீண்ட நாக்கையாவது, சிவலிங்க வடிவத்தையாவது (சிவனுடைய ஆண்குறி) தெய்வத்துக்கு அறிகுறியாகக் கொண்டு தியானம் பண்ணினால் கண்ணாரப் பிரத்தியட்சத்திற்கண்டகாட்சிப் பொருளே அன்றி வேறென்ன மனதில் உறுதியாய்ப் பதியத்தக்கது? யானையைப் பார்த்தால் யானையையே அன்றிப் பிரிதொன்றை எப்படி நாம் விளங்கிக் கொள்ளக்கூடும்? அப்படியே பெண்குறி ஆண்குறியை குறியாகக்கொண்டு தியானிப்பவர் மனசுக்கு அருவருப்புத் தோன்றுமேயன்றிக் கடவுளைத் தியானிக்க மனசை எழுப்பி விடுவதில்லை. நல்லது, வாயுவை எந்தப் பொருளினால் குறிக்கலாம்? ஒரு பொருளாலும் குறிக்கக்கூடாதேயாகில் வடிவம் இல்லாத பொருளாய் எங்கும் நிறைந்தும் எவற்றோடும் தாக்கற்ற பரிபூரணமான வஸ்துவை விக்கிரகங்களால் குறிப்பிட்டு வணங்குவது புத்தியில்லாச் செயலாகும் என்பதற்குத் தடை என்ன?

நமது புத்திக்கு எட்டாத சர்வ ஞானம், சர்வ வல்லமை, நீதி, இரக்கம் முதலிய பரிசுத்த குணங்களையுடைய மகா பரிசுத்த தேவனைத் தியானித்து மனத்தால் வணங்கித் தொழுவதோ, விக்கிரகத்தை நோக்கி தேவனே என்று எண்ணுவதோ, எது எளிது? கல், மரம், பொன் முதலிய வஸ்துக்கள் தேவ லட்சணம் உடையனவாம் என்று நினைப்பதே அரிது.

"36. விக்கிரகம் தேவனல்ல. அதிலே தேவனை மந்திரத்தினால் உட்புகுத்திய பின்புதான் தேவன் அதிலே வருகிறார் என்று விக்கிரக பக்திக்காரர் சொல்லுகிறார்கள். அது மெய்யானால் பிரதிஷ்டைப் பண்ணப்பட்டுத் தேவதா வாகனஞ் செய்யப் பெற்ற கல் முதலிய விக்கிரகங்கள் அப்படியல்லாத மற்றக் கல் முதலியவைகளைப் போலவே பஞ்சேந்திரியங்கள் அற்றுக் கிடப்பதும், தங்களுக்கு வரும் மோசங்களுக்கு விலக்கிக் கொள்ள ஏலாதிருப்பதும் என்ன? (சங்கீதம் 115:2-8).

அற்ப வல்லமையுள்ள ஆத்துமா புகுந்திருந்தால் அந்தக்கல் சும்மாவிருக்கமா? விக்கிரகங்களுக்குள் மந்திரத்தினால் தேவன் புகுந்திருக்கிறார் எனில், அவ்விக்கிரகங்களை ஏன் இயங்கப் பண்ணாதிருக்கிறார். இயங்கப்பண்ணாத பொழுதே தேவன் அவற்றுள் புகுந்திருக்கிறதில்லை என்று நம்புவதற்குத் தடை என்ன?

இப்படியே உயிர் அற்ற விக்கிரகத்தை குளிப்பாட்டி வஸ்திரம் உடுத்தி அலங்கரித்துச் சோடச உபசாரம் கொடுத்து இரதத்தின் மேல் ஏற்றி வீதிவலம் வருவித்து விழாக்கொண்டாடுவது மக்களுக்கு வீண்பொழிவே அன்றி அது தெய்வ, வழிபாடாகுமா? ஒருக்காலும் ஆகாது. ஆனால் பாமர மக்களுக்கு விநோதமும் வேடிக்கையுமான கொண்டாட்டமாகும்.

எங்கும் நிறைந்திருக்கிற கிருபையுள்ள தேவனை நாம் இருதயத்தால் வணங்கி மனத்தினால் தியானித்து அவரால் நாம் அடைய வேண்டிய தயவுகளை விண்ணப்பங்களால் வேண்டிகொள்வதே நமக்கு வேண்டியது. அதைவிட்டுச் சோமசூரியாக்கினி முதலியவைகளையும் கல் மரம் முதலியவற்றால் உருப்படுத்திய விக்கிரகங்களையும் நோக்கி வாயும் மனமும் புண்படத்தக்கதாக குமுறி எவ்வளவு பக்தியுடனே இரந்து வேண்டினாலும் அவ்விண்ணப்பங்களைக் கேட்கவும் அருள் செய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லையே! "விடிய விடிய மழை பெய்யினும் ஒட்டாங் கிளிஞ்சில் கரைவதுண்டோ! தேவனோ எங்கும் வியாபித்து எல்லா ஞானமும் உடையவராய் இருக்கின்றார். ஆதலால், நாம் தம்மை நோக்கி விசுவாச பக்தியுடனே நமக்கு வேண்டிய காரியங்களை இரந்து கேட்டால் அவ்வேண்டுதல்களைக் கேட்கவும் அருள் புரியவும்

வல்லவராயிருக்கிறார். ஆதலால், அவரை நோக்கிச் சிந்தையிலே தியானஞ்செய்து செபத்தோத்திரம் செலுத்துவதே உத்தமம்.

இப்படியிருக்க, விக்கிரகங்களையும், நீச விலங்குகளையும், மானிடரில் சிறப்புள்ளவர்களாய் இருந்தவர்களையும், பேய்களையும், வணங்குவது மகா பாவம் அல்லவா? இவைகளைத் தள்ளித் தேவன் ஒருவரைத் தொழுதுகொள்வதே மனித சமுதாயத்தின் கடமையாகும். தேவன் ஒருவரை அன்றி வேறு யாதாயினும் ஒன்றை வணங்கினால் அது விபசாரஞ்செய்வதற்கு ஒப்பாகவே இருக்கும். (ஏசாயா 50:1; எரே.3:1-5)

"37. இவ்வண்ணமே சங்கராச்சாரியார், சிவவாக்கியர், பட்டணத்துப் பிள்ளை முதலான இந்து ஞானிகளும் விக்கிரகாராதனை தவறானதென்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளை ஈண்டுரைக்கிற் பெருகும். அல்லாமல் அகச்சமய நூலும்:

"விக்கிரகநம் இணையாக்கி விழுந்து வணங்கும் விழலரைநம்
உக்கிரகோபந் தகிக்குமென உரைத்த கடவுள் உமை முழுவதும்
நிக்கிரகஞ்செய் திடுமுன்னர் நிச வுருவா ராதனமாம்
அக்கிரமம்விட் டியேசுதிரு வடியை யடைமின் செகத்தீரே!

மண்ணை மணலைச் சிவலிங்கவடிவாய்ச் சமைத்து மலர் தூவி
எண்ணமின்றி மந்திரஞ்சாற் றியம்பிப் பழுப்பாட்டுகள் பாடிப்
பண்ணும் பூசை பயன்படுமோ பரவை கடக்கக் கற்புணைகொண்
டொண்ணுமோ ரட்சண்யகலத் துவந்து புகுமின் செகத்தீரே!"

என்று கூறுகிறது. உய்த்து உணர்ந்துகொள்க."[89]

அறிவான தழிந்திட்டால் அப்பா அப்பா அலகைவசம் ஆவதுவும் அறிக்கை தானே! மக்கள் மெய்யறிவை இழந்துவிட்டால் அவர்கள் அலகையாகிய சாத்தானின் வசமாகி விடுவார்கள். திருவசனம் அறிவினை திறவுகோல் (லூக்கா 11:52) என்கிறது. இதனைத் தக்கவாறு பயன்படுத்தி மெய்ப்பொருளை அறிதல்தான் அறிவின் மேன்மையாகும்.

மெய்யறிவே நித்திய வாழ்வாம். யோவான் 17:3, "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்."

"அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது." (கொலோசெயர் 2:3). சிலர் மெய்யறிவைப் போற்றாமல் தங்களைக் கெடுத்துக் கொண்டதைத் திருவசனம் தெளிவுபடுத்துகின்றது. 'தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்."

"அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது."

"அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்." (ரோமர் 1:19,21,23).

மக்கள் சத்தியத்தினைப் பகுத்தறியும் தங்கள் அறிவுக் கண்களைச் சாத்தான் குருடாக்கும்படி விடக்கூடாது என்பது **அகத்தியர்** எச்சரிக்கை!

"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனத்தைக் குருடாக்கினான்." (2 கொரிந்தியர் 4:4).

இந்தப் பாடலில் அகத்தியர் மக்கள் நல்லறிவினை இழக்கக்கூடாது என்றும், அவ்வாறு இழந்தால் அது மக்களைச் சாத்தானின் வசமாக்கிவிடும் என்றும் உணர்த்துகின்றார்.

நினைத்துப் பாருங்கள்

15. "அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று,
ஆங்காரம் தானெடுத்து அகந்தையாலே,

நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று,
நித்தியமும் மானிடரை மோசம்போக்கி,

பலகலையும் உணர் அறிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச் செய்யும்

நிலையதுவை அறியாமல் போறார் போறார்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாயத்தானே."

கருத்துரை : சாத்தான் தன்னுடைய அகந்தையாலே தன்னைக் கடவுளுக்குச் சரியாய் உயர்த்தினான்; அதனால், அவன் தன்னுடைய மேன்மையான நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள்ளே தள்ளப்பட்டான். அவன் தான் கெட்டதுமட்டுமல்லாமல், மக்களையும் ஒவ்வொரு நாளும் மோசம் போக்கி, அவர்களுடைய பல கலையும் கற்று உணரும் அறிவினைக் கட்டுக்கதைகளாலே மயக்கி நரக பாதாளத்திலே தன்னோடு இழுத்துக்கொள்கிறான்; இந்நிலையினை மக்களும் அறியாமல் மோசம் போகிறார்கள். அறிவுள்ளவனே நான் சொல்வது உண்மையான செய்தி; சிந்தித்துப்பார்.

விளக்கவுரை

"அலகையது தேவனுக்குச்சரியாய் நின்று, ஆங்காரம் தானெடுத்து அகந்தையாலே, நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று" சாத்தான் ஆணவத்தால் தன்னைத் தேவனுக்குச் சரியாக நிறுத்தினான்; விண்ணுலகத்திலே ஒரு தலைமையானத் தூதனாக இருந்தவன் தனது பெருமையினாலே தன்னைத் தேவனுக்கு நிகராக உயர்த்தினான்; பரலோகத்தில் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்தான்; அதனால் அவனையும் அவனைச் சார்ந்த தூதர்களையும் தேவன் பாதாளக் குழிக்குள்ளே - தள்ளிவிட்டார். பின்வரும் வேதத் திருவசனங்கள் சாத்தானுடைய அகந்தையையும் கலகத்தையும், அவன் அடைந்த தண்டனையையும் தெளிவுபடுத்துகின்றன; தேவ தூதனாக இருந்தபோது சாத்தானுடைய முதல் பெயர் லூசிபர் என்பதாகும்.

"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! மக்கள் இனங்களை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழவெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன்.

"தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களிலே ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே." (ஏசாயா 14:12-14).

நரகம் சாத்தானுக்காகவும் அவனுடன் சேர்ந்து துரோகம் செய்த தூதர்களுக்காகவும் உண்டாக்கப்பட்டது. "அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் : சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்... என்றார்." (மத்தேயு 25:41).

"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டு விட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்." (யூதா 6).

நரகம் மனிதனுக்காகப் படைக்கப்பட்டதன்று, ஆனால் மனிதன் சாத்தானுக்குச் செவிகொடுத்து தேவனுக்குக் கீழ்ப்படியாமல் தேவனுடைய அன்பைப் புறக்கணித்துப் போகும்போது நித்திய தண்டனையைத் தானாகவே சம்பாதித்துக் கொள்ளுகின்றான்.

''சாத்தான்'' இங்கு அலகை என்று அழைக்கப்பட்டுள்ளான். சாத்தான் என்பதற்கு "எதிர்க்கிறவன் அல்லது பகைஞன்" என்று பொருள். பிசாசு என்னும் பெயரும் சாத்தானுக்கு உண்டு. பிசாசு என்பதற்கு ''குற்றஞ்சாட்டுபவன், நிந்தனைக்காரன்" என்று பொருள். (வெளி.12:10).

சாத்தான் விண்ணகத்தில் செய்த அரச துரோகத்தை இரட்சணியக் கவிஞர் எ.ஆ.கிருஷ்ணபிள்ளை பாடுகின்றார்:

"நித்திய ராசரீக நிலவுவா கைத்தி லென்றும்
பத்தியாய்ச் பணிசெய் துற்ற பண்ணவர் குழாத்து ணின்றும்
சத்துரு வாகிக் கீழே தள்ளுண்டு கிடந்த பேயால்
மித்திர பேத மென்னும் வினையிடை முளைத்த தந்தோ.

விள்ளரு மரச னீதி விலக்கலால் மலபா தாலத்
தள்ளுண்டு கிடந்த பேயி னதிபதி யழிம்ப னென்னுங்
கள்ளனுள் ளழன்று சீறிக் காசினி ககன வட்டத்
துள்ளுறு மரபை யோர்ந்தங் குசாவின னுருவமாரி."[90]

சாத்தானுக்கு 'அதிகாலையின் மகன் விடிவெள்ளி' என்றும், 'காவல் கேரூப்' என்றும் பெயருண்டு; காண்க. எசே.28:14-17:

"நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்... உன் கொடுமை அதிகரித்து நீ பாவம் செய்தாய்; ஆகையால், நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேரூபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன்.

உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று;
உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்;
உன்னைத் தரையிலே தள்ளிப் போடுவேன்; ராஜாக்கள்
உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக

வேடிக்கையாக்குவேன்." வெளி.20:10, "மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் வாதிக்கப்படுவார்கள்."

நித்தியமும் மானிடரை மோசம் போக்கி : லூசிபராகிய சாத்தான் தான் கெட்டதுமட்டுமல்லாமல் தேவன் படைத்த மனிதரையும் ஆதாம் ஏவாள் முதலாக நித்தமும் வஞ்சித்து ஏமாற்றி வருகின்றான். பாவத்திற்கும் மரணத்திற்கும் ஏனைய எல்லாத் துன்பத்திற்கும் அவர்களை அடிமைப்படுத்தி விட்டான்.

"எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி." (ரோமர் 3:23) சாத்தான் தான் கெட்டதுமல்லாமல் மனிதரையும் கெடுத்த வரலாற்றினை ஆங்கில மகா கவிஞன் ஜான் மில்டன் பின்வருமாறு பாடியுள்ளார்:

"சாத்தா னென்னுந் தீயன் ஒருவன்
தெய்வந் துறந்து செய்வினை கொண்டு
உலகம் துயருற உத்தம மனிதன்
நிலந்தரு நன்மையின் நீங்கி யவமுற
வழியினை நேர்ந்து வந்து சேர்ந்ததாம்
வருவது கண்டு வன்மையன் பரிதிக்
குரியவன் சேவகன் உரியவன் என்போன்
செருவியன் என்னுங் காவலன் தெரிதர
உரைத்தனன் உடனே தெரிந்தவன் தெருட்ட
ஏழிரா எழுபகல் எங்கும் அலைந்தவன்
ஏழிறந் தெட்டாம் நாளின் இரவில்
செருவியன் தெரியா தொருவழி யுட்புகுந்
தப்பூங் காவினில் ஆங்கோர் இடத்தில்
திக்கற ஆற்றுத் திட்டப்படி நுழைந்தான்
பக்குவ மாக மறைந்தொரு பாம்பினைத்
தகன்கோர் கருவி சார்ந்ததென் றோர்ந்தான்;
வருக நீ நிலனே வளமா ரிடனே
துறக்கநேர் இலமே "தூங்குபல் உடுக்கணம்"
சுற்றி வலம்வரச் சுழலுறு பந்தே
உயிரினம் வாழ உளங்களித் தூட்டும்
செயிர்தீர் உலகே சாத்தான் யானும்
மலையென ஆறென மாண்டபல் குகைவெளி
அலைந்து திரிந்தும் அடைந்துறை இடமிலை
இனிய பல் லிடமும் மனம்நலி தருமே;
நன்மையும் தீமையாம் நானிலம் பாழாம்;
மன்னிய துறக்க மலைந்து பெற்றிடின்
அன்றியான் வதியேன். அவனியிற் பிறரை
அழித்தலைச் செய்வேன். அங்ஙனஞ் செய்வதே
என்மன வோட்டத் தியைவ தாவது
எவனுக் கிவ்வுல கியற்றி யளித்தது.
அவனுக் கூறு விளைத்தலைச் செய்துபின்
படைத்தவன் வினைதனைப் பழித்து மகிழ்வேன்;
ஆறிரா வறுபகல் ஆக்கிய அவையெலாம்

ஓரிரா அழித்தும் ஒருவன் ஆட்சியை
ஒழித்தும் விடுதலை உலகுக் களிப்பன்யான்
பழிக்குமிவ் வுலகில் மண்ணினின் றாக்கிய
சிறியனுக் கெல்லாம் சிறக்கவென் றளித்துப்
பெரிய னாக்குமப் பீடினைக் குலைப்பன்;
மனிதனுக் காகவோ மாண்டவத் தேவனும்
இனிதெனப் பணிபல இயற்றுதல், வெட்கம்!
எத்தனைக் காவல், எங்ஙனம் மீறுவன்,
இத்தனி யேன்யான் எங்ஙன மேனும்
அரணினைத் தாண்டி ஆதமன் சேர்ந்து
மரணம் துன்பம் மற்றுள வனைத்தும்
பெறுக அவன்றன் பெருமை அழிக
புற்றெலாந் தேடிப் புதரெலாந் தேடிப்
பற்றியப் பாம்பினைப் பழக்கி, யுள் நுழைந்து
மனத்துட் கொண்ட "மாண்வினை முடிப்ப"
என்நிலை என்னே, எத்திறம் வாய்ந்தேன்,
எந்நிலை இருந்தேன், எந்நிலைக் கிழிந்தேன்,
அழிபே ராசை யடைந்தோர் தாமும்
பழிதீர்த் திடுவனென் வன்பகை யோரும்
எவ்வகைச் செயலுக் கீடு படாதோர்?"[91]

சாத்தானுடைய வஞ்சகத்திற்கு உட்பட்ட மானிடம் தேவனுடைய ஐக்கியத்தை இழந்து பாவத்திற்கும் அதின் விளைவான நித்திய மரணம் அல்லது ஆத்தும அழிவிற்கும் இலக்கானது. அநித்திய மாமிசத்தின் வாழ்விற்கு நித்திய ஆத்துமாவை அடிமைப்படுத்திவிட்ட சாத்தான், உடலின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் சிற்றின்பத்திலும் நாட்டத்தைத் திருப்பி மக்களை மோசம் போக்கினான். கடவுள் படைத்த மண்ணின் வாழ்வோடு மனிதனை இணைத்து இறுகக் கட்டி கண்களின் விருப்பம், மாமிசத்தின் விருப்பம், வாழ்வின் பெருமை என்னும் மூவகையில் மக்களை மோசம்போக்கி (1 யோவான் 2:15-17) அவர்களுடைய பக்தி முதலானவற்றையுங்கூட இவற்றின் அடிப்படையிலேயே ஏமாற்றி வஞ்சித்துவிட்டான். இதனால் தான் இந்த உலக வாழ்வை இரட்சணியக் கவிஞர் "வஞ்சமே பயில் பிரபஞ்சவனம்"[92] என்றார்.

பலகலையும் உணர் அறிவை மயக்கித் தங்கள் பாதாள வீடதிலே பதுங்கச்செய்யும் நிலையதுவை அறியாமல் போறார் போறார்: உடலின் சிற்றின்ப விருப்பங்களாலும் அவற்றின் அடிப்படையில் தோன்றி மாமிசத்திற்குரிய ஆராதனைகளாலும் ஆவிக்குரிய மெய்யறிவை மயக்கி மக்கள் மனத்தைக் குருடாக்கி விட்டான். (II கொரி.4:4). மேலும் காண்க:

"தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தி இருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்; இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப் பட்டவர். ஆமென்."

"இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல் ஒருவர் மேல் ஒருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள்ளே அடைந்தார்கள். தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லா திருந்தபடியால் தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார்.

"அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும் பொருளாசையினாலும் குரோத்தினாலும் நிறையப்பட்டு: பொறாமையினாலும் கொலையினாலும், வாக்கு வாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர் களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை

யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றோர்க்குக் கீழ்ப்படியாதவர் களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர் களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்.

"இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்திலும் பிரியப்படுகிறவர்களு மாயிருக்கிறார்கள்." (ரோமர் 1:19-32).

நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே : "புலத்தியனே, இதனைப் படிக்கும் அறிவுள்ளவனே நீ நிச்சயமாக இதனை நினைத்துப் பார்; ஆராய்ந்து சிந்தித்துப் பார்; ஆன்மீக அறிவு தெளிவு பெறுவாய்" என்கிறார் **அகத்தியர்.**

நிலையான ஞானக் கண்ணொளி

16. "நிசமான நால்வேதம், ஆறு சாஸ்திரம்
நினைவதுவை மயக்கி வைக்கும் புராண சாஸ்திரம்
வசமாக நால் மதத்தில் வந்த சாஸ்திரம்
மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்
குசமசக்குக் குசமசக்கு அப்பா! அப்பா!
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரந்தன்னை,
நிசமாய் நம்பின பேர்க்கு ஈடேற்றமுண்டு;
நிலை ஞானக் கண்ணொளியு நிற்குந்தானே."

கருத்துரை : நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், மனிதரின் நினைவை மயக்கும் புராணங்கள், நான்கு மதங்களில் தோன்றிய சாத்திரங்கள், இன்னும் தோன்றிய ஏனைய சாத்திரங்கள் எல்லாம் பொய்யும் புரட்டும் வீண்மயக்கமுமாகும் அப்பா! கூறுகின்றேன். சுயவேத சாத்திரத்தை உண்மையாக நம்பினவர்களுக்கு ஈடேற்ற முண்டு; அவர்களுக்கு நிலையான ஞானக்கண்ணொளியும் நிற்கும் என்றவாறு:

விளக்கவுரை

பகுத்தறிவுள்ள மெய்யறிவின் துணை கொண்டு சுய வேத சாத்திரத்திரத்தின் அடிப்படையில் அகத்தியர் மெய்ப்பொருளைத் தேடிக் கண்டடைந்தபோது, தாம்

அதற்கு முன்னர் அறிந்திருந்த எல்லாம் குசமசக்கு அதாவது மயக்கத்திற்குரிய பொய்யே என்று துணிகின்றார். இதனைக் கேட்பதற்குக் கடினமாக இருந்தாலும், உண்மையை உணர்ந்த மனம், இதுகாறும் தமது நம்பிக்கைக்கு ஆதாரமாக இருந்த வேதங்களையும் சாத்திரங்களையும் பிறவற்றையும் பொய் என்றும் மயக்கத்திற்குரியவை என்றும் கூறுவதில் வியப்பில்லை. மகாகவி எ.ஆ.கிருஷ்ண பிள்ளையின் அனுபவமும் இதற்கிசைய இருப்பதைக் காணலாம்; அவர் தாம் கிறிஸ்தவரான வரலாற்றில் கூறுகின்றார்:

> "சில காலம் பொறுத்து ஒரு தமிழ் வேதாகமத்தை உபாத்தியாயர் ஒருவரிடத்தில் இரவலாக வாங்கி ஆதி தொடங்கி வாசிக்க ஆரம்பித்தேன். யாத்திராகமம் இருபதாம் அதிகாரம் மட்டும் ஒழுங்காய் வாசித்தேன். வாசித்த அளவில், உலக சிருஷ்டிப்பு, பாவம் வந்த வகை, ஜலப்பிரளய விர்த்தாந்தம் முதலியவைகள் எல்லாம் உண்மையாய் நடந்தபடியே எழுதி இருக்கிறதென்றும், சைவ வைஷ்ணவ சமய நூல்களிற் சொல்லியிருக்கிற அவ்வகையான விர்த்தாந்தங்கள் எல்லாம் முழுக்கட்டுப்பாடும், பழங்கதைகளும் வேடிக்கையார்த்தமாய்ப் புனையப்பட்டவைகளுமாயிருக்கிறதென்று மனசில் தெளிவாய்ப் பட்டது."[93]

நால்வேதம் : இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என வேதம் நான்கு. இவற்றின் தோற்ற வரலாற்றை 13-ஆம் பாடல் உரையில் கண்டோம்.

ஆறு சாஸ்திரம் : இந்தச் சாத்திரங்களை மூன்று என்றும் ஆறு என்றும் கூறுவர். சாங்கியம், பதஞ்சலியம், வேதாந்தம் இவற்றை ஒரு பிரிவாக்குவர்.

அடுத்த பிரிவில் ஆறு சாத்திரங்கள் : (1) வேதாந்தம், (2) வைசேஷிகம் (3) பாட்டம், (4) பிரபாகரம், (5) பூருவமீமாம்சை, (6) உத்தரமீமாம்சை என்பன.

வேதங்களையும், சாத்திரங்களையும் ஆராய்ந்த தமிழ் ஞானிகள் சிலர் அவற்றை கடிந்துரைத்துள்ளமையைக் காண்க:

அகத்தியர் ஞானம் 3இல் 4ஆம் பாடல் :

"தயங்காமற் பிழைப்பதற் குயிந்த ஞானம்
சார்வாகப் பாராட்டி யின்னம் வேறே
மயங்குவதற்கு ஞானம் பார் முன்னோர் கூடி
மாட்டினார் கதை காவிய புராண மென்றும்
இயலான ரசம்தனிலே ஈப்புகுந்தற்போலும்
இசைந்திட்டார் சாஸ்திரங்கள் ஆறென்றேதான்
வரையான பயன் பெறவே வியாசர்தானும்
மாட்டினார் அரனார் உத்திரவினாலே."[94]

- பத்திரகிரியார் - 156 :

"சாஸ்திரத்தைச் சுட்டு சதுர் மறையைப் பொய்யாக்கி சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக்காலம்." [95]

திருமூலர் விருத்தம்

"பல கலைகளோது வகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால் வேதமாறு சாஸ்திரம்
அலையுட னேயஞ் செழுத்து வெளியுந்தானு
மவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்
மலையரசன் சிவன் பிர்மா விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங் காணார்
நிலைபெருக மோட்சவழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே."[96]

நினைவதுமை மயக்கி வைக்கும் புராண சாஸ்திரம் : மும்மூர்த்திகள் மீது பாடப்பட்டவை. ஒவ்வொருவருக்கும் அவ்வாறு புராணங்களாகப் பதினெட்டுப் புராணங்கள் உண்டு என்பர். மகாபுராணம், உபபுராணம் என்றும் இவற்றைப்பிரிப்பர். புராணங்கள் பதினெட்டாவன : (1) பிரமம், (2) பதுமம், (3) வைணவம், (4) சைவம், (5) பாகவதம், (6) பௌடிகம், (7) நாரதீயம், (8) மார்க்கண்டேயம், (9) ஆக்கினேயம், (10) பிரமனவ வர்த்தம், (11) இலையங்கம், (12) வராகம், (13) வாமனம், (14) கூர்மம், (15) மச்சியம், (16) காரூடம், (17) காந்தம், (18) பிரமாண்டம் என்பன.

இவற்றுள் சைவம், காந்தம், இலைங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரமாண்டம் என்பனவற்றைச் சிவபுராணத்தில் அடக்குவர்.

நாரதீயம், பாகவதம், காரூடம், வைணவம் என்பனவற்றை விஷ்ணு புராணத்தில் அடக்குவர்.

பிரமம், பதுமம் ஆகிய இரண்டும் பிரம்ம புராணம் என்பர். பிரமனவர்த்தம், சூரியபுராணமாம்; ஆக்கிநேயம் அக்கினிபுராணமாம்.

புராணங்களுக்கு உபபுராணம் 18 என்பர். அவை வருமாறு: (88 என்றும் கூறுவர்). உசனம், துபிலம், காளி, சனற்குமாரம், சாம்பவம், சிவதன்மம், சௌரம், துருவாசம், நந்தி, நாரசிங்கம், வசிட்டலைங்கம், வாருணம் முதலியனவாகும். [98A]

வசமாக நால் மதத்தில் வந்த சாஸ்திரம், மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம் : நாட்டில் அறுவகை சமயங்கள் உண்டு. அவை (1) சைவம், (2) வைணவம், (3) சமணம், (4) பௌத்தம், (5) சார்வகம் (மாயாவதி மதம்),

(6) உலகாயதம். இவற்றுள் பௌத்தம் கடவுள் கொள்கை இல்லாதது. உலகாயத மதமும் கடவுள் கொள்கை இல்லாதது. இவைபோக ஏனைய நான்கு மதங்களில் தோன்றிய சாத்திரங்கள் முதலான எல்லாவற்றையும் குறித்துக் காட்டுகின்றார். கடவுள் கொள்கை இல்லாதன மதமாகா என்பது பொருள்.

குசமசக்கு, குசமசக்கு, அப்பா! அப்பா! நான்கு வேதங்கள், அவற்றை முதனூலாக வைத்துத் தோன்றிய நூல்கள், ஆறு சாத்திரங்கள், புராண சாத்திரங்கள், நான்கு மதங்களிலே தோன்றிய பல சாத்திரங்கள், இன்னும் ஏனைய சாத்திரங்கள் எல்லாவற்றையும் ஆன்ம ஈடேற்றம் கருதி ஆராய்ந்து பார்த்த அகத்தியர், அவற்றை 'குசமசக்கு' என்று கணித்துக் கூறுகின்றார். 'குசமசக்கு' என்பதற்குப் பொய் என்று பொருள்; அதாவது இவை மெய்ப்பொருளை அறிவிப்பதுபோலத் தோன்றினும், எல்லாவற்றையும் நுணுகி ஆராய்ந்து காணுங்கால் பெரிய மயக்கமாகவே காணப்படுகின்றன. இவற்றுள் மெய்ப்பொருள் அறிவுத் தெளிவும் ஆன்மத் தெளிவும் காணாத நிலையில் பெருங்குழப்பமும் மயக்கமுமே விளைகின்றதால் கதை என்றும், பொய் என்றும் முடிவு கூறி மக்களைத் தெளிவிக்க விரும்புகின்றார் அகத்தியர் என்பது தெளிவு. அவர் 'பொய்' என்று கூறிவிட்டாரே என்று கோபங்கொள்ள இடமில்லை; ஏன் என்றால், திருவள்ளுவரும்,

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"[97]

என்று கூறியதில் உள்ளதை உள்ளது என்று கூறி ஒழுகுவதை 'வாழ்வதை மட்டும் கூறாமல், தமது உள்ளத்திலே ஆராய்ந்து கண்ட உண்மையையும் மறைத்து - தனக்குத்தானே பொய்யுரைத்து உண்மையை மறைத்து ஒழுகாமல் - உள்ளத்தில் கண்டறிந்த உண்மையைப் 'பொய்யாது' உலகத்தவருக்கு எடுத்து உரைக்க வேண்டும் என்றும், அத்தகையோன், தான் அவ்வாறு உண்மையைத் தெரிவித்தால்' உண்மையை உணர்ந்து ஆன்மத் தெளிவுபெற்று எல்லா உலகத்தவர் உள்ளத்திலும் அவன் நன்றியுடன் நினைத்துப் போற்றப்படுவான் என்றும் கூறுவதைக் காணலாம். தம் நாட்டுச் சமயங்களிலும் சாத்திரங்களிலும், வேதங்களிலும், தொண்ணூற்றாறு தத்துவங்களிலும் மெய்ப்பொருளாம் பரம்பொருளைத் தேடிக் காணாத வேதநாயக சாத்திரியார்.

"சமயம் ஈராறோர் ஆறு சாத்திரங்கள் வேத நான்கும்
அமையும் தத்துவம் தொண்ணூற்றாறும் (ஆறும்) கடந்தோன்"[98]

என்று அறுதியிட்டு உரைக்கின்றார்.

சங்கராச்சாரியரும் தாம் கண்ட உண்மையைப் பின்வருமாறு கூறுகின்றார்:

"உலகிலே பிறந்த முன்னோ
ரோதிய கலைகளெல்லாம்
நிலையதாஞ் சோதி தன்னை
நிசமதாய்ச் சொன்னதில்லை
பலப் பல பேதமாகப்
பங்கமாய்க் கூறு செய்து
அலகை போற் பொய்யைப் பேசி
யரு நரகமுந்திப் போனார்."
"சத்திய ஞான நூலின்
சாடையை யறியா மூடர்
வித்தைகள் மிகவும் கற்று
வீணரா யிறந்து போனார்
அத்தனை பெருமையாக
அவனியி லறியச் சொல்லி
முத்தியை அறிவா ரில்லை
மூடர்க்கு மோட்ச முண்டோ!"[99]

வால்மீகர் ஞானத்தில் கூறுவதையும் ஒப்பிட்டுக் காண்க:

"நில்லென்ர பெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம் தன்னுக்குள் நாலுவேதம்
வல்லமையாய் சாத்திரங்கள் இரு மூன்றாக
வயிர் பிழைக்கப் புராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக் கரைப்பது போல் வேதாந்தங்கள்
ஈட்டினாரவ ரவர்க்ள பாஷையாலே
தொல்லுலகில் நால் சாதி அநேகஞ்சாதி
தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே."[100]

இராமலிங்க வள்ளலார் வேத, ஆகம, சாத்திர புராண, இதிகாசங்கள் முடிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா என்றார்.

வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் கூறும் கதைகளையும், கற்பனைகளையும் அடிகள் ஒவ்வார். 'கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமல்லாம் மண்மூடிப்போக' என்பர்.

வேதாகமங்கள் சூதாகச் சொல்லுகின்றன. உண்மையை வெளிப்படையாக உரைக்கவில்லை, இவற்றால் என்ன பயன் என்பர்.

"வேதாக மங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்ன அல்லால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை
என்ன பயனோ இவை."

- 6 (முடி) சுத்தசிவ நிலை 30.

சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றஞ் சொல்லுகின்றனவேயன்றி நேத்திரங்கள் போற்காட்டவில்லை என்பர்.

"சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே - நேத்திரங்கள்
சிற்றம்பலவன் திருவருட்சீர் வண்ணம் என்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து."

- 6 (முடி) சுத்தசிவ நிலை 29.

வேதாகமாதிகளில் அறவே உண்மை இல்லாமற்போகவில்லை என்பதும் இலைமறைகாயாக ஆங்காங்கே சிற்சில உண்மைகள் சொல்லப்பட்டுள்ளன என்பதும் அடிகளின் கருத்தாம். வேதாகமங்களின் சூதுகளையும் உளவுகளையும் இறைவன் தனக்குக் காட்டினான் என்றும் உள்ளதனை உள்ளபடி உணர உரைத்தான் என்றும் கூறுவர்.

"வேதநெறி ஆகமத்தின் நெறிபவுராணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணர உரைத் தனையே
ஓதமற உணர்ந்தனன் வீண் போது கழிப்பதற்கோர்
எள்ளவும் எண்ணம் இலன் என்னொடுநீ புணர்ந்த
தீதறவே அனைத்து வல்ல சித்தாடல் புரிவாய்
சித்திசிகா மணியே என் திருநட நாயகனே."

- 6 (இடை) திருஅருட்புகழ்ச்சி 8.

தமிழ்நாட்டின் பெருஞ்சித்தரும் பேரறிஞருமான சி.என். அண்ணாதுரை அவர்கள் நமது நாட்டையும் ஏட்டையும் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்துத் தமது **நாடும் ஏடும்** என்னும் நூலில் கூறியுள்ள பின்வரும் செய்திகளையும் இணைத்து எண்ணிப் பார்க்க:

"முழுமுதற் கடவுள், எம்பெருமான், கயிலை வாழ் கடவுள், பார்வதி சமேதரன், அம்மையப்பன், அர்த்தநாரீஸ்வரன் அருள் திருவிளையாடல்களைக் கேளுங்கள்! அவருக்கு அன்பான பக்தன்

இயற்பகை என்பார். சிவனடியார்கள் கேட்டதையெல்லாம் இல்லையென்னாது அவர் கொடுத்து வந்தாராம். இயற்பகை, ஈசன்பால் மாளாக்காதல் கொண்டு அவனருளையே சிந்திந்து வாழ்ந்து வராநின்ற காலையில் சிவனார் புறப்பட்டார். எங்கு? தமதன்பன், இரக்கும் சிவநேசர்க்கு இல்லையென் தீயும் இயற்பகையின் பக்தியைப் பரிசோதிக்க, சிவனார் இயற்பகையிடம் சென்றார். சென்று "இல்லையென்னாதீயும்" இயற்பகையை நோக்கி, "ஆயின் உம் இல்லக் கிழத்தியை எம்மோடு அனுப்புக" என்றார். இயற்பகையும் மிக மகிழ்ந்து தம் மனை யாளையும், "அடாது" என அறிவுறுத்திய அறிவாளரையும், 'கூடாது' எனக்கூறிய சுற்றத்தாரையும் கொன்று குவித்து, இயற்பகையார் தம்மனையாளுடன் சிவனார் சிறிதும் தடையின்றிச் செல்லுமாறு செய்தார். பின்னர் சிவனார் தம் திருவுருவங் காண்பித்து அவரை ஆட்கொண்டாராம். என்னே! சிவனாரின் அன்பு!

தோழர்களே! உங்கள் சிந்தனைக்குச் சற்று வேலை கொடுங்கள். இயற்பகை மதத்தின்பால் தம் மதியை அடகு வைத்திருந்தமையால் தம் வாழ்க்கைத் துணைவியைக் கூட பிறனுடன் பிரியத்தோடு அனுப்பி வைக்கும் நிலையை அடைந்தார். மனைவியை வேண்டிய சிவனார் தாம் நேரில் வந்து கெட்டனரா? இல்லை. பிராமண வடிவங்கொண்டு வந்தார். இதற்குப் பொருள் திரு.வி.க. நடையிலே கூறவேண்டுமானால் 'காமாந்தகாரங் கொண்டு கட்டழிந்த தோற்றத்தோடு கூடிய பிராமணன்' என்பதாகும். இத்தகைய பிராமணன் கேட்டபோது கூசாமல் எண்ணாமல் ஏதும் கேட்காமல் தன் மனையாளைத் தந்தார் இயற்பகையார். சிவனாருக்கும் வேறுவகைச் சோதனைகள் கிடைத்தில போலும். பக்தனைப்பரிசோதிக்க, காமாந்தகாரங்கொண்ட பிராமணனுடன் மனைவியை அவனை ஏதுங்கேட்காமல் அனுப்பி வைத்த பண்பு எதை விளக்குகின்றது? பெண்கள் ஆண்களுக்கு அடிமை என்பதையல்லவா? கணவன் பக்தியைத்தானே பரிசோதிக்க வந்தார் கடவுள்? தன்னை ஏன் பரிசோதிக்க வேண்டும்? தான் ஏன் கணவனைவிட்டு அகல வேண்டும் என்ற கருத்து அவர் தம் மனைவியாளுக்கும் தோன்றவில்லை!

....

"இன்றேல் சதி அநுசூயைபோல் சற்று தம் அறிவால் அன்பர் (கணவர்) செய்கையையும் ஆண்டவனின் வேண்டுகோளையும் இயற்பகையின் மனைவி அலசிப் பார்த்திருக்கலாகாதா என்று கேட்கின்றேன். அநுசூயா பதிவிரதா சிரோமணி; இரும்புக் கடலையைச் சிற்றுண்டியாக்கித் தரும் பாங்குடைய பத்தினி; விருந்தினரை உபசரிக்கும் உத்தமி-அவர் தம்

பெருமை ஏழுலகங்களிலும் எட்டிப்பரவிற்று. அநுசூயையின் பெருமை தமக்கு இழிவு தருகின்றது; அதனால் தம் சீரும் சிறப்பும் சிதைகின்றன என்று கருதினர் மும்மூர்த்திகளின் மனைவியர்; அழுக்காறு கொண்டனர். ஆகவே, தத்தம் துணைவர்களை ஏவி அநுசூயையின் பெருமையைக் குலைத்துச் சிறுமைப்படுத்தச் சொல்லினர். மூலக் கடளவுளர் மூவரும் தத்தம் இல்லக்கிழத்திகளின் ஏவலைச் சிரமேற்கொண்டு சென்றனர் அநுசூயையின் வீட்டிற்கு. அநுசூயையின் கணவர் வெளியே சென்று இருக்கும்போது துறவிகள் போல மாற்றுருவங்கொண்ட மும்மூர்த்திகளும் மங்கை நல்லாளை நண்ணினர்; பிச்சை கேட்டனர். "தருவேன்" என்றாள் மங்கை. "சரி எங்கள் இச்சைப்படி பிச்சை இடுவையோ!" என்றனர் மும்மூர்த்திகள். "ஆகா அவ்விதமே உங்கள் இச்சைபடி பிச்சையிடுவேன் என்றாள்" நங்கை. உடனே மூர்த்திகள் மூவரும் "அங்ஙனமாயின் நிர்வாணமாக நின்று நீ எமக்குப் பிச்சையிடுக" என்றனர். வந்த விருந்தினரை உபசரித்தல் தன் கடமை; மேலும் அவர்கள் இச்சைபடி பிச்சையிடுவதாகவும் உறுதி கூறியிருக்கின்றாள் எனினும் அநுசூயை அவர்கள்மீது ஐயங்கொண்டாள். அவர்களை நோக்கி "நீங்கள் கேட்ட வண்ணம் செய்தல் முறை. ஆனால் அது நீதிக்கு முரண்பாடானது; அறிவுக்கு ஒவ்வாதது" என்று மறுத்தாள்; உடனே கோபங்கொண்டனர் மும்மூர்த்திகளும். "'எங்களை யாரென்று நினைத்தாய்? நாங்கள் மும்மூர்த்திகள்; சொன்ன சொல்லை மீறினால் நாங்கள் சபிப்போம் உன்னை" என்று உறுமினார்கள். மும்மூர்த்திகள் வந்து கேட்கின்றார்களே என்று அநுசூயை பயங்கொள்ளவுமில்லை; மதிமயங்கவுமில்லை; "மும்மூர்த்திகள் நீங்களல்ல; மும்மூர்த்திகள் என்று நவின்று நாட்டை நாசம் செய்ய வந்த வேடதாரிகளே நீங்கள்; அல்லது மும்மூர்த்திகளே யாயினும் அறிவு மழுங்கி ஆராய்ச்சி மடிந்து நீங்கள் மானமற்றவராய் வந்திருத்தல் வேண்டும். இது கேட்கத் தகுதியற்றது என்ற பாகுபாடு அறியாமூடர்களே! உங்களை நம்பேன்" என்று கூறினாளாம். சொன்ன சொல் தவறாதிருக்க வேண்டுமல்லவா? பின்னர் தனது கற்பின் மகிமையால் அவர்களைக் குழந்தைகளாக்கிக் கொண்டு பிச்சையிட்டதாகக் கதை சொல்கின்றது. அதன் உண்மை ஒருபுறம் இருக்கட்டும். கடவுளே நேரே வந்து கேட்டபோதும் தரும நியாயம் எடுத்துச் சொல்லி வாதாடின அந்த அளவுக்காவது இயற்பகையாரின் மனையாள் கேட்டிருக்கலாம். மனைவியைத் தாவென்னும் மாண்புமிக்க மகேஸ்வரனையும், "நிர்வாணமாய் பிச்சையிடு" என்று கேட்கும் நீதியற்ற கடவுளையும் பாடும் நிகண்டுகளா நமக்குத் தேவை?

"இதே பரமசிவன் திருவிளையாடற் புராணத்திலே புரிந்துள்ள லீலையைக் காண்போம். தாய்ப்பன்றி இறந்துவிட்டது. பன்றிக்குட்டிகள் பசியால் தவிக்கின்றன. கண்டார் முப்புரம் எரித்த பெம்மான். உளமுருகினார்; உடனே தாய்ப்பன்றியின் உருவம் தாங்கினார். பன்றிக்குட்டிகளின் பசி தீர்த்தார்; அவற்றைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார். பின்னர் அவற்றை பாண்டியனிடம் கொண்டு சென்று ஆங்கு பாண்டியன் அவையிலே வீற்றிருந்த மந்திரிகளை நீக்கி அவர்களுக்குப் பதிலாக இவைகளை அங்கு மந்திரிகளாக அமர்த்தினார். அதனுடன் விட்டாரா? அம்மந்திரிமார்களின் பத்தினிகளையும் அவைகளுக்குப் பத்தினிமார்களாகுமாறு செய்தார் என்று திருவிளையாடல் புராணம் செப்புகின்றது. இது நாடறிந்த உண்மை. இது தகுமா? முறையா? அறிஞர் ஆற்றும் அறமா? ஆண்டவன் செய்யும் அற்புதமா? ஆபாச வேலையல்லவா இது? அக்கிரமமல்லவா இது? மக்களை மடையராக்கும் வழியல்லவா இது? இதனைப்பாடும் ஏடும் வேண்டுமா நமக்கு? நவிலுங்கள் நாட்டின் எதிர்காலப் பெரியோர்களே!

"கடவுளின் கயமைத் தனத்தையும் கபோதி குணத்தையும் ஏடுகளின்று எடுத்துக் காட்டப்புகின் அஃது ஓர் எல்லைக்குட்படாது நீண்டு செல்லும்... ... ... இத்தகைய மதம் கலந்த அநாகரிக, ஆபாச புராணங்கள் நிறைந்த கதைகளைப் பாடுதற்கே ஏடுகள் பயன்படுமானால் அறிவு என்றாவது நம் நாட்டில் உதிக்குமா? ஆண்மை பெருகுமா? ஆற்றல் அதிகரிக்குமா? வாழ்க்கையின் வளம் காண முடியுமாவென்று கேட்கிறேன்.

"இத்தகைய ஏடுகள் மதியை வெருட்டி, மக்கள் அறிவை மயக்கி, ஆண்டவன் அருளால் அனைத்தையும் அரைக்கணத்தில் பெறலாம் என்ற ஆசையைக் கிளப்பி, மக்கள் முயற்சிக்கு முற்றுப்புள்ளிவைத்து, மக்களை முழு மூடர்களாக்குகின்றன. அதுவுமன்றி நாம் இலக்கியங்களிலே ஏடுகளிலே மதத்தைப் புகுத்தி ஆண்டவன் திருவிளையாடல்கள் என்றும், அவதாரங்கள் என்றும் அறிவுக்குப் பொருந்தாதவற்றைக் கூறிக் கடவுளருக்குக் கயமைத் தனத்தையும் கபோதிக் குணத்தையும் ஆபாச ஆசாரங்களையும் ஏற்றி ஏளனத்திற்குள்ளாக்குகின்றோம்; கடவுளை மதிகெட்டவனாகக் காட்டுகின்றோம். **இவைகளை ஒழித்துவிட்டு மக்கள் அறிவு பெறத்தக்க வேறு ஏடுகளை இக்கால இலக்கியப் பண்டிதர்கள் ஏன் செய்து தரலாகாது?**"[102]

இரட்சணிய மகாகவி எ.ஆ.கிருஷ்ண பிள்ளை தாம் ஆராய்ந்தறிந்துரைத்த சில உண்மைகளை இரட்சணிய யாத்திரிகம் என்னும் தன்னிகரில்லாத் தமிழ்ப் பெருங்காப்பியத்தில் எழுதி வைத்துள்ளார். இவற்றையும் சிந்தித்து அறிவு தெளிக.

இப்பாடல்களிலே நாம் மேலே கண்ட வேதங்கள் சாத்திரங்கள் முதலானவற்றில் அறியப்படும் தெய்வங்களின் பண்புகளை எடுத்துக்கூறி மக்களை மெய்பொருளிடம் தேடி வருவதற்கு அழைப்பு விடுக்கின்றார்.

"பூமி பாரந்தீர்க்கவந்த பொல்லாங் கியற்றிப் பொய் பேசிக்
காம வெறியா லீரெண்ணா யிரங்கோ வயிரைக் கற்பழித்த
சீமானுக்குத் தொழும்புசெய்து தீவாய் நரகிற் பதையாமற்
சாமி யேசுக் கிறிஸ்துதிருச் சரண மடையிமின் செகத்தீரே!

"மூர்க்க மான வைணவமே முதலாம் முழுப் புரட்டைப்
பார்க்கப் பார்க்கப் பாவமலாற் பயனென் றில்லை யிரட்சிப்பின்
மார்க்க வுபதே சங்களையு மருவு புருடார்த் தங்களையுந்
தீர்க்க மாயுய்த் துணர்ந்தியேசு திருத்தாள் வணங்கும் செகத்தீரே!

"பொல்லாவுலகப் புரட்டர் வெறும் பொய்யை நிறைத்துக் கட்டி வைத்திருத்தி
எல்லாக் கதையு மொிநரகுக் கிழுக்கும் பாசமென வறிந்து
சொல்லாற் பொருளாற் பழுதில்லாச் சுருதி மொழியைக் கருத்திருத்தி
எல்லாம் வல்ல பெருமானை யிறைஞ்ச வாரும் செகத்தீரே!

"ஆறு சமய படுகுழிவீழ் தந்தோ வறிந்து மதனிடைநின்
றேறு சமய மிதுவன்றென் றியம்பி யமிழ்ந்து மேழைகாள்
வேறு சமய மிலையேசு விரும்பி விரும்பி யிரட்சிப்பைக்
கூறு சமய மிதுகண்டீர் கூடி வாரும் செகத்தீரே!"[103]

கூறுகின்றேன் சுயவேத சாஸ்திரந்தன்னை; நிசமாய் நம்பின பேர்க்கு ஈடேற்றமுண்டு; நிலைஞானக் கண்ணொளியும் நிற்குந்தானே:

சுய வேதம் என்றதால் தாம் கண்ட மெய்ப்பொருளாம் கிறிஸ்து, பெருமானை வெளிப்படுத்தும் வேதாகமத்தைக் குறித்துக் காட்டுகின்றார்.

சாஸ்திரந்தன்னை என்றதால் தாம் மெய்ப்பொருள் காண்பதற்குத் துணைபுரிந்த வேதம் ஈடேற்றம் அல்லது மீட்பு அடைவதற்குத் தரும் போதனையை அல்லது சித்தாந்தத்தைக் குறிக்கின்றார். இந்தச் சித்தாந்தத்தை மேல்வரும் பாடல்களில் தொடர்ந்து கூறுகின்றார்.

எ.ஆ. கிருஷ்ணபிள்ளை சத்திய வேதத்தை பின்வரும் பாட்டில் புலப்படுத்துவதைக் காணலாகும்.

"வேத மொன்றே மெய்யுள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குதிதோ
நாத னொருவ ருளருலக நவிலுஞ் சான்று நற்கதியின்
பாதை யொன்றுண்டது கிறிஸ்து மார்க்க மிதனைப் பகுத்துணர்ந்து
கோதில் பரம குருபாதங் கும்பிட்ட டேத்தும் செகத்தீரே"![104]

சங்கராச்சாரியார் **சத்திய ஞான நூலின்** சிறப்பைப் பாடுகின்றார்:

"சத்திய ஞானநூலின்
சாடையை யறியா மூடர்
வித்தைகள் மிகவும் கற்று
வீணராயிறந்து போனார்
அத்தனை பெருமையாக
அவனியிலறியச் சொல்லி
முக்தியை யறிவாரில்லை
மூடர்க்கு மோட்ச முண்டோ."[105]

நிசமாய் நம்பின பேர்க்கு ஈடேற்றமுண்டு : மெய்யாக நம்பினவர்களுக்கு மீட்பு என்னும் ஈடேற்றம் உண்டு என்கிறார். ஈடேற்றத்திற்கு விசுவாசமாகிய நம்பிக்கையின் இன்றியமையாமையை திருவசனம் அழுத்தமாகச் சொல்லுகின்றது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்." (எபிரெயர் 11:6) .

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்." (அப்.16:31).

"இயேசு அவனை நோக்கி : நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறயா என்றார்." (யோவான் 11:25,26).

"நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்." (ரோமர் 10:10).

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." (மாற்கு 16:16).

நிலைஞானக் கண்ணொளியும் நிற்குந்தானே : பரமகுருவாகிய கிறிஸ்துவே மனுக்குலத்தின் நிலையான ஞானமாக இருக்கின்றார். "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்." (1 கொரி.1:31). கிறிஸ்துவுக்குள் மக்களுக்கு வேண்டிய சகலமும் அடங்கியிருக்கிறது. "அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கி-யிருக்கின்றன." (கொலோ.2:3).

கிறிஸ்து வேதமாகவும் வேதத்தின் வெளிச்சமாகவும், மெய்ப்பொருளாகவும் விளங்குகின்றார் என்பதனை இரட்சணியக் கவிஞர் பாடுகின்றார்:

"வேதமே வேத விளக்கமே விளக்கின்
விழுத்தகு சோதியே விமல
போதமே போதங் கடந்தமெய்ப் பொருளே
பொருள் புலப் படவெளி வந்த
நாதமே யூத குலநரா திபனே
நன்னெறி பிழைத்துல குழலும்
ஆதலா லடியே னன்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே."[106]

மாந்தரின் அக இருளை நீக்கி மெய்யொளியைத் தருபவர், மெய் ஒளியும், ஞானமும் வேதத்தின் விழுப்பொருளுமாகிய மேசியா கிறிஸ்துவே என்பதை எ.ஆ.கிருஷ்ணபிள்ளை தெளிவிக்கின்றார்:

"மெய்ஒளியே வித்தகமே வேதத்தின்
விழுப்பொ ருளேமே சியாவே
துய்யபரி சுத்தத்திரித் துவத்தில் ஒன்றாம்தனிச்
சுடரே துரோக சிந்தை
வெய்ய பொருள் ஆசை நன்றி ஈனம் அன்
பிலாமை மறம்விடர் சிநேகம்
எய்திஉடைமை அடியேனும் மறவாமல்
எனக்கருள்செய் திரங்கு வீரே"[107]

வேதத்தின் திருவசனங்களும், இவை வெளிப்படுத்தும் உலகத்தின் ஒளியாகிய இம்மானுவேல் கிறிஸ்துவும் ஆன்மாக்களுக்கு நிலையான ஞானக் கண்ணொளியைத் தரும் வழியைக் காட்டுகின்றார் அகத்தியர் இப்பாடலில்.

கரை ஏறவேண்டும்

17. "கண்ணீரைத் தான்விட்டு உள் அசுத்தம் போக்கி,
காரண சற்குருவினால் கசட்டைப் போக்கி,

வெண்ணீராம் ஆதித் திருவேதாந்தத்தின்
வீடேக வேணும் என்றால் விரும்பிக்கேளு;

தண்ணீரை உருவேற்றித் தியானம் செய்து
சச்சிதானந் தனையே சரணம் செய்து

கண்ணீரை விட்டழுது கசட்டைப் போக்கி
கரை ஏறவேணும் இதைக் கைக்கொள்வீரே!

கருத்துரை : ஒளி பொருந்திய திருவசனங்களாகிய ஆதித்திருவேதம் வெளிப்படுத்தும் வீடுபேற்றினை அடைய வேண்டும் என்றால், நான் சொல்லுவதைக் கேளுங்கள்; வாழ்க்கையில் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி கண்ணீர் சிந்தி அழுது, உள்ளத்தினின்று அவ்வசுத்தங்களை நீக்கி மனம் திரும்ப வேண்டும்; சத்திதானந்தனாகியக் கடவுளிடம் சரண் அடைந்து, அவரையே தியானம் செய்து குற்றங்களுக்காகக் கண்ணீர்விட்டு அழுது தண்ணீரில் திருமுழுக்குப் பெற்றுக் கரை ஏறவேண்டும்; முதல் காரணமாக விளங்கும் சற்குருவினால் களங்கத்தைப் போக்க வேண்டும்; இதைக் கைக்கொள்ளுங்கள்.

விளக்கவுரை

இப்பாடலில் மக்கள் ஈடேற்றம் அடைவதற்குரிய வழிவகைகளை உணர்த்துகின்றார்.

கண்ணீரைத் தான் விட்டழுது உன் அசுத்தம்போக்கி: 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்பது பக்தி. மெய்ப்பொருளாம் கிறிஸ்து பெருமானிடத்தில் உண்டான நம்பிக்கையின் விளைவாக அவரைச் சொந்த மீட்பராக ஒருவர் ஏற்றுக்கொள்கின்றார். அந்த ஆன்மாவில் கர்த்தருடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் பாவங்களை உணர்த்திக் காட்டுகின்றார். (யோவான் 16:8). கடவுளுக்கு விரோதமாக தான் வாழ்ந்த வாழ்க்கையின் பாவங்களை ஆவியானவர் உணர்த்த உணர்ந்துகொண்ட பக்தன் அப்பாவங்களுக்காக மனம் வருந்தி, கடவுளைத் தன் உள்ளத்தின் அசுத்த வாழ்க்கையினாலே துக்கப்படுத்தியதற்காக வருத்தப்பட்டுக் கண்ணீர் வடிக்கின்றான். தன்தவறுகளில் இருந்து மனந்திரும்புகிறான். கடவுள் எல்லா மனிதருக்கும் மனந்திரும்ப வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." (அப்.17:30).

"கண்ணீரை விட்டழுது கசட்சைப் போக்கி" என்று இப்பாடலில் பின்னரும் கூறுவதைக் காண்க. மனந்திரும்புதலின் விளைவான இந்தக் கண்ணீர் பாவத்தைக் கசந்து கொள்வதாலும் வெறுப்பதாலும் உண்டாவதாகும். **இரட்சணிய மனோகரத்தில்** வரும் இப்பாடல்கள் மெய்யான மனந்திரும்புதலில் வெளிப்படும் கண்ணீர் சொரிதலைக் காட்டுகின்றன:

"கசந்து பவத்தை உணர்ந்து சொரி
கண்ணீர்த் திருமஞ்சனம் ஆட்டி
இசைந்த ஜெபமாலிகை சூட்டி
இதய பீடத்து இனிது இருத்தி

அசைந்தி டாமெய் விசுவாச
அன்பின் கிரியை நிவேதித்துப்
பசைந்த மனத்தோடு யேசு திருப்
பதம்பூ சியுமின் செகத்தீரே"[108]

"தனியிடத்திருந்து பாவச் சழக்கினைக் கருதி யாவி
அநுமதி பெற்றுத் தேவ அன்பினை யிதயத் துன்னி
கனியுமுள் என்பி னோடு கண்கணீர் ததும்ப நின்று
மநுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே."[109]

தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனாரும் இளமையில் கிறிஸ்து இகழ்ந்து பேசியதற்கு வருந்தி மனந்திரும்பிப் பின்னர் பாடுகின்றார்:

"ஏசினேன் உன்னை இனிய மொழியை இளமையிலே
கூசினேன் இல்லை குறையினைப் பின்னே குறித்தழுதேன்
ஏசுவே! உன்னருள் என்னுளம் எய்திய தெப்படியோ
மாசிலா அன்பே! மகனாய் உருக்கொண்ட மாணிக்கமே!"[110]

தர்சு பட்டணத்துச் சவுல் பரம்பொருளாம் கிறிஸ்து பெருமானின் சீடர்களைத் துன்புறுத்தியதால் மூன்று நாள் இரவும் பகலும் உபவாசித்து வருந்தி மனந்திரும்பிய வரலாற்றை அப்போஸ்தலர் நடபடிகளில் 9:6-18இல் படிக்கின்றோம். "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக்.13:5) என்று பரமகுரு கூறுகின்றார்.

காரண சற்குருவினால் கசட்சைப் போக்கி : கிறிஸ்து பெருமானைச் சற்குரு என்று குறிக்கின்றார். காரண சற்குரு என்று அவரைக் குறித்துக் காட்டியதால் எல்லா உலகங்களும் படைக்கப்பட்டதற்குக் காரணம் அவர்தான் என்பதைத் தெரிவிக்கின்றார். அவர் மனிதனாகி சற்குருவாவதற்கு முன்னர் அவர் திருவார்த்தை (LOGOS-WORD) என்று அறியப்பட்டிருந்தார்.

"ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவான் 1:1-3). "இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (எபேசியர் 3:11).

பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள எல்லாருக்கும் நாமகாரணர் அவரே! "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள

முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு" ... (எபே.3:14,15).

"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது.

அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். (கொலோ.1:15-18).

பாவக்குற்றத்தை, அகந்தையை, அசட்டையை இந்தச் சற்குருவினால் மாத்திரமே போக்க முடியும். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." (அப்போஸ்தலர் 4:12), ஏன் என்றால், இந்தச் சற்குரு பாவிகளை மீட்க உலகத்திற்கு வந்தார். "பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்." (1 தீமோ.1:15).

தாமே பழுதற்ற பாவப்பிராயச்சித்த பலியானார். பாவமன்னிப்பாகிய மீட்பை மனிதருக்கு உண்டாக்கினார். "வெள்ளாட்டுக் கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்." (எபிரெயர் 9:12). "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." (எபிரெயர் 9:28).

கிறிஸ்துவின் மூலமாக அல்லாமல் ஒருவரும் பிதாவாகிய தேவனிடத்தில் சேர இயலாது. "கிறிஸ்து, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்,"

என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான் 14:6).

இரட்சணிய மகா கவிஞரும் கிறிஸ்து பெருமானைச் சற்குருவாகக் கண்டு, உலகத்தவரை அவரிடமாக வருமாறு அழைக்கின்றார்:

"ஒருசின் மயசற் குருவாகி யுலகத் துதித்து சீவரட்சை
தருசன் மார்க்க நெறியிதெனத் தமநல்லொழுக்கஞ் சான்றாகத்
துருசின் மனத்தோ டுபதேசஞ் சொல்லிச் சுகிர்த பலியாய்வெங்
குருசின் மடிந்த குருசிலைக்கை கூப்பவாரும் செகத்தீரே!"[111]

அகத்தியர் ஞானம் 56ஆம் பாடலிலும் இந்தச் சற்குருவை வணங்கி நின்றால்தான் மாறாத பெருவாழ்வு வாழலாம் என்கின்றார்.

"அண்டரண்டங் கடந்து நின்ற சோதி தானு
மவனி தனிலுடைந்த கல்லில மருமோ சொல்
எண்டிசையு மெவ்வுயிருமான சோதி
ஈன மரங் கல்லூகளி லிருப்பாரோ தான்
தொண்டர்களே யுங்களுக் கேனிந்த வார்த்தை
சொன்னவர்க்குங் கேட்டவர்க்குஞ் சொர்க்கமில்லை
மண்டலத்தில் சற்குருவை வணங்கி நின்றால்
மாறாத பெருவாழ்வு வாழலாமே."[112]

உலகத்திலே பலவற்றை பலவாறு நம்பி பாவம் நீங்காமல் முடிவில் கிறிஸ்து பெருமானை சரணடைந்து அவரை அமல குருவாகக் கண்டடைந்ததை ஜியார்ஜ் சேர்வை வேதநாயகம் கூறுகின்றதைக் காணுங்கள்:

"பாவத்தைக் கூசாமற் செய்தொரு சடங்கினால்
பரிகாரஞ் செய்துவிடலாம்;
பலபுண்ணி யங்களாற் கடவுளைக் கடனாக்கிப்
பரத்திற் புகுந்துவிடலாம்;
மாவேத மிதுவென்ற பொய்வேதம் நம்பியே
மாபாவி யாய் வளர்ந்தேன்.
மனரம்மிய மற்று நான் மயல்விண்டு கிறிஸ்துவின்
மார்க்கத்திற் சரணடைந்தேன்.
பாவத்தை மென்மேலும் செய்து கொண்டேயிரு
பரிகாரம் செய்வனென்று
பரிசுத்த யேசுஉத் தரவுசெய் தாற்போல
பலபேர்கள் நடை கண்டனன்.
மேவியொத் தவரோடு நானும்பல் காலமாய்
விழுந்து மறு படிவிழித்து

மெய்யாவுன் முகங்கண்ட சீடன்போ லமுதிட்டேன்
வேதனே யமல குருவே!"[113]

தண்ணீரை உருவேற்றித் தியானஞ்செய்து, சச்சிதானந்தனையே சரணஞ்செய்து, கண்ணீரை விட்டமுது கசட்டைப் போக்கி, கரையேற வேணும்; இதைக் கைக்கொள்வீரே:

மெய்வாழ்வு பெறுவதற்குக் கைக்கொள்ள வேண்டியவற்றை இப்பாடலிலே அன்பாக வற்புறுத்தி அகத்தியர் கூறிக்கொண்டு வருகின்றார். சற்குருவை அடைந்து மனந்திரும்பியவர்கள் மேற்கொண்டு செய்ய வேண்டுவனவற்றைக் கூறுகின்றார். தண்ணீரை உருவேற்றித் தியானஞ்செய்து என்றதால் விசுவாசித்து மனந்திரும்பியவர்கள் பெறவேண்டிய ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கினை இங்கே குறிக்கின்றார். பெந்தேகொஸ்தே (ஐம்பதாம்) திருநாளன்று முதன்முதல் சற்குருவை விசுவாசத்தால் மக்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் தங்கள பாவங்களுக்குத் தப்புவதற்கு என்ன செய்யவேண்டும் என்று பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் கேட்டபொழுது (அப்.2:37), பரிசுத்த ஆவியானவரின் வயப்பட்ட பேதுரு அளித்த பதிலைக் காண்க:

"பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்." (அப்போஸ்தலர் 2:38-40).

பரிசுத்த ஆவியானவரின் இக்கூற்றுக்குக் குறைவாக யாரும் என்றும் கூற இயலாது. 38ஆம் திருவசனத்தில் பாவமன்னிப்பைப் பெறுவதற்கும் பரிசுத்த ஆவியானவரை வரமாக அல்லது ஈவாகப் பெறுவதற்கும் மனந்திரும்பித் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் தாமே பேதுருவின் வாயிலாகக் கட்டளையருளிச் செய்துள்ளதைக் காண்கின்றோம். திருமுழுக்குக்குக் கீழ்ப்படியுங்கால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே ஊற்றப்பட்டு, அவரது அபிஷேகத்தைப் பெறுகின்றோம். (1 யோவான் 2:27).

இந்த அநுபவம் ஆன்மாக்களில் பரமகுருவின் இரண்டாம் வருகை மட்டும் நடைமுறை பெறவேண்டியது என்பது அவசியமாகும். இவ்வாறு பாவமன்னிப்பாகிய இரட்சிப்பினைப் பெறும் ஆன்மாக்களுக்கு இன்னொரு அநுபவமும் நடக்கின்றது. அதனை அப்போஸ்தலர் 2:47ல் அறிகின்றோம்.

“இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். இதனால் பரமகுரு தமது திருச்சபையை ஏற்படுத்தருளிய அந்த நாள் முதற்கொண்டு மக்கள் மீட்படைந்து வந்தார்கள்; அவ்வாறு மீட்படைந்த மக்களைப் **பரமகுரு** தாமே தமது திருச்சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் என்பதை அறிகின்றோம். தண்ணீரை உருவேற்றிக் கொள்ள வேண்டும், என்பதால் திருமுழுக்கைக் குறித்துக் காட்டிய அகத்தியர் 21ஆம் பாடலில் தீட்சை பெற வேண்டும் என்று ஞானஸ்நானத்தைக் குறித்துக் காட்டுகின்றார். 28ஆம் பாடலில் மீண்டும் “முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்” என்று திருமுழுக்கினைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

பெந்கேகொஸ்தே திருநாளன்று பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்ட மக்கள் 3000 பேர் திருமுழுக்குப் பெற்றதை அறிகின்றோம். “அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.'' (அப்.2:41). திருமுழுக்குப் பெறுவதுடன் தியானஞ்செய்து என்னும் தொடரையும் அகத்தியர் இணைக்கின்றார். தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மக்கள் தங்களில் திருக்கோயில் கொண்டிருக்கும் பரிசுத்த ஆவியானவரின் (1 கொரி.3:16,17) துணையுடன் தியான வாழ்வில் ஈடுபட்டு, **பரமகுருவைச்** சேரவேண்டும்.

3000 பேர் இவ்வாறு தியானவாழ்வில் இருந்ததை அப்.2:42இல் அறிகின்றோம். “அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.”

சச்சிதானந்தனையே சரணஞ்செய்து: சற்குருவாகிய இம்மானுவேல் கிறிஸ்துவைச் சச்சிதானந்தன் அதாவது அவர் சத்து-சித்து-ஆனந்தமாய் விளங்குகின்றார் என்று அகத்தியர் காட்டுகின்றார். மகாகவி எ.ஆ.கிருஷ்ணபிள்ளையும் கிறிஸ்துவே எனக்கு எல்லாமாயிருக்கிறார் என்னும் பதிகத்தின் முதல் பாடலில் அவரை இவ்வாறு பாடிப் போற்றுகின்றார்:

“சத்தாய்நிட் களமாயொரு சாமியமும் இலதாய்ச்
சித்தாயா னந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே
எத்தால்நா யடியேன்கடைத் தேறுவனென் பவந்தீர்ந்
தத்தாவுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே”[114]

நற்செய்திக் கவிராயர் வேதநாயக சாத்திரியாரும்;

‘சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா
தாவீதின் மைந்தா ஓசன்னா! சரணபதந்தா”[115]

என்று கீர்த்தனம் செய்கின்றார்.

சரணம் செய்து என்பதிலே **பரம குருவைப்** போற்றுதலும், அவருக்குத் தன் வாழ்வைச் சரணம் செய்து - அடைக்கலமாக ஒப்புக் கொடுத்து வாழ்தல் என்னும் பொருளும் பொதிந்திருக்கின்றது. கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்ற ஆத்துமா கிறிஸ்துவுக்குச் சொந்தமாகி விடுகின்றது. பக்தன் தன்னைக் கிறிஸ்துவுக்கு அடைக்கலமாக ஒப்புவித்து விடுகின்றான். (1 கொரி.6:20). "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." இந்த வாழ்வே பேரின்ப கீதமாகிய இரட்சணிய மனோகரத்தில் கையடைப் பதிகத்தில் பாடப்படுகின்றது. அதில் வரும் ஒரு பாட்டை ஒப்பிட்டுக் காண்க:

"பக்தனாய்ப் பாடேன் சுத்தனா யொழுகேன்
பகலெலாம் பாவமே பழகி
எத்தனாய்க் கழித்தே னின்றுளே னாளை
யிலனென வெண்ணவும் படுவேன்
பித்தனேற் குனது பேரரு ளல்லாற்
பிழைக்குமா றில்லையா தலினால்
அத்தனே யடியே னின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே."

"மண்டலத் தெனைப்போற் பாவியு மில்லை
மற்றுனைப் பொருவதோர் தெய்வம்
உண்டொருக் காலென் றுணர்வுளா ரெவரு
முறைத்திடா ருண்மையா தலினால்
தொண்டருக் கிரங்கி மனுவுரு வெடுத்த
தொல்லைமூ லப்பரஞ் சுடரே
அண்டருக் கரசே நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே."

எனாதியா னென்னு முடல்பொரு ளாவி
யிவையொரு மூன்றையு மின்னே
உனாதெனா வுனக்கே கையளித் தெளியே
னுன்னருட் பற்றையே யுவந்து
மனாதிதத் துவங்கட் கத்தமா யன்பர்
மனத்தவி சுகந்துவீற் றிருக்கும்
அநாத ரட்சகனே நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே."

கண்ணீரை விட்டழுது கசட்டைப் போக்கி என்றதால் திருமுழுக்குப் பெற்று-மறுபிறப்படைந்து பரமகுருவுக்கு ஆட்பட்ட வாழ்க்கையிலே, அதன் வளர்ச்சிலே-அதன் தேர்ச்சியிலே உலகத்தால் கறைபட பொல்லாங்கன் இழுக்கும் சமயங்களில் மனந்திரும்பிக் கண்ணீர் விட்டழுது அவரது திருவடிகளை அண்டிப் பிடித்துக் கொண்டு வாழ்தல் வேண்டும் என்பதை உணர்த்துகின்றார்.

> "நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்" (சங்.32:5).
>
> "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9).

மனந்திரும்புதல், ஆன்மா தன் ஆண்டவர் பரமகுருவை விண்ணுலகில் அடையும் வரைக்கும் இவ்வுலக வாழ்வில் இருக்க வேண்டிய ஒரு தொடர்ந்த அனுபவமாகும்.

"கல்லான இருதய முடைந்துருகி யிருவிழிக
  ளூழ்ந்து கண்ணீர் சொரியவே
கையுச்சி மேன்முகிழ்த் தஞ்சலித் தங்கபுள
  காங்கித மெழும்ப நின்றே
எல்லா நலத்துக்கு முலகா ரணமாய்
  வெந்தை நின தருளையுன்னி
ஏழையே னாத்தழு தழுக்கவன் பொடுபணிந்
  தெந்நாளு மேத்த வுன்றன்
நல்லாவி யைத்தந்து திரமான விசுவாசம்
  நல்கியிக லோக போகமே
நாடாது பரலோக போகமே விழைகின்ற
  நன்மனம் நிலைக்க வருள்வாய்
பல்லூழி யூழியொரு கணமாக வலகிடும்
  பார மார்த்திக மோனமே
பக்தசன பரிபால நித்யமவ ரனுகூல
  பரமார்த் பரம நிதியே."

"அன்றன்று மனமொழி மெய்யொத்துத் துணிந்தியா
  னார்க்குதீ வினை மேருவை
அளியனை மயக்கியென் தலைமீ திருத்திவிட்
  டாயுணா ளேக தேசம்
சென்றன வினித்திரும் பாததிலோர் கணமுமென்

சீவசாட் சியும்அழித் தென்சிரோ பாரந்
தெரிக்கவாற் றாது நலிவேன்
நன்றியறி யாக்கொடும் பாவியேன் வருமோச
நாசத்தில் வீழா முனம்
நரசீவ ரட்சணிய வொரு தேவ மைந்தவெனை
நாடியஞ் சேலென்ன வந்
தின்றே தலைச்சுமை யிறக்கியா ளாக்கி நீ
யீடேற்று பதவி யருள்வாய்
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே."

சென்றகால லத்தியான் செய்ததீ வினையெலாஞ்
சித்தம் பொறுத் தருளியும்
சீவதிரு முறையிலென் பெயரைக் கிறுக்காது
திகழப் பொறித்து வைத்தும்
நிற்கா லத்துநின் னெறிதவறி வீழினுமெனை
நீக்காது கைதூக்கி யும்
நேர்வழி நடத்தியும் நின்றொழும் பென்றெனை
நெகிழ்ந்துகை விடாது காத்தும்
பொன்னுமமை யத்துத் தெருட்டியும் சரணிழல்
புதுக்குடி புகுத்து காறும்
புண்ணியா துணைநின்று ரட்சைசெய் தருள்வேறு
புகலிலே னென்ப தறிவாய்
என்றுமுனை யேகெஞ்சி மன்றாடி நிற்கும்வர
மீந்தா தரித்து மருள்வாய்
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே."[117]

கரையேற வேணும் இதைக் கைக்கொள்வீரே: திருமுழுக்குப் பெற்று தண்ணீரிலிருந்து கரையேறுதலையும்; "இரதத்தை நிறுத்தச் சொன்னான் அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்: பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே சென்றான்" (அப். 8:38,39); அவ்வாறு கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வில் தொடர்ந்து **பரமகுருவின்** சித்தத்தின்படி வாழ்ந்து, வாழ்க்கை கரையைக் கடந்து நித்தியத்திற்குள் செல்லுவதையும் ஒருங்கே அகத்தியர் குறித்துக் காட்டுகின்றார். முக்திக் கரை ஏறுதலை இரட்சணிய யாத்திரிகம் பின்வருமாறு பாடுகின்றது:

"இகலெ லாம்புற மிட்டன விருட்பிழும் பிரியப்
பகலொ ளிச்சுடர் திகழ்ந்தது பாரடிப் படுத்தி
செகமி ருத்துவா நதியினைத் தீரமோ டுருவிப்
புகரின் முத்தியங் கரைபிடித் தேறினர் புலவர்."[118]

பாவத்தை கழுவி தண்ணீரை விட்டுக் கரையேறுவதையும், அவ்வாறு கரையேறித் தொடங்கிய வாழ்க்கையில் முடிவுவரையில் நிலைத் திருந்து வாழ்க்கைக் கரையேறி நித்திய பேரின்பத்திற்குள் செல்வதையும் அகத்தியர் இப்பாடலில் கூறுகின்றார்.

வேதத்தின் வெளிச்சம்

18. "கைக்கொள்ள வேணும் என்றால்; இன்னம் வேறே
கற்பனையும் உண்டு; அதைக் கருத்தில் வைத்தே,
பைக்கொண்ட பிதா மாதாப் பாதம்போற்றி,
பழிமோக நினைவகற்றிப் பாவைமாரைத்
திக்கென்ன நினையாமல் இருட்டைப் போக்கி
சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்து
மெய்க்கொண்டே இருந்திடுவாய்; சொல்லிப் போட்டேன்
வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே."

கருத்துரை : இன்னும் கைக்கொள்ள வேண்டிய கற்பனைகள் உண்டு; அவற்றைக் கருத்தில் வைக்கவேண்டும். தாய் தகப்பன்மாரைப் போற்ற வேண்டும்; பழிவாங்குதல் மோக எண்ணங்கள் முதலான பாவங்களை நினைவிலிருந்தும் நீக்கி இருளை அகற்ற வேண்டும். மோட்சம் வேண்டும் என்று நாள்தோறும் ஜெபம் செய்தல் வேண்டும்; சத்தியத்தைப் பின்பற்றி வாழவேண்டும். வேதம் கூறும் வேதாந்தத்தின் வெளிச்சத்தை நான் சொல்லிவிட்டேன்.

விளக்கவுரை

கைக்கொள்ள வேணும் என்றால் இன்னம் வேறே கற்பனையும் உண்டு; இதனைக் கருத்தில் வைத்தே :

17ஆம் பாடலில் பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெற்று முக்தி வாழ்வுக்குள் கரை ஏறும் வழியினைத் தெளிவுபடுத்திக் கூறினார். இவ்வுலகில் வாழும் காலத்தில் மெய்ப்பொருள் பக்தர்கள் நிலைத்திருக்க வேண்டிய ஆவிக்குரிய காரியங்களை அப்.2:42-ல் கண்டோம். அவையே அல்லாமல் கைக்கொள்ள வேண்டிய கற்பனையும் உண்டு என்கிறார். கற்பனை என்பது ஒருமையில் தொகுத்துக்

கூறியமையால் பரமகுருவானவர் தமது சித்தர்களாகிய சீடர்களுக்கு அருளிச்செய்த தலைமை கற்பனையையே நினைக்க வேண்டியுள்ளது. "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" (யோவா.15:12). "நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது." (1 யோவா.3:23); "நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதி முதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. (1 யோவா.3:11).

இந்த அன்பின் கற்பனைக்கு நாம் ஆட்படுவதற்கு முதல் அன்பு **சற்குரு** முதலாவது நம்மில் அன்பு கூர்ந்ததாகும். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவா.4:19). தேவன் தம்முடைய திருமைந்தரை மனிதர் மெய்வாழ்வு பெறும்படிக்கு உலகத்திற்கு அனுப்பியதால் அன்பு வெளிப்பட்டது. "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." (1 யோவான் 4:9,10).

நாம் எப்படி அந்த அன்பை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுகின்றோம்? இம்மானுவேல் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலும் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதாலுமே, "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1 யோவா 3:18). கற்பனையின் பொருள் அன்பு என்று ஆவியானவர் தெரிவிக்கின்றார். "கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச் சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" (1 தீமோ.1:5). "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்" (யோவான் 14:21). "என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடைய தாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது. (யோவான் 14:24). "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவான் 15:10). "சபை கூடி வருதலைச் சிலர்

விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே." (எபி.10:25) இவையே அன்றி ரோமர் 8, 12 முதலான அதிகாரங்களின் செய்திகளையும் இணைத்து சிந்தியுங்கள். கருத்தில் வையுங்கள். இரட்சணிய மனோகரம் பின்வரும் பாடல்களில் தெரிவிக்கும் ஒழுக்க வாழ்வையும் ஒப்பு நோக்கி எண்ணுங்கள்:

"அகிலகா ரணராந் தூய வாண்டகைக் கடங்கா தீட்டும்
சகலபொல் லாங்கு முள்ளிச் சஞ்சலித் தழுதுண்ணைந்து
புகலிடமான யேசு புண்ணிய பலத்தை நாடி
இகலிமுப் பகையை வென்றிங் கிடைநிலா தோடல் வேண்டும்.

"ஒளிக்குறி வாயி லூடு புகுந்தொரு வழிப்பட் டுள்ளந்
தெளிக்கு நல் லுரைகேட்ட டான்ம தீக்கைபெற் றளவி லின்பம்
அளிக்கு நற் கருணை யாய ஆரமிர் துண்டு வேந்தன்
விளிக்குநா ளளவுந் தூய விதிவிலக் கோம்பல் வேண்டும்.

"சீவன்முத் தருக்கு நல்குந் திவ்விய சிந்தனை ஞானம்
மேவருங் குணங்க ளர்க்க விசுவாசம் விரதஞ் சீலந்
தாவருந் நலங்க ளெல்லாந் தந்தருள் புரியுந் தூய
தேவனல் லாவி யுள்ளந் திகழ்தர ஜெபித்தல் வேண்டும்.

"கிறிஸ்துவி னிடமே கற்றுக் கேவல நிலையை நாடிக்
கிறிஸ்துவின் சிந்தை தன்னுட் கிடைத்திட ஜெபித்த நாளுங்
கிறிஸ்துவின் சிலுவை தாங்கிக் கிட்டிப்பின் தொடர்ந்து சென்று
கிறிஸ்துவக் கன்பிற் செய்யுங் கிரியையைப் படைத்தல் வேண்டும்."[119]

பைக்கொண்ட பிதா மாதாப் பாதம் போற்றி. தம்மைப் பெற்ற தாய் தந்தையரை போற்றி வாழவேண்டிய மெய்வாழ்வுப் பண்பினையும் அகத்தியர் இங்கு புலப்படுத்துகின்றார். வேத வசனங்களில் இந்த ஒழுக்கநெறி குறித்துத் தெளிவான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எபேசியர் 6:23, "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது." **சற்குருவாம்** மெய்ப்பொருளை தாயாகவும் தந்தையாகவும் குருவாகவும் சம்பத்தாகவும் போற்றி ஒழுகும் பண்பும் பக்தர்களுக்குண்டு:

"தாயே தந்தை தமர்குரு சம்பத்துநட் பெவையும்
நீயேயெம் பெருமான்கதி வேறிலை நிண்ணயங்காண்
ஏயேயென் றிகழு முல கோடெனக் கென்னுரிமை
ஆயேயுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே."[120]

பழிமோக நினைவகற்றிப் பாவைமாரை திக்கென நினையாமல் இருட்டைப் போக்கி: ஒருவன் ஒருத்தி என்று (மல்கியா 2:15) கடவுள் நியமித்த வாழ்வை மீறி பெண்களை மோக இச்சையுடன் நோக்கலும் பாவமாகும். பரமகுரு, "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று" (மத்.5:28) என்று எச்சரிக்கின்றார். பவுலடியார் "அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர் களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு" என்று அறிவுறுத்துகின்றார். (2 தீமோ.2:22).

"பண்ணாடு மொழிச்சியர் பால் மயலே
உண்ணாடி ஒழிந்தன நாள்களெல்லாம்
கண்ணாடிய தண்ணருள் காட்டுதியால்
விண்ணாடர் தொழுங்கழல் வித்தகனே."[121]

என்று பக்தன் இந்தப் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு கடவுளுடைய அருளை நாடுகின்றார்.

சிவன் வேணும் என்று தினம் செபத்தைச் செய்து: சிவம் என்றதால் அகத்தியர் இங்கே முக்தியைக் குறிக்கின்றார். முக்தி வாழ்வுடைய திருநகரத்தை **இரட்சணிய யாத்திரிகம்** பலவாறு வருணிக்கிறது.

"முத்திநகர் பரமபதந் திருநாடு திருநகர
மோட்ச வீடு
நித்தியவா னந்தபதவி நித்தியசீ வக்கழக
நிகலமூலம்
உத்தமமங் களத்தான முன்னதமண்டலம்பரமா
காயத்துச்சி
சத்யமன்றம் புனிதமன்றம் தேவால யம்பரம
சந்நிதானம்.
உச்சிதபட்டணம் பதவி யூர்த்தகதி, பொன்னகர
மும்பர்நாடு
சச்சிதா னந்தபுரி தருமபுரி யடைக்கலப்பட்ட
டணஞ்சாம்ராச்யம்
முச்சிகாரி திகழ் சீயோன் முதுகுன்ற மும்மரச
முழங்கு முன்றில்
அச்சுத வேந் தரசிருக்கை திருக்குமராலயம் பரிசுத்
தாவி மன்றம்."[122]

வீடுபேறு வேண்டும் என்று தினமும் ஜெபத்தைச் செய்யவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். அகத்தியர் அப்.2:42ல் ஜெபத்தில் உறுதியாக நிலைத்திருக்க வேண்டிய வாழ்வைக் குறிப்பிட்டோம். "இடைவிடாமல் ஜெபம் செய்ய வேண்டும்" (1 தெச.5:17) என்று ஆவியானவர் திருவசனத்தில் அறிவுறுத்துகின்றார்.

ஜெபவாழ்வை **அகத்தியர்** அதிகமாக அழுத்திப் பேசுகிறார். 30இல் நான்கு பாடல்களில் ஜெபத்தைக் குறித்துப் பேசுகின்றார்.

"கண்ணீரை விட்டமுது உள்அ சுத்தம் போக்கி." -30:17.

"சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்து" -30:18.

"சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்யே" -30:20.

"செபத்தையே செய்வதற்குச் சீவன் வேணும்" -30:21.

இரட்சணிய மகாகவியும்:

"பக்தியாய்ச் செபம் பண்ணவே
சுத்தமாய்த் தெரி யாதய்யா
புத்தியோடுமைப் போற்றநற்
சித்தமீந்திடும் யேசுவே.

அறையிலந் தரங் கத்திலே;
நிறையுமன் பொடு நித்தமும்
இறைவவுன்னை யிறைஞ்சிடும்
முறையெனக்கருள் மூர்த்தியே"[123]

நற்செய்தி கவிராயர் ஜெப வாழ்வின் இன்றியமையாமையை உணர்ந்து **'ஜெபமாலை'** என்னும் சிறந்த பக்தி நூலையே இயற்றித் தந்துள்ளார்.

மெய்க்கொண்டே இருந்திடுவாய்; சொல்லிப் போட்டேன் வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே! வேதாந்த வேதத்தின் வெளிச்சமாக மக்களுக்கு அருளிச் செய்துள்ள முக்தி வாழ்வை நோக்கிக் கைக்கொள்ள வேண்டியவற்றை சொல்லி விட்டேன்; மெய்ப்பொருளைப் பின்பற்றி வாழ்ந்திடுவாயாக என்று அகத்தியர் இறுதியில் அறுதியிட்டுரைக்கின்றார்.

சத்தியத்தைப் பின்பற்றி வாழவேண்டும் என்பதே **வேதத்தின்** வெளிச்சம் என்பதை **அகத்தியர்** இப்பாடலில் கூறுகின்றார்.

வேதாந்தத் தமிழ் மார்க்கம்

19. "வேதாந்தத் தமிழ் மார்க்க முறையைக் கேளு;
விரித்துரைக்கப்பெரியோர்க்குக் கோபம் வேண்டாம்;

நாதர் என்னு மும்மூர்த்தி நகரப் பேய்கள்
நாடுதனில் பலப்பல தந்திரங்கள் பண்ணி

காதாந்த மாயவலை கண்ணிக் குற்றி
காசிகங்கை என்று நவதானம் பண்ணி

மாதாந்த உருவமே எடுத்து இந்த
வையகத்தை மயக்கினார் வகுத்துப் பாரே!"

கருத்துரை : வேதாந்த தமிழ் மார்க்கத்தின் முறையைக் கூறுகின்றேன்; கேட்க: நான் இதனை விரிவாகக் கூறுவதனால் பெரியோர்களுக்கு என்மீது கோபம் வேண்டா; கடவுளர் என்று சொல்லப்படும் மும்மூர்த்திகளும் நரகப் பேய்கள்; அவர்கள் நாட்டில் பற்பல தந்திரங்கள் பண்ணினார்கள்; மக்களை மாயவலை கண்ணிகளுக்கு உட்படுத்தினார்கள்; காசிக்கும் கங்கைக்கும் புண்ணிய யாத்திரைகள் செய்யவும், பற்பல தான தருமங்கள் பண்ணவும் செய்தார்கள்; மாதாமாதம் வெவ்வேறு வடிவங்கள் எடுத்து இந்த வையகத்தை மயக்கி விட்டார்கள்; வகைப்படுத்திப் பாருங்கள்.

விளக்கவுரை

வேதாந்தத்தின் வழி தமிழ் மார்க்கத்தில் விளங்கும் மும்மூர்த்திகளாகிய சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியவர்களைக்குறித்து இப்பாடலில் கூறுகின்றார் **அகத்தியர்.** தாம் அவர்களைக் குறித்து அறிந்த உண்மையை பச்சையாகக் கூறுவதால் பெரியோர்கள் தம்மீது கோபப்பட வேண்டாம் என்று பணிவன்புடன் வேண்டுகின்றார். அவர்களை நரகப் பேய்கள் என்றும், அவர்கள் வழியாகத் தோன்றிய தந்திரங்களாலும், புண்ணிய யாத்திரைகளாலும், சடங்குகளாலும், உலக மக்கள் மயங்கி விட்டார்கள் என்றும், இதனை அறிவுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும் என்றும் விரும்பி வேண்டிக் கூறுகின்றார்.

மும்மூர்த்திகளின் மொத்தப் பண்புகளைக் குறித்து ஏற்கெனவே உரையில், 40வது பக்கம் முதல் 50ஆம் பக்கம் வரையில் வரும் 5ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளதைக் காண்க.

மும்மூர்த்திகளின் தோற்றத்தைக் குறித்தும் எ.ஆ. கிருஷ்ணபிள்ளை பெரிதும் ஆராய்ந்து கூறியுள்ள பின்வரும் கருத்துகளையும் அறிந்தால் **அகத்தியர்** கூற்றின் உண்மை புலப்படும்:

"இருக்குவேதம் 4-வது பிரிவில் ரிக்வேத நிகண்டு தேவதைகளின் பெயரைக்குறித்து மூன்று அட்டவணைகளோடு முடிந்திருக்கிறது. முதலாவது அட்டவணையில் அக்கினிக்கு ஒரே பொருள் தரும் பல

பெயர்களாயிருப்பவை அடங்கியிருக்கின்றன. இரண்டாவது அட்டவணையில் வாயுவுக்கு ஒரு பொருள் குறித்த பல பெயர்களா-யிருப்பவை அடங்கியிருக்கின்றன. மூன்றாவது அட்டவணையில் சூரியனுக்கு ஒரு பொருள் குறித்த பல பெயர்களாயிருப்பவை அடங்கியிருக்கின்றன. நிருக்கத்தின் கடைசி பாகமுழுவதும் தேவதைகளையே குறித்துச் சொல்லுவதாயிருக்கின்றது. அதில் மூன்று கடவுள் மாத்திரமிருப்பதாக இரண்டிடத்தில் உறுதியாயகச் சொல்லியிருக்கிறது. அதாவது: திசர ஏக தேவதா என்பது இதில் ஒரே கடவுள் என்று குறித்துக் காட்டுவதற்கேயென்று கொள்ளும் விசேஷ யூகிப்பு வேதத்தின் அநேக வாக்கியங்களால் நிறுவப்பட்டுள்ளதும் அல்லாமல், நிருத்தம், வேதம் இவைகளின் அதிகாரத்தைக் கொண்டு சொல்லப்பட்டிருக்கிறது. மேற்படி 13-வது பரிவில் கடவுளர் மூவராக மாத்திரம் இருக்கிறார்கள்; அவர்கள் அக்கினி, வாயு, சூரியன் என்பவர்கள். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரஜாபதி படைப்புக்குடன் பட்டவைகளுக்குக் கடவுளாயிருக்கிறார். 'ஹோம்' என்கிற அசை அந்தந்தக் கடவுளைக் கருதுகின்றது. எனினும், அது "அகண்ட ரூபியாயிராநின்ற பிரமத்திற்கு, வேதனுக்கு அத்தியாத்மாவுக்கு உரித்தாகின்றது" என்று தெளிவாய் விவரிக்கப்பட்ட இந்த வாசகத்தை வாசிக்கிற விவேகிகள். ரிக்வேதம் உண்டாக்கப்பட்டக் காலத்தில் இருந்த ரிஷிகளோ முனிவர்களோ சாதாரண மக்களோ சூரியன், அக்கினி, வாயு, இந்திரன், வருணன், மித்திரன், வசுக்கள், அசுவினிகள் முதலாகிய இவர்களையே தெய்வங்கள் என்று நம்பி வழிபட்டு வந்தார்கள் என்றும், பின்பு அவ்வப்போது தோன்றிய ரிஷிகள் முதலானோர் இந்தத் தேவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் அழிந்து போகத்தக்கவர்கள்! பூதங்கள் ஒன்றில் ஒன்று அடங்கத்தக்கது; உலகம் ஒரு காலத்தில் அழியத்தக்கது. ஆதலின் எப்பொழுதும் அழியாதிருக்கத்தக்க வஸ்து பிரமம் ஒன்றே; அதுவே தெய்வம்; அதுவே சமஸ்தத்துக்கும் மூல காரணப்பொருள்; அதுவே தான் விரும்புவதை அருளத்தக்கது என்று வரவரத் தேறித் தெளிந்து வணக்க முறையை அவரவருக்குத் தோன்றின பிரகாரம் ஏற்படுத்தினார்கள் என்றும்; இந்தக் காலமும் போய்ப் பின்னுள்ள மத்திய காலத்தில் தோன்றிய வித்வான்கள், துறவிகளானவர்கள் யுக்தி பூர்வமாக உபநிடதங்களை உண்டாக்கி வேதங்களின் கடைசிப் பாகங்களில் சேர்த்தார்கள் என்றும், அதற்கும் பின்னுள்ள காலத்தில் ஒரே கடவுள் இருக்கிறார் என்று ரிக்வேதத்தில் பின்பு சேர்த்துள்ள வாக்கியங்களால் ஏற்பட்டிருந்த போதிலும், அதைத் தள்ளிவிட்டுக் கடவுளுக்கு இரண்டாவது ஸ்தானத்தில் புராண நூல் கர்த்தாக்களினின்றும் உற்பத்தியான பிரமா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளைப் பிரதானப்படுத்தி, 3-வது ஸ்தானத்தில் சூரியன் முதலியோரைச்

சில்லறைத் தேவர்களாக ஏற்படுத்திப் பாகுபாடு செய்து, விநோத விநோதமான கதைகளையும் பொறுக்கிச் சேர்த்துப் புராண இதிகாச முதலிய பாடல்களைக் கற்பனை அலங்காரங்களோடு ஏழை மக்கள் மருளத்தக்கதாகப் புனைந்து, வித்வான்கள் தங்களுக்கும் தங்கள் சந்ததிக்கும் தங்கள் சுயசாதிக்கும் வயிற்றுப் பிழைப்பிற்கு உபாய தந்திரங்களைத் தேடி பெரும்பாலும் பலப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்றும், வேதங்களை மற்ற சாதியார் பார்க்கக்கூடாது, கேட்கக் கூடாது, அவைகள் கர்ண பரம்பரையாய் ஓதியுணர்ந்து பயிற்சி செய்து வருகிற பிராமணர்க்கே, சொந்தம். அதை அறிந்த பிராமணர்களே பிராமணர் அல்லாத இதர சாதிகளுக்குத் தெய்வம்; ஆதலால் அவர்களுக்குப் பூசுரர், வையகதேவர் எனப் பெயர் தரித்துக் கிரந்தங்களையும், நிகண்டுகளையும் ஏற்படுத்தினார்கள் என்றும்,

"கரிய மானுலிங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூமோ ரைந்தினும் மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்"

என்றும்,

"தெய்வா தீனம் ஜெகத் ஸர்வம்
மந்திரா தீனம் ததை வசா
தன் மந்திரம் பிராமணா தீனம்
பிராமணோ மம தேவதா"

"என்றும், சணப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கு மாட்டிக்கொள்வது போல் மிகவும் தந்திரமான கட்டுப்பாட்டில் ஏழை இந்துக்கள் அகப்பட்டுச் சுழலுகின்றார்கள் என்றும், - ஊத்தை திரண்டு கழுக்காணியாயிற்றென்ற பிரகாரம் மெய்க் கடவுளின்றித் திருவுளத்துக்கு ஏற்காத எல்லா விபரீதக் கொள்கைகளும் இந்த தேசத்தில் உறுதிப்பட்டுக் கொண்டு வந்தன என்றும் கிரகித்துக் கொள்ளக்கூடும்.

8. இந்துக்களான சைவ வைணவர் என்ற இரு சமயத்தவரும் தம்மில் அநேக விகற்பமான கொள்கை உடையவராய் இருந்தபோதிலும், பிரமா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும் இரண்டு பட்சத்தாரும் கடவுளர்தாம் என்று ஒப்புக்கொண்டு சில விஷயங்களில் ஒற்றுமைப் பட்டிருப்பது போலவே, சூரியன், அக்கினி, வாயு, இந்திரன், வருணன் முதலிய கடவுள்களும் உளர் என்ற கொள்கையை வகுத்து, வழிபட்டு, அந்தந்தத் தேவர்களாலும் தங்களுக்குப் பலாபலன்கள் பலிக்கின்றன என்று நம்பி ஆராதிக்கிறார்கள். அந்தக் கொள்கையும் தவறு என்று

காட்டும் பொருட்டு அவைகள் கடவுள் தன்மை உடையனவல்ல என்பதும், மேற்காட்டிய வஸ்துக்கள் தேவர்களானவிதம் இப்படி என்பதும், இதனடியில் விவரிக்கப்படுகின்றன."

சூரியன் முதலிய மூன்று வஸ்துக்களைப் பற்றி

"9. வேதப் பொருள் விளக்கம், ரிக்வேதம், 13-வது பிரிவில் "கடவுள் மூவராக மாத்திரம் இருக்கிறார்கள். அவர்களுடைய இடங்கள் பூலோகம், புவர்லோகம், சுகர்லோகமாக இருக்கின்றன. அவர்கள் மறைவாகவும் இராநின்ற பேர்களையுடையவர்களாய் உச்சரிக்கப்படுகின்றார்கள். பல திக்குகளுக்கு உரியவர்களாய் இருக்கிற மற்றத் தேவதைகள் மூன்று கடவுளருடைய அம்ஸமாக இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய பல நடக்கைகளைப் பற்றிப் பலவாய் நாமம் இடப்பட்டும், குறிக்கப்பட்டும் இருக்கிறபடியினாலேதான்; ஆனால் உண்மையாய் ஒரே தெய்வம் இருக்கிறது. அதாவது மகாத்மா. அத்தெய்வம் சூரியன் என்று சொல்லுகிறது. ஏனென்றால் அச்சூரியன் எல்லாப் பொருள்கட்கும் ஆத்மாவாக இருக்கிறான் என்பதால் இது மகாத்மாக்களால் கூறப் பட்டிருக்கிறது. மற்ற தேவதைகள் அவருடைய கூறாக இருக்கின்றார்கள். இப்படி அறிஞரால் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஞானிகள் அக்கினி, இந்திரன், மித்திரன், வருணன் முதலாகிய பேர்களை ஸ்தோத்தரிக்கிறார்கள்."

இந்த வாக்கியங்கள்தாம் பூர்வீக (ரிக்வேதகால)த்துள்ள இந்துக்கள் நினைத்து வணங்கி வழிபடுதற்கு மூலமாயுள்ளவை.

"10. இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கியுள்ள வசிட்டர், விசுவாமித்திரர், பரத்துவாசர் முதலிய சில மகாரிஷிகளால் வசனரூபமாய்க் கர்ண பரம்பரையாய் இந்துக்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட வேதம் மேற்காட்டிய வாக்கியங்கள் அடங்கியவை. இதற்குத் தான் ரிக்வேதம் என்று பெயர். இது ஒன்றே பூர்வீக வேதம். அதுவும் ஒருவரால் அல்ல, பலராலானது. மேலும் ஒரு காலத்திலல்ல. பின்பின்னாகக் கால வளர்ச்சியில் உண்டானது. ஆதலால் ரிக்வேத முதல்பாகத்தைக் கற்பித்த ரிஷிகள் ஜீவனற்ற சூரியன், அக்கினி, வாயு என்ற சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் அதிசயிக்கத் தக்க விதமாய்த் தோன்றி மறைவதையும் உலகத்துக்கு அவைகள் பிரயோசனப்படும் விதத்தையும், அவைகள் இல்லாவிட்டால், உலகத்துக்கு உண்டாகத்தக்க நஷ்டம் கெடுதி முதலியவைகளையும், தம்மில் ஊகித்து, இவைகளே உலகத்துக்கு ஆதாரம், இவைகள் இல்லையெனில் உலகம், நாசமாம்; இவைகள் இன்றியமையாப் பொருள். ஆதலால் இந்த மூவரே கடவுள், மூன்றிலும்

சூரியனே பிரதான கடவுள். ஏனெனில், அக்கினியும் காற்றும் சூரியனில் அடங்கியதுதான் என்று தங்கள் மனதில் தோன்றிய அபிப்பிராயத்தை யாதொரு வஞ்சனை இன்றி இந்தியாவுக்கு ஒப்புவித்தார்கள். உலக ஆரம்பம் தொட்டு உண்டான அதிபூர்வீக சத்தியம். ரிக்வேத நிருமாணிகரான ரிஷிகளுக்கு வந்து எட்டியிருக்கும் என்றால், இவ்வாறு உத்தேசப்பிரமாணமான தங்கள் கருத்தை ஸ்தாபிக்க முயன்றிருக்க மாட்டார்கள். இவ்வாறு சூரியன், அக்கினி, வாயு என்ற இவற்றைக் கடவுள் என்று ஸ்தாபித்தது மாத்திரமல்ல; அக்கடவுளரை வழிபடுவதற்குரிய ஆராதனை முறைகள் இன்ன இன்னவென்று ரிக்வேதத்திலேயே கற்பித்தும் விட்டார்கள்."

அக்கினி ஸ்துதி

ரிக்வேதம், 1-ம் மண்டலம், 58-1ம் சூக்தம் (பாட்டு)

(1) பலத்தினால் உற்பத்தியாகித் தேவர்களை அழைக்கிறவனும் ஆராதனை செய்கிறவர்களின் தூதனுமாகிச் சாகாத அக்கினியானவன் தீவிரமாய்ப் புறப்படுகிறான். அவன் ஏற்ற வழிகளாய்ச் சென்று ஆகாரத்தைத் தோன்றப்பண்ணி யாகத்தில் உள்ள பலிகளினாலே தேவர்களைப் பூஜிக்கிறான்.

(2) குன்றாத அக்கினியானவன் தன் ஆகாதரத்தைத் தீயினாலே பதப்படுத்தி அதைச் சீக்கிரமாய்ப் புசித்து விறகுகளின் மேல் ஏறுகிறான். பட்சிக்கிற சுவாலையானவன் வேகமான குதிரைபோல ஓடி உயர்ந்த வானத்தில் முழங்குகிற மேகம்போல முழங்குகிறான்.

(3) பலிகளை வாங்குகிறவனும், ருத்திரராலும், வசுக்களாலும் வணங்கப் பட்டவனும், தேவர்களை அழைக்கிறவனும், யாகம் நடப்பித்து ஐசுவரியத்தைக் கொடுக்கிறவனும், தொண்டர்களால் புகழப்பட்டவனும், மனிதர்களுக்குத் தேர்போல விளங்கியவனும் ஆகிய சாவாமையும் பிரகாசமும் உள்ள அக்கினியானவன் முறையாய்ச் செலுத்தப்படும் பலிகளை அங்கிகரிக்கிறான்.

(4) அக்கினியானவன் காற்றினால் எழுப்பப்பட்டு வலுவாய் முழங்குகிறான். தன் சுவாலைகளாலும் உக்கிரத்தினாலும் மரங்களுக்குள் எளிதாய்ச் செல்கிறான். குன்றாமல் உக்கிரமாய்ப் பற்றி எரிகிற அக்கினியே! காட்டு மரங்களுக்குள் நீ எருது போலப் பாயும் பொழுது உன்னுடைய பாதை கறுத்தப் போகிறது.

(5) சுவாலை ஆயுதமுள்ளவனும் காற்றினால் எழுப்பப்பட்டவனும் ஆகிய அக்கினியானவன் தன் முழுப் பலத்தோடே மரங்களின் ஈரத்தைத்

தீயினாலே தாக்கிக் காட்டிலுள்ள சகலமானவைகளின் மேலும் எருது போல வீரியமாய்ப் பாய்கிறான். அவன் விரைந்தோடும்போது சராசரங்களெல்லாம் அவனுக்குப் பயப்படுகின்றன.

(6) ஒளிவிடுகிற அக்கினியே! உன்னைத் துதிக்கிறவனுக்கு அடைக்கலமாயிரு. செல்வமுடையவனே! பலிகளைச் செலுத்துகிற பாக்கியவான்களுக்குச் செல்வந்தா. அக்கினியே! உன்னை ஆராதிக்கிறவனைப் பாவத்திற்கு விலக்கிக் காத்துக்கொள். நீதியான கிரியைகளில் செல்வம் உடையவனாகிய அக்கினியானவன் காலையில் தீவிரமாய் எங்களிடத்தில் வரக்கடவன்.

(7) அக்கினி தேவனே நமது பகைஞரைப் பட்சிப்பான். சூ.12, நம்மை நிந்திப்போர் யாவரையும் தகனித்து நமக்குக் கேடு செய்வோர் யாவரையும் சங்காரம் செய்வான்.

சூ.29. உதயத்தைத் துதிக்கும் பாட்டு, 1-ம் மண்டலம், 123-ம் சூக்தம்.

(1) யுக்தியுள்ள உதயமானவனுடைய விலாசமான ரதம் பூட்டியிருக்கிறது. சாகாத தேவர்கள் அதில் ஏறியிருக்கிறார்கள். எங்கும் வியாபிக்கிற மேன்மையுள்ள சூரியனானவன் இருட்டினின்று எழுந்து மனிதருடைய குடியிருப்புகளுக்கு ஆரோக்கியத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறான்.

(2) உலகத்தில் இருக்கிறவர்களில் அவனே முதலாவது விழித்து எழுந்திருக்கிறவன். இருட்டின் மேலே ஜெயங்கொள்ளுகிறான். மகத்துவம் உடையவனும் உயரத்தினின்று வெளிச்சம் கொடுக்கிறவனுமாகிய அவன் எல்லாவற்றையும் பார்க்கிறான்.

(3) இரண்டு பங்காகிய நாளானது பிரிக்கப்படாமல் நடந்தேறி வருகிறது. ஒரு பங்கு பின்னுக்கு வாங்குகிறது. ஒரு பங்கு முன்னுக்கு ஏறுகிறது. மாறி மாறி வருகிற அந்தக் காலங்களில் ஒன்று சகலத்தையும் மறைக்கிறது. உதயமோ தன் மினுக்கான ரதத்தினாலே சகலத்தையும் பிரகாசிப்பிக்கிறான்.

(4) குதிரைகளை உடையவர்களாய், பசுக்களை உடையவர்களாய், சதாகாலமும் இருக்கிறவர்களாய், சூரியனுடைய கதிர்களுக்கு ஒப்பாக இருட்டை அகற்றுகிறவர்களாய் தயாளமான உதயமானவர்களே! மனிதருக்கு நன்மைகளைப் பொழிந்து விட்டுக் கடந்து போய்த் திரும்பவும் வாருங்கள்.

(5) சக்தி சூரியனின் கதிர்களுக்கு உடன் கிரியை செய்கிறவளாகி உதயமே! எந்த நற்செய்கைகளையும் உறுதிப்படுத்து. எங்களால் வாஞ்சையாய் அழைக்கப்பட்ட உஷஸனவேளே யாக ஐசுவரியம் அடைந்த எங்களுக்கு மற்ற ஐசுவரியமும் கிடைக்கும்படி நீ வந்து இருட்டை நீக்குவாயாக.

அக்கினிக்கும் சந்திரனுக்கும் பொதுவான ஸ்தோத்திரப் பாட்டு 1-ம் மண்டலம், 93-ம் சூக்த முழுவதும்:

(1) அவாவை வருஷிக்கும் அக்கினி தேவனே! சோமனே! தயவு வைத்து என் வேண்டுதலைக் கேளுங்கள். நான் செலுத்துந் துதிகளை ஏற்றுக்கொண்டு இதனை நிவேதிக்கும் எனக்கு நல்வாக்கை ஈந்தருள்வீராக.

(2) அக்கினி பகவானே! சோமனே! இக்கோரிக்கையை உங்கள் இருவரிடத்திலும் கேட்கிறவனுக்கு மிகு பலனுள்ள திரளான ஆடுகளையும் குதிரைகளையும் அருள்வீர்களாக.

(3) அக்கினி பகவானே! சோமனே! உங்கள் இருவருக்கும் நைவேத்தியம் செலுத்துகின்றவன் ஆயுள் பரியந்தம் மிகு பலனையும் சௌந்தரியத்தையும் அனுபவிப்பானாக.

(4) அக்கினி பகவானே! சோமனே! பரணியின் உணவான பசுக்களைக் கவர்ந்து போன உங்கள் வல்லமை நமக்குத் தெரியும். பரிசாசயன் குலத்தைச் சங்கரித்தீர்கள். மிகுந்த மக்களுடைய உபயோகத்திற்காக ஒரு ஜோதியாகிய சூரியனை அடைந்தீர்கள்.

(5) அக்கினி தேவனே! சோமனே! நீங்கள் இருவரும் முயன்று ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களை ஆதரித்தீர்கள். பிரபல தோஷத்தினால் அசுசிப்பட்ட நதிகளை விடுவித்தீர்கள்.

(6) அக்கினி தேவனே! சோமனே! உங்களில் ஒருவனை வாயு பகவான் வானத்திலிருந்து கொண்டு வந்தான். மற்றவனைப் பருந்து மலைமுடியிலிருந்து வலிமையால் கொண்டு போயிற்று. துதிகளால் விருத்தி பெற்று யாகத்துக்காக உலகத்தை விரிவாக்கினீர்கள்.

(7) அக்கினி தேவனே! சோமனே! உங்களுக்கு நிவேதிக்கப்பட்டவைகளை உண்ணுங்கள். நமக்கு அருள் புரிவீர்களாக! நாம் விரும்புகின்ற-வைகளை நமக்குப் பொழிகின்றவர்களே நமக்கு அருள் செய்வீர்களாக. அனுகூலமும் உருக்கமும் உள்ள காவலரே! மங்கலக்காட்சியுடையராய் இந் நைவேத்தியத்தைச் செலுத்துபவனுக்குச் சுகத்தைக் கொடுத்துத் தீமையை விலக்கியருள்வீர்களாக.

(8) அக்கினி தேவனே! சோமனே! தேவர்கள் மேல் பக்தி உடையவனாய் நெய்யையும் நைவேத்தியங்களையும் கொண்டு உங்களை வணங்கும் இவனைத் தீமையினின்று விலக்கி அவன் பலியைக் காப்பாற்றிக் கொள்வீர்களாக. ஆராதனை செய்யும் அவனுக்குப் பேரின்பத்தையும் ஈந்தருள்வீராக.

(9) சம வணக்கத்தையும் ஏக சாதாரண ஜெபத்தையும் பெற்றவர்களாகிய அக்கினி தேவனே! சோமனே! நமது துதிகளைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள். ஏனெனில், நீங்கள் தேவர்களுக்குள் எப்போதும் தலைமை பெற்றிருந்தவர்கள்.

(10) அக்கினி தேவனே! சோமனே! உங்கள் இருவருக்கும் இந்த நெய்யை நிவேதிக்கின்ற இவனுக்கு நல்ல பிரதிபலனை அருளுங்கள்.

(11) அக்கினி தேவனே! சோமனே! நாம் செலுத்தும் நைவேத்தியங்களை உவந்து நம்முடனே கூட வாருங்கள்.

(12) அக்கினி தேவனே! சோமனே! நமது குதிரைகளைப் போஷிப்பியுங்கள். நாம் உங்களுக்கு நைவேத்தியமாகச் செலுத்தும்படி நமக்கு வெண்ணெய் கிடைக்கும் படியாகப் பாலைத் தருகின்ற பசுக்களும் நன்றாய் போஷிக்கப் படுவனவாக. வைதீகச் சடங்குகளைச் செலுத்துகிறதற்குப் பாக்கியம் பெற்ற நமக்குப் பெலனைத் தந்து நாமிடும் பலி, செல்வ விர்த்தியைத் தரப்பண்ணுங்கள்.

ஈண்டு விவரித்துக் காட்டிய ரிக்வேத வாக்கியங்கள், பாட்டுகளினால் எல்லாம், அக்காலத்துள்ள இந்துக்களின் தெய்வ வழிபாடுகளும் கொள்கைகளும் சடங்காச்சாரங்களும் இத்தன்மையன என்று வாசிக்கிற அனைவரும் தெளிவாய் அறிந்து கொள்ளலாம். ஆனால் காலம் செல்லச் செல்ல அக்கினி, வாயு, சூரியன் என்ற இந்த மூன்று கடவுளருக்கும் உரிய வழிபாடுகள் தற்கால பரியந்தம் சைவ வைஷ்ணவ சமயத்தவரால் பின்பற்றப்பட்டே வருகின்றன. எனினும், இந்த மூன்று கடவுளுக்குப் பதிலாக பிரமா, விஷ்ணு, ருத்திரன் என்ற திரிமூர்த்திகள் கடவுள் பட்டம் பெற்று உத்யோகத்தில் நியமிக்கப்பட்டபின் முன்னிருந்த மூவருக்கும் பிரதான இடம் நீங்கி விட்டது.

"11. சூரியன், அக்கினி, வாயு என்ற மூன்றும் அசைவில்லாத பொருளே அன்றிச் அசையும் பொருள் அல்ல என்னும் உண்மை தற்காலத்தில் சொல்லிக் காட்ட அவசரமில்லை. பிற்காலத்தில் உண்டாக்கப்பட்ட இந்து சமய நூல்களே அசைவில்லாத பொருள்கள் என்று காட்டுகின்றன. சிவஞான சித்தியாரில் இவைகளை அசைவில்லாத பொருள்கள் என்றும் அறிவில்லாதவைகள் என்றும் கொண்டு விவரித்திருக்கிறது. லிங்க புராணத்திலும் பூர்வத்தில் பிரமாவானவர் நித்திரை செய்து விழித்து எழுந்து புத்தி தெளிவு அடைந்து எங்கும் அந்தகாரம் பரவியிருப்பதைப் பார்த்துச் சற்று திகைப்புற்று இருந்தார் என்றும், மகார்ணவமாயிருந்த தண்ணீரினின்று அக்கினி ஜோதி வெளிப்படும்படி திருவுள்ளமானார்

என்றும், அப்படியே உண்டாயிற்று என்றும், அதை-திவ்வியாக்கினி, ஜடராக்கினி, பாத்தி வாக்கினி என-மூன்று பாகப்படுத்தித் திவ்வியாக்கினித்திரளே சூரியனாக உதித்தொடுங்கி உலகத்துக்கு வெளிச்சம் கொடுக்கவும், ஜடராக்கினி உயிர்கள்தோறும் வயிற்றினின்று உணவுகளை ஜீரணிப்பிக்கவும், பாத்திவாக்கினி மனைகள் தோறுமிருந்து உண்டி வகைகளைப் பக்குவப்படுத்தவும் ஆக நியமித்தார் என்றும் கூறியிருக்கிறது. ஆகவே அக்கினி, அக்கினியின் ஓர் கூறாகிய சூரியன், வாயு, தண்ணீர், மண் இவைகள் நான்கு பூதங்கள், பூதங்கள் யாவும் ஜடப்பொருள்கள்; ஆதலில் பிராணன் அற்றவைகள். மேலும் சிருஷ்டிக்கப் பட்டவைகள். இவைகள் கடவுள் ஆவது எப்படி? ஆனாரென்று சொல்வார் சொன்னாலும் ரிக்வேத காலத்து உள்ளவர்களாய்க் கேட்டோருக்கு மதி எங்கே போயிற்று? இந்துக்கள் சூரியன் முதலிய மூன்று பொருள்களுக்கும் தொன்றுதொட்டுத் தெய்வ வணக்கம் செலுத்தி வந்த போதிலும் இந்து நூல்களே அவைகள் அசைவில்லாப் பொருள்கள் என்று ஒப்புக் கொள்வதினால் அதற்கு மேல் வேறு நியாயம் சொல்ல அவசரமில்லை என்று விடுகிறோம்."

இந்திரன், மித்திரன், வருணன் என்பவரைப் பற்றி

"(12) இந்த அத்தியாயம் 5-வது பிரிவில் எடுத்துக் காட்டியிருக்கும் ரிக்வேதம் 13-வது பிரிவின் கடைசியில், "ஞானிகள், அக்கினி, இந்திரன், மித்திரன், வருணன் முதலாகிய பேர்களை ஸ்தோத்தரிக்கிறார்கள்" என்று ஒரு வாக்கியம் வருகிறது. இந்த பிந்திய காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்று சில பெரியோர்கள் நினைக்கிறார்கள். இதில் அக்கினியைப் பற்றி முந்திய பிரிவில் விவரமாய்ச் சொல்லியாயிற்று. இந்திரன் முதலான ஏனைய தேவரைப் பற்றியும் ரிக்வேதத்தில் ஸ்தோத்திரப் பாட்டுகளும் உள்ளன. அவற்றுள் சிலவற்றை இவ்விடத்து எடுத்துக்காட்டுவோம்.

(1) இந்திரன் செய்த வீரியமான கிரியைகளை இடி முழக்கங்கள் அடைந்த வெற்றிகளைக் கூறுகின்றேன். அவன் மேகத்தைப் பிளந்தான்; தண்ணீர்களைப் பூமியில் விழத் தள்ளினான்; மலையாறுகள் ஓடுகிறதற்கு வழியைத் திறந்தான்.

(2) மலையில் அடைக்கலம் தேடின மேகத்தை இரண்டாக வெட்டினான். வெகு தூரம் சுழற்றி எறியத்தக்க அவனுடைய இடியைத் துவஷ்டன் (கருமான்) தீட்டிக் கொடுத்தான். அப்போது தண்ணீர் ஊற்றுகள் பாய்ந்து பசுக்கள் தங்கள் கன்றுகளுக்கு இரங்கி ஓடுவது போலச் சமுத்திரத்திற்குத் தீவிரமாய் ஓடிற்று.

(4) இந்திரனே! நீ மேகங்களின் தலையீற்றை இரண்டாக வெட்டினதினாலே மோசக்காரரின் வஞ்சனைகளை அழித்தாய், அப்பொழுது நீ சூரியனையும், உதயத்தையும், ஆகாசத்தையும் தோன்றப்பண்ணி உன்னை எதிர்க்கத் தக்க சத்துரு ஒருவனாயினும் மீதியாய் இராதபடி செய்தாய்.

(5) சங்காரம் செய்கிற தன் பெரிய இடியைக்கொண்டு இந்திரன் இருளுள்ள விருத்திரனை அடித்தான். மரங்கள் கோடரியினாலே வெட்டப்பட்டுச் சாயுமாப் போல அகியன் தரையிலே விழுந்து கிடந்தான்.

(9) விருத்திரனுடைய தாய் தன் மகன் மேல் குனிந்து நின்றாள். அப்பொழுது இந்திரன் தன் இடியினாலே அவனையும் அடித்தான். மகன் கீழாகவும் தாய் மேலாகவும் விழுந்தார்கள். பசு தன் கன்றுக் குட்டியோடே படுக்குமாப் போலத் தனுவென்கிறவள் மகனோடே நித்திரையடைந்தாள்.

(15) இடியை ஆயுதமாகக் கொண்டிருக்கிற இந்திரன் அப்பொழுது சராசரங்கள் அனைத்திற்கும் கொம்புள்ள ஜீவன்களுக்கும் கொம்பில்லா ஜீவன்களுக்கும் இராஜாவானான். அவன் சதாகாலமாய் மனிதருக்கு ராஜாவாய் இருப்பதினாலே வண்டி உருளையின் சுற்றளவில் ஆரைக்கால் அடங்கி இருக்கிறதுபோலச் சமஸ்தமும் அவனுக்குள்ளே அடங்கும்."

இந்தப் பிரிவில் மேலே காட்டிய ரிக் வேத வாக்கியத்தையும், ரிக் வேத ஸ்தோத்திர கவிகளையும் அக்காலத்தில் உள்ள ரிஷிகள் ரிக் வேதத்தோடே சேர்த்து வைத்தார்கள் என்பது மாத்திரமல்ல; அப்படிச் சேர்ப்பதற்கு உரிய முகாந்தரமும் அந்தக் கவிகளாலேயே விளங்குகிறது. எப்படியெனில், கார் மேகங்கள் எழும்பியும் மழை பெய்யாமல் அந்த மேகங்கள் கடந்து போகிறதை ஜனங்கள் கண்டு துக்கித்து இருப்பதையும், பின்பு சடுதியாய் மின்னல் தோன்றி மேகத்துக்குமேகம் பளிச்சென்று பாய்ந்து இடிமுழக்கம் உண்டாகிப் பெருமழை வருஷிப்பதையும் அக்காலத்து ரிஷிகள் கண்டு சிந்தித்து, வானமே மழை பெய்யப் பண்ணினதென்று ஊகித்து, அந்த வானத்தையே தெய்வமாகக்கொண்டு, இந்திரன் என்று பேரிட்டு, (இந்திரம்-நீலவர்ணம்), மழைபெய்யவொட்டாத மேக அசுரனை இந்திரன் இடியினாலே கொன்றான் என்று அவனைப் பெரிய தேவனாக மெச்சி வணங்குகிறார்கள் - என்று கீர்த்தி பெற்ற ஆங்கில அறிஞர் ஒருவர் எழுதியிருக்கிறார். அவர் கருத்தின்படியும் ஒரு வேளை இருக்கலாம். ஆனால் கவிகளை வியந்துகொள்ளத் தக்க பிரகாரம் புனைவதற்கென்று ஏற்பட்ட அநேக அலங்காரப் பிரமாணங்கள் உள்ளன. அவைகளில் ஒன்று ரூபக அலங்காரம். அந்த அலங்காரத்தைத் தழுவி நீலவர்ணமான வானத்தை இந்திரன் என்றும், கருமேக சாலத்தை விருத்திராசூரன்

என்றும், இடி மின்னல்களை இந்திரனுடைய ஆயுதம் என்றும் உருவகப்படுத்தி, அவர் புனைந்து வைத்த கவிதைகளைப் பிற்காலத்தில் உள்ள வித்துவான்களோ மக்களோ தப்பாய்க் கருதி, மெய்ப்பொருளாக அல்லது பூதார்த்தமாகப் பொருள் செய்து, இந்திரனைத் தேவனாகக் கொண்டாடினார்கள் என்று தெளிவு பெறுவதற்கு இடமிருக்கிறது. இவ்வளவேயன்றி இந்திரன் என்றொரு தேவனுமில்லை. அவனைச் சேர்ந்த மித்திரன் முதலியோர் தெய்வமும் அல்லர். இவை எல்லாம் வீண் மனக்கற்பனை.

"13. கடைசியாய், முன்னே சொல்லியபடி, இருக்கு வேத கவிகள் உண்டான காலத்தில் இந்துக்கள் எல்லாரும் வணங்கி வந்த தேவர்கள் இந்திரன், அக்கினி, சூரியன், காற்று முதலிய பஞ்சபூத தேவர்களே, இப்பொழுது இருக்கிற இந்துக்கள் வணங்குகிற திரிமூர்த்திகள் அக்காலத்தில் இல்லை. அந்தத் திரிமூர்த்திகள் செய்யும் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமாகிய முத்தொழிலும், அவர்கள் மூவரையும் குறிக்கும் ஓங்கார மந்திரமும் அப்பொழுது தெரியாது. இருக்கு வேதத்தில் உள்ள ஆயிரத்து இருபத்தெட்டுப் பாட்டுகளிலும் சிவனென்கிற பெயர் இல்லை. பார்வதி, உமையவள், துர்க்கை, காளி என்ற பேர்களையுடையவளும் அப்போதில்லை. அப்பொழுது பிள்ளையாரும் சுப்பிரமணியனும் இல்லை. வீரபத்திரனும், வயிரவனும், ஐயனாரும் அப்பொழுது இல்லை. அக்காலத்திலே லிங்கமும் தெரியாது. விபூதி ருத்திராட்சமும் தெரியாது. அப்படிப் போலவே இருக்கு வேத காலத்தில் இராமனும் கிருஷ்ணனுமில்லை. லட்சுமியும் இல்லை. ஹனுமனும் இல்லை. விஷ்ணுவின் பத்து அவதாரங்களும் அப்பொழுது தெரியாது. நாமும் துளசியும் அப்பொழுது தெரியாது. கைலாசமும் வைகுண்டமும் அப்போது இல்லை. இக்காலத்தில் உள்ள சிவபக்தரும் விஷ்ணுபக்தரும் விசேஷமாய் எண்ணுகிறவைகளில் ஒன்றாவது இருக்கு வேதகாலத்தில் வழங்கவில்லை. வேதப்பாட்டுகள் உண்டான காலத்தில் சிவனையாவது கிருஷ்ணனையாவது ஒரு ரிஷியும் வணங்கவில்லை.

இருக்கு வேத காலத்தில் பிராமணர் என்கிற பேர் ஒரு ஜாதிக்குரிய பெயராய் இராமல், ஒரு தொழில் செய்கிறவர்களுக்குரிய பெயராய் இருந்தது. யாதொரு ஜனங்களைத் தொடுகிறது தீண்டல் என்றும் அவர்களோடு சாப்பிடுகிறது தீட்டு என்றும் அக்காலத்துள்ளவர்கள் எண்ணினதும் இல்லை.

பசுமாடுகளை அக்காலத்து ரிஷிகள் முதலாய், பலியிட்டுப் புசித்தும் வந்தார்கள். திருஷ்டாந்தமாக:

"அக்கினியே! மலட்டுப் பசுக்களைக் கொண்டும் கன்றுள்ள பசுக்களைக்கொண்டும் உனக்கு யாகம் செய்திருக்கும் போது, நீ முற்றிலும் எங்கள் பட்சத்தில் சேருகிறாய்" என்று இருக்கு வேத்திலுள்ள இரண்டாம் மண்டலம் 7-ம் சூக்தத்திலும்-

"விசேஷித்த பரிசுத்த போஜனம் பசுக்களே" என்று ஆறாம் மண்டலம் 39-ம் சூக்தத்திலும்-

"ஒரு பசுவை ஜனங்கள் சந்து சந்தாக அறுக்கிறது போல், இந்திரனே! விருத்திரனைத் துண்டு துண்டாக வெட்டிப்போடு" என்று முதலாம் மண்டலம் 61-ம் சூக்தத்திலும் சொல்லியிருக்கிறது.

"14. இவ்வாறாக சைவ வைஷ்ணவ சமய சம்பந்தமாயுள்ள கடவுளராகிய திரிமூர்த்திகளாகட்டும், அதிபூர்வீகமான ரிக்வேத சாகைகளில் எடுத்து விளக்கப்பட்ட சூரியன், இந்திரன், அக்கினி, வாயு முதலிய தேவர்களாகட்டும், மற்றும் அனந்தமான குட்டித் தேவர்களாகட்டும், மெய்க் கடவுளுக்குரிய பரிசுத்த லட்ணங்களில் சிலவேணும் பொருந்தாத கற்பிதமான பொய்த்தேவர்கள் என்று அறிய முடிகின்றது."[124]

மேலும் 10ஆம் பாடலில் மும்மூர்த்திகளை வெறும் மனிதர் என்று சுட்டியிருப்பதையும் அங்குக் கொடுத்திருக்கும் விளக்கத்தையும் கண்டு தெளிக.

இப்பாடலில் மும்மூர்த்திகள் அடிப்படையாகக் கொண்ட காசி, கங்கை முதலான புண்ணியத் தலங்களுக்கும் புண்ணிய நதிகளுக்கும் யாத்திரைகள் செய்து நீராடுவது ஆன்ம ஈடேற்றத்தைக் கொடுக்காது என்பது **அகத்தியர்** கூறியுள்ள முடிவு.

தினமும் செபம் செய்யவேண்டும்

20. "பாரப்பா! இப்படியே தெளிவு இல்லாமல்,
பராபரத்தை அறியாமல் மோசம் போறார்;
ஆரப்பா! எதிர்ப்பார்கள் என்னோடேதான்?
அஞ்ஞான மூடர்கள் அதை எண்ணார்கள்;
வேரப்பா! சிவலிங்கம், விட்டுணுலிங்கம்,
வேதாந்த லிங்கமதை விரித்துப் பார்த்தால்;
சேரப்பா! கசுமால நாற்றம், நாற்றம்;
சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்யே!"

கருத்துரை : பார்: இவ்வாறு தெளிவில்லாமலும் பராபரத்தை அறியாமலும் மக்கள் மோசம் போகின்றார்கள்; இதனை என்னோடு எதிர்ப்பவர்கள் யார்?

அஞ்ஞானிகளாகிய மூடர் அதனை எண்ணிப் பார்க்கமாட்டார்கள்; சிவலிங்கம், விட்டுணுலிங்கம், இன்னும் வேதாந்தலிங்கம் முதலானவற்றை விரித்துப் பார்த்தால் விரும்பத்தகாத வெறுப்புதான் உண்டாகும்; மோட்சம் வேண்டும் என்று நாள்தோறும் செபத்தைச் செய்வாயாக.

விளக்கவுரை

உண்மையான பராபரத்தை அறிந்துகொள்ளாமல் மக்கள் மோசம் போகும் நிலையைக் குறித்து அகத்தியர் இப்பாடலில் வருந்துகின்றார். யார் தம்முடன் சேர்ந்து இந்தத் துன்பமான நிலையை எதிர்த்துச் சீர்த்திருத்தம் செய்வார்கள் என்றும் ஏங்குகின்றார்.

பலவகை இலிங்க வழிபட்டால் முக்திப்பேறு கிட்டாது என்பதையும், அவ்வழிபாட்டில் இருக்கும் "கசுமால நாற்றத்தையும்" உணர்த்துகின்றார். சிவவாக்கியரும் இதனை உணர்ந்து பாடுகின்றார்:

"தீர்த்தலிங்க முக்தியென்று தேடியோடுந் தீதரே
தீர்த்தலிங்க முள்ளினின்ற ஜீவனைத் தெளியுமோ
தீர்த்தலிங்க மும்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்தலிங்கந் தானதாய்ச் சிறந்ததே சிவாயமே"[125]

இரட்சணிய யாத்திரிகத்தில் இலிங்க வழிபாட்டை விட்டு இரட்சணிய மூர்த்தியிடம் சேருமாறு கவிஞர் அறைகூவல் விடுக்கின்றார்:

"மண்ணை மணலைச் சிவலிங்க வடிவாய்ச்சமைத்து மலர்தூவி
எண்ணமின்றி மந்திரஞ்சாற் றியம்பிப் பழம்பாட்டுகள்பாடிப்
பண்ணும்பூசை பயன்படுமோ பரவை கடக்கக் கற்புணைகொண்
டொண்ணுமோ ரட்சண்யகலத் துவந்து புகுமின் செகத்தீரே"[126]

சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்யே என்று அகத்தியர் மோட்ச வாழ்வை வேண்டி நாளும் செபித்து வாழுமாறு பணிக்கின்றார். இதே தொடர் 18ஆம் பாடலிலும் வந்துள்ளதை முன்னரே குறித்துள்ளோம். "இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்." (2 தெச.5:17)

ஆன்ம அறிவுத் தெளிவுபெற்ற பாவத்தை அறிந்து நாள்தோறும் முக்தி வேண்டி ஜெபம் செய்து வாழவேண்டும் என்று இப்பாடலில் வற்புறுத்துகின்றார் **அகத்தியர்.**

தீட்சை பெற்று கடவுளைத் தேடுதல் வேண்டும்

21. "செபத்தையே செய்வதற்குச் சீவன் வேணும்;
செபம் செய்யத் திருச்சித்தம் தேட வேணும்;

பவத்தையே ஒழிப்பதற்குக் கண்ணீர் வேணும்;
பரன்பாதம் அடைவதற்குத் தவசு வேணும்;

அவத்தமாய்ப் பலதானம் பண்ண வேண்டாம்;
ஆறுகுளம் தனில் மூழ்கி அலையவேண்டாம்;

சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப் போட்டேன்;
தீட்சை பெற்று சிவபாதம் தேடுவாயே!"

கருத்துரை : செபத்தைச் செய்வதற்கு சீவன் வேண்டும்; செபத்திலே கடவுளுடைய திருச்சித்தத்தைத் தேடவேண்டும்; பாவத்தை ஒழிப்பதற்கு மனம் வருந்தி கண்ணீர் சிந்த வேண்டும்; கடவுளின் திருவடிகளை அடைவதற்குத் தவ வாழ்வு வேண்டும்; பயனில்லாததான தருமங்களைப் பண்ணவேண்டாம்; ஆறுகளிலும் குளங்களிலும் மூழ்கி ஊர் ஊராக அலைய வேண்டாம்; கடவுள் பேரிலுள்ள ஆணைப்படிச் சொல்லுகின்றேன்; தீட்சை (திருமுழுக்கு) பெற்று மோட்ச வாழ்வைத் தேடுவாயாக.

விளக்கவுரை

இப்பாடலில் முக்தி வாழ்விற்கு இன்னும் வேண்டியவை எவை வேண்டாதவை எவை என்பதை வரையறுத்துக் காட்டுகின்றார் அகத்தியர். தீட்சை அதாவது திருமுழுக்குப் பெற்று வாழும் வாழ்வையே இங்க அழுத்திக் கூறுவதை அறிகின்றோம்.

செப வாழ்வை இங்கு மீண்டும் வற்புறுத்துகின்றார். இதற்கு முன்னர் செபம் குறித்து வந்த இடங்களில் கொடுத்துள்ள குறிப்புகளையும் காண்க. இப்பாடலில் செபம் செய்வதற்கு என்ன வேண்டும் என்பதையும், செபம் செய்வதற்குச் சீவன் வேண்டும் என்கிறார். விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அவர்களுக்குள் இருக்கும் உயிருடன் உயராக இருப்பவர் பரிசுத்த ஆவியானவர். சீவன் என்பதால் ஆவியானவர் குறித்துக்காட்டப் படுகின்றார். நாம் பரிசுத்த ஆவியினாலே செபம் செய்ய வேண்டும் என்று வேதவசனம் கூறுகின்றது. "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே செபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்." (எபே.6:18).

சீவனுடன், உயிருடன், ஊக்கத்துடன், ஆவியுடன் செபம் செய்ய வேண்டும். என்றெல்லாம் வேதவசனங்கள் நமக்கு உபதேசம் செய்கின்றன.

அடுத்து நாம் செபத்திலே தேவனுடைய திருச்சித்தத்தை தேடவேண்டும் என்பதை அகத்தியர் தெளிவுபடுத்துகின்றார். பிதாவின் திருவுளச்சித்தத்தை நிறைவேற்ற இவ்வுலகில் **பரமகுருவானவர்** வந்தார். பிதாவின் சித்தத்தை செய்வதே அவருடைய உணவாக இருந்தது. "இயேசு அவர்களை நோக்கி நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பது என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவான் 4:34). கெத்சமனே தோட்டத்தில் பிதாவின் திருவுளச்சித்தத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்து சிலுவைப் பாடுகளை ஏற்றுக்கொண்டார். "அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்சமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி, பேதுருவையும் செபதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டு போய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது, அவர் என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி என்னோடே கூட விழித்திருங்கள் என்று சொல்லி, சற்று அப்புறம் போய், முகங்குப்புற விழுந்து என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக் கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான். மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரை பண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது. அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம் பண்ணினார்." (மத்26:36-44).

கிறிஸ்து பெருமான் மக்களை மீட்கும் நடுவராகத் தம்மைப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்ததை **இரட்சணிய யாத்திரிகம்** கூறுவதை ஒப்பிட்டுக் காண்க:

"சொல்லரு மரணோ பாதிச் சுடுகணற் சுவாலை மீக்கொள்
எல்லையி றுன்ப மென்னு மெறிதிரைக் கடலுண் மூழ்கி

அல்லலுற் றழுங்கி யந்தோ வருட்கும ரேசன் றாதை
தொல்லையன் பிதயத் துள்ளித் தனித்தொரு சுழல் புக்கு.

காலினை முடக்கி யந்தக் கரணத்தை யொடுக்கி யன்பின்
சீலமே திகழுங் கஞ்சத் திருமுக நிலத்திற் சேர்த்திக்
கோலமார் தடக்கை கூப்பிக் கும்பிட்டு விழிநீர் சோரச்
சாலவும் பணிந்து தீன தயாளரின் னருளை நாடி.

அப்பனே யெல்லா மும்மா லாகுமவ் வவஸ்த யார்ந்த
கைப்புறு பாத்தி ரத்தைக் கழித்திடக் கருத்துண்டாயின்
அப்படி யாக வன்றே லையவென் சித்த மன்று
மெய்ப்படு முமது சித்தம் விழைந்ததே யாக வென்றார்.

"இம்முறை யாக மேனி யிரத்தவே ரொழுகு மாறு
செம்முறை திறம்பாத் தூய சிந்தையுள் ளுடைந்து தேம்பி
மும்முறை பிதாவைக் கிட்டி ஜெபித்தனர் முனிவொன்றின்றி
எம்முறை பாட்டுக் குள்ள மிரங்கியா தரிக்கு மீசன்.

அத்தனைக் கருதிக் கூவுமளவையி லடுத்தோர் தூதன்
சித்தசஞ் சலத்தை யாற்றித் தேற்றினன் சென்றா னாக.
இத்தரா தலத்து மாந்த ரெவரையும் புரக்க வந்த
வித்தகப் புனித மூர்த்தி யெழுந்தனர் விமலற் போற்றி.

உலகினுக் கிரட்சை நல்கு மொருதனி நடுவ ராவிக்
கலகறு துன்ப மாய கடுவிட மருந்தி யின்னும்
விலகில தாகி மேன்மேல் வேதனைப் பகழி சிந்தி
இலகரு ளுருவ மாய்க்க வெத்திரந்தது கடவுணீதி."[126A]

கிறிஸ்து பெருமானின் திருநாமத்தினாலே நாம் செபம் பண்ணவேண்டும். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." (யோவா.14:13,14). தேவனுடைய சித்தத்தை அறிந்து அதற்கு ஆட்பட்டு செபம் செய்ய வேண்டும். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்." (சங்.40:8). "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும். நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக." (சங்.143:10).

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்." (மத்.12:50). "அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன்

இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்வான்" (யோவான் 7:17). "ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்" (யாக்.4:15).

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படி செபிக்க நமக்குக் கற்பிக்கின்றார்: நமக்கு செபத்தில் உதவுகின்றார்.

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்." (ரோமர் 8:26,27).

பின்வரும் இரட்சணிய **மனோகரப் பாடல்கள்** செபத்தில் இறைவனுடைய சித்தத்தைக் குறித்து நமக்கு அறிவிக்கின்றன.

"பக்தியாய்ச் செபம் பண்ணவே
சுத்தமாய்த் தெரி யாதய்யா
புத்தியோடுமைப் போற்ற நல்
சித்தமீந்திடும் இயேசுவே.

உனதுசித்த முவந்ததே
எனது பாக்கிய மென்னுநல்
மனதுதந்தெனை வாழ்வியாய்ப்
புனித புண்ணிய மூர்த்தியே"[127]

பவத்தையே ஒழிப்பதற்குக் கண்ணீர் வேணும்:

"கண்ணீர் நித்தம் சொரிந்து" என்று இன்னொரு பக்தர் பாடுகின்றார். பாவத்திற்காக வருந்தி கடவுள் பாதத்தில் கண்ணீர் விட்டு மன்னிப்புப் பெறுதலைக் கூறுகின்றார். இது பக்தர்களுடைய முக்தி நோக்கி தொடர்ந்து இருக்கும் அனுபவம் என்பதை முன்னரும் குறிப்பிட்டிருக்கின்றோம். இது பாவத்திற்காக மனம் வருந்தி துக்கப்படுதலையும், செய்த பாவத்தை இனிமேல் செய்ய மறுக்கும் தீர்மானம் எடுத்தலையும் குறித்துக் காட்டுகின்றது. (2 கொரி.7:10).

அன்பு மிக்க பரம தந்தையாகிய கடவுளின் பிரமாணங்களை மீறி வாழ்ந்ததனால் அவருடைய திருவுளச்சித்தத்திற்கு ஏற்புடைய துக்கப்படுதல் வேண்டும். கடவுள் மனிதர் கீழ்ப்படியுமாறு "கட்டளை" (சட்டம்) கொடுக்கிறார்.

அப்படி மனிதர் அவருடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவில்லை என்றால் தண்டனை அனுபவிக்கவேண்டும்.

(1) "பாவம் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்." (1 யோவான் 3:4).

(2) "... நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப் பட்டவைகளையெல்லாம் செய்யத் தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே." (கலா.3:10).

(3) ".... கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." (2 பேதுரு 3:9).

உங்களுடைய இழந்துபோன நிலையையும் அதன் விளைவாக நீங்கள் நித்திய காலமாகச் சென்றடைய வேண்டிய இடத்தையும் நினைக்கும்போது இயல்பாகத் துயரம் உண்டாகிறது. இது வேதாகமத்திலிருந்து கூறும் ஒரு விளக்கவுரை அன்று; ஆனால், கடவுளின் திருவாக்கு தெள்ளத் தெளியக் கூறுகின்ற உண்மையாகும்.

(1) "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும் என்றார்." (யோவான் 3:36).

(2) "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும் விசுவாசிக்கிறவர்கள் எல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." (2 தெச.1:7-10).

நீங்கள் பாவத்தில் வாழ்ந்தபோது, அந்தத் தீய வாழ்க்கையின் விளைவால் மற்றவர்களுடைய வாழ்க்கையும் பாதிக்கப்பட்டதை நினைக்கும்போது நீங்கள் அவசியம் மன வருத்தப்படுவீர்கள். உங்களுடைய பாவம் உங்கள் ஆத்துமாவை நித்திய தண்டனைக்கு உட்படுத்தியதுடன் மற்றவர்களின் ஆத்துமாக்களும் நித்திய காலமாக இழந்து போவதற்குக் காரணமாக இருக்கிறதே.

(1) "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை. ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை" (ரோமர் 14:7).

(2) 2 இராஜா.21:1-17; 2 நாளா.33:11-19; மனாசே தன் பாவங்களினால் உண்டாக்கிய தீய செல்வாக்கினால் தன் மகனையும் தன் நாட்டையும் பாவம் செய்யும்படி செய்து விட்டான்; அதனால் அவர்கள் ஆக்கினைக்குட்பட்டார்கள். அவன் பிறகு மனம் திரும்பிய போதிலும் அவன் விதைத்த தீய விதை பயங்கரமான விளைச்சலைக் கொடுத்துவிட்டது.

I. பாவம் செய்யமறுக்கும் தீர்மானம் முழு இருதயத்துடன் எடுக்கப்படல் வேண்டும்; இதில் உங்கள் முழு விருப்பமும், அறிவும், உணர்ச்சிகளும், மனச்சான்றும் உள்ளடங்கி இருக்க வேண்டும்; மன ஒருமைப்பாட்டுடன் எடுக்கப்பட்ட தீர்மானமாக இஃது இருக்க வேண்டும்.

(1) "இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் கற்பனை." (மத்.22:37-38).

(2) "உங்கள் முழு இருதயத்தோடும் என்னை தேடினீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள்." (எரே.29:13).

II. இத்தீர்மானம் ஆரம்பத்திலே எடுப்பது மட்டுமன்று; இது தொடர்ந்து எடுக்கப்பட வேண்டும்; நாள்தோறும் எடுக்கப்பட வேண்டும்.

(1) "பின்பு அவர் எல்லோரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். (லூக்கா 9:23).

(2) "... ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாய் இரு. அப்பொழுது ஜீவகிரிடத்தை உனக்குத் தருவேன்." (வெளி.12:10).

III. பாவத்திலிருந்தும் அதன் தண்டனையிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக செய்யும் தீர்மானம் மட்டுமல்லாமல், அது கிறிஸ்தவ வாழ்க்கையின் கடமைகளைச் செய்வதற்காக எடுக்கும் தீர்மானமாகவும் இருக்கவேண்டும்.

(1) "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும், உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." (அப்.2:42).

(2) "சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை

எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்." (எபி.10:25).

திரு.வி. கலியாணசுந்தரனார் தன் குறைகளைக் குறித்து கிறிஸ்து பெருமானிடம் அழுததைக் குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவின் அருள் வேட்டலில்,

"ஏசினேன் உன்னை இனிய மொழியை இளமையிலே
கூசினே னில்லை குறையினைப் பின்னே குறித்தழுதேன்
ஏசுவே! உன்னருள் என்னுளம் எய்திய தெப்படியோ
மாசிலா அன்பே! மகனாய் உருக்கொண்ட மாணிக்கமே!"

"என்னிடங் குறைகள் பிறரிடங் குறைகள்
எழுவதைக் கண்டபோ தெல்லாம்
உன்னடி எண்ணி உருகியே செபத்தில்,
உளங்கொளும் உணர்வினை அளித்தாய்
என்னகைம் மாறு செய்குவேன் ஏழை
ஏதுவே! எம்பெரு மானே!
அன்பினால் உலகை அமைதியில் நிறுவ
அவதரித் தருளிய அரசே!"[129]

இரட்சணிய மனோகரம்:

"கல்லான இருதய முடைந்துருகி யிருவிழிக்
கலுழ்ந்து கண்ணீர் சொரியவே"

என்றும்

"கண்ணீ ருகுப்பினு மானந்த பரவசங்
காணினுங் கவன மொன்றி
கருதரிய நின்சீர் புனைந்துகவி பாடினுங்
கன்மனங் கனிய நாளும்
உண்ணீர்மை யொடுமுழங் காலூன்றி நின்றுள்
ளுவப்பொரு செபஞ் செய்யினும்..."[130]

என்ற குற்றத்திற்கு வருந்தி கண்ணீர் வடிப்பதைக் கூறுகின்றது.

பிழை நினைந்திரங்கல் பதிகத்தில்:

"வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனென் றிகழ்ந்தி டாதென்
புன்கணுக் கிரங்கி யோர்பூம் பொழிலிடைப் புனித மூர்த்தி
நின்கணீர் சொரிந்துஞ் செந்நீர் வியர்த்தல் கண்டும்
என்கணீர் சொரியக் காணே னென்செய்வான் றேன்றினேனே."

"அழுகிலேன் மனங்க சந்திட் டளியனேன் பிழையை யுன்னி
விழுகிலே னின்பா தார விந்தமே கதியென் றேத்தித்
தொழுகிலே னாவி யாலே தொடர்பவத் துயிலை நீத்திங்
கெழுகிலே னீச னேயா னென்செய்வான் றோன்றினேனே."[131]

என்று பாடுகின்றார் கவிஞர்.

பரன்பாதம் அடைவதற்கு தவசுவேணும்: இங்கு தவசு என்றதால் பரிசுத்த வாழ்வைக் குறிக்கின்றார். பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் பல வகைத் தவங்கள் புரிந்து வாழ்தலை வேதியர் ஒழுக்கத்திலே பின்வரும் பாடல்கள் தெரிவிக்கின்றன.

"சீவன்முத் தருக்கு நல்குந் திவ்விய சிந்தை ஞானம்
மேவருங் குணங்க டீர்க்க விசுவாசம் விரதஞ் சீலந்
தாவருந் நலங்க ளெல்லாந் தந்தருள் புரியுந் தூய
தேவனல் லாவி யுள்ளந் திகழ்தர ஜெபித்தல் வேண்டும்."

"நித்திய கரும மாதி நியமன வநுட்டா னங்கள்
உத்தம வழிபா டுள்ளத் துரிமைபூண் டெழுசன் மார்க்கம்
சுத்தமுக் கரண மாய சுகிர்தசா தனத்தை யோம்பி
வித்தகம் பயின்று மேலாம் விழுத்தவ முயறல் வேண்டும்"

"அறிவெலா மான்ம போத மணியெலாஞ் சுகுணந் துய்க்கும்
பொறியெலாம் புனிதஞ் செய்யும் போரெலாம் பகைமூன்றோடு
குறியெலாம் சீவ ரட்சை யாயின குறிக்கொண் டூர்த்த
நெறியெலாம் நோற்றுச் சென்று நித்யவீடடைதல் வேண்டும்."[132]

அவத்தமாய்ப் பலதானம் பண்ணவேண்டாம்; ஆறுகுளந்தனில் மூழ்கி அலையவேண்டாம்: என்னென்ன வேண்டும் என்று முன்னர் கூறியவர் இப்பொழுது என்னென்ன வேண்டாம் என்று கூறுகின்றார். தான தருமங்கள் செய்வதும், புனித ஆறுகளுக்கும் குளங்களுக்கும் சென்று முழுகுவதும் மீட்பளிக்காது என்கிறார் **அகத்தியர். பாம்பாட்டிச் சித்தரும், சிவவாக்கியரும்** கூறும் கருத்தையும் இணைத்து எண்ணுக.

"நாளுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினு மதன்நாற்றம் போமோ
கூறுமுடல் பலநதி யாடிக் கொண்டதால்
கொண்டமலம் நீங்கா தென்றாடாய் பாம்பே".

"காலை, மாலை நீரிலே முழுகுகின்ற மூடர்கள்
ஊழிகாலம் நீரிலே யுதிக்கும் தேரைக்கென் பலன்

காலமே யெழுந்திருந்து கண்கள் மூன்று தோன்றிலே
மூல, மூல மென்பீராகில் முக்திசேரலாகுமே."[133]

தான தருமங்கள் செய்த கொர்நெலியு, அவற்றால் இரட்சிப்படையாமல், பரமகுருவின் நற்செய்தியைக் கேட்டுக் கீழ்ப்படிந்து விண்ணரசுக்குள் வந்ததைக் காண்கிறோம். (காண்க: அப்போஸ்தலர் நடபடிகள் 10:1-48)

சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப் போட்டேன்; தீட்சை பெற்றுச் சிவபாதம் தேடுவாயே!

சிவன் என்று கடவுளைக் குறிப்பிடுகின்றார். கடவுள் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறார் அகத்தியர் என்பதன்று இங்கு பொருள். ஏன் என்றால், அவ்வாறு ஆணையிடுதல் மனிதருக்கு அனுமதிக்கப்படவில்லை. கடவுளின் பெயரில் அவருடைய ஆணைப்படி அல்லது கட்டளைப்படி அறிவித்தார் என்பது பொருள். ''அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது'' (லூக்கா 24:47)

அவருடைய ''நாமத்திலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது'' என்னும் பெரிய கட்டளையை அறிகின்றோம். அகத்தியர் கொண்ட பொருளும் இதனால் நமக்குத் தெளிவாகின்றது. (மத்தேயு 28:18-20).

தீட்சை பெற்று சிவபாதம் தேடுவாயே:

தீட்சை என்றதால் பரமகுருவின் கட்டளைப்படி (மத்தேயு 28:18-20) திருமுழுக்குப் பெறுதலைக் காட்டுகின்றார். ஞானஸ்நானத்தைக் குறித்து 17ஆம் பாடலுக்கும் 28ஆம் பாடலுக்கும் எழுதியுள்ள குறிப்புகளைக் காண்க. தீட்சை பெற்று முக்தி வாழ்வைத் தேட வேண்டும். **இரட்சணிய மனோகரப்** பாடலும் இச்செய்தியை அறிவிப்பதைக் காணலாம்:

"ஒளிக்குறி வாயி லூடு புகுந்தொரு வழிபட்டுள்ளந்
தெளிக்குநல் லுரைகேட் டான்ம தீக்கைபெற் றளவிலின்பம்
அளிக்குநற் கருணை யாய ஆரமிர் துண்டு வேந்தன்
விளிக்குநா ளளவுந் தூய விதிவிலக் கோம்பல் வேண்டும்."[134]

எ.ஆ. கிருஷ்ணபிள்ளையும் கிறிஸ்தவ சித்தாந்தத்தை இரத்தினச் சுருக்கமாகச் சொல்வதை அறிந்து அகத்தியர் கூற்றின் மெய்ப்பொருளையும் தெளிக.

"எவரும் ஞானதீட்சை பெற்றுத் திரிகரண சுத்தியாய்த் திரியேகக் கடவுளை வழிபட வேண்டுமென்பதும், விதி நிடேதங்களை மனப்பூர்வமாய்க் கைக்கொண்டு நடக்க வேண்டுமென்பதும், ஒவ்வொருவரும் உண்மையாய்த் தன்னை மகா

பாவியென்றுணர்ந்து உத்தம மனஸ்தாபத்தோடு பாவவழியை விட்டு விலகி மனந்திரும்பிக் கிறிஸ்துவே பாவநாசர், இரட்சணியமூர்த்தி, பாவ நிவாரண பிராயச்சித்த பலியாய்த் தம்மைக் கையளித்துப் பிராணத் தியாகஞ்செய்த மகா பிரபு, அவருடைய புண்ணிய பலத்தாலேயல்லாமல் வேறுவகையில் தனக்கு ஆத்தும ஈடேற்றம் கிட்டாதென்று கண்ணீரோடும் பெருமூச்சோடும் கிருபாசனத்தண்டை கிட்டிப் பொறி புலன்களையொடுக்கிச் சத்விநய பயபக்தியுடன் முக்காலுமும் எல்லா மக்களும் தனித்தனி அநவரதம் பிரார்தித்து வரவேண்டுமென்பதும், இப்படி நாள்தோறும் செய்து வருங்கால் தேவகிருபை பாவமன்னிப்பையும், சித்தசமாதானத்தையும் அருளிச் செய்து ஜீவன்முக்தராக்குவிக்குமென்பதும், மரணத்துக்குப் பின் நித்திய ஜீவசாம்ராச்சியத்துக்குப் போய்ச் சேர்க்குமென்பதும் இரட்சணிய சமயசித்தாந்தமாம்."[135]

இப்பாடலில் அகத்தியர் கடவுளின் திருவடிகளை அடைவதற்குச் செய்ய வேண்டியவை எவை, செய்ய வேண்டாதன எவை என்று அறிவுறுத்துகின்றார்.

மெய்ஞ்ஞான பாதையின் அடையாளம் - பத்துமொழி

22. "தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
செப்பினதோர் நூல்கள் எல்லாம் சுட்டுப்போடு;

அரிசிப்பாய் ஓர் வழி மெய்ஞ்ஞான பாதை
அடைவதற்கு அடையாளம் ஒன்று சொல்வேன்

பரிசிப்பாய் பத்துமொழி கையில் கொண்டு
பரப்பிரமம் ஒன்றையே நாடிக் கொண்டு,

வரிசிப்பாய் நிலைதவறா மார்க்கம் தேடி
வணங்குமந்த மறை புகுந்து வாழுவாயே!"

கருத்துரை : புலத்தியனே நான் சொல்வதைக் காணும்படி நன்றாயக் கேளு; மேலே நான் குறிப்பிட்ட வேண்டாத நூல்களை எல்லாம் எரித்துப் போடு; ஒரே வழியாகிய மெய்ஞ்ஞான பாதையில் பத்து கற்பனைகள் உண்டு; அவற்றை அடையாளமாகக் கொண்டு பரப்பிரமமாகிய கடவுள் ஒருவரையே தேடி, நிலைதவறாத மார்க்கத்தை அடைந்து, திருமறையின் உபதேசத்தின்படி அவரை வணங்கு; பின்பற்று.

விளக்கவுரை

தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு; செப்பினதோர் நூல்களெல்லாம் சுட்டுப்போடு:

வெளிப்படுத்தலாகமத்தில் 2,3ஆம் அதிகாரங்களில் ஆவியானவர் திருச்சபைகளுக்குச் சொல்லுகிறதைக் "காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று ஏழு முறைக் கூறுவதைக் காணலாம். (வெளி.2:7,11,17,29; 36:6,13,22). அகத்தியர் தாம் இதுகாறும் அறிவித்த செய்தியின் அடிப்படையில் தொடர்ந்து கூறும் செய்திகளை நன்றாகக் காது கொடுத்துக் கேட்குமாறு பணிக்கின்றார். தாம் கடிந்து கூறிய நூல்களை எரித்துப் போட வேண்டும் என்றே கூறுகின்றார். அவற்றின் செல்வாக்கால் பெரிதும் வருந்தத்தக்க நிலையில் மக்கள் மெய்வாழ்வை இழந்து இருப்பதை உணர்ந்ததனால் அன்பினிமித்தமே இவ்வாறு கடுமையாகக் கூறினார் என்று அறிக. பரமகுருவைத் தங்கள் மீட்பராக விசுவாசித்தவர்களில் பலர் இவ்வாறு செய்ததைப் புதிய ஏற்பாட்டிலே அறியலாம். மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டு எரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்" (அப்போஸ்தலர் 19:19). இன்றைய நிலையில் இதன்மதிப்பீடு கிட்டத்தட்ட பல இலட்சம் ரூபாயாகும்.

அரிசிப்பாய் ஓர் வழி மெஞ்ஞான பாதை:

மக்கள் விரும்பிப் போற்ற வேண்டிய ஒரே வழியை - மெய்ஞ்ஞான பாதையைக் கூறுகின்றார். பரம குருவாம் கிறிஸ்துபெருமான், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6) என்று திட்டமும் தெளிவுமாக அறிவித்துள்ளதைக் காண்க. இரட்சணிய மகாகவிஞர் "சிலுவை மீது ஏறிய மெய்ஞ்ஞான சூரியனடியைச் சிந்தை செய்வாம்" என்று பாடியுள்ளார். **இரட்சணிய யாத்திரிகமும்:**

> "அழிவி லாப்பர லோகவாழ் வொன்றையே யவாவி
> ஒழிவி லாதுளங் கவலுமின் முயலுமின் உண்மை
> வழிவி டாது நே ரோடுமின் மற்றவை யெல்லாம்
> பழிப டாதுமக் கருளுவ ருன்னத பரமன்"[136]

என்று அறிவுறுத்துகின்றது.

அடைவதற்கு அடையாளம் ஒன்று சொல்வேன் பரிசிப்பாய்ப் பத்து மொழி கையில் கொண்டு:

வழியாகவும், மெய்ஞ்ஞான பாதையாகவும் விளங்கும் பரம குருவை அடைவதற்கு அடையாளத்தை அகத்தியர் அறிவிக்கின்றார். அந்த அடையாளம் பத்து மொழி என்கின்றார். இதனால் அவர் பத்துக் கற்பனைகளை மீண்டும் நினைவு படுத்துவதைக் காண்கின்றோம். 9ஆம் பாடலில் பத்து கற்பனைகளுக்குக்

கொடுத்திருக்கும் விளக்கத்தை இங்கு ஒப்பிட்டுக் காண்க. இந்தப் பத்துக் கற்பனைகளைத் தமது வாழ்க்கையில் மக்கள் பொருட்டு பழுது இல்லாமல்-குறைவில்லாமல் நிறைவேற்றி வாழ்ந்தார் கிறிஸ்து பெருமான். பத்துக் கற்பனைகளின் பரிணாமமாகிய நியாயப்பிரமாணம் அடங்கிய பழைய ஏற்பாட்டினை சிலுவையில் ஆணி அறைந்து நீக்கினார் என்று திருவசனம் அறிவிக்கின்றது (கொலோ.2:14,15). நியாயப்பிரமாணம் கிறிஸ்துவினிடம் வழி நடத்தும் ஆசிரியராக இருந்தது. நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்காகவே கிறிஸ்துவினிடம் நடத்தப்பட்டோம். நமக்குப் பரமகுருவில் விசுவாசம் வந்த பின்னர் நம்மை அவரிடம் வழிநடத்திய உபாத்தியாயர் தேவை இல்லை, எனவே மிகப்பொருத்தமாக அகத்தியர் பத்துக் கற்பனைகளை அடையாளமாகக் காட்டி மக்களைப் பரமகுருவினிடம் வழி நடத்தியுள்ளார். "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது; விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" (கலாத்தியர் 3:24,25). மக்கள் இனி நியாப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்லர்.

"உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்த்சேதன மில்லாமையினாலேயும்; மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; நமக்கு எதிரிடையாகவும் கடடளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுயைின் மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்." (கொலோசெயர் 2:13-15).

பத்துக் கற்பனைகளை அடையாளமாக அகத்தியர் கூறியதன் உட்பொருள் என்ன வென்றால்: அந்தப் பத்து கற்பனைகளை அடிப்படையாகக் கொண்ட பழைய ஏற்பாட்டின் மார்க்கமே, **பரமகுரு** உலகத்திற்கு வரும் வரைக்கும் உண்மையான மார்க்கம் உலகத்தில் இருக்குமாறு கடவுள் அருளிச்செய்தது; அவற்றின் அடிப்படையிலே கடவுள் மனிதனுடன் கிறிஸ்துவின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார்; இதனால் அக்காலத்திலும் இக்காலத்திலும் உலகத்திலிருக்கும் ஏனைய மார்க்கங்கள் என்று சொல்லப்படுபவை எல்லாம் மனிதன் கடவுளைத் தேட முற்பட்டதன் விளைவாகத் தோன்றிய கொள்கைகளும் அவற்றின் விரிவுகளும் விபரீதங்களுமே என்பதைத் தெரிவிக்க என்று அறிக.

"பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்." (எபிரெயர் 1:1,2)

பரப்பிரமம் ஒன்றையே நாடிக்கொண்டு, வரிசிப்பாய் நிலைதவறா மார்க்கம் தேடி வணங்குமந்த மறை புகுந்து வாழுவாயே!

மேலே கண்டவாறு, அறிவிக்கப்பட்ட பரப்பிரமமாகிய கடவுள் ஒருவரையே அடைந்து அவர் அருளிச்செய்துள்ள நிலைதவறாத மார்க்கத்தைத் தேடி பரம்பெருளை வெளிப்படுத்தும் மறையாகிய வேதாகமத்தைப் படித்து, அதில் படிந்து வாழ்வாயாக என்று அறிவுறுத்துகின்றார். **இரட்சணிய யாத்திரிகம்** இந்த நேர் வழியைக் கூறி அறிவுறுத்துவதையும் ஒப்பிட்டுக் காண்க:

"ஒற்றை யேவழி யோரடித் தடமுடைத் தும்பாக்
கொற்ற வன்றிரு நகர்செலக் குறித்தது கோணல்
அற்ற நேர்வழி யயலடி பிசகுறி னந்தோ
துற்று காரிருட் சூழலுய்த் திடுமிது துணிபே."[137]

இப்பாடலில் **அகத்தியர்** மெய்ஞ்ஞான பாதையை அடையாளத்துடன் காட்டி, அப்பாதையை வெளிப்படுத்தும் திருமறையைக் கற்று அதன்படி கடவுளை வணங்கி வாழவேண்டும் என்று தெரிவிக்கின்றார்.

செகசோதியானவரை வணங்குவீர்களாக

23. "வணங்குாய் செகசோதி ஒருவனாகி மானிலத்தை
ஒருநொடியில் வகுத்தே மண்ணில்

குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்தில்
தான் உதித்துக் குருவாய் வந்து

சனமான சமுசாரம் ஒன்று இல்லாமல் சன்னியாசி போல்
இருந்து தவத்தைக் காட்டி

அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு அகண்ட தலம்
சென்றவரை அண்டுவாயே"

கருத்துரை : உலகத்தின் ஒளியாக வந்த அந்த ஒருவரையே வணங்குவாயாக. இந்த உலகத்தை அவர் ஒரு நொடியில் உண்டாக்கினார்; மனிதரை பூமியின் மண்ணினாலே உண்டாக்கினார்; பின்பு இந்த உலகத்தில் குருவாக வந்து தோன்றினார்; மனைவி பிள்ளைகள் என்று யாரும் இல்லாமல் சன்னியாசியாக வாழ்ந்து; தவ வாழ்வை மக்களுக்குக் காட்டினார்; பின்னர் தம்மில் அன்பு பூண்டு

ஒழுகிய சித்தர்களாகிய பன்னிர அப்போஸ்தலர்களை உலகத்தில் தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்கு விட்டுவிட்டு விண்ணுலகத்திற்குச் சென்றார்; அவரைச் சேர்ந்து கொள்வாயாக.

விளக்கவுரை

இப்பாடலில் பரமகுருவாம் இம்மானுவேல் கிறிஸ்துவின் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக அகத்தியர் கூறி தெளிவிக்கின்றார். 22ஆம் பாடலில் அவரை அடையாளத்துடன் நமக்குக் காட்டியவர் இப்பாடலில் வரலாற்றுடன் காட்டுகின்றார். அவ்வாறு காட்டுவதுடன் அமையாது அவரையே வணங்கிச் சேர்ந்துகொள்ள வேண்டும் என்பதையும் தெரிவிக்கின்றார்.

வணங்குவாய் செகசோதி ஒருவனாகி:

"அவருக்குள் (இம்மானுவேல்) ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்ககிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. உலகத்திலே வந்து எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:4,5,9). "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனிதருடைய கிரியைகள் பொல்லாதவைகளா யிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாக இருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்" (யோவான் 3:19-21). நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார் **பரமகுருவானவர்.** (யோவான் 9:5). இராமலிங்க வள்ளலாரும் உலகின் இருளைக் கடந்து கடவுளைக் காண முற்பட்டபோது,

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

என்று விவரித்தபோது அவர் கிறிஸ்து பெருமானைத் தவிர வேறு யாரையுமே அவ்வாறு குறித்திருக்க இயலாது என்று அதன் பொருளால் தெளிவு பெறலாம். பின்னரும்,

"சாதி சமயச் சழக்கைவிட் டேனருட்
சோதியைக் கண்டேனடி - அக்கச்சி
சோதியைக் கண்டேனடி"[138]

என்று பாடுகின்றார். மகாகவி எ.ஆ. கிருஷ்ணபிள்ளையும் கடவுளை,

"கருணையங் கடலே அந்தகாரமாம் வினையை போக்கும்
அருண னே"[139]

என்றும், "வேதமே வேத வெளிச்சமே," என்றும்,

"மெய்யொளியே வித்தகமே மேசியாவே" என்றும்,
"வெஞ்சுடர் கோடி விரிந்தென மகிமைச்
செஞ்சுடர் விரிக்கும் தேஜோ மயமாய்" என்றும்,
"அகண்டாகார சோதியாய் விளங்கும் தூய சைன்ய வாழ்வு"

என்றும் பாடுகின்றார்.[140]

கௌதமர், "சற்குருவே பேரொளியாய் நின்ற சோதி" என்று பாடுகின்றார்.

"சற்குருவின் பெருமைதனை உலகுதனில்
தானறியச் சாற்றுகிறோம் சார்ந்து கேளும்
சற்குருவாம் எவ்வுயிர்க்குந் தானே தானாய்ச்
சகல சீவான் மாவின் குருவுமாகிச்
சற்குருவே பேரொளியாய் நின்ற சோதி
தாரணியில் மானிடத்தின் சட்டைசாத்திப்
புற்குருக்கள் தங்களுக்குஞ் சீடன் போலாய்ப்
புத்திமதி சொல்லியே புரிவோர் தாமே."[141]

சிவவாக்கியர், "சுருக்கமற்ற சோதியை" என்று பாடுகின்றார்.

"இருக்குநாலு வேதமும் எழுத்தறவே ஓதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரான் இரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்து உண்மை கூற வல்லிரால்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடலாகுமே"[142]

நாமக்கல் கவிஞர் கிறிஸ்து பெருமானைக் குறித்துப் பின்வருமாறு பாடுகின்றார்;

"…. …. …. …. …. ….
ஏசுநாதன் என்றபேரை எங்கிருந்தே எண்ணினும்
ஏழை மக்கள் தோழனாக அங்கு நம்மை நண்ணுமே
தேசுமிக்க தியாகமேனி தெய்வதீப சோதியாய்த்
தீமையான இருளை நீக்கி வாய்மை அன்பு நீதியாய்ப்
பாகமாகப் பரிவுகூறிப் பக்கம் வந்து நிற்குமே
பகைவருக்கும் அருள்சுரக்கும் பரமஞானம் ஒக்குமே,
ஈசனோடு வாழவைக்கும் ஏசுபோத இச்சையை
இடைவிடாத யாவருக்கும் எதிலும் வெற்றி நிச்சயம்"[143]

மானிலத்தை ஒரு நொடியில் வகுத்தே:

உலகப்படைப்பின் வரலாற்றை ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்களில் அறிகின்றோம். கடவுள் தமது சொல் வல்லமையால் விண்ணுலகம் மண்ணுலகம் யாவற்றையும் உண்டாக்கி இன்று அவை இருப்பதுபோல இயங்க வைத்துள்ளார்.

> "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:1). "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது." (சங்கீதம் 33:6). "நீர் ஒருவரே கர்த்தர்; நீர் வானங்களையும், வானாதி வானங்களையும் அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர், அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வானசேனைகள் உம்மைப் பணிந்து கொள்கின்றன." (நெகேமியா 9:6).

> "அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" (யோபு 26:7). "நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கின்றன." (சங்கீதம் 102:25).

> "மனிதரே, ஏன் இப்படி செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போலப்பாடுள்ள மனிதர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்." (அப்.14:15).

இரட்சணிய மனோகரம் கடவுளுடைய படைப்பாற்றலையும் அருளையும் பின்வருமாறு பாடுகின்றது:

"சொல்லொன்றா லனைத்துலகுந் தோற்றுவித்தாய் தோற்றியவை
எல்லாமிங் கொருபடித்தாயின்றளவு நின்றியல
வல்லாய் நீ யோர்வரம்பு வைத்தாயுன் வல்லமையைப்
புல்லேனோ சொல்லிப்பு கழ்ந்துரைக்கும் போதத்தேன்"

"உருட்டுவாய் வையகத்தை யொருநொடியி லுகினொடுஞ்
சுருட்டுவாய் ககனத்தைச் சூழ்சுடரை நிறுத்துவாய்
திருட்டுவாய் மனத்தினரைத் திரையாழி யிடையமிழ்த்தித்
தெருட்டுவா யடியரையுன் றிறஞ்செப்பற் பாலதோ."[144]

மண்ணில் குணமான மனிதரையும் படைத்தபின்பு:

கடவுள் ஆதியில் மனிதனைப் படைத்து அவனை ஆசீர்வதித்த வரலாற்றை ஆதியாகமம் 1:26-31இல் காண்கிறோம்:

'பின்பு தேவன் தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலபிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனிதனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். பின்னும் தேவன்: இதோ பூமியின் மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன். அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது; பூமியிலுள்ள சகல மிருகஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார்; அது அப்படியே ஆயிற்று.'' (ஆதியாகமம் 1:26-30).

இன்னும் ஆதாம் ஏவாளின் படைப்பு விவரத்தை ஆதி. 2:7-15இலும் காண்க. "தேவனாகிய கர்த்தர் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான். தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தையுண்டாக்கி தாம் உருவாக்கின மனிதனை அதிலே வைத்தார். தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார். தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று. .... தேவனாகிய கர்த்தர் மனிதனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.'' (ஆதி. 2:7-15).

குணமான மனிதன் என்றதால் மனிதன் தேவசாயலில் படைக்கப்பட்டதைக் (ஆதி.1:26) குறித்துக்காட்டினார். மனிதன் தேவ கட்டளையை மீறி பாவத்துக்குட்பட்டபோது இந்தச் சாயலை இழந்தான். ''எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்.'' (ரோமர் 3:23).

பின்பு குவாலயத்தில் தானுதித்து குருவாய் வந்து:

மனிதன் கடவுள் படைப்பின் மணிமுடி. முதல் மாந்தர் ஆதாமும் ஏவாளும் தேவ கட்டளையை மீறிப் பாவம் செய்ததினால் பாவத்தின் சம்பளமான நித்திய மரணத்திற்கு இலக்கானார்கள். இந்த வரலாற்றை நாம் ஆதியாகமம் 3:1-14இல் காண்கிறோம்:

"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டுஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரியை நோக்கி : நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டன; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு; நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தை தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாய்

இருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம், என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரியானவள் : சார்ப்பம் என்னை வஞ்சித்தது. நான் புசித்தேன் என்றாள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்.... "

மேலும் காண்க:

"பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன் மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் தான் இருக்கும்" (எசே.18:20). "ஒரே மனிதனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனிதரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. அப்படியிருக்கும் மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்." (ரோமர் 5:12,14).

மனிதன் பாவம் செய்ததன் நிமித்தம் கடவுள் அவனுக்குக் கொடுத்த உலகத்திற்குரிய ஆசீர்வாதங்களை எடுத்துப்போடவில்லை. அவ்வாசீர்வாதங்களை அவன் துன்பங்களோடே அனுபவிக்க வேண்டியதாயிற்று. மனிதன் தன்னுடைய தன்னிச்சையான பாவத்தினிமித்தம் நித்திய தண்டனைக்கு உட்பட்டபோது கடவுள் அவனைப் புறக்கணித்து விடவில்லை. அவனை நித்திய தண்டனையினிற் மீட்கக் கருதி அப்பொழுதே ஒரு வாக்குறுதி அருளிச் செய்தார். "உனக்கும் ஸ்திரிக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையுண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி.3:15). தேவனுடைய குமாரன் கன்னி மரியாளின் வழியாக உலகத்தில் பரமகுருவாகத் தோன்றினார். பரமகுரு உலகத்தில் தோன்றிய வரலாற்றை மத்தேயு 1:18-25இல் படிக்கின்றோம்:

"இயேசு கிறிஸ்துவினுடைய பிறப்பின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவள் இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்தரை தெளிந்து எழுந்து கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்." மேலும் லூக்கா 2:1-19 திருவசனங்களிலும் சொல்லப்பட்டுள்ள திருப்பிறப்பின் வரலாற்றுச் செய்திகளையும் காண்க: "அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று; அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த படியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான். அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக்

காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போன பின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனை பண்ணினாள்" (லூக்கா 2:1-19). பரமகுருவின் திருப்பிறப்பைப் பாடும் **இரட்சணிய யாத்திரிகத்தின்** பாடல்கள் சிலவற்றையும் ஒப்பு நோக்கிக் காண்க:

"கன்னி பாலனாய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு சீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமுஞ் சிலுவையிற் றந்த
என்னு பாசனா மூர்த்தியை யஞ்சலித் திடவாம்"

"வானமும் பூமியும் மகிழ்கொண்டோங்கிட
ஞானமு நன்மையு நனிசி றந்திட
ஊனமும் பாவமு மொழியத் தோன்றிய
தீனரட் சகன்பதஞ் சிந்தித் தேத்துவாம்."[145]

"தன்னொரு மகவைத் தந்த தற்பர னன்பு வாழி
பொன்னுல கிழிந்து வந்த புண்ணியம் வாழி வாழி

மன்னுயிர் புரக்க வந்த மனுமகன் சரணம் வாழி
என்னையிந் நிலைபா லிக்கு மெம்பிரான் கிருபை வாழி."

"குருதியைக் கொடுத்து சீவ கோடியை மீட்பலென்ன
ஒருதிருக் குமரனன்பி னுரைதிருச் செவியிற் சாரக்
கருதருங் கடவுள் வேந்தன் கருணையாற் கருணை மைந்தன்
திருவுள மாக வென்று செப்பிமற் றிதனைச் செய்தார்."

"வானகத் தரசன் தம்போல் வையகத் தரசு செய்வான்
தானென வுதித்த மைந்தன் தனைத்தனி மௌலிசூட்டி
ஞானமுத் திரையு நல்கி நனிதவ வுயர்த்தி வைத்தார்
மானிடம் புரந்து பேயின் வன்தலை சிதைக்க வென்றே."

"மையார்கலி புடைசூழ்புவி வளைதீவினை யிருளும்
பொய்யாரணப் புலையார்திமி ரமுந்தீவிடம் பொதிந்த
பையாடர வின்சீறுவெம் படமுஞ்சிதை வெய்த
மெய்யாரணச் சுடர்மானிட விதயாம்பரம் விளங்க.

"தருமந்தலை யெடுக்கப்புட வியிற்சத்தியந் தழைக்க
அருமந்தமெய்ச் சுருதித்தொனி யவனித்தலை சிறக்க
ஒரு மந்தையின் மறியாயருள் ளுவந்தேத்திசை யோங்கத்
திருமந்திர முறை வாழ்த்தொலி செய பேரிகை கறங்க.

"கள்ளம்புரி யலகைக்கிறை கைகால்வில விலக்க
உள்ளம்பறை யறையத்திகி லூற்றாருயிர் நடுக்கங்
கொள்ளக்கரி முகங்குப்புறக் கொடுந்தீவினை குலைய
அள்ளிக்கதிர் வீசுஞ்சுடர் ரருணோதய மிதென;

"வானோமதி தலமோசுடர் மதியோவயங் கொளிர்வான்
மீனோவிரி கடலோமழை முகிலோவொரு விதியில்
ஆனாநெறி யமைத்தாக்கிய வகிலாண்டவச் சுதனோர்
ஊனாடிய திருமேனிகொண் டுதித்தாருல குவப்ப."[186]

கனமான சமுசாரம் ஒன்றில்லாமல் சன்னியாசி போலிருந்து தவத்தைக் காட்டி, அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு அகண்டத லஞ் சென்றவரை அண்டுவாயே: பரமகுருவானவர் இல்லற வாழ்வில்லாமல் சன்னியாசிபோல வாழ்ந்து மக்களை மீட்பதற்காகத் தமது பரம தந்தையாம் கடவுள் அனுப்பின அவரது சித்தத்தையே வாழ்க்கையில் நிறைவேற்றுவதையே தவமாகக் காட்டி உலகத்தில் வாழ்ந்தார். பரமகுரு மக்களை மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்து மேற்கொண்ட தவ வாழ்வை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நால்வரும் தங்களுடைய

நற்செய்தியாகமங்களில் எழுதியுள்ளனர். புதிய ஏற்பாட்டில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் **பரமகுருவின்** வாழ்க்கை வரலாறு அடங்கியிருக்கின்றது. ஆனால் இவை மட்டுமே அவருடைய வாழ்க்கையின் எல்லாச் செய்திகளும் அல்ல. "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையம் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன." (யோவா.20:30,31). அவர் வாயிலாக வெளிப்பட்ட மக்களை மீட்கும் நற்செய்தியின் சுருக்கத்தை திருவசனம் பின்வருமாறு தருகின்றது:

> "அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதனாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்." (2 கொரி.15:1-5).

அவர் மேற்கொண்ட சிலுவைத் தவ வாழ்வின் வாயிலாகத் கடவுள் மக்கள் மீது வைத்த அன்பினை வெளிப்படுத்தினார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்." (ரோமர் 5:8). "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." (யோவான் 3:16,17).

அவர் வாழ்ந்த தவ வாழ்வில் மக்களுக்கு மீட்பினைச் சம்பாதித்ததையும், அது மக்களுக்கு எப்படிச் சித்திக்கின்றது என்பதையும் மகாகவிஞர் தாம் கிறிஸ்துவைக் கண்ட வரலாற்றில் நீதி இரக்கசமரசர் என்னும் பொருளில் தெளிவுப்படுத்துகின்றதை ஒப்பிட்டுக் காண்க.

> "பரிசுத்த தெய்வத்துக்கும் தேவ கட்டளையை மீறிப் பாபாந்தகாரச் சிறையிலடைப்பட்டு நித்திய தண்டனைக்கு அருகராயிருந்த பாவிகளாகிய

மனிதருக்கும் மத்தியஸ்தராகவும், நீதியிரக்க சமரசராகவும் பிணை நின்று மனிதாவதாரஞ் செய்த தேவ குமாரனாகிய கிறிஸ்து நாதர் திரிகரண சுத்தராய் நியாயப்பிரமாண முழுவதையுங் கைக்கொண்டு நடந்து கலமிஷரகிதமான நீதியையும், சகல மனிதருடைய சகல பாவங்களையும் தாமே யேற்றுக்கொண்டு, அவர்கள் மேல் வரவிருந்த தேவ நீதியின் படியாயுள்ள தண்டனைகளை யெல்லாம் தாமேயடைந்து ஆத்தும கஸ்தியோடு சரீரத்தும் ரத்தம் பிரவாகிக்க அவஸ்தைப்பட்டு முடிவிற் சிலுவையிலறையுண்டு. பாவப் பிராயச்சித்த பலியாகிப் பிராணத்தியாகஞ் செய்து என்றென்றைக்குங் குறைவுபடாத புண்ணியத்தையும் மரித்த மூன்றாம் நாள் வெற்றி வேந்தராய் உயிர்த்தெழுந்து ஆத்தும கோடிகளுக்கு நித்திய ஜீவனாகிய இரட்சிப்பையும் சம்பாதித்தாரென்றும், பரத்துக் கெழுந்தருளிப் பிதாவின் வலப் பாகத்து கிருபாசனரூடராய் வீற்றிருந்து பிதாவை மன்றாடி விசுவாசிகளுக்கு இரட்சிப்பை அருளிச் செய்கிறாரென்றும், இவர் எங்கும் நிறைந்த பொருளாயிருப்பதினால் இவர் சம்பாதித்த இரட்சிப்பு எல்லா மனிதருக்கும் கிடைக்க தக்கதுதான் என்றும், ஒருவன் பாவ உணர்ச்சியும், உத்தம மெய் மனஸ்தாபமு முடையவனாய்க் கிறிஸ்து ஒருவரே பாவநாசர், உலக இரட்சகர், எனக்காகப் பிணை நின்று நானடைய வேண்டிய தண்டனையைத் தாம் அடைந்து தீர்த்துத் தம்முடைய புண்ணிய பலத்தால் என்னை இரட்சிக்கிறார் என்றும் திரிகரண சுத்தனாய் விசுவாசிக்கிறானோ, அவனுக்கு அந்த விசுவாசமே கிறிஸ்துவின் புண்ணிய பலத்தை யூட்டுகிறது, அதுவே அவனுக்கு இரட்சிப்பு. அவனே சீவன் முத்தன்."[147]

பரமகுரு மீட்பின் தவ வாழ்வைக் காட்டிய நாள்களில், தமக்குப் பின்னர் அவரது திருப்பணியைத் தொடர்ந்து செய்ய அவர் பன்னிரு அப்போஸ்தலர்களை தமது நேரடி மாணாக்கர்களை ஆயத்தப்படுத்தினார். பின்னர் தர்சு பட்டணத்துக்கு கல்விமானாகிய பவுலையும், இந்த ஊழியத்திற்குப் **பரமகுரு** அழைத்தார். அந்த அப்போஸ்தலர்களை அகத்தியர் சித்தர்கள் என்றே அழைக்கின்றார். பரமகுருவானவர் உயிருடன் இருப்பதை மனிதனுக்கு மரணத்துக்கு அப்பால் நிலையான மெய்வாழ்வு உண்டு என்பதை பலமுறை நேராகத் தரிசனம் அருளிச்செய்து சான்று காட்டி நிறுவினார். தமது 30ஆம் வயதில் வெளிப்படையான ஊழியம் தொடங்கிய சற்குருவானவர் மேலே குறித்த பன்னிரு சித்தர்களைத் தெரிந்து கொண்டு, கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் (சரியாக 3 1/2 ஆண்டுகள் எனலாம்). அவர்களுக்குப் பயிற்சி அளித்தார். அவர்கள் அவரைக் கண்டு, அவரிடம் கேட்டு, அவருடன் உண்டு, உறங்கி, அவர் மக்களை மீட்க வந்த நோக்கத்தை சிலுவையிலே நிறைவேற்றியதைக் கண்ணாரக் கண்டவர்கள். அவருடைய பன்னிரு சீடர்களுள் ஒருவரான யோவான் எழுதுவதைப் பாருங்கள்:

"ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்." (1யோவா.1:1-4)

பரமகுரு உலகத்தில் இருந்த இறுதி நாள்களில் அவர்களுக்கு ஒரு பெரிய கட்டளையைக் கொடுத்தார். மத்தேயு 28:18-20, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல நாட்டவரையும் சீடராக்கி, பிதா,குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங்கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாள்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றார். பின்னர் திரும்பி வருவதாக வாக்கருளிவிட்டுச் சென்றார். எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப் பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது. அவர் போகிறபோது இவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனிதரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்." (அப்.1:8-11).

கிறிஸ்து பெருமான் விண்ணகம் சென்ற பின்னர் அவர் வாக்கருளியவாறு அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தினார்.

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்

பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா.16:13). "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 15:26). "அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" (அப்போஸ்தலர் 1:3-5). "பெந்தேகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்." (அப். 2:1-4. மேலும் காண்க: அப். 2:5-47).

பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தியவாறு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தையும், நற்செய்தி எருசலேம் முதலாக உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு மக்கள் அதற்குச் செவி கொடுத்த வரலாற்றையும், புதிய ஏற்பாட்டில் நற்செய்தி ஆகமங்களை அடுத்து வரும் அப்போஸ்தலர் (அல்லது திருத்தூதுவர்) நடபடிகளில் அறிகின்றோம். நற்செய்தியை ஏற்றுக்கொண்டு பரமகுருவுக்குள் வாழ்ந்த-வாழவேண்டிய மக்களின் நடைமுறை வாழ்க்கையை அடுத்துவரும் 21 நிருபாகமங்களிலும், இந்தத் தேவ மக்களின் அல்லது இவ்வாறு உருவாக்கப்பட்ட - உருவாக்கப்படும் சற்குருவாகிய கிறிஸ்து பெருமானின் திருச்சபையின் எதிர்கால வாழ்வையும் புதிய ஏற்பாட்டின் இறுதி நூலான பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியருளி இருக்கின்றார். (2 பேதுரு 1:21).

அகத்தியர் இப்பாடலில் கூறியுள்ள செய்தியை இந்த வேதப்பகுதி பிரதிபலிப்பதைக் காணலாம்: பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன். இந்தக் கடைசி நாட்களின் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்

பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" (எபிரெயர் 1:1-3).

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புலவராக விளங்கிய மகாகவி பாரதியார் பாடுகின்றார்:

"ஈசன் வந்து சிலுவையில், மாண்டான்;
எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்,
நேச மா மரியா மகதலேனா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்;
தேசத்தீர்! இதன் உட்பொருள் கேளீர்;
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமை நித்தம் காப்பார்,
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்.
அன்பு காண் மரியாள் மகதலேனா
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தன்னை,
அன்பெனும் மரியா மக்தலேனா
ஆஹா! சாலப் பெருங்களி யிஃதே."[148]

இப்பாடலில் செகசோதியாம் பரமகுருவானவரை விவரமாகக் காட்டி அவரை மக்கள் அண்டிக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார் அகத்தியர்.

ஒன்றான மார்க்கம்

24. "அண்டாமல் இருப்பது என்ன என்று கேட்டால்
ஐயையோ சீவன் காற்று அகஸ்தியா என்னும்

ஒன்றான மார்க்கமதை விரித்துக் காட்டி உலகமதில்
இந்நூலை விரிக்கச் செய்து

தண்டாமல்பொதிய மாமலையில் என்னைத் தாபித்துத்
தயங்காமல் இருக்கச் சொல்லி,

ஒன்றான பரப்பிரமம் சொன்னார் சொன்னார்
ஓகோகோ புலத்தியனே உரைத்திட்டேனே"[1]

கருத்துரை : கடவுளைச் சென்று அடையாமல் இருப்பது என்ன அகத்தியா என்று என்னைக் கேட்டால்: அவர் படைத்த ஆத்துமாக்கள் தான்; ஐயையோ! இதனை நான் என்னவென்று சொல்வேன்! ஒன்றான பரப்பிரமமாகிய கடவுளை மக்களுக்கு அருளிச் செய்துள்ள ஒரே மார்க்கத்தை உலகத்தவர்க்கு இந்த நூலில் விரிவாகக் காட்டும்படிக் கட்டளையிட்டார்; பின்னர் என்னைப் பொதிகை மாமலையிலே தங்கி இருக்கக் கட்டளையிட்டார்: ஓ புலத்தியனே அவர் சொன்னபடி உரைத்துவிட்டேன்.

விளக்கவுரை

அண்டாமல் இருப்பது என்னவென்று கேட்டால் ஐயையோ சீவன் காற்று அகஸ்தியா: 'இதனை அண்டாமல் என்ன அகஸ்தியா என்று கேட்டால்' என்று கொள்ளவேண்டும். 23ஆம் பாடலின் இறுதியில் பரமகுருவின் வாழ்க்கை விவரத்தைக் கூறி, முடிவில் அவர் பரலோகம் சென்றுள்ளார் என்றும் அவரை அண்டிக்கொள்ள வேண்டும் என்றும் அகத்தியர் அறிவுறுத்தினார். ஆனால் இப்பாடலிலே அவ்வாறு அண்டாமல், அவரைச் சேர்ந்து கொள்ளாமல் இருப்பது என்ன என்று கேட்டால் 'ஆத்துமாக்கள்தான்' என்று மிகவும் பதறிக் கூறுகின்றார் அகத்தியர். அதாவது ஆன்மாக்கள் கடவுளை அடைவதற்குக் கடவுள் செய்யவேண்டிய தமது பகுதியைச் செய்துவிட்டார்; இனி ஆன்மாக்கள் அடைய வேண்டிய பங்குதான் உண்டு என்பதை அகத்தியர் இங்குப் புலப்படுத்துகின்றார். **சீவன்காற்று** என்றதால் ஆதியிலே தேவன் மனிதனை மண்ணினால் உருவாக்கி அவனுக்குள் தமது உயிர்க்காற்றை ஊதி அவனைச் சீவாத்துமாவாக்கினதைக் கூறுகின்றார் என்றறிக. சிவன் என்று முன்னரே கடவுளைக் குறிப்பிட்டுள்ளதைக் கண்டோம். "தேவனாகிய கர்த்தர் மனிதனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான்." (ஆதி.2:7).

ஒன்றான மார்க்கமதை விரித்துக் காட்டி உலகமதில் இந்நூலை விரிக்கச் செய்து தண்டாமல் பொதிய மாமலையில் என்னைத் தாபித்துத் தயங்காமல் இருக்கச் சொல்லி, ஒன்றான பரப்பிரமம் சொன்னார் சொன்னார் ஓகோகோ புலத்தியனே உரைத்திட்டேனே.

'ஒரே பரப்பிரமமாகியக் கடவுள் எனக்கு இட்ட கட்டளையின்படி, இந்த உலகத்திலே மெய்ப்பொருளாகிய இம்மானுவேல் கிறிஸ்து மூலமாய் வெளிப்படுத்தியுள்ள மார்க்கமே மக்களுக்கு ஈடேற்றம் அருளும் மெய்ம்மார்க்கம் என்பதை இந்நூல் வாயிலாக விரிவாகவும் தெளிவாகவும் காட்டியுள்ளேன். இவ்வாறு காட்டிய பின்னர், பொதிகை மாமலைக்குச் சென்று தயங்காமல் அங்கே இருக்குமாறு அவர் எனக்குக் கட்டளையிட்டார். அதன்படி புலத்தியனே நான்

உரைத்துவிட்டேன்' என்றவாறு. விசுவாச வீரர்கள் பலர் தங்கள் விசுவாச வாழ்வின்பொருட்டு மலைகளிலும், குகைகளிலும், பூமியின் வெடிப்புகளிலும் சிதறுண்டு அலைந்தார்கள். அவர்கள் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள் என்பதை வரலாற்றால் அறிகின்றோம். "வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள்; பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்; செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்: இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிப் பெற்றிருந்தார்கள்." (எபிரெயர் 11:36-39).

பொதியம் : அகத்தியர் பொதிய மாமலை என்று குறிப்பிடும் பொதியம் மலை பாண்டிய நாட்டில் உள்ளது. (இது இப்பொழுது தென்பாண்டித் திருநாடாம் திருநெல்வேலி). இது அகத்தியர் முனிவர் இருப்பிடமாகக் கருதப்படுவது என்று சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது.[149]

பேராயர் கால்டுவெல் தம்முடைய History of Tinnelvelly என்னும் நூலில் பொதிய மாமலையினைக் குறித்து: (ஒளிந்து கொள்ளும் "இடம்" என்பது பொருள்) 6,800 அடி அதன் உயரம் என்றும் அங்கு அகத்தியர் தங்கியிருந்த வரலாற்று விவரங்களையும் கூறியுள்ளார்.[149A]

இன்று தமிழகத்திலுள்ள பொதிய மலையில் அமைந்திருக்கும் அகத்தியர் கோயில் வரலாற்றை ஆராய்ந்தால் பல உண்மைகள் புலப்படலாம் போலும்!

இப்பாடலில் சித்தர் **அகத்தியரும்** ஐயத்துக்கு இடமில்லாமல் நூல் செய்த பின்னர் கடவுளின் கட்டளைப்படித் தாம் பொதிய மலைக்குச்சென்று தயங்காமல் தங்கியிருந்த வரலாற்றைக் கூறுவதைக் கவனிக்கிறோம்.

புறநானூறு "**பொற்கோட்டி மயமும் பொதியமும் போன்றே**"[150] என்று கூறுகின்றது. கடவுள் ஆணைப்படி இந்நூல் செய்வதை அகத்தியர் தமது நூலில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிட்டு வலியுறுத்துகின்றார்:

"அரனார் உத்தரப்படி அறிவித்தேனே." (13)

"சிவன்பேரில் ஆணைப்படி சொல்லிப்போட்டேன்." (21)

"பரமகுரு சொன்னபடி பாடினேனே." (30)

இதனால் இந்நூல் கடவுளின் திருவருளாணைப்படி அகத்தியரால் செய்யப்பட்டது என்பது தெளிவாகிறது.

பரப்பிரமமான கடவுளின் ஆணைப்படி நான் ஒன்றான மார்க்கத்தை விரித்து உலகத்தவருக்குக் காட்டியிருக்கிறேன் என்கிறார் அகத்தியர் இப்பாடலில்.

நூலின் எதிர்காலம்

25. "உரைத்திட்டேன் என்று சொல்லிச் சித்தர் எல்லாம்
ஒட்டாரமாக என்னைக் கோபிப்பார்கள்;
மறைத்திட்ட பெரியோரும் உலகத்தோரும் மயங்குவார்
என்னையுமே வசையாய்ச் சொல்வார்;
குறைத்திட்டே உரைத்த இந்த நூலைத் தானே
கூசாமல் சொல்லிவிட்டேன் கிழிக்கப் பார்ப்பார்;
அறைந்திட்டேன் புலத்தியனே சமயம் பார்த்து
அவர்களுக்கும் காண்பிப்பாய் அறியத்தானே."[1]

கருத்துரை : கடவுளின் கட்டளைப்படி நான் உண்மையை உரைத்திட்டேன் என்று சித்தர்கள் எல்லாரும் என் மீது கோபம் கொள்வார்கள்; சத்தியத்தை மறைத்துவிட்ட பெரியவர்களும் உலகத்து மக்களும் இதனை அறிந்து மயக்கம்போட்டு விடுவார்கள்; என்னையும் திட்டிப் பழிப்பார்கள். பெரிதும் சுருக்கி எழுதிய இந்நூலின் செய்தியை நான் கூசாமல் சொல்லிவிட்டேன்; இதனைக் கிழித்து அழிப்பதற்குப் பார்ப்பார்கள்; புலத்தியனே நான் சொல்ல வேண்டியதைக் கடவுள் ஆணைப்படிச் சொல்லிவிட்டேன்; நீ தக்க சமயம் பார்த்து அவர்கள் இதன் செய்தியை அறியத்தக்கவாறு அவர்களுக்கு காண்பிப்பாயாக என்றவாறு.

விளக்கவுரை

இப்பாடலில், அகத்தியர், தாம் கண்டறிந்த மெய்பொருளைக் கடவுள் உத்தரவின்படி திட்டமும் தெளிவுமாக உரைத்து விட்டதனால், ஏனைய சித்தர்கள் எல்லாரும் ஒருமித்துத் தம்மீது கோபிப்பார்கள் என்கிறார். உண்மையைப் புலப்படுத்தியமையால் அதனை இதுகாறும் மறைத்து வைத்திருந்த பெரியவர்கள் என்று கருதப்பட்டவர்களும், ஏனைய உலகத்தவரும் ஈடேற்ற வாழ்வை ஏற்றுக்கொண்டு அகத்தியரைப் போலத் தள்ளவேண்டியவற்றைத் தள்ளி, கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு மனத்தெளிவு பெறாமல் மயங்குவார்கள். இதன் விளைவாகத் தன்னைத் திட்டுவார்கள் என்கிறார். உண்மையை ஒப்புக்கொள்ளாத நிலையில் இத்தகைய நிலைகள் எழுவது இயல்பன்றோ! கிறிஸ்து பெருமான் அறிவித்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாத மக்கள் அவரையே வைதார்கள் அல்லவா? அவரைச் சிலுவையிலும் அறைந்தார்கள் அல்லவா? பவுலடியாரைத் துன்புறுத்தினார்கள் அல்லவா? (2 கொரி.11:23-24; அப்.9:1-23).

ஸ்தேவான் கல்லெறியப்பட்டு, திருச்சபையின் முதல் இரத்தசாட்சியாக மரிக்கவில்லையா? (அப்.7). மெய்ப்பொருளைக் கண்டு அடைந்தவர்களும், மெய்ப்பொருள் தொண்டர்களும் தொடக்க முதல் அநேக உபத்திரவங்களினூடே வந்தும், மெய்ப்பொருளை அறிவித்தும் வருகின்றார்கள். "அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக் கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்." (அப்.14:23). "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப் படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி.2:10). மேலும் எபிரெயர் 11ஆம் அதிகாரத்தையும் காண்க.

ஆறு இலட்சம் பாடல்களை முப்பது பாடல்களில் சுருக்கி உரைத்த இந்த நூலைக் கிழித்தெரிவார்கள் என்று அகத்தியர் அஞ்சுகின்றார். **பரமகுருவின்** திருத்தூதராக தமிழகம் வந்த தோமா ஏற்படுத்திய கிறிஸ்தவத்தின் விளைவாக, தமிழ் மொழியில் தோன்றிய கிறிஸ்தவ இலக்கியங்கள் எல்லாம் அழிக்கப்பட்டனவன்றோ! அதே நிலைமை தமது நூலுக்கும் ஏற்படும் என்று அஞ்சினார் போலும். ஆனால் இந்நூல் இறைவரின் பேரருளால் காக்கப்பட்டு இருமுறை பாடல் வடிவில் அச்சேறியிருப்பதை அறிகின்றோம். இப்பொழுது அவரின் திருவருள் ஏவுதலினாலே உரையுடன் இந்நூல் வெளிவருகின்றது! மெய்ப்பொருளை யார் மறைக்க இயலும்?

அறைந்திட்டேன் புலத்தியனே சமயம் பார்த்து, அவர்களுக்கும் காண்பிப்பாய் அறியத்தானே. டாக்டர் லூக்கா தாம் எழுதிய நற்செய்தி ஆகமத்தையும் அப்போஸ்தலர் நடபடிகளாகமத்தையும் தேயோப்பிலுவே என்னும் ஒருவரை முன்வைத்து எழுதுகின்றார். இந்தப் பெயருக்குத் "தேவனில் அன்பு செய்பவன்" என்பது பொருள். அவ்வகையில் இங்கே புலத்தியன் என்று அகத்தியர் விளக்கும் ஆள் ஒரு மெய்ப்பொருள் அறிஞன். நண்பன், வாசகர் என்று பொருளாகின்றது. இப்பாடல்களுக்குப் பொருள் தெரிந்தவன் அல்லது இவற்றின் வாயிலாக மெய்ப்பொருள் அறிவு பெற்றவன் என்றும் கொள்ளலாம். இந்நூலின் உரையாசிரியனையும் இது குறித்துக் காட்டுகிறது. மெய்ப்பொருள் தெளிவு பெற்றவன் அத்தெளிவு பெறாதவர்களுக்கு இது குறித்துக் காட்டுகிறது. மெய்ப்பொருள் தெளிவு பெற்றவன் அத்தெளிவு பெறாதவர்களுக்கு இந்நூல் வாயிலாக தக்க சமயத்தில் மெய்ப்பொருளை அறிவித்து தெளிவுபெறச் செய்ய வேண்டும் என்பது அகத்தியர் ஜெபம், உங்களையும் இணைத்தே அகத்தியர் இங்கு கூறியுள்ளதைக் காண்க. அகத்தியர் செபத்தைக் கடவுள் செயல்படுத்தாமல் விடவில்லை.

மேலும் புலத்தியன் பிரஜாபதி என்னும் பெயருடன் பிரம்மாவின் புதல்வன் என்றும், சில புராணங்கள் இவன் வாயிலாக மனுக்குலத்திற்குக் கிட்டியது என்றும், குறிப்பாக, விஷ்ணு புராணம் இவன் வாயிலாக வந்தது என்றும் கூறுவர்.[150A]

மெய்ப்பொருளைக் கண்டடைந்தவர்கள் அம் மெய்ப்பொருளை மற்றவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்பது இப்பாடலில் அகத்தியர் ஆலோசனை.

மக்கள் தேடவேண்டிய சித்தர்கள்

26. "அரிபாதம் அரிச்சை செய்யும் சித்தர் எல்லாம்
ஆசைமுறை தானடக்கி, அன்பதாகும்

பொறியகந்தைத் தானடக்கிப் பொசிப் பொடுங்கி,
பூரணத்து ஞானம் அதைப் பிரசங்கித்து

சரியாக ஆத்துமத்தின் கசட்டைத் தீர்க்கும்
சற்குருவைத் தேடிப் போய்ச் சடங்குசெய்து

அரிபாதம் காண்பிப்பார் சித்தர் உண்டு; அம்புவியில்
அவர்களை நீ தேடுவாயே!"

கருத்துரை : கடவுளின் திருவடிகளை ஆராதித்து வழிபடும் சித்தர்கள் எல்லாரும் உடலின் ஆசைகளை எல்லாம் அழித்து கடவுள் அன்பின் வழிப்பட்ட வாழ்வை மேற்கொண்டு, மரணத்தின் அகந்தையை ஒழித்து, பசியார்வங்களுக்கு மரித்து, பூரண பரம்பொருளாம் இறைவனுடைய ஞானத்தைப் பிரசங்கம் செய்து, ஆத்துமாவின் பாவத்தைச் சரியானவாறு தீர்ப்பார்கள்; சற்குருவாகிய மீட்பரைத் தேடிச் சென்று உரிய கிரியைகள் நடப்பித்து, கடவுளின் திருவடிகளில் சென்றடையச் செய்வார்கள்; இந்த உலகத்தில் அத்தகையவர்கள் உண்டு; அவர்களை நீ தேடுவாயாக.

விளக்கவுரை

அகத்தியர் இந்தப் பாடலில் நாம் தேடவேண்டிய சித்தர்களைத் தெரிவிக்கின்றார். தேவனை மனிதர் தேடிக் கண்டு பிடிப்பதற்குரிய சாட்சியை அவர் வைக்காமல் இல்லை. "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனிதர் கைகளால் பணிவிடை

கொள்ளுகிறதுமில்லை. மனித சாதியான சகல மக்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கின்றார். கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுகொள்ளும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே! ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனிதருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றார்." (அப்.7:24-31).

பரமகுருவும் தம்மைக் குறித்து எழுதப்பட்டுள்ள சாட்சியை வேத வாக்கியங்களில் ஆராய்ந்து பார்க்குமாறு அழைக்கின்றார். "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே." (யோவான் 5:39). ஆதிகாலத்துப் பக்தர்கள் இவ்வாறு வேதவாக்கியங்களை ஆராய்ந்து வாழ்ந்து நற்குணப் பேறு பெற்றவர்களாக விளங்கினார்கள். "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கின்றனவா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப்.17:11).

சற்குருவைத் தேடிப் போய்ச் சடங்குசெய்து அரிபாதம் காண்பிப்பார் சித்தருண்டு என்றதால், **சற்குரு** என்றும், **அமலகுரு** என்றும், **பரமகுரு** என்று அழைக்கப்படும் மெய்ப்பொருளாம் இம்மானுவேல் கிறிஸ்துவினிடம் மக்களை வழி நடத்தி முடிவில் கடவுளின் திருவடிகளில் சென்றடையச் செய்யும் சித்தருண்டு என்கிறார் அகத்தியர். பரமகுரு, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6) என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றார். இந்தச் சற்குரு என்ன செய்வார் என்று கேட்கும்போது, **"சரியாக ஆத்துமத்தின் கசட்டைத் தீர்க்கும் சற்குரு''** என்கிறார் அகத்தியர்.

ஆத்துமாவின் பாவத்தைத் தீர்க்கும் சற்குரு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே என்பது புலப்பட ''சரியாக'' என்றார். ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.'' (அப்.4:12). ''(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.'' (கொலோ.1:14). ''பாவம் செய்யும் ஆத்துமாவே சாகும்'' (எசே.18:20). ஆகையால், ஆத்துமாவின் பாவம் இவ்வுலகத்திலேயே தீர்க்கப்படும் என்பதாம். ஏனென்றால், இவ்வுலக வாழ்வைக் கடந்த பின்னர் நடக்கப்போவது நடுத்தீர்ப்பேயாம். ''மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின் படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினி கடலிலே தள்ளப்பட்டான்.'' (வெளி;20:12-15). ''அன்றியும் அவர் என்னை நோக்கி: ஆயிற்று நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீ ரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என் குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும் விக்கிர காராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.'' (வெளி.21:6-8).

''காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனிதர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்.'' (பிரசங்கி 12:13-14). ''அன்றியும் ஒரே தரம் மரிப்பதும்; பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.'' (எபி.9:27).

அகத்தியர் காட்டும் சித்தர்கள் எதனால் சற்குருவினிடம் வழிநடத்துவார்கள் என்றும், "பூரணத்து ஞானமதைப் பிரசங்கித்து" என்கின்றனர். **பூரணத்து ஞானம்** என்பதை **ஞானத்தின் பூரணம்** என்று கொள்ளவேண்டும். ஞானத்தின் பூரணமாக விளங்குபவர் கிறிஸ்து பெருமான். "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ.2:3). "ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." (கொலொ.1:19; 2:9). "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்." (யோவான் 1:16). "ஆகிலும், யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்." "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்." (1 கொரி.1:24,31).

இந்தச் சித்தர்கள் தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமான பரமகுருவையே பிரசங்கித்தார்கள். இதைப் பிரசங்கித்ததினாலயே கடவுள் மக்களை ஈடேற்றத்திற்குள் கொண்டு வருவதற்குத் திருவுளங்கொண்டார். இந்தப் பிரசங்கம் சிலருக்குப் பைத்தியமாகத் தோன்றலாம். ஆனால் கடவுளின் விருப்பம் என்ன? "ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப் பிரபஞ்சத்தர்க்க சாஸ்திரி எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று. (1 கொரி.1:20,21). முதன்முதலாக பேதுரு பெந்தேகொஸ்தே என்னும் ஐம்பதாம் திருநாளன்று முழுமையான நற்செய்தியை அறிவித்தபோது சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே பிரசங்கித்தார். "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் அருவடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது. அவரைக் குறித்து தாவீது, கர்த்தரை எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறார். அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, எந் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர். உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்; ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்;

உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான். சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள். அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. அவன் தீர்க்கதரிசியாயிருந்து, உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை யென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான். இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும், நீர் என் வலதுபாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்" (அப்.2:22-36). பிலிப்பென்பவர் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்." "அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். (அப்.8:5,35). பரமகுருவின் இரண்டாம் வருகைவரையில் பிரசங்கம் செய்யவேண்டிய மெய்ப்பொருள் இதுவேயாம். இப்பிரசங்கம் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாக நிகழ்ந்து வருகின்றது. தொடர்ந்து நிகழும்.

இந்தச் சித்தர்கள் யாவர் என்றால், அவர்களுடைய பண்பை அகத்தியர் பாடுகின்றார்:

அரிபாதம் அரிச்சை செய்யும் சித்தர் எல்லாம் ஆசைமுறை தானடக்கி, அன்பதாகும் பொறியகந்தைத் தானடக்கிப் பொசிப் பொடுக்கி: இவர்கள் கடவுளின் திருவடிகளில் சரணம் அடைந்து அவரை வழிபட்டு ஊழியம் செய்தவர்கள். செய்பவர்கள். இவர்கள் இவ்வுலகத்திற்குரிய தங்களுடைய உடலின் ஆசை இச்சைகளை கிறிஸ்துவுடன் சிலுவையில் அறைந்து, அவரில் பரிசுத்த ஆவியானவர் மூலம் புத்துயிர் பெற்று வாழ்ந்தவர்கள். வாழ்பவர்கள், "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது

சிருஷ்டியாயிருக்கிறான்." (2 கொரி.5:17). "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 6:6). "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே, எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." (கலா.2:20).

பரமகுரு உலகில் தமது திருப்பணியைச் செய்வதற்குப் பெரிய கட்டளையை ஒப்படைத்த அப்போஸ்தலர்கள் அவருடைய முதல் சித்தர்கள்; அப்போஸ்தலர்கள் காலத்திலே அவர்களையல்லாமல் கிறிஸ்துவைப் பிரசங்கித்து வந்த ஏனைய பக்தர்களை அடுத்த சித்தர்களாகக் கருதலாம். புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் நிறைவடைந்த காலத்திற்குப் பின்னர் (1 கொரி.13:8). அதன் வாயிலாக இன்றளவும் நற்செய்தியைப் பிரசங்கம் செய்து வருபவர்கள் மூன்றாவது நிலையில் அமைந்திருக்கும் சித்தர்கள் ஆவர். இந்தச் சித்தர்களே பரமகுருவின் இரண்டாம் வருகைவரைக்கும் அவருடைய நற்செய்தியைப் பிரசங்கம் செய்ய வேண்டியவர்களாவர். (மத்தேயு 28:18-20).

அம்புவியில் அவர்களை நீ தேடுவாயே! இந்தப் பூமியில் மேலே சொல்லப்பட்டவாறு ஊழியம் செய்யும் சித்தர்கள் உண்டு; அவர்களைத்தேடி அறிந்துகொள்; அவர்கள் இவ்வாறு தேடி வருவோரை, "தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்று பரமகுரு சொன்னதுபோல கடவுள் திருவடிகளை அடைவதற்கு உதவுவார்கள் என்று அகத்தியர் அறிவுறுத்துகின்றார்.

இப்பொழுதும் உலகிலுள்ள உண்மையான சற்குருவின் சித்தர்களை - ஊழியர்களைத் தேடி அவர்களிடம் மெய்வாழ்வு குறித்துத் தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் அகத்தியர் இப்பாடலில்.

கண்ணீரால் கழுவ வேண்டும்

27. "தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு; தீக்கிடங்கைத்
தேடாதே தெளியச் சொன்னேன்
பாடுவார் பதினெட்டுப் புராணங்கட்கும்
பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள்
நாடதனில் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
நவக்கிரகக் கட்டப்பா; நம்பவேண்டாம்;
ஓடுவார் அருள் பாதம் பூசை செய்து
உத்தமனே கண்ணீரால் கழுவுவாயே."

கருத்துரை : புலத்தியனே நான் தேடச் சொன்னதை நன்றாய்த் தேடு; நான் சொல்வதையும் கேட்கக் கடவாய்; உனக்கு எல்லாவற்றையும் தெளிவாய்ச் சொன்னேன்; இவற்றைக் கேட்டும் தீக்கிடங்காம் நரகத்தைத் தேடிச் செல்லாதே. பதினெட்டுப் புராணங்களும் மகாபாரதமும் வெறும் கட்டுக் கதைகள்; பரிகாசங்கள் நிறைந்தவை; நாட்டில் பிராமணர்கள் பிழைப்பதற்காகக் கட்டிவிட்ட நவக்கிரகக் கதைகள் அவை; அவற்றை நம்ப வேண்டாம்; திருவருள் நிறைந்த கடவுளுடைய திருவடிகளைப் போற்றி உத்தமனே உன்னுடைய கண்ணீரால் கழுவுவாயாக.

விளக்கவுரை

இப்பாடலிலும் அகத்தியர் மெய்வாழ்வையும் அதற்கு நேர் எதிரான நரகத்தையும் குறித்துக் காட்டி மெய்வாழ்வைத் தேடி அடையுமாறு அன்புடன் அறிவுறுத்துகின்றார்.

தேடுவாய் புலத்தியனே நன்றாய்க்கேளு; தீக்கிடங்கைத் தேடாதே தெளியச் சொன்னேன்:

முத்தி வாழ்வருளும் மெய்க் கடவுளிடம் வழி நடத்தும் சித்தர்களைத் தேடுமாறு முன் பாடலில் அறிவுறுத்திய அகத்தியர். இங்கு அதன் இன்றியமையாமையை நிலைநாட்டுகின்றார். அகத்தியர் அறிவுறுத்திக் காட்டிய சித்தர்களைத் தேடி மெய்ப்பொருளை அடையாவிட்டால் நரகத்தைத் தேடிச் செல்வதாகும் என்கிறார். நரகத்தில் தீ எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் ஆகையினால் அதனைத் தீக்கிடங்கு என்றார். 10ஆம் பாடலில் "அறியாதார் எரிநரகிலழிந்து போவார்" என்றும், 11ஆம் பாடலில் "எரிநரக அலகை செய்யும் இடர் எண்ணாமல்" என்றும் பாடியுள்ளமையையும் காண்க.

சுயவேதத்தில் இது 'கெஹென்னா' என்றும் அழைக்கப்பட்டுள்ளது. அதன் செயல் நோக்கத்தைக் குறித்து 11ஆம் பாடல் உரையில் கண்டோம். இங்கே அதன் இடம். எப்படி இருக்கும். அதன் துன்பங்கள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பனவற்றைக் கூறும் பின்வரும் செய்திகளையும் எண்ணிப் பார்க்க:

"கெஹென்னா எங்கே இருக்கிறது?

வெளி.9:1,2, "ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின் மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன். அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப் போல அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப் பட்டது." வெளி.20:10, "மேலும் அவர்களை மோசம் போக்கின

பிசாசானவன். மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்பட்டார்கள்."

மேலும் பூமியின் மையத்தில் இருக்கும் மிகுதியான வெப்பத்தைக் கவனியுங்கள்:

எரிமலைகளிலிருந்து வெளிப்படும் வெப்பம்.
நீராவி வெப்பம்.

வெப்ப நீரூற்றின் வாயிலாக வெளிப்படும் வெப்பம்.

கெஹென்னா எப்படி இருக்கும்?
நாம் அறிந்திருக்கும் இந்த வாழ்க்கையிலுள்ள சில வேதனைகளின் பெயர்களைச் சொல்லி நாம் அதனை விளக்கலாம்:

அ. நெருப்பின் வேதனை :

எப்பொழுதும் நெருப்பிலே எரிக்கப்படுவதனால் உண்டாகும் துன்பம் எப்படி இருக்கும்? உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? மத்தேயு 13:41,42, "மனிதகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய இராச்சியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்." வெளி.14:10,11. "அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குகிறவர்க்கும், அதனுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது."

ஆ. அன்பானவர்களிடத்திலிருந்து நித்திய காலமாகப் பிரிந்திருக்கும் துன்பம்.

அப்.20:36-38, "இவைகளைச் சொன்னபின்பு, அவன் முழங்காற் படியிட்டு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம் பண்ணினான். அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை இனிப் பார்க்க மாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக் குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்து, கப்பல் வரைக்கும் அவனுடனே கூடப் போனார்கள்."

இ. திருப்தியாகாத ஆசையின் துன்பம்.

வெளி.22:11, "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்."

ஈ. பொல்லாதவர்களுடைய கூட்டுறவால் வரும் துன்பம்.

வெளி.21:8, "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்."

உ. தாகத்தின் துன்பம்.

லூக்கா 16:24, "அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினிச் சுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்."

ஊ. நினைவின் துன்பம்.

மத்தேயு 27:5, "அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்தில் எறிந்துவிட்டு, புறப்பட்டுப் போய், நான்று கொண்டு செத்தான்." லூக்கா 16:25, "அதற்கு ஆபிரகாம்: மகனே நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசரும் அப்படியே தீமைகளை அநுபவித்தான். அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான். நீயோ வேதனைப்படுகிறாய்."

இத்துன்பங்கள் எவ்வளவு காலம் இருக்கும்?

வெளி.14:11, "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கினவர்களுக்கும், அதனுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது."

யார் கெஹென்னாவுக்குப் போவார்கள்?

வெளி.21:8, "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்."

அவர்கள் எவ்வாறு கெஹென்னாவில் நுழைவார்கள்?

தைரியமாக, துணிகரமாக, ஆணவத்தோடு உள்ளே செல்வார்களா? "அதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை" அல்லது "உங்களால் என்னைத் துன்பப்படுத்த இயலாது" என்று கூறிக்கொண்டு அலட்சியமாகச் செல்வார்களா? இல்லை, இல்லை; அவ்வாறு செல்ல இயலாது. ஆனால் அவர்கள் எப்படிச் செல்வார்கள்? வெளி.20:15 "ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்."

யூதக் குற்றவாளியை எருசலேமின் சுவற்றைக் கடந்து கெஹென்னாவுக்குள் தள்ளப்படுதலைக் குறித்தும் இவ்வாறே சொல்லப்பட்டுள்ளது என்பதையும் நீங்கள் கவனிக்கவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். இழந்துபோன பாவி நரகத்தீயில் இலேசாகப் "போவது" இல்லை - அவன் சரீரத்துடன் அதிலே தள்ளப்படுகின்றான்!!! அவன் நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்திற்கு வரும்போது (வெளி.20:10-15) நீதி, "அங்கே அவன் வருகின்றான் அங்கே அவன் வருகின்றான்!" என்று கூறும். அவனுக்காகச் செய்யப்பட்ட ஜெபங்களை எல்லாம் அவன் வெறுத்து ஒதுக்கினான்; அவன் கேட்ட பிரசங்கங்களை எல்லாம் புறக்கணித்தான்; கடவுள் அவனைத் தடுத்து நிறுத்துவதற்கு அவன் வழியிலே போட்ட எல்லா நிறுத்தக் குறிகளையும் அவன் அசட்டை செய்து பாதாளத்தை நோக்கித் தன் வாழ்க்கையை நடத்திக்கொண்டு போனான்; இப்பொழுது, அவன் அங்கே வருகின்றான்! காபிரியேல், பாதாளக் குழியின் வாயின்மீது அவனை ஒரு கணம் ஏந்திப் பிடிக்கின்றான். தூதன், "கீழ்நோக்கி - கீழ்நோக்கிப் பார்-பார்!" என்று சொல்லுகின்றான். பாதாளத்தின் ஆழங்களிலிருந்து, துயரம் நிறைந்த துன்பக் குரல்களும், திடனற்ற அழுகைகளும், துன்பமும் கூக்குரல்களும் அவன் காதுகளில் விழுகின்றன. தண்டனைக்குட்பட்ட பாவி துடிக்கின்றான்; அவனுடைய எலும்புகள் மெழுகுபோல் உருகுகின்றன.

வேதாகமத்தை பார்த்துச் சிரிக்கும் அவனுடைய பெருமை, இப்பொழுது எங்கே? திருச்சபைக்கும் கிறிஸ்தவனிடமும் வருமாறு அவனை அழைத்தவர்களைப் பார்த்து அவன் "இன்னும் அவசரமில்லை இன்னும் எனக்கு நிரம்ப நேரம் இருக்கின்றது" என்று சொல்லுகின்றானோ? இல்லை. இப்பொழுது காலம் மிகவும் தாழ்ந்து விட்டது. அவன் ஒரு சமயத்தில் கிறிஸ்துவின் அன்பை உதாசினப்படுத்தினான்.

அவன் ஒரு சமயத்தில் அசட்டை மனப்பான்மையுடன் இருந்தான். ஆனால், இப்பொழுது அவன் அவ்வாறு இல்லை!!

அவன் அலறுகிறான்; கதறுகிறான்; அவன் இரக்கத்திற்காக கெஞ்சுகிறான். ஆனால் தூதன்: "போ,-போ,-போ உன்னுடைய தருணம் முடிந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே, அவனைப் பலமாகத் தூக்கி கெஹென்னாவுக்குள்ளே எரிகின்றான்!

ஆழம் அறிய இயலாத அந்தப் பெருங்குழியில் அவன் போடப்பட்டு விட்டான்....

இது இரண்டாம் மரணம்!

ஏசாயா 33:14இன் மிகப் பெரிய கேள்வியுடன் நாம் இப்பொழுது முடிக்கலாம்:

"பட்சிக்கும் அக்கினிக்கு முன்பாக நம்மில் தரித்திருப்பவன் யார்?" உபாகமம் 30:15-19, 'இதோ ஜீவனையும், நன்மையையும், மரணத்தையும், தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன். நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூரவும், அவர் வழியிலே நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன். நீ கேளாதபடிக்கு, மனம் பேதித்து, இழுப்புண்டுபோய், வேறே தேவர்களைப் பணிந்து, அவர்களைச் சேவிப்பாயானால், நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு யோர்தானைக் கடந்து போகிற தேசத்தில் நெடுநாள் வாழாமல், நிச்சயமாய் அழிந்து போவீர்கள் என்பதை இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன். நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சியாக வைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, ஜீவனைத் தெரிந்துகொண்டு..."[151]

பாடுவார் பதினெட்டுப் புராணங்கட்கும் பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள் நாடதனில் பிராமணர்கள் பிழைக்கச் செய்த நவக்கிரகக் கட்டப்பா: பதினெண்புராணங்கள் முதலானவை. பாரதம் முதலானவை கற்பனைக் கதைகள் என்றும் பிராமணர்கள் நாட்டில் மற்ற மக்களை அவற்றால் அடிமைப்படுத்தி மேன்மையான வாழ்வு நடத்துவதற்காக எழுதிவிட்ட நவக்கிரகக் கட்டு என்கின்றார். தமிழ்நாட்டில் பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்களும், பேரறிஞர் அண்ணாதுரை அவர்களும் தோற்றுவித்த இயக்கங்களும் சீர்த்திருத்தமும் இந்த வகையில் அகத்தியரின் கருத்தை இன்றும் தெளிவுப்படுத்துவதைக் காணலாம்.

1979ஆம் ஆண்டில், **புரட்சியாளர் பெரியார்** என்னும் தலைப்பில் அரியதோர் ஆராய்ச்சி நூலினைத் தமிழ் உலகுக்கு வழங்கிய கல்வி நெறிக் காவலர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள். பெரியார் இராமாயணத்தைக் குறித்து அறிவித்த ஒரு கருத்தை தமது நூலில் குறித்துள்ளதையும் ஒப்புநோக்கிக் காண்க:

"நான் கலையுணர்ச்சியையும் தமிழ் உணர்ச்சியையும் வேண்டாம் என்று கூறவில்லை. தங்கக் கிண்ணத்தில் அமேத்தியம் (மலம்) இருந்தால் தங்கக் கிண்ணம் என்பதற்காக அமேத்தியத்தைப் புசிக்கமுடியுமா? அதுபோல், கம்பராமாயணப் பாட்டுகள் சிறந்தவைதான். அவைகளில் உள்ள மூட நம்பிக்கைக்கும் தமிழர் இழிவுக்கும் ஆரியர் உயர்வுக்கும் ஆதாரமானவைகளை வைத்துக் கொண்டு எப்படி அவைகளைப் பாராட்ட முடியும்?"[152] இது பெரியார் பதில்.

தமிழகத்தில் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தின் பணியையும் காண்க:

> "…. காங்கிரசு தொல்லை இல்லாமல் இருந்திருக்குமானால், இந்தியா பூராவையும் சுயமரியாதை இயக்கம் இன்னும் அதிகமாகக் கலக்கியிருக்கும் என்பதோடு, பார்ப்பணீயம் அடியோடு மாண்டிருக்கும் என்றே சொல்லலாம்."[153]

முதல் சுயமரியாதை மாநாட்டின் முடிவையும் இங்கு தருதல் பிராமணீயம் நாட்டிலே தோற்றவித்த பண்பாட்டை அறிய உதவலாம். இஃது அகத்தியர் கூற்றின் உண்மையைப் புலப்படுத்தும்: "மக்கள் பிறவியால் உயர்வு தாழ்வு உண்டென்ற கொள்கையை இம்மாநாடு அடியோடு மறுப்பதுடன் அதை ஆதரிக்கும் மதம், சாஸ்திரம், புராணங்களையெல்லாம் பொதுமக்கள் பின்பற்றக் கூடாதென்றும்,

> "வருணாசிரமமென்ற கொடுமையான கட்டுப்பாட்டையும் சமுதாய முறையில் காணப்படும் பிராமணர், சத்திரியர், சூத்திரர், பஞ்சமர், முதலிய ஆட்சேபகரமான பிரிவுகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும் "மனித நாகரீகத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் தடையான தீண்டாமை" என்பதை ஒழித்து, எல்லாப் பொது வழிகள், குளங்கள், கிணறுகள், பாடசாலைகள், சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய பொது ஸ்தாபனங்களைத் தட்டு தடங்கலின்றி அனுபவிக்க சகல மக்களுக்கும் சம உரிமை கொடுக்க வேண்டுமென்றும் அம் மாநாடு முடிவு செய்தது."[154]

நாட்டிலே பிராமணர்கள் வகுத்த கல்வி அமைப்பும், சமய பேதங்களும், சாதி பேதங்களும், சமதாய பேதங்களும் அவர்களுடைய பிழைப்புக்கே வழிகாட்டின என்பதை முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத்திரு நெ.து. சுந்தரவடிவேலு புள்ளிவிவரங்களுடன் காட்டுகின்றார். அவற்றையும் ஒப்புநோக்கிக் கண்டு அகத்தியர் கருத்தைத் தெளிக:

பட்டியல் -1

	எண்ணிக்கை	மக்கள்தொகையில் ஆண்கள் விழுக்காடு	பதவிகளில் விழுக்காடு
துணை ஆட்சியாளர்:			
பார்ப்பனர்கள்	75	3.2	55
பார்ப்பனரல்லாத இந்துக்கள்	30	85.6	21.5
முஸ்லீம்கள்	15	6.6	10.5
இந்திய கிறித்தவர்கள்	7	2.7	5
அய்ரோப்பியர்களும் யூரேசியர்களும்	11	0.1	8
சார் நீதிபதி:			
பார்ப்பனர்கள்	15		83.3
பார்ப்பனரல்லாத இந்துக்கள்	3		16.7
முஸ்லீம்கள்	-		-
இந்திய கிறித்தவர்கள்	-		-
அய்ரோப்பியர்களும் யூரேசியர்களும்	-		-
மாவட்ட முன்சீப்:			
பார்ப்பனர்கள்	93		72.6
பார்ப்பனரல்லாத இந்துக்கள்	25		19.5
முஸ்லீம்கள்	2		1.6
இந்திய கிறித்தவர்கள்	5		3.9
அய்ரோப்பியர்களும் யூரேசியர்களும்	3		2.4

Source : Great Britain, Parlimentary Papers, Vol.XXI (Reports from commissioners, etc., Vol.XI). "Royal Commission on the Public Services" Appendix Vo l,II, Minutes of Evidence relating to the Indian and Provincial Services taken in Madras from the 8th to the 18th of January, 1913,1914, pp.103,104.

"1912ஆம் ஆண்டு, டெப்டி கலெக்டர்களில் நூற்றுக்கு அய்ம்பத்தைந்து பேர்கள் பார்ப்பனர்கள், சப்ஜட்ஜ்களில் நூற்றுக்கு எண்பத்து மூன்று விழுக்காட்டினர்கள் பார்ப்பனர்கள், டிஸ்டிரிக்ட் முன்சீப்களில் நூற்றுக்கு எழுபத்து மூன்று பேர்கள் பார்ப்பனர்கள். பார்ப்பன ரல்லாதாருக்கு எவ்வளவு பங்கு?

நூற்றுக்குத் தொண்ணூறு மக்களாக இருந்த பார்ப்பனரல்லாதவர்களுக்கு:

டெப்டி கலெக்டர் பதவிகளில்	21.5%
சப் ஜட்ஜ்களில்	16.7%
டிஸ்டிரிக்ட் முன்சீப்களில்	19.5%

1914இல், தாசில்தார், டெப்டி தாசில்தார் பதவிகளில் 349 இடங்களில் பார்ப்பனர்களும், 154 இடங்களில் பார்ப்பனரல்லாத இந்துக்களும் இருந்தார்கள். அதுபற்றிய பட்டியலைப் பார்ப்போம்.

வடமொழியில் தோன்றிய சமய ஆகமங்கள் பிராமணர் நலத்தையே கருத்திற்கொண்டு அவர்களால் தோற்றுவிக்கப்பட்டன என்பதை மொழிபெரும் புலவர் ஞா. தேவநேயப்பாவாணர் **தமிழர் மதம்** என்னும் தமது நூலில் தெரிவிப்பதையும் காண்க: "இன்றுள்ள வடமொழிச் சிவாகமங்கள கி.பி.5-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தோன்றின. அவற்றுள் மூலமானவை தொண்டு (ஒன்பது) என்பதும், ஏனைய பதின்றொண்டும் (பத்தொன்பதும்) அவற்றின் வழிப் பின்னர்த் தோன்றின என்பதும்,

"பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகும்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே." (73)

"ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு,
மோகமில் நாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்
றாக முடிந்த அருஞ்சித்த சைவமே." (74)

என்னும் திருமந்திரங்களான் அறியப்படும், முப்பேதம் - மூவேறுபாடு, அவை கரும காண்டம், வழிபாட்டுக் காண்டம், அறியவக்காண்டம் என்பன.

சிவனியம் ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னரே குமரி நாட்டில் தோன்றிய மதமாதலால், குமரிமலைத் தொடரின் வடமுடியொன்றாகிய மகேந்திர மலையில், இறைவனருள் பெற்ற குறவனிடம், தொல்காப்பியர்

பட்டியல் -2

1917இல் முக்கிய பதவிகளின் பகிர்வு

பதவி	பார்ப்பனர்	பார்ப்பனரல்லாத இந்துக்கள்	இந்திய கிறித்துவர்	முஸ்லீம்கள்	பார்ப்பனரல்லாதார் விழுக்காடு
தாசில்தார் (சிரஸ்த்தார் உட்பட)	135	69	14	12	41.3
துணை தாசில்தார்	214	65	21	10	30.9
ஆங்கிலத் தலைமை எழுத்தர்	16	5	2	1	33.3
மாவட்ட வழக்கு மன்ற சிரஸ்த்தர்	13	6	1	2	40.9
சார்வு வழக்கு மன்ற சிரஸ்த்தர்	15	4	1	-	25

ஆதாரம் : எம்.ஆர்.ஓ. உள்துறை (பலவகை) சாதாரண இணைப்பு, அரசு ஆணை மாவட்ட வழக்கு மன்றங்களில் கோட்ட வழக்கு மன்றங்களில், ஆங்கிலத் தலைமை எழுத்தர், ஷெரிஸ்ததார் என்ற பதவிகள் இருந்தன.

அவற்றிலும் எல்லாச் சாதிகளுக்கும் சரியான பங்கு கிடைக்கவில்லை. சமுதாயத்தில் நூற்றுக்கு மூவராகிய பார்ப்பனர்களுக்கு 44 பதவிகளும் மிகப் பெரும்பாலோருக்கு 16 பதவிகளும் கொடுக்கப்பட்டிருந்த கொடுமையைக் கண்டார்கள்.[155]

காலமாகிய கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்கு முன் பாடங்கேட்டவர் தமிழராகவேயிருந்தது மட்டுமன்றி, அவர் பாடங் கேட்டதும் அதை நூலாக வரைந்ததும் தனித் தமிழ் வாயிலாகவே நிகழ்ந்திருத்தல் வேண்டும். அந்நூல் அல்லது நூல்களே, பிற்காலத்த வடமொழியாகமங்கட்கு மூலமாயிருந்திருத்தல் வேண்டும். அம்மூல நூல்கள் யாவும் ஆரியரால் அழிக்கப்பட்டு விட்டன.

பிராமணரே ஓதவும் ஓதுவிக்கவும், இருவகைச் சடங்கும் கோவில் வழிபாடும் நடத்தவும், இவ்வகையில் தமிழரை என்றும் அடிமைப்படுத்தவும், வேண்டுமென்னுங் குறிக்கோளுடனேயே, வடமொழி யாகமங்கள் தோற்றுவிக்கப்பட்டன."[156]

வால்மீகர் தமது ஞானத்திலே கூறுகின்றார்:

"நில்லென்ற பெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம் தன்னுக்குள் நாலுவேதம்
வல்லமையாய் சாத்திரங்கள் இரு மூன்றாக
வயிர் பிழைக்கப் புராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக் கரைப்பது போல் வேதாந்தங்கள்
கட்டினாரவர்கள் பாஷையாலே
தொல்லுலகில் நால் சாதிய நேகஞ்சாதி
தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே."[157]

அகத்தியர் ஞானம் 11இல் பாடுகின்றார்:

"தயங்காமற் பிழைப்பதற்கே இந்த ஞானம்; சார்வாகப் பாராட்டும் ஞானம் வேறே;
மயங்குதற்கு ஞானம்பார் முன்னோர் கூடி மாட்டினார் கதைகாவ்ய புராணமென்று
இயலான ரசத்தனிலீப் புகுந்தாற் போலும் இசைத்திட்டார் சாத்திரங்களாறென் றேதான்;
வயலான பயன்பெறவே வியாசர் தாமும் மாட்டினார் சிவனாருத் தரவி னாலே"

அகத்தியர் ஞானம் 16இல் 3 பாடுகின்றது:

"தானென்ற பெரியோர் களுலகத்துள்ளே
தாயான பூரணத்தை யறிந்தபின்பு
தேனென் றவமுதமதைப் பானஞ்செய்து
தெவிட்டாத மவுன சிம்யோகஞ் செய்தார்

ஊனென்றவுடலை நம்பி யிருந்தபேர்க்கு
ஒரு நான்கு வேதமென்றும் நூலாரென்றும்
நானென்றும் நீ யென்றும் பலசாதியென்றும்
நாட்டினாரு லகத்தோர் பிழைக்கத்தானே."[158]

அகத்தியர் ஞானம் 1இல் பாடுகின்றார்.

"பாரப்பா நாலுவேதம் நாலும் பாரு; பற்றாசை வைப்பதற்கோ
பிணையோ கோடி;
வீரப்பா ஒன்றொன்றுக்கு ஒன்றை மாறி வீணிலே யவர் பிழைக்கச்
செய்த மார்க்கம்
தேரப்பா தெருத் தெருவே புலம்பு வார்கள் தெய்வநிலை ஒருவருமே
காணார் காணார்;
ஆரப்பா நிலைநிற்கப் போறா ரையோ! ஆச்சரியங் கோடியிலே
யொருவன் தானே!"[159]

ஞானவெட்டியான் விருத்தம் 465, 466 பாடுகின்றன.

"வியாசர் சொல்லும் பாரதத்தில் வெகு பொய் வீணாம்
மேதினியோர் மாய்கையினில் விரும்பச் சொன்னார்
ஆய்ந்து கவி பாடிவிட்டான் கம்பன் வம்பன்
அத்த ராமாயணத்திலனேகம் பொய்தான்
சாயாம லதிவீர பாண்டியன் சொல்லுந்
தமையேந்தி சரித்திர நைடதமுஞ் சொன்னார்
சுயமாகா திது கவிகள் சுத்தப் பொய்தான்
தொடுகவி மாணிக்க வாசகர் சொன்னாரே."

"தேவாரமான திருவாசகத்தை
செகத்தோர்கள் படித்து மெத்த தியங்கினார்காண்
பேயான ஆண்டிகட்குப் பிழைப்புக்காக
பேசி வைத்தார் மற்றொன்றோ பிசகேயில்லை
சாவதார் மாய்கை தனிலடி பட்டோர்க்குத்
தளர்ந்த பின்பு ஞானவிதி சாராதென்னில்
தூவாத சாந்த வெளியேறிந் தோரல்ல
சுக்கிலமு மழிந்த பின்பு துலங்கார்தானே"[160]

பதினெண் சித்தருள் ஒருவரான சிவ வாக்கியரின் பாடல்களை இணைத்து எண்ணித் தெளிவு பெறுக:

"இருக்கு நாலு வேதமு யெழுத்த யறவோதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரானிரான்

உருக்கி நெஞ்சையுட் கலந்து உண்மை கூற வல்லீராய்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடலாகுமோ.

இட்ட குண்ட மேதடாயிருக்கு வேத மேதடா
முட்டி நின்ற தூணிலே முறைத்தெழுந்த தேதடா
சுட்ட மண் கலத்திலே சுற்று நூல்களே தடா
பற்றி நின்றது ஏதடா பட்டநாத பட்டரே.

வேதமாவ தேதடா விரித்துரைத்த தேதடா
போதமாவ தேதடா புரம்பு நின்ற தேதடா
பாதமான தேதடா பகுத்துரைத்த தேதடா
ஓதியோதியுன்னுளே யுணர்ந்துரைக்க வேண்டுமே

சீடரோது நூல்களுந் சிறந்த கற்ற கல்வியும்
நட்ட தாபரங்களு நவிலு நாலு வேதமுங்
கட்டி வைத்த புத்தகக் கதகுதப் பிதற்றெல்லாங்
கெட்டதாய் முடிந்ததேயான் கர்த்தனைக் கண்கண்டபின்.

சாத்திரங்களேதியோ சடங்கியற்றும் பட்டரே
வேற்றுறக்கம் வந்த போதிவ் வேதம் வந்துதவுமோ
மாத்திரப் போதும்மிலே மரித்து நோக்க வல்லிரேல்
சாத்திரப் பேய் நோய் கொளாது சத்தி முத்திசித்தியே.

புத்தகங்கள் கொண்டு நீர் பொய்களை பிதற்று நீர்
எத்தனை பிதற்றினு மிகுந்த நாட்களெத்தனை
அத்தனை யகண்டனையநாதி முன்னநாதியாங்
கர்த்தனையறிந்த பேர் கடந்த ஞானியாவாரே.

கொடுத்த நாலு வேதமுங் குசப்புலுங் குடுமியும்
பிடித் தண்டு மாகவாழ் பிராமணப் புரட்டரே
நடித்த கோலமிங்கு விட்டு ஞான மோத வல்லிராய்
அடுத்திருக்க சோதியோ டமர்ந்திருக்க லாகுமே.

பிறந்தபோது பூனு நூற் குடுமியும் பிறந்ததோ
பிறந்துடன் பிறந்ததோ யிறங்கு நூற்சடங்கெல்லாம்
மறந்து நாலு வேதமு மனத்துளே யுதித்ததோ
நரம்பி வந்து வானிழந்து நின்றதென்ன வல்லிரே

சதுர் வேத மாறுவகை சாத்திரம் பல
தந்திர புராணங்களை சாற் றுமாகமம்
விதம் விதமானதான வேத நூற்களும்
வீணான நூற்களென் றாடாய் பாம்பே."[161]

ஓடுவார் அருள் பாதம் பூசை செய்து உத்தமனே கண்ணீரால் கழு வுவாயே:

மேலே சொல்லப்பட்ட செய்தியை அறிந்து தெளியும் மனம் அருள் வடிவான மெய்ப்பொருளாம் பரமகுருவின் திருவடிகளை அண்டி, தன் குற்றங்களுக்காக வருந்தி கண்ணீர்விட்டு அழுது ஆராதனை செய்து மெய்வாழ்வு பெறக் கடவது என்று அகத்தியர் அறிவுறுத்துகின்றார்.

தீக்கிடங்காம் நரகத்தை நோக்கி வாழாமல் தேவனின் திருவடிகளை அடைந்து மன-மொழி-மெய்யால்-அவரைப் பூசை செய்து வாழுமாறு பணிக்கின்றார் அகத்தியர்.

முக்திபரன் அருகிருப்பாய்

28. "கழுவியே ஆத்துமத்தைப் புடத்தில் போட்டு
காசகன்ற தட்சணையாய் வைத்துக்கொண்டு

மெழுகுவாய் இருதயத்தைக் கண்ணீராலே
மெழுகினபின் தேவபக்தி அதிலேவைத்து

தொழுகுவாய் தவஞான தீபம் ஏற்றி
தோத்தரிப்பாய் சகல நன்மை சுரூபிகண்டாய்

முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்
முக்தி பரன் அருகிருப்பாய் முச்சுடராய்த் தானே."

கருத்துரை : ஆத்துமாவைக் கண்ணீரால் கழுவு; அதைப்புடமிட்டு மாசு நீக்கிய காணிக்கையாகக் கடவுளுக்கு வைத்துக்கொண்டு உன் இதயத்தை ஆனந்தக் கண்ணீரால் மெழுகு; பின்னர் தேவ பக்தியை அதிலே வைத்துத் தொழுதுகொள்வாய்; தவம், ஞானம் இவற்றின் தீபம் ஏற்றி சகல நன்மைக்கும் காரணராகிய கடவுளைத் தோத்தரிப்பாய்; சிறு குளத்திற்குள்ளே நீ திருமுழுக்குப் பெறுவாயாக; அப்பொழுது நீ பரலோக அரசனுக்கு அருகில் முச்சுடர் உறவுடன் இருப்பாய்.

விளக்கவுரை

இப்பாடலில் முக்தி வாழ்வின் நடைமுறைகள் சிலவற்றை விளக்கி, இவ்வாறு வாழ்ந்தால் மரணத்தைக் கடந்து முச்சுடராக விளங்கும் முக்திபரனாகியக் கடவுளுடன் ஆன்மா அருகிருந்து வாழும் என்கிறார் அகத்தியர்.

ஆத்துமாவைப் புடத்தில்போட்டு என்கிறார். இது பரிசுத்தமாக்கும் முறையைக் காட்டுகின்றது. கார்த்தருடைய திருவசனம் புடமிடப்பட்டது.

"தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்." (2 சாமு.22:31). "கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கின்றன" (சங்.12:6). இந்தத் திருவசனங்களின் வாயிலாகப் பரிசுத்த ஆவியானவர் ஆத்துமாவில் விசுவாசத்தை உண்டாக்கி, பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகின்றார். (யோவான் 16:8). இவற்றால் ஆத்துமா களிம்பு (பாவம்) நீங்க புடமிடப்படும் அனுபவத்திற்கு உள்ளாகின்றது. "நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்" (ஏசாயா 1:25). "அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும் படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்." (மல்கியா 3:3). இவ்வாறு புடமிடப்படும் ஆத்துமா பாவங்களிலிருந்து மனந்திரும்பி மன்னிப்படைந்து முக்தி வாழ்வுக்குத் தன்னை இலக்காக்கிக் கொள்ளுகின்றது.

கழுவியே ஆத்துமத்தைப் புடத்திற்போட்டு: ஆத்துமாவைப் புடத்திற்போட்டுக் கழுவவேண்டும் என்கின்றார். பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். (எசே.18:20) என்கிறது வேதம். எனவே ஆத்துமாவின் சாவிற்குக் காரணம் பாவமே. இப்பாவம் கழுவப்படவேண்டும். பாவம் கழுவப்பட்டால் ஆத்துமா சாகாது; மன்னிப்புப் பெற்று மெய்வாழ்வு அடையும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. (எபிரெயர் 9:28). கிறிஸ்துவாம் சற்குரு, "தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்." (எபிரெயர் 9:12). "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே.2:13). "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்" (எபி.9:14). "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (1 பேதுரு 1:19). "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." (1 யோவான் 1:7). "இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? நீ எழுந்து

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்'' (அப்.22:16). ''மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாகும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கின்றோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.'' (ரோமர் 6:4-7).

காசகன்ற தட்சணையாய் வைத்துக்கொண்டு: மாசு நீக்கிய, குற்றம் நீக்கிய காணிக்கையாகக் கடவுளுக்குப் படைத்து வாழவேண்டும் என்பதாம். வாழ்க்கைப் பலியாக, காணிக்கையாக அவருக்குப் படைத்து வாழ வேண்டும் என்பதாம். "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:1,2).

பல்லவி

"என்னை ஜீவபலியாய் ஒப்பு வித்தேன்;
ஏற்றுக் கொள்ளும், கிறிஸ்துவே.

சரணங்கள்

1. அந்தகாரத்தி னின்றும், பவப் பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன் - என்னை

2. ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்;
பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன்; கருணைசெய், தேவா - என்னை

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு;
சோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை - என்னை

மெழுகுவாய் இருதயத்தைக் கண்ணீராலே: ஆன்மா கடவுளுக்குத் தன்னை வாழ்க்கைப் பலியாக ஒப்புவித்து வாழும் வாழ்க்கையிலே முன்னேறி, இழந்துபோன கடவுள் சாயலைத் திரும்பப் பெற்று தேறுங்காலத்திலே குறுக்கிடும் தடைகள், சோதனைகள், இச்சைகள் முதலான உலக இழுப்புகளிலே தன் சுய விருப்பத்தால் சிக்கிக்கொள்ளும்போது, அல்லது சிக்கிக்கொள்ள இழுக்கப்படும்போது தன் தவற்றை உணர்ந்து கண்ணீர்விட்டு மனந்திரும்பி கடவுளின் திருவடிகளை அடைய வேண்டும். அவ்வாறு வரும் ஆத்துமாக்களைக் கடவுள் பரிசுத்தப்படுத்தி சேர்த்துக்கொள்ளுகின்றார். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்; உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான். பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்." ஏசாயா 57:15. "தேவனுக் கேற்கும்பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங்.51:17).

பின்வரும் இரட்சணிய மனோகரப் பாடல்களையும் ஒப்பிட்டு இதயத்தின் பக்தி நிலையை உணர்க:

"கதிரொளி மறையப் பூமி கம்மிக்கச் சிமையங் கீறிப்
பிதிர்படச் சிலுவை மீது பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோ லத்தை மனக்கணால் தரிசித் தேத்தி
இதயநெக் குருகு கில்லே னென்செய்வான் தோன்றினேனேன.

கன்றிய காம நெஞ்சக் கள்வனேன் காம நீத்த
நன்றிகொள் மாந்தர் போல நடித்திடு நடலை யுள்ளேன்
ஒன்றிய மனத்தோடெந்தா யுன்னருள் துணையை நாடி
என்றினி யுய்யப் போகே னென்செய்வான் தோன்றினேனே.

தேசுற்ற மின்னார் மோகச் சிக்குளே சிக்கிச் சிந்தை
மாசுற்ற னுலக மாய வாழ்க்கையை மருண்டு நச்சி
வேசுற்றேன் கவலை யாலே மெலிவுற்றேன் விழைநராலும்
ஏசுற்றேன் ஈசனேயே னென்செய்வான் தோன்றினேனே.

அழுகிலேன் மனங்க சிந்திட்ட டளியனேன் பிழையை யுன்னி
விழுகிலே னின்பா தார விந்தமே கதியென் றேத்தித்

தொழுகிலே னாவியாலே தொடர்பவத் துயிலை நீத்திங்
கெழுகிலே னீச னேயா னென்செய்வான் தோன்றினேனே.

பன்முறை யிதய மென்னும் படுகரைப் பார்க்குந் தோறும்
நன்மையோ ரணுவங் காணேன் நஞ்சினை யமுதா நச்சும்
புன்மையேன் போத மில்லேன் புவிப்பொறை யாய தன்றி
இன்மையேன் பயன் மற்றெந்தா யென்செய்வான்
தோன்றினேனே."[162]

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் தன் பிழைகளுக்காக அழுது இறைவனிடம் மன்னிப்புப் பெற்றமையைப் பாடுகின்றார்:

"பள்ளியில் உன்றன் பான்மொழி பயின்றேன்
பரிசிலை உளங்கொடு நாயேன்
எள்ளினேன் உன்னை இன்மொழி பின்னை
இரங்கவும் வருந்தவும் செய்யக்
கள்ளனேன் அழுதேன் பிழைபொறுத் தாண்டாய்
காய்தலும் வன்மமும் இல்லா
வள்ளலே! நாளும் ஜெபத்தினில் மனத்தை
வைத்திடும் வாழ்வடைந் தேனே."[163]

மெழுகினபின் தேவபக்தி அதிலே வைத்து தொழுகுவாய் தவஞான தீபம் ஏற்றி, தோத்தரிப்பாய் சகல நன்மை சுரூபி கண்டாய். இவ்வாறு அருள்பெற்று மன்னிப்படையும் ஆத்துமா தேவ பக்தியை - தேவனைத் தொடர்ந்து வாழ்க்கையில் எல்லா நேரத்திலும், இடத்திலும் சூழ்நிலைகளிலும் உறுதியாகப் பற்றிக்கொண்டு கடவுளுக்கு ஆராதனை செய்து வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளல் வேண்டும் என்பதாம். (ஒப்பு நோக்குக: ரோமர் 12:12).

இத்தகைய தவ வாழ்வின் விளைவாக ஞான ஒளி உள்ளத்திலே ஏற்றப்படுகின்றது. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்" (நீதிமொழிகள் 1:7). "மனிதனை நோக்கி: இதோ ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம், பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார் என்று சொன்னான்." (யோபு 28:28).

பரமகுருவே மெய்யான ஒளியாவர். அந்த ஒளியானவர் உள்ளத்திலே சோதியாகப் பிரகாசித்து ஆத்துமாவையும் பிரகாசிக்கச் செய்கின்றார். "உலகத்திலே வந்த எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:9). "எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று

சொல்லுகிறவர்கள் அநேகர்; கர்த்தாவே உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணும்." (சங்.4:6).

இவ்வாறு பரமகுருவின் ஒளிவயப்பட்ட ஆத்துமா கடவுளைத் தோத்தரித்து வாழவேண்டும். "தோத்திரபலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் (சங்.50:23, 116:17). எல்லாவற்றிலும் தோத்திரம் செய்தலே தகும் (எபே.5:4) என்று வேதவாக்கியம் கூறுகின்றது. உண்ணும் உணவும் தோத்திரத்துடனம், நன்றி செலுத்துவதுடனும் இருக்க வேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணபங்களை தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." (பிலிப்பியர் 4:6,7). "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப் படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல, அது தேவ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" (1 தீமோ.4:4,5). "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை தோத்தரியுங்கள்." (கொலொசெயர் 3:17). "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." (எபிரெயர் 13:15) கடவுளின் திருவுளச் சித்தப்படி வாழும் வாழ்வே ஒரு தோத்திர வாழ்வாகும்.

தஞ்சை வேதநாயக சாத்திரியார் மெய்ப்பொருளைத் தோத்தரிப்பதைக் காண்க:

"தோத்தரிக்கிறேன் நான் தோத்தரிக்கிறேன் தேவ
சுந்தரக் கிறிஸ்துவேந்தைத் தோத்தரிக்கிறேன்.

1. சேத்திரத் தெரொதேவத் தோத்தரிக்கிறேன். - கன
திவ்விய திரித்துவத்தைத் தோத்தரிக்கிறேன்.
பாத்திரமாக்கிக்கொண்டோனைத் தோத்திரிக்கி-உயர்
பரமண்டலாதிபனைத் தோத்தரிக்கிறேன்.
நேத்திரக் கிருபாநிதியைத் தோத்தரிக்கிறேன்.-சதா
நித்திய மகத்துவத்தைத் தோத்தரிக்கிறேன்.
கோத்திரத் திசராவேலைத் தோத்தரிக்கிறேன்.-யூதர்
கொற்றவனைப் பெற்றவனைத் தோத்தரிக்கிறேன். - தோத்

2. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன் - ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்.

திருவுருவானவனைக் கும்பிடுகிறேன் - தவிது
சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்.
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்-யூதர்
குலகுல தேவதையைக் கும்பிடுகிறேன்.
அருமை யிரட்சகனைக் கும்பிடுகிறேன்-என
தாற்றும நேசர்தனைக் கும்பிடுகிறேன்-கும். - தோத்

3. மனுவுரு வானவனைத் தோத்தரிக்கிறேன் - மோட்ச
வாசலைத் திறந்தவனைத் தோத்தரிக்கிறேன்.
கனிவினை தீர்த்தவனைத் தோத்தரிக்கிறேன் -யூதர்
காவலனை ஆவலுடன் தோத்தரிக்கிறேன்.
அனைமனுமைந்தனையே தோத்தரிக்கிறேன் - மே
சையாவை மெய்யாகத் தோத்தரிக்கிறேன்.
எனை இரட்சித்தவனைத் தோத்தரிக்கிறேன்.-கிறிஸ்
தேசு நசராதிபனைத் தோத்தரிக்கிறேன். - தோத்

4. சாவழித் துயிர்த்தவனைத் தோத்தரிக்கிறேன் - பேயின்
தலையை மிதித்தவனைத் தோத்தரிக்கிறேன்.
சீவனோ டெழுந்தவனைத் தோத்தரிக்கிறேன் -எங்கள்
தேவாதி தேவனைத் தோத்தரிக்கிறேன்.
மேவிய பரம்பொருளைத் தோத்தரிக்கிறேன் - விண்ணின்
மேலெழுந் திருந்தவனைத் தோத்தரிக்கிறேன்.
ஆவலுட னாவலுடன் தோத்தரிக்கிறேன்.-நடு
வன்றிடும் ஞாயாதிபனைத் தோத்தரிக்கிறேன்- தோத்"[164]

எ.ஆ. கிருஷ்ணபிள்ளை கிறிஸ்துவைத் தோத்தரிப்பதையும் காண்க:

"தேவதேவதிரி யேகதோத்திரம்
யேசுநாயக தோத்திரம்
பாவகாரிசி ரஞ்சிதைத்தெழு
பாதபங்கய தோத்திரம்
சீவபாதையில் வழிநடத்திடுந்
திவ்வியாத்தும் தோத்திரம்
ஆவலோடுனக் கனந்ததோத்திரம்
அகிலோகசர் வேசனே."[165]

தோத்திரம் செய்தல் போற்றுதலுமாகும் வாழ்த்துதலுமாகும் திரு.வி.க.வும் கிறிஸ்து பெருமானைப் போற்றுவதைக் காண்க:

"உலககெலாம் உய்ய வேண்டி உருக்கொடு மண்ணில் வந்தாய்
நலமிகு உவமை யாலே ஞானசீ லங்கள் சொற்றாய்
கலகமுங் கரவுங் கொண்ட கண்ணிலாப் பேயைச் சாய்த்தாய்
அலகிலா ஒளியே! ஏசு ஐயனே! போற்றி போற்றி!

தரையினில் உதித்த கோலம் தையல்கை வளர்ந்த கோலம்
வரையினில் இவர்ந்த கோலம் வனத்தினில் நடந்த கோலம்
திரைகடல் கடந்த கோலம் சிலுவையில் பொலிந்த கோலம்
உறைமனம் ஜெபத்தால் பெற்றேன் உத்தம! போற்றி போற்றி!

வாழ்ந்திட உலகை வைத்தாய் மானுடப் பிறவி வைத்தாய்
சூழ்ந்திடச் சபைகள் வைத்தாய் தோத்திரஞ் செய்தே உன்பால்
ஆழ்ந்திடச் சிலுவைக் கோலம் அன்புடன் வைத்தாய் வைத்தாய்
வீழ்ந்திடல் எற்றுக்கிங்கே, விமலனே! போற்றி போற்றி!

அன்பினால் யாக்கை ஏற்ற ஐயனே! போற்றி போற்றி!
மன்பதை பாவந் தீர்க்க மரித்தவா! போற்றி போற்றி!
இன்புற உயிர்த்தெழுந்த ஈசனே! போற்றி போற்றி!
என்பிழை பொறுக்கும் ஏக எந்தையே! போற்றி போற்றி!"[166]

சகல நன்மை சுரூபி கண்டாய்: மேலே கண்டவாறு அறவாழ்வை மேற்கொண்டு வாழ்தலானது மனித வாழ்வில் முதலாவது கடவுள் அரசையும் அவருடைய நீதியையும் தேடுதலாகும். அப்படி வாழுங்கால், வாழ்க்கையின் பிற நன்மைகள் எல்லாவற்றையும் அவர் அருளிச் செய்வார் என்பது மட்டுமன்று; அத்தகைய வாழ்வால் அவரையே காணலாம் என்பதாம். "முதலாவது தேவனுடைய ராச்சியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." (மத்தேயு 6:33).

முழுகுவாய்ச் சிறு பொய்கைக்குள்ளே நீயும்: என்றதால் அகத்தியர் இரண்டு கருத்துகளை இங்கே கூறுவதாகத் தெரிகின்றது. ஒன்று பரமகுருவுக் குள்ளாகும் திருமுழுக்கு அனுபவத்தைக் கூறுகின்றார். பிலிப்பு எத்தியோப்பிய நிதிமந்திரியை உள்ளாக்கிய திருமுழுக்கு அனுபவத்தின் காட்சி இங்கே ஒப்புமைப்படுத்தி எண்ணிப் பார்க்கத்தக்கது. "அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ தண்ணீர் இருக்கிறதே. நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான்; அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்று

சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்." (அப்.8:35-39). இவ்வாறு திருமுழுக்குப் பெறுவோர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் பெயரால் பரமகுருவின் கட்டளைப்படி பெறுகின்றனர். (மத்.28:18-20). இதனால் அவர்கள் முச்சுடர் என்று குறிக்கப்பட்டுள்ள தந்தை, மைந்தர், பரிசுத்த ஆவியானவர் **ஆகிய மூவருக்குள் வருவதுடன் அவர்கள் அருகில் இருக்கும்** பரம பேற்றினையும் பெறுகின்றனர். முன்னால் பாவத்தினிமித்தமும் கீழ்ப்படிாமையினிமித்தமும் தூரமாக இருந்தவர்கள். இப்பொழுது பாவம் கழுவப்பட்டதனாலும் கீழ்ப்படிதலினாலும் நெருக்கமாக வந்துவிட்டனர். மூவரும், கீழ்ப்படிந்த பக்தர்களின் இதயத்தில் வாழ்கின்றனர். திருமுழுக்கில் கீழ்ப்படியும்போது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். "பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெறுவீர்கள்." (அப்.2:38). இவ்வாறு தங்கள் இதயக் கதவைத் திறந்துவிட்ட பக்தர்களிடத்தில் குமாரனும் பிதாவுமாக வந்து குடியிருக்கின்றனர் என்று விளம்புகிறது. வேதம், "இதோ, வாசற்படியிலே நின்று கதவைத் திறந்தால், அவனிடத்தில் நாம் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி.3:20). "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்." "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (யோவான் 14:21,23).

இந்த திருமுழுக்கு இவ்வுலகத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஒரு மரணம். அடக்கம், உயிர்த்தெழுதலின் அனுபவத்தைப் பக்தர்களுக்குத் தருகின்றது. "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே

கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே." (ரோமர் 6:3-7). இங்கு பாவத்திற்கு மரித்து வாழ்வதை - அதாவது, பரிசுத்த ஆவியானவருடைய நடத்துதலுடன் பரமகுருவின் இரத்தத்தின் வல்லமையுடன் பாவத்தைச் செய்ய மறுத்து வாழும் வாழ்க்கையே அனுபவத்திற்குத் தொடக்கமாகின்றது. இவ்வாறு தொடங்கிய அனுபவம் இவ்வுலகத்தில் உடலில் வாழும் காலம் முழுவதும் நீடித்திருக்கவேண்டியதாகும்.

முழுகுவாய் சிறுபொய்கைக்குள்ளே நீயும் என்றதால் இரண்டாவதாக சரீரத்தினின்று ஆவிபிரிந்து விண்ணுலகத்தில் முச்சுடராக விளங்கும் திரியேக பரமனுடன், நித்தியமாக அவர் அருகில் இருக்கப்போகும் பெருவாழ்வு அனுபவத்தைக் கூறுகின்றார். சரீரம் புதை குழியில் மூழ்குகின்றது; ஆன்மா கடவுளண்டை சேர்கின்றது. "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை." (பிரசங்கி 12:7).

மரணம் என்பது மனிதனுடைய ஆவி உடலைவிட்டுப் பிரிந்து கடவுளண்டை செல்லும் ஓர் அனுபவமே. முதல் அனுபவத்திற்குட்பட்டு வாழும் ஆத்துமா இந்த இரண்டாம் அனுபவத்திற்குப் பாக்கியமுள்ளதாகின்றது. அப்பெருவாழ்வைத் திருவசனம் தெரிவிப்பதை அறிக:

> "பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று." "பின்பு அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார்." (வெளி.21:1; 22:6).

பரலோகம் என்பது ஒரு கற்பனைக் கதையன்று என்பது தோன்றவே அகத்தியர் முத்திபரனாகிய கடவுளின் அருகில் இருப்போம் என்று எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு கூறியுள்ளார். பரலோகத்தைப்பற்றிய பின்வரும் செய்திகளை அதாவது 'பரலோகம் என்பது என்ன? பரலோகத்தின்

பரிசுத்த திருநகரம் எவ்வளவு பெரியது? பரலோகத்திலே யார் இருப்பார்கள்?' என்பனவற்றை ஒப்பிட்டு எண்ணுக:

"பரலோகம் என்பது என்ன?

"அது ஓர் அழகுமிகு மனக்கண் வடிவமா? அல்லது "ஒரு மனநிலையா?" அல்லது "வாழ்க்கையின் பிரச்சனைகளைத் தைரியமாக எதிரிடுவதற்கு நமக்கு உதவும் ஓர் உண்மைக் கனவா?"

அ. பரலோகம் ஓர் இடம். யோவா.14:2, "என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்."

ஆ. பரலோகம் ஒரு கட்டிடம், ஒரு வீடு. 2 கொரி.5:1, "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்."

இ. பரலோகம் ஒரு நாடு. ஒரு நகரம். எபிரெயர் 11:16, "அதையல்ல, அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே."

III பரலோகத்தின் பரிசுத்தத் திருநகரம் எவ்வளவு பெரியது? வெளிப்படுத்தலாகமம் 21:16, "அந்த நகரம் சதுரமாயிருந்தது. அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தன. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது. அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தன." அது சதுரமான நகரம். அதன் ஒவ்வொரு பக்கமும் 22,80,000 மீட்டர், பரலோக நகரம் 22,800 கிலோமீட்டர் உயரம், 22,800 கிலோ மீட்டர் அகலம், 22,800 கிலோ மீட்டர் நீளம்.

திருநகரத்தின் அளவை நினைத்துப் பாருங்கள்! இந்தியா வடக்குத் தெற்கான சுமார் 3,220 கிலோமீட்டர்களும், கிழக்கு மேற்காக சுமார் 2,977 கிலோ மீட்டர்களும் பரவியுள்ளது. திருநகரத்தின் தெருக்கள் எல்லாம் தெளிவுள்ள பளிங்குபோலத் தூயப் பொன்னாலானது. வெளி.21:21. ஒவ்வொரு தெருவும் எவ்வளவு நீளம்?

இப்பொழுது கிறிஸ்துபெருமான், "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச்

சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்." (யோவான் 14:2).

நண்பரே! கடவுளின் மக்களுக்காக விண்ணுலகத்திலே பேரின்ப மயமான வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என்றால், 41,000,000,000,000 வீடுகள் அமைக்கலாம். இவைகள் எல்லாம் தூய பொன்னால் அமைக்கப் பட்டவை. (வெளி.21:1). நகரத்தின் மதில் கட்டப்பட்ட பொருளுடன் நகரம் கட்டப்பட்டுள்ள பொருளைச் சேர்த்துக் கலந்துவிட வேண்டா?

விண்ணுலகத்திலே நிரம்ப இடம் இருக்கின்றது. இன்னும் தேவையானால், கடவுள் தமது உண்மையான தூதர்களை அனுப்பிக் கணக்கிட்டு சில பத்துக்கோடி கோடி கோடி கோடி கோடி (ஒன்றுக்குப் பின்னர் 36 உள்ளங்களையுடைய பேரெண்) சதுர மைல்கள் அளவுகள் விரிவாக்கிக்கொள்வார்! உங்களுடைய மாளிகையின் மீது கடவுள் 'வாடகைக்கு விடப்படும்' என்று அடையாளக் குறி எழுதிப்போடுமாறு விட்டுவிடவேண்டா?

IV பரலோகத்திலே யார் இருப்பார்கள்?

அ. பரலோகத்திலே எத்தனை பேர் இருப்பார்கள்?

யோவான் கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவும் (வெளி.5:11). தூதர்கள், மூப்பர்கள் முதலானோர், விண்ணுலகத்தில் இருந்தனர் என்று கூறியுள்ளார்.

பிறகு யோவானால் எண்ணமுடியாமல், ஒருவரும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டம் என்று (வெளி.7:9) வியந்து எழுதியுள்ளார்.

ஆ. அங்கே யார் இருப்பார்கள்?

வெளி.7:9, "இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல சாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்."

இ. விண்ணுலகத்திலே அநேகர் இருக்கப் போகின்றனர்.

1. கடவுள் அங்கே இருப்பார்!
2. கடந்த காலத்துப் பரிசுத்தவான்கள் அங்கே இருப்பார்கள். எபிரெயர் 11:10-40.

3. இரத்த சாட்சிகள் அங்கே இருப்பார்கள். "இரத்த சாட்சிகள்" என்பவர்கள் யாவர்? (காண்க: அப்.7:54-60; வெளி.6:9-11).

4. இன்னும் இருவர் பரலோகத்திலே இருப்பார்கள் ஏனோக்கு, எபி.11:5; ஆதி.5:24, எலியா, 2 இராஜா.2:11.

5. தேவதூதர்கள் அங்கே இருப்பார்கள். எபிரெயர் 12:22. நீங்களோ "சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர் களிடத்திற்கும்..."

அ. அப்பொழுது இங்கே "நமக்குரிய தூதர்கள் இருக்கின்றார்கள். (அப்.12:15). அவர்கள் என்ன செய்கிறார்கள்? எபி.1:14, "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார் களல்லவா?" உங்களுடைய பெயர் அங்கே எழுதப்பட்டிருக்கின்றதா?

....

ஈ. அங்கே யார் இருக்கமாட்டார்கள்?

1. யோவான் 3:3, "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

யோவான் 8:21, "இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத் தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார்." வெளி.21:8, "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்."

வெளி.22:15, "நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்."

எபேசியர் 5:5, "விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாரா தனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் ராச்சியத்திலே சுதந்திரமடைவ தில்லையென்று அறிந்திருக்கிறீர்களே."

கிறிஸ்துவுக்கு வெளியே மரிப்பவர்களுக்குப் பரலோகம் எப்பொழுதுமே மூடப்பட்டிருக்கிறது; இவர்கள் இரட்சிப்படையாதவர்கள். ஆயத்தம் இல்லாமல் நீங்கள் பரலோகத்திற்குள்ளே நழுவிபோய்விட இயலாது. ஆமோஸ் 4:12, "உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" என்று நமக்குச் சொல்லுகின்றது.

....

நீங்கள் பரலோகத்திற்குச் செல்லும் ஆயத்தத்திலே இரட்சிப்படைந் திருக்கின்றீர்களா, அல்லது மறுபடியும் பிறந்திருக்கின்றீர்களா? ....

ஒளிமயமான வாழ்க்கைக்குள் ஆத்துமா நுழைகின்றது. இனி அங்கு இருளுக்கு இடமில்லை. என்றுமே ஒளிமயம். முச்சுடராக விளங்கும் கர்த்தரே வெளிச்சமாவார். அது நித்திய வாழ்வு."[167]

ஆன்மா முச்சுடராக விளங்கும் முக்திக் கடவுளின் அருகிலிருக்கும் பேரின்பத்தை அறிவித்துள்ளார் இப்பாடலில் அகத்தியர்.

எச்சரிக்கை

29. "முச்சுடரும் ஒன்றாம் மும்மூர்த்தி யல்ல;
மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்;

அச்சுதா இவர்களுமே ஆண் பெண் அல்ல;
அரனும் அல்ல; இலிங்கம் அல்ல; அநாதியான

சச்சிதானந்தனையே வணக்கம் செய்து,
சற்குருவைத் தரிசித்து சரண்பற்றி,

எச்சரிக்கை கொண்டு நட அப்பா! அப்பா!
எண்ணிலா முத்திவழி எய்துவாயே!"

கருத்துரை : பிதா, திருமைந்தர், பரிசுத்த ஆவியானவர் ஆகிய முச்சுடரும் ஒருவரே யாவர்; அவர்கள் மும்மூர்த்திகளைப்போல வெவ்வேறானவர்களல்லர்; மூவருக்கும் ஆள் உருவம் ஒன்றேயாகும்; திரித்துவக் கடவுள் ஆண் என்றும் இல்லை; பெண் என்றும் இல்லை; அரசனும் அல்லர்; இலிங்கமும் அல்லர்; அவர் அநாதியானவர்; சச்சிதானந்தர்; அவரையே வணங்கி சற்குருவாகிய கிறிஸ்துவைத் தரிசித்து அவருடைய திருவடிகளில் சரணடைந்து பற்றிக்கொண்டு எச்சரிக்கையுடன் அப்பா நீ நடப்பாயாக! அப்பொழுது எண்ணிக்கூற இயலாத முக்தி வாழ்வினை நீ அடைவாய்.

விளக்கவுரை

இப்பாடலில் முச்சுடர் யார் என்றும், அவர் யார் அல்ல என்றும், அவர் சச்சிதானந்தர் என்றும், சற்குரு என்றும் கூறி, அவரிடம் சரண்புகுந்து முக்தி வழி எய்த வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

முச்சுடரும் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல; மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்:

தந்தை, மைந்தர், பரிசுத்த ஆவியானவர் என்று தம்மை வெளிப்படுத்தியுள்ள திரியேகக் கடவுளாம் முச்சுடர் இந்திய நாட்டிலே அறியப்பட்டுள்ள சிவன், பிரம்மா, விஷ்ணு என்னும் மும்மூர்த்திகள் போன்றவர்கள் அல்லர் என்பதை வரையறுத்துத் தெரிவிக்கின்றார் அகத்தியர். மும்மூர்த்திகளைப் பற்றி முதல் பாட்டிலேயும் 10ஆம் பாட்டிலேயும் பத்தொன்பதாம் பாட்டிலேயும் குறிப்பிட்டுள்ளார். அங்கே கூறியுள்ள கருத்துகளையும் இங்கே இணைத்து எண்ணித் தெளிக.

தந்தை, மைந்தர், பரிசுத்த ஆவியானவர் மூவரும் ஆளுருவத்தில் ஒருவரே என்கின்றார் அகத்தியர். அகத்தியருடைய கருத்திற்கு ஏற்ப டாக்டர் சி.சி.கிராபோடு என்பார், "கடவுள் ஆவியாயிருக்கிறார். அஃது அவருடைய இயற்கை, கடவுள் தனியொருவர். இருப்பினும் அவருடைய ஒருமை இயற்கைநிலை, திருவசனங்களில் பிதா, மைந்தர், தூய ஆவி என்று வெளிப்படுத்தி யிருக்கின்றவாறு ஒரு மும்மை ஆள் தன்மையினை உள்ளடக்கமாகக் கொள்ளுகிறதாய்க் காணப்படுகிறது" என்று கூறுகின்றார்.[168] மேலும் அவர், "கடவுளின் திரித்துவப் பண்பின் போதனை இரட்சிப்பின் திட்டத்திற்கு இன்றியமையாதது. கடவுள் இந்த மும்மைப் பண்பில்லாத தனி ஒருவர் என்னும் நிலை இருக்குமாயின் கடவுளுக்கும் மனிதனுக்கும் மத்தியத்தம் இருக்கவியலாது; பாவப் பரிகாரம் இருக்கவியலாது; இறைவரிடம் பரிந்து மன்றாடுதல் இருக்கவியலாது. இரட்சிப்பு இருக்கவியலாது என்று கூறுகின்றார்.[169]

பின்வரும் திருவசனங்களில் கருத்தைச் செலுத்திக் காண்க. "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். (1 யோவான் 5:7). "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்." (யோவான் 10:30). "அதற்கு இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இது முதல் நீங்கள் அறிந்தும் கண்டும் இருக்கிறீர்கள் என்றார். பிலிப்பு அவரை நோக்கி : ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவு காலம்

நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்." (யோவான் 14:6-11). "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள் அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.'' (யோவான் 16:13-15).

எ.ஆ. கிருஷ்ணபிள்ளை கடவுளின் மும்மையில் ஒருமை நிலையையும், ஒருமையில் மும்மை நிலையையும், ''ஒன்றிலே மூன்றாய்; மூன்றும் ஒன்றதாய், உலப்பிலதாய்'' என்றும், ''ஒன்று மூன்றாய் ஒருவர் போற்றி''[169A] என்றும் கூறுகின்றார். மேலும் காண்க:

"தந்தை ஆகி உலகனைத்தும்
    தந்து மநுக்கள் தமைப்புரக்க
மைந்தன் ஆகிப் புனித ஆவி
    வடிவாய் ஞான வரம் அருளிப்
பந்தம் அறநின் றுஇலங்குதிரி
    யேக பரமன் பதாம்புயத்தைச்
சிந்தை ஆரத் தொழுது ஏத்திச்
    சேர வாரும் செகத்தீரே."

"அயலொன்றும் இன்றியே சுத்தசூ னியமா
    யகண்ட வெளியாய காலத்
தநாதியாய் நின்றபர வத்துவே யுண்மையு
    மவ்வுண்மை யே வஸ்துவும்
மயலின்றி யப்பரம வத்துவிட நின்றுவெளி
    வந்ததிரு வாக் கநாதி
மைந்தனென் றாகவவ் வத்துவிலு மைந்தனிலும்
    வந்தபரிசுத் தாவியும்
செயலிலே தந்தையாய் மைந்தனா யாவியாய்த்
    திகழ்ந்துதிரி யேக பரமன்

சிருட்டித்திதி ரட்சணி செய்கையினில் மூவராய்ச்
சிந்தனையி லொருவ ராகி
இயலுலகம் யாவும் படைத்தளித் தாள்கின்ற
வீசனே யடியேற் கருள்
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே."[170]

திரியேகக் கடவுளைக் குறித்து எ.ஆ.கிருஷ்ண பிள்ளை ஆராய்ந்து கூறியுள்ள பின்வரும் செய்திகளையும் காண்க:

"இந்தத் திரியேக தேவவஸ்து நம்முடைய புத்திக்கு எட்டாத பொருள். அப்படியிருந்தும் அவருடைய திருவசனத்தின் படியே நாம் அதை உண்மையாய் விசுவாசிக்க வேண்டும். நம்முடைய சிறுபுத்தி அவருடைய அளவற்ற சுபாவத்தை எப்படிக் கிரகித்துக் கொள்ளக் கூடும்? நாம் நம்முடைய ஆத்துமாவும் சரீரமும் ஒன்றாயிருக்க வகையையும் நம்முடைய கண்காணுகிற வகையையும் பயிர் வளருகிற வகையையும் மற்றும் இப்படிப்பட்ட அனந்தமான நடக்கைகளையும் அறியாமலிருக் கிறோமே. சர்வத்திற்கு மேலான உன்னத தேவவஸ்துவின் முழுத் தத்துவத்தையும் நாம் எப்படி அறிந்துகொள்வோம். ஆனதால் சிலர், பிதா, குமாரன், ஆவியென்னும் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்கிற சங்கதியை நம்முடைய புத்தியினாலறிந்து கொள்ளமுடியாதென்று சொல்லி அதை நம்பால் தள்ளுகிறது மிகவும் புத்தியீனமாயிருக்கிறது. நம்முடைய புத்தி தேவபுத்தியல்லவே. தேவன் அருளிச்செய்த திருவசனத்துக்கு நம்முடைய புத்தி மேலானதாகுமா? அந்த வசனமில்லாவிட்டால் நாம் பாவமின்னதென்றும் புண்ணியம் எத்தகையதென்றும் அறியமாட்டோமே. ஆகையால் நாம் மரணத்துக்குப் பின்பு உயர்ந்த புத்தியுள்ளவர்களாகுமளவும் திரியேக தேவனை மிகுந்த வணக்கத்தோடே நம்பிக் கொள்ளக்கடவோம்."[171]

அச்சுதா இவர்களுமே ஆண் பெண் அல்ல அரனும் அல்ல; இலிங்கம் அல்ல; அநாதியான சச்சிதானந்தனையே வணக்கம் செய்து.

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்." (யோவான் 4:24). ஆவியாயிருக்கும் கடவுளுக்குப் பால்வேறுபாடு இல்லையன்றோ! எனவேதான் கடவுளை விக்கிரகங்களுக்கும் மற்றவற்றிற்கும் ஒப்பாக்கிவிடக்கூடாது. "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்."

(யாத்.20:4). "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக. ஆமென்." (1 யோவான் 5:21).

அகத்தியர் கடவுளை அநாதியான சச்சிதானந்தன் என்று தெரிவிக்கின்றார். கடவுள் அநாதி, தோற்றநாசம் இல்லாதவர், என்றென்றும் இருப்பவர்; இருக்கிறவராகவே இருப்பவர், "கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்; பாரான் மலையிலிருந்து பிரகாசித்து, பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார்; அவர்களுக்காக அக்கினி மயமான பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது" (உபாகமம் 33:2). "பின்பு லேவியரான யெசுவா, கத்மியேல், பானி, ஆசாப்நெயா, செரெபியா, ஓதியா, செபனியா, பெத்தகியா என்பவர்கள் மக்களைப் பார்த்து: நீங்கள் எழுந்திருந்து அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தோத்தரியுங்கள் என்று சொல்லி, கர்த்தரை நோக்கி: எந்த ஸ்துதிதோத்திரத்துக்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டவதாக ...." (நெகேமியா 9:5).

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஆமென், ஆமென்." (சங்.41:13)

"பர்வதங்கள் தோன்று முன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்." (சங்.90:2). "உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர்." (சங்.93:2).

கடவுள் சச்சிதானந்தன். சத்து-உண்மையாய் என்றும் இருக்கிறவர்; சித்து-அறிவு; ஆனந்தம்-மகிழ்ச்சி. கடவுள் சத்தாக இருக்கிறார்; சித்தாக இருக்கிறார்; ஆனந்தமாக இருக்கிறார். எ.ஆ.கிருஷ்ண பிள்ளை கடவுளைச் சச்சிதானந்தனாக, உண்மை அறிவு ஆனந்த நிலையினராய்ப் பின்வரும் பாடலில் காண்கின்றார்.

"சத்தாய்நிஷ் களமாயொரு சாமியமும் இலதாய்ச்
சித்தாயா னந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே
எத்தால்நா யடியேன்கடைத் தேறுவனென் பவர்தீர்ந்
தத்தாவுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே."[172]

இந்தச் சச்சிதானந்தனாகியக் கடவுளையே வணங்கி வாழவேண்டும் என்பது அகத்தியர் அறிவுரை.

சற்குருவைத் தரிசித்துச் சரண்பற்றி, எச்சரிக்கை கொண்டு நட அப்பா! அப்பா! எண்ணிலா முத்திவழி எய்துவாயே!

சற்குருவாம் கிறிஸ்துபெருமானை மனத்தாலும் நாளும் வேளையும் தரிசித்து அவரிடம் சரண்புகுந்து - அடைக்கலமடைந்து எச்சரிக்கையுடன்

வாழ்க்கையில் நடக்க வேண்டும் என்றும், அவ்வாறு நடந்தால் மனித எண்ணத்திற்கு அப்பாற்பட்டு விளங்கும் முக்தியை எய்தலாம் என்றும் அகத்தியர் கூறுகின்றார்.

சற்குருவைக் கண்டறிந்து அவரிடம் அடைக்கலம் புகுந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. உலகத்திலே பொய்க்குருக்களும் பொய் மதங்களும் இருக்கின்றமையால் ஒன்றான சற்குருவை அறிந்து தெளிதல் முத்தி உறுதி பயப்பதாகும்.

கௌதமர் கூறும் சற்குருவை ஒப்பிட்டுக் காண்க:

“சற்குருவின் பெருமைதனை உலகுதனில்
 தானறியச் சாற்றுகிறோம் சார்ந்து கேளும்
சற்குருவாய் எவ்வுயிர்க்குந் தானே தானாய்ச்
 சகல சீவான்மாவின் குருவுமாகிச்
சற்குருவே பேரொளியாய் நின்ற சோதி
 தாரணியில் மானிடத்தின் சட்டைசாத்திப்
புற்குருக்கள் தங்களுக்குஞ்சீடன் போலாய்ப்
 புத்திமதி சொல்லியே புரிவோர் தாமே.
ஆதியந்த மில்லாத காலந் தன்னில்
 அநாதியாய் நின்றதுதான் பரமென்றாகும்
ஆதியந்தம் படைத்தபரன் மனுவோர்க்காக
 அறியாத குருவெனவந் தாண்டதாகும்.....”[173]

பாம்பாட்டிச் சித்தரும் மெய்குருவின் பாதம் போற்றவேண்டும் என்கிறார்:

“பொய்மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்
மெய்ம் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய்க் குருவின் பாதம் போற்றி ஆடாய் பாம்பே.”[174]

ஜி.எஸ். வேதநாயகம், மக்களை மீட்க உலகுக்கு வந்து குருதி சிந்திய சற்குருவைப் பின்வருமாறு பாடுகின்றார். தமது ‘சற்குரு சதகம்’ என்னும் நூலில்:

“வானவர் சித்தமே நிறைவேற்று மாகையால்
 மகிமைகள் மறந்தன்னை
மனமாற வெறுமையாக் கியடிமை வடிவாகி
 மனுவான சீவதுரையே
கானக மலைந்தலகை வசமான சபைமாதை
 கசடற மீட்டு நவமாய்க்

கறைதிரைக ளில்லாத கற்புடைக் கன்னியாக்
கைப்பிடித் துயர் மோட்சமாம்
ஞானமான வறை சேர்க்க வந்தபுன் னன்பினை
ஞானமறி யாதகுறையால்
ஞான்றகில மேநொந்து பொங்குமுள் ளத்தையே
ஞாங்கர்கொண் டேகுத்தினர்
ஏனமுமு தும்போக்கும் உதிரநீ ரருவியொன்
றிங்குற்ப வித்ததன்றோ
இகப்பவ மகற்றியித யப்புனித மீந்தருளும்
ஏகசற் குருநாதனே."[175]

சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம் சிலுவையில் மாண்டு உயிர்த் தெழுந்த சற்குருவாம் கிறிஸ்துவைக் குறித்துக் காட்டுவதாக விளங்குகின்றது:

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டந்நிய மின்மையின் அரன் கழல் செலுமே."[176]

மெய்யான குருபரனின் தன்மைகளை எச்.ஏ. பாப்லி ஆராய்ந்து எழுதியிருப்பதையம் கண்டு தெளிவு பெறுக:

"குருபரன் இன்னதன்மையுள்ளவர்

மனிதருக்கு தெய்வீகஞானத்தைப் போதிக்கத் தக்க சிறந்த சற்குரு எத்தன்மையுள்ளவர் என்று நாம் இப்பொழுது விசாரிக்க வேண்டும். நாம் இதுவரையில் ஆலோசித்த விஷயங்களைக் கவனித்துப் பார்த்தால் சற்குரு மனிதருக்கு இரண்டு முக்கியமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்றறியலாம். அவர்களுக்குத் தெய்வீக சத்தியங்களைப் போதிப்பதுடன் இப்போதனையைத் தெளிந்தறியும் சக்தியை உண்டாக்கவும் வேண்டும். அதுவுமல்லாமல், சற்குரு தமது வாயினாலே செய்யும் போதனையைத் தமது நடக்கையாலே திருஷ்டாந்தப்படுத்தி உறுதியாக்க வேண்டும். பொதுவாய்ச் சொல்லின் நன்னூலின் பாயிரத்தில் சிறந்த போதகனுக்குரிய தன்மை அவரிடம் சம்பூரணமாய்க் காணப்படவேண்டும்.

"குலன், அருள், தெய்வம் கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்,
உலகியல் அறிபோ டுயர்குணம் இனையவும்,
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே."

இப்படிப்பட்ட இயல்புக்கு என்னென்ன குணங்கள் வேண்டுமென்று நாம் விபரமாய் ஆலோசித்துக்கொள்ளலாம்.

1. அவர் தெய்வத் தன்மையுள்ளவர்:

தெய்வீக விஷயங்களைக் கற்பிக்கத்தக்கவன் தெய்வீக குணத்தையு டையவனாதல் அவசியம். தெய்வீகத்தை யுடையவன் மட்டும் பரலோக விஷயங்களையும் சத்தியங்களையும் தெளிந்தறிந்து கொண்டு அவற்றை அறியாதார்க்குக் கற்பிக்கத்தக்கவனாவான்.

"குருவுருவங் கொண்டிங் குவலயத்துள் தோன்றிப்
பருவரலை தீர்க்கும் பரன்",

என்று வள்ளலார் பாடியதைக் காண்க. திருவிளையாடல் புராணத்திலே வேதத்திற்குப் பொருளருளிய படலத்தில் கடவுள் உலகத்தில் தோன்றி முனிவர்க்கு வேதத்தை உபதேசித்ததாகச் சொல்லியிருக்கிறது.

"மான முனிவோர் அதிசயிக்க, வடநீழல்
மோன வடிவாகிய முதற்குரவன் எண்ணான்-கு
ஊனமிலிலக் கணவுறுப் பகவை நானான் - கு
ஆனவொரு காளைமறையோன் வடிவமாகி;
அடியரேம் உய்யமாறும், உலகெலாம் அளிக்குமாறும்,
படியிலா வரத்தவேதப் பயனருள் செய்தியென்னக்,
கொடியமா பாசந்தீர்ப்பான், குரவன் அம்முனிவரோடு
முடிவிலா இலிங்கமுன்போய் மறைபொருள் மொழி வதானான்."

இவ்விதமாகக் கண்ணுவர், கற்கவர் முதலிய முனிவர்கள் வேதப் பொருளைக் கடவுளிடத்தில் தெரிந்து கற்றுக் கொண்டார்கள். அருச்சுனனும் கிருஷ்ணனிடத்தில் தெய்வீக போதனையைப் படித்துக் கொண்டதாகவும் அறிந்திருக்கிறோம்.

மேலும் பேராசிரியர் யாவரும் கடவுளிடமே தங்கள் உபதேசத்தைப் படித்துக்கொண்டார்கள் என்பதே. சாதாரண மனிதரெல்லாரும் தெய்வீக விஷயங்களைக் குருபரன் மூலமாய்க் கற்றறிவதேயொழியத் தங்கள் சுயஞானத்தினால் கற்றறியலாகாமைக்கு வேண்டிய அத்தாட்சியாம்.

"கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண்டேன்" என்று திருமூலர் பாடினதுபோல் நாம் பார்த்துச் சொல்லத்தக்கவர் தாமே உலகிற்குக் குருபரனாயிருப்பார்.

2. குருபரன் சந்தேகம், விபரீதமற்றவர்.

குருபரனின் போதனை சந்தேகமுள்ளதாயின் அதனால் மனிதருக்கு யாதொரு பிரயோசனமுமில்லை. எக்காலத்தும் மனதில் பற்பல சந்தேகங்களையுடைய நமக்குச் சந்தேகமான உபதேசத்தைக் கற்பிப்பவர் யாதொரு நன்மையையும் செய்யமாட்டார். ஆன்மா பரலோகம் கடவுளியல்பு முதலியவைகள் இன்னின்ன என்று அறிய விரும்புகிறது. இவைகளைப் பற்றி மனிதருக்கு எப்போதும் சந்தேகமுள்ள அபிப்பிராயங்களிருப்பதால் சற்குரு இவைகளைக் குறித்து நிச்சயத்தோடு கூடிய உபதேசம் செய்பவராதல் வேண்டும்.

"குருமொழியே மலையிலக்கு. மற்றைமொழி யெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்."

என்று தாயுமானவர் குருமொழியின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்து கின்றார். மேலும், திருமந்திரம் பின்வருமாறு சொல்லுகிறது:

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்,
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்,
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே."

இதனாலே சற்குரு தெளிந்தமனதை உடையராதல் அவசியம் என்றறிக.

'மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது' என்பது போலப் பற்பல சங்தேகக் காற்றுகளாலும், நீரோட்டங்களாலும் அலக்கழிக்கப்பட்டுத் திரிகிற ஆன்மாவானது இப்பிரபஞ்ச சமுத்திரத்தில் நன்னெறியிலே நடக்க விரும்பின் இச்சமுத்திரத்தின் இரகசியங்களையும் நிர்ணயமாய் அறிந்துகொள்கிற மாலுமி ஒருவன் அதற்கு இன்றியமையாத அவசியம். 'கண்டான் நகைப்புக் கொத்த இவ்வுயிர் வாழ்க்கையில்' மலைக்கொத்த குருமொழி அவசியம். இதைப்பற்றித் திருவள்ளுவர்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேரா தார்."

என்று பாடுகின்றார்.

3. குருபரன் புனித நடக்கையுடையவர்.

போதனை சாதனைகளிலே, சாதனையே மேலானது.

"தவமறைந் தல்லவை செய்தல் புதன் மறைந்து
வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று"

என்று பொய்யில் புலவர் கூடாவொழுக்கத்தையுடைய குருவின் மிகவும் வெறுப்பான நிலைமையைக் காட்டுகிறார். அப்படிப்பட்ட குருவைச் சேர்ந்தவரும் கெட்டுப்போவது நிச்சயம்.

"மனத்தான் மறுவிலரேனுந், தாஞ்சேர்ந்த
இனத்தால் இகழப்படுவர் - புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே,
எறிபுனந் தீப்பட்டக் கால்."

அதுபோலவே நல்லாரைச் சேர்வது நல்லொழுக்கத்திற்குக் காரணமாகும்.

'ஊரங்கண நீருரவு நீர்ச்சேர்ந்தக் கால்,
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் - ஒருங்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்,
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.'

மேலும் ஸ்ரீ இராமபிரானது இரதத்தின் பொன் சக்கரங்கள் எப்படிக் கருங்கற்களைப் பொன்னிறமாக்கினவோ, அப்படியே நல்லார் தீயார் குணத்தை மாற்றுவார்.

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத்தோடி
இருண்ட கல்லையும் தன்னிறமாக்கிய விரதம்,"

மேலும்,

'மொழிகுணமின்மையும் இழிகுண வியல்பும்
அழுக்கா றவா வஞ்சம் அச்சம் ஆடலும்
'சுழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென, முரண்கொள் சிந்தையும்
உடையோரிவர் ஆசிரியராகுதலே,'

என்று நன்னூலில் சொல்லியபடி, தீயகுணமுள்ளவன் ஆசிரியனாகக் கூடாது. இவ்வுலகத்தார் யாவரையும் நன்னெறியில் நடத்தக்கூடிய சற்குரு புனித நடக்கை யுடையராதல் இன்றியமையாத அவசியம். போதனையை விடச் சாதனை மேலானது. போதனைக்கு வேறுபாடான சாதனை புலித்தோலைப் போர்த்த கழுதை கத்துவது போலாகும். பரம சற்குரு நமக்கு மாசில்லாத நடக்கையைக் காண்பிக்க வேண்டும்.

4. அவர் அன்பின் சொரூபி.

'அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே, இறையே, பராபரமே,'

என்று தாயுமானவர் பாடினதுபோல குருபரன் அன்புருவம் உடையவராவார்.

ஸ்ரீராமாயணத்தில் அன்பின் பெருமை பின்வருமாறு சொல்லப்பட்டது.

'என்பு தோலுடையார்க்கும் இலார்க்குந்தம்
வன் பகைப்புலன் மாசற மாய்ப்பதென்?
முன்பு பின்பின்றி மூவுலகத்தினும்
அன்பினல்லதோர் ஆக்கமுண்டாகுமோ?'

என்பது மாணிக்கவாசகர் தம் குருவை அன்புள்ளவராககச் சிந்தித்துக் கொண்டாராம்.

'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய், பராபரமே'

என்று ஓதினார்.

அந்த அன்பானது நம்மை மோட்சதீரத்தில் ஏற்றத் தக்கக் கருவியாம். அதைப்பற்றியே,

'அரசே, நின் திருக்கருணை யல்லா தொன்றை
அறியாத சிறியேன் நான் அதனால் முத்திக்
கரைசேரும் படிக்குன் அருட் புணையைக் கூட்டும்,
கைப்பிடியே கடைப்பிடியாக் கருத்துள் கண்டேன்'

என்று தாயுமானவர் மறுபடியும் சிறப்பாய்ப் பாடினதைக் காண்க. அன்பிலராகிய நம்மைப் பரிசுத்தராக்கிக் கடவுளிடத்தில் திருப்பிக் கொண்டுவரும்படிச் சற்குருவுக்கு அன்புமயமான குணம் இருப்பதவசியம்.

தாயைப் போல் பிள்ளையென்பது போல் கடவுளைப்பற்றும் அன்பை நம்மிலே பிறப்பிப்பவர் அன்புள்ள குருவன்றி வேறொருவரல்லர். நமது மனங்களைக் கவர்ந்து கொண்ட ஆபாசங்களிலிருந்து நம்மை இழுத்து அவைகளின் கவர்ச்சியை அழித்து நம்மைக் கடவுளிடத்தில் சேர்ப்பது பலத்தினாலாவது ஞானத்தினாலாவது ஆகாமல் பரிபூரணமான அன்பு ஒன்றினாலேயே ஆகும்.

ஆகையினாலே குருபரன் அன்பின் சொரூபியாயிருக்க வேண்டும்.

5. அவர் எல்லா சாதியாரும் ஒப்புக்கொள்ளத்தக்கவர்:

ஒவ்வொரு சாதிக்கும் வெவ்வேறு குருக்களுண்டு. எனினும் குருபரன் உலகத்தார் யாருக்கும் ஒருவராகவே இருக்கவேண்டும். கிரகங்கள் பல பலவாயிருப்பினும் ஒளிதரும் சூரியனொன்றே. குருபரன் உத்தம வகையாய்க் கடவுளின் சம்பூரணகுணத்தை வெளிப்படுத்தலால் உண்மையான பக்தர் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கவராவார். பௌத்தருக்குச் சாக்கியமுனி விசேஷித்த விதிகளைக் கொடுத்தார். ஜைனர் மகாவீரரைக் குருவாக எண்ணுகிறார்கள். சீக்கிய மதத்தார் நானக்குருவை விசேஷமாய் மதிக்கிறார்கள். இவ்வாறு பற்பல சாதியார் வெவ்வேறு குருக்களைத் தங்கள் தங்களுக்கென்று விசேஷித்தவர்களாக வணங்கிக் கொள்ளுகிறார்கள். இதைக் குறித்தே திருமந்திரத்தில் புண்ணியர் யாவரும் குருபரனை வாழ்த்துவார்கள் என்று சொல்லியிருக்கிறது.

'சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மைசெய்து
அத்தனை நல்கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணால் நமர் என்பர். புண்ணியன்
அத்தன் சிவன் என்றடி யணிவாரே,' என்பதே.

அந்தந்த மதத்தின் குருக்கள் செய்த போதனையைத் தொகுத்து தம் போதனையில் அவர்களின் விசேஷங்கள் எல்லாவற்றையும் காண்பிக்கத் தக்கவர் குருபரனாயிருப்பார், சூரிய கிரகணத்தில் நிறங்கள் எல்லாம் அடங்கிச் சேர்த்ததுபோல அவரது போதனையில் மற்றோர் போதித்த சத்தியம் எல்லாம் அடங்கியிருக்க வேண்டும்.

'நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம், அதுசமயம்'

என்று சிவஞான சித்தியார் இவ்விதமாய் உயர்ந்த சமயத்தைப் பற்றிக் கூறினார்.

அந்தந்த மதஸ்தர் அந்தந்தக் குருக்களைச் சர்வ சனத்துக்குரியவர் களென்று சொல்லுகிறதுமில்லை. ஆகையால் இவர்களெல்லாரும் குருபரன் என்று சொல்லத் தக்கவர்களல்லர். எல்லாத் தேசங்களிலும், எல்லாச் சாதியாராலும், எல்லா மதஸ்தராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர் ஒருவரே உலகத்தில் குருபரனாயிருக்கக் கூடும்.

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

என்று திருவள்ளுவநாயனார் சொல்லிய வகையைச் சற்குருவின் பெருமை உலகமெங்கும் பிரகாசித்து இமயமலைபோல் எல்லாவற்றிற்கு மேலாக உயர்ந்து காணப்படும்.

6. அவர் சக்தியுள்ளவர் :

சற்குருவின் சக்தி இருவகையாதல் வேண்டும். அவையாவன: தமது வேலையை முடிக்கத்தக்க சக்தியும், பிறர் மனம் இசைந்து அவர் சொன்னபடி நடக்கச் செய்யத்தக்க சக்தியும், என்பவைகளே. அவர் முதலாவது பாவத்தை நீக்க வேண்டும். இதைப்பற்றிச் சீடாசரத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

கட்டுண்ட கள்வன்தானோ கட்டினை விட்டுக்கொள்வான்
விட்டவே தனையைத்தீர்த்து விடுவிப்பான் ஒருவன் வேண்டும்
அட்டமா சித்தியோ காலறிவினால் அறியலாகும்
தட்டறப் பாசந்தீர்க்கத் தற்பர குருவே வேண்டும்.

மேலும் பாவத்தில் மூழ்கித் பாவத்தன்மையாக மாறிப்போன லௌகீக நெஞ்சுள்ளவர்களின் சிந்தையை அவர் மாற்றி அன்னவரைத் தம்மைப் போலாக்க வேண்டும். அதுபற்றிச் சிவஞான சித்தியார்,

மன்னவன்தன் மகன்வேட ரிடத்தேதங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்,
பின்னவனும் என்மகனீ, யென்றவரில் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணுமாப்போல்,
துன்னிய ஐம்புலவேடர் சுழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந்தொல்லுயிரை
மன்னும் அருட்குருவாகி, வந்தவரினீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்,

என்று குருபரன் செய்கிற வேலையை நன்கு விளங்குகிறது. அதுவுமல்லாமல் சற்குரு உலகத்தில் நற்குணங்களும் நற்செய்கைகளும் தழைத்தோங்கவும் அறம் சிறந்து வளரவும் செய்யவேண்டும். இதுபற்றித் தாயுமானவர் பின்வரும் பாட்டில் இந்நோக்கத்தைத் தெளிந்து வெளிப்படுத்தினார்.

“ஞானநெறிக்கேற்ற குரு, நண்ணரிய சித்திமுத்தி
தாபனந் தருமந் தழைத்த குரு - மானமொடு
தபயெனவும் வந்தென்னைத் தந்த குரு, என் சிந்தை
கோயிலென வாழுங் குரு”

ஆகையினாலே நமது நிலைமைக்கேற்ற குருபரன் இந்தச் சக்திகள் யாவையும் உடையராதல் வேண்டும்.

7. குருபரன் யாவர்?

குருபரன் அவசியமென்றும், அவர் இன்ன தன்மையுடையவரென்றும் நாம் ஆராய்ந்தறிந்தோம். இப்போது இன்னொரு கேள்வி வருகிறது. இது யாதெனில், இத்தன்மையுள்ள சற்குரு ஒருவருண்டோ? உண்டானால் அவர் யாவர்?

'பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்; பிள்ளை
பெறாப்பேதை அறிவாளோ? பேரானந்தம்
உற்றவர்க்கே கண்ணீர் கம்பலை உண்டாகும்;
உறாதவரே கன்னெஞ்ச முடைய ராவார்'

என்று தாயுமானவர் பாடினது போலவே வருத்தப்பட்டுப் பாவக் கட்டினால் கட்டுண்டு திரிந்து, பின்பு சற்குருவின் திருப்பாதத்தையடைந்து, அவராலே விடுதலையாகும் பேரானந்தம் பெற்றவர்களே சற்குரு இன்னாரென்று சந்தேகமற அறிந்துகொள்வார்கள். எல்லாக் குருக்களையும் விசாரித்தால் முன் சொல்லிய குறிப்புகளுக்குப் பொருந்தினவர் ஒருவரேயொழிய வேறொருவரில்லை என்று காணப்படும். அவரே கிறிஸ்துநாதர்.

கிறிஸ்துவின் குணாதிசயங்களையும் அவர் செய்த கிரியைகளையும் நன்கு ஆராயின் அவர் முன்சொன்ன தன்மைகள் சகலத்தையும் உடையவர் என்று தெரியவரும்.

அவர் செய்தற்கரியவற்றைச் செய்து தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தினார். அவர் நிச்சயத்தோடு பேசுகிறார் என்று மக்கள் யாவரும் அதிசயத்துடன் பேசிக்கொண்டார்கள். மன நிர்ணயமில்லாத மற்றோர்போலன்றி நிச்சயத்தோடு போதித்தார். இது அக்காலத்தோர் சாட்சியாம்.

மேலும் வாக்கிலும், செய்கையிலும் மாசில்லாத தன்மை காணப்பட்டதாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. லௌகீக நெஞ்சனாகிய பிலாத்துவும் அவரிடத்தில் குற்றங்காணேன் என்ற சாட்சியைக் கொடுத்தான். அத்துடன் அவரது அன்புள்ள குணத்தைப்பற்றிய பிரஸ்தாபம் சூரியனது கிரணங்களைப் போல எவ்விடத்திலும் பரந்து ஓடினது. "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்று பொய்யில்புலவர் சொன்னதுபோல் அவர் தமது உயிரைக்கொடுத்துத் தமது அன்பின் சிறப்பை வெளிப்படுத்தினார். எல்லாத் தேசத்திலும் சகல பாஷைக்காரராலும் அவருடைய பேர்சொல்லப்பட்டு வருகிறது. அவருடைய பக்தர் அந்தந்த தேசத்தார்; அந்தந்த மதஸ்தர். அந்தந்த சாதியாருக்குள்ளும் உண்டு. அவருடைய சக்தி இத்தேசத்தில் அவர் செய்த கிரியைகளினாலேயே விளங்கிற்று.

பஞ்சம் சாதியார் தங்கள் கீழ்த்தன்மையை விட்டு நல்லொழுக்கம் பெற்று மேன்மையடைந்தனர். இதற்குத் தகுந்த அத்தாட்சி இன்னும் வேண்டுமாயின் அவர் பாவிகளின் சிந்தையை மாற்றி அவர்களுக்குப் பரிசுத்தமான குணாதிசயங்களை உண்டாக்கி வளர்ப்பதைக் காண்க.

ஓ மக்களே, உங்களுக்குச் சிறந்த குருபரன் யாரென்று ஆராய்ந்து பார்த்து, அவரைச் சேர்ந்து இவ்வானந்த வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். கிறிஸ்துவைப்பற்றி ஒருவர் பின்வருமாறு பாடுகிறதைக் கேட்க:

"நன்னெறி புகுத்திடும், நவையி னீக்கிடும்,
இன்னலை யகற்றிடும், இகல் செகுத்திடும்,
உன்னதத் துய்த்திடும், ஒருங்கு காத்திடும்,
எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே.

அன்பினுக் குருவம், நல்லறத்துக் காலயம்,
மன்பதைக் கருள்மழை வழங்கு பைம்புயல்,
நின்பர மென்றினை வோர்க்கு நித்யபேர்
இன்ப சஞ்சீவிநம் யேசு நாமமே.

தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலால், கருதில் யாதுமோர்
அருமையும் பயனும் ஒன்றில்லை, ஆதலால்
இருமையுந் துணையெனக் கியேசு நாமமே."

ஆசிரியர் கிருஷ்ணபிள்ளை இப்படி எழுதின வார்த்தைகள் யதார்த்தமாயிருந்தால் கிறிஸ்து சிறந்த சற்குருவுக்குரிய தன்மைகளையுடையவர். இந்தியர் பிரமசமாஜத்தின் போதகருமாகிய கேசவசந்திரசேனர் என்னும் மகான் கிறிஸ்துவைப்பற்றித் "துலக்கமும் அருமையுமான மணிகளால் இழைக்கப்பட்ட கிரீடமாகிய இந்தியா தேசத்தைப் பெற்றுக்கொள்ளத் தக்கவர் கிறிஸ்துவேயொழிய வேறொருவருமில்லை. கிறிஸ்துவேயொழிய வேறொருவருமில்லை என்று வற்புறுத்திச் சொல்லுகிறேன்," என்று பெருஞ்சாதுரியத்தோடு உபந்நியசித்தனர். அதோடு சில நாட்களுக்கு முந்தி மங்களூர்ப் பட்டணத்திலே இந்து சபைக்கு முன்பாக இந்திய கனவான் ஒருவர் பின்வருமாறு சொன்னார். "இந்த கிறிஸ்துவெறும் மனிதன் தானா? மனிதன் மட்டும் அல்லவே, அவர் நமது காலத்திற்குரிய கடவுளின் சொரூபம்; ஆகையால் அவர் இன்னாரென்று நாம் உணர்ந்து நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். அவர் நமக்கு அவசியம். அவரில்லாமல் ஜீவிக்கமுடியாது," என்பதே. எல்லாரும் இவ்வாறு உணர்ந்துக்கொள்ளக் கடவுள் அருள் செய்வாராக."[117]

அகத்தியர் இப்பாடலில் சச்சிதானந்தனாம் சற்குருவை வணங்கி, தரிசித்து, அவரிடம் அடைக்கலம் கொண்டு வாழுமாறு எச்சரிக்கின்றார்.

முடிப்புரை

முப்பதுக்குள்

'பரமகுரு சொன்னபடி பாடினேன்'

30. "ஓடுகின்ற வகைகள் எல்லாம் உரைத்துப் போட்டேன்;
உலகுதனில் மார்க்கம் எல்லாம் உகந்து சொன்னேன்

தேடுகின்ற புராணம் எல்லாம் பொய்யே என்றேன்;
சிவன் பிரம்மா விஷ்ணுவெல்லாம் பேயே என்றேன்;

ஆடுகின்ற தீர்த்தம் எல்லாம் சத்துவென்றேன்;
அஞ்ஞானம் பண்ணுகின்ற அகந்தை என்றேன்;

பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்;
பரமகுரு சொன்னபடி பாடினேனே."[1]

கருத்துரை : கடவுள் பக்தி என்னும் நிலையில் மக்கள் வாழ்க்கையில் ஓடிக் கொண்டிருக்கின்ற எல்லா வகைகளையும் உரைத்துவிட்டேன்; உலகத்திலுள்ள மார்க்கங்களெல்லாவற்றையும் விரும்பி அறிவித்தேன்; தேடிக் கண்ட புராணம் எல்லாம் பொய்யே என்று அறிவித்தேன்; சிவன், பிரம்மா, விஷ்ணு முதலான எல்லாரும் பேயே என்று கூறினேன்; பல இடங்களுக்கு சென்று தண்ணீரில் முழுகுவதெல்லாம் சத்து என்றேன்; இவை அஞ்ஞானம் பண்ணுகிற அகந்தை என்றும் அறிவித்தேன்; இந்தச் செய்திகள் எல்லாவற்றையும் **முப்பது பாட்டுக்குள்** அடக்கிக் கூறிவிட்டேன்; என் சொந்தமாக நான் இவற்றைச் சொல்லவில்லை; பரமகுருவானவர் சொன்னபடியே பாடினேன் என்றவாறு.

விளக்கவுரை

தாம் மெய்ப்பொருள் அல்லது ஞானம் கண்ட வரலாற்றின் முடிப்புரையை இப்பாடலிலே அகத்தியர் கூறுகின்றார். பரமகுருவின் சொற்படி இந்தச் செய்தியை முப்பது பாட்டுக்குள்ளே அடக்கிப் பாடினேன் என்று திட்டவட்டமாகக் கூறி நூலினை முடிக்கின்றார் அகத்தியர்.

ஓடுகின்ற வகைகளெல்லாம் உரைத்துப்போட்டேன்; உலகுதனில் மார்க்கமெல்லாம் உகந்து சொன்னேன்:

மக்கள் கடவுள் பக்தி என்று கூறிக்கொண்டு அலைந்து திரிந்து ஓடிக்கொண்டிருக்கிற எல்லா வகைகளையும் அதன் விளைவாக உலகத்தில்

தோன்றியிருக்கும் எல்லா மார்க்கங்களையும் மயக்கங்களையும் குறித்து விளக்க விவரமாய்ச் சொன்னேன். நான்கு வேதங்கள் முதலாகத் தோன்றிய சமய இலக்கியங்களிலே மக்கள் கடவுள் பக்தி என்னும் பெயராலும் மார்க்கங்கள் என்னும் பெயராலும் கூறியிருக்கும் காரியங்களின் உண்மை நிலைமைகளை எல்லாம் அகத்தியர் தமது நூலில் ஆராய்ந்து கூறியிருப்பதை இங்கே நிறைவுரையில் நினைவுபடுத்துகின்றார்.

தேடுகின்ற புராணம் எலலாம் பொய்யே என்றேன்; சிவன், பிரம்மா விஷ்ணுவெல்லாம் பேயே என்றேன்; ஆடுகின்ற தீர்த்தம் எல்லாம் சத்துவென்றேன்; அஞ்ஞானம் பண்ணுகின்ற அகந்தை என்றேன்; தாம் மெய்ப்பொருளைத் தேடி ஆராய்ந்ததில் அதைக் காண்பதற்கு துணைபுரியாத புராணங்கள் முதலானவை. பொய் என்றும், மெய்ப்பொருள் போலத் தோற்றமறித்த மும்மூர்த்திகளாகிய சிவன், விஷ்ணு, பிரம்மா முதலானவர்களைப் பேய் என்றே கருதுவதாகவும், இவர்களை முன்வைத்துப் புராணங்கள் முதலானவை கூறும் புண்ணியத் தலங்களுக்குச் செல்லல் புண்ணிய நதிகள் என்று கூறப்பட்டவற்றில் தீர்த்தம் ஆடுதல் என்பன போன்ற மார்க்க சடங்குகளும் அஞ்ஞானம் செய்கின்ற அகந்தையான காரியங்களாகும் என்றும் கூறியுள்ளார்.

ஞானம் என்பது அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்று மூன்றாகப் பிரிகின்றது. விஞ்ஞானம் என்பது கடவுள் படைத்த சடப்பொருள் உலகத்தைப் பற்றிய அறிவு. உலக வரலாற்றிலேயே முன்னர் ஒருபோதும் இல்லாத நிலையிலே இன்று விஞ்ஞானமாகிய அறிவியல் வளர்ந்து முன்னேறி வருகின்றது. சடப்பொருள் உலகங்களைப் பற்றி மக்கள் கொண்டிருந்த அஞ்ஞானக் கருத்துகளை விஞ்ஞானம் திருத்தி மக்களை நல்லறிவு பெறச்செய்கிறது.

அவ்வாறே மெய்ஞ்ஞானம் உலக மக்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் கொண்டிருந்த மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இவ்றறின் பாற்பட்ட அஞ்ஞானக் கருத்துகளையும் அகற்றி மெய்ப்பொருள் பற்றிய உண்மையான ஞானம் பெறச் செய்கின்றது. மெய்ஞ்ஞானமானது சடப்பொருள் உலகங்களைப்பற்றி இருந்த அஞ்ஞானத்தையும், ஆவிக்குரிய உலகங்களைப் பற்றியிருந்த அஞ்ஞானத்தையும் அகற்றி உண்மை அறிவு பெற்று மனித வாழ்க்கையை நிலைபேறுடைய தாக்குகின்றது.

கிறிஸ்துவே "தேவனால் நமக்கு ஞானமும் நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்" (1 கொரி.;1:31). கிறிஸ்துவே நமது ஞானம்.

கிறிஸ்துவின் வாயிலாகக் கடவுள் சடப்பொருள் உலகங்களைக் குறித்தும் வெளிப்படுத்தியிருக்கும் ஞானமே மெய்ஞ்ஞானமாகும். "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத்

திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார் இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்." (எபிரெயர் 1:1-3) கிறிஸ்துவாகிய ஞானம் படைத்த உலகங்களை அறிவது விஞ்ஞானம்; கிறிஸ்துவாகிய ஞானத்தின் வாயிலாகக் கடவுளை அடைவது மெய்ஞ்ஞானம்; கிறிஸ்துவாகிய ஞானத்திற்குப் புறம்பானவை எல்லாம் அஞ்ஞானம் என்றறிக என்றவாறு.

பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்; பரமகுரு சொன்னபடி பாடினேனே:

தாம் கண்ட மெய்ஞ்ஞானமாம் மெய்ப்பொருளை, அம்மெய்ப்பொருளாம் பரமகுருவாகிய இம்மானுவேல் கிறிஸ்துவானவர் சொன்னவாறு முப்பது பாடல்களில் அடக்கிக் கூறிவிட்டேன் என்று கூறி முடிக்கின்றார் அகத்தியர். முன்னரே நூலில் இரண்டுமுறை (13 & 21) பரமகுரு சொன்னவாறு நூல் செய்துள்ளேன் என்று கூறியுள்ளார். முப்பது பாடல்களில் நூல் செய்திருப்பதை அகத்தியர் இதற்கு முன்னர் மூன்று தடவைகள் (பாடல் 1,6,7) குறிப்பிட்டு உள்ளார். இதனால் கட்டுக்கோப்புடன் அகத்தியர் நூல் செய்து உள்ளது புலப்படுகின்றது. இடைச் செறுகலுக்கும் வழி இல்லாமல் போகிறது.

சித்தர்கள் காலம்

இலக்கியப் பொருள் புலப்பாட்டிற்கு நூலின் (தோற்ற) காலத்தையறிதல் இன்றியமையாததாகும். இன்றேல் நூலுக்கு உண்மையாகப் பொருள் (உரை) செய்யவோ, உட்பொருளைப் புரிந்து கொள்ளவோ முடியாது என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் ஆராய்ச்சியாளராக இருந்து "இலக்கியத் தோற்றம்" (A History of Tamil Literature: 250 to 1960 A.D.) என்னும் இலக்கிய வரலாற்று நூல் செய்த பேரா.மு.கோவிந்தசாமி கூறியுள்ளார். இவர் சித்தர்களைப் பற்றிக் கூறும்போது அகத்தியர், திருமூலர் சித்தர் தலைவர்களாகக் கூறப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி சித்தர்களின் காலத்தை கி.பி.5ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையில் குறிப்பிட்டுப் பதினெண் சித்தர் வரலாற்றை ஆராய்கின்றார்.[178]

வெளியிடப்பெற்ற காலம்

1818ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சென்னை சமயக் கைபிரதி சங்கமும் (The Madras Religious Tract Society) பின்னர், கைப்பிரதிகளுடன்

புத்தகங்களும் வெளியிடத் தீர்மானித்த போது, சென்னை சமயக் கைப்பிரதி மற்றும் புத்தக[179] சங்கமும் 1848, 1915; (The Madras Religious and Book Society); அடுத்து 1854 அளவில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்துடன் இணைந்து வெளியிட்ட கைப்பிரதிகள், சிறு நூல்கள் இவற்றின் 46 எண்ணிக்கையில் அகத்தியர் ஞானமும் அடங்குகின்றது. 1858இல் டாக்டர் ஜான் மர்டாக்கு என்பவர் பெரு முயற்சியினால் ஏற்கெனவே இருந்த சமய இலக்கிய வெளியீட்டு நிறுவனங்களை இணைத்து கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் உருவானதை டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் தெரிவிக்கின்றார்.[180] இக்காலத்தை ஒட்டி வெளியிடப்பெற்ற அகத்தியர் ஞானத்தின் வெளியீட்டு எண்ணிக்கைதான் நூலின் முகப்பின் 46 என்று குறிக்கப்பட்டுள்ளது என்பது புலப்படுகின்றது. 1891இலும் இதன் ஒரு பதிப்பு வெளிவந்தது தெரிகின்றது.[181]

அகத்தியர் தமது நூலின் எதிர்காலத்தைக் குறித்து 25ஆம் பாடலில், ஏனைய சித்தர் தம்மீது சினங்கொள்வர் என்றும், உலகத்தோர் மயங்குவர் என்றும், திட்டிப் பழிப்பர் என்றும்,

"குறைத்திட்டே உரைத்த இந்த நூலைத்தானே
கூசாமல் சொல்லிவிட்டேன் கிழிக்கப் பார்ப்பார்."

என்றும் கூறியுள்ளார். இவருடைய எதிர்பார்ப்பு இன்னொரு வகையில் நடைபெற்றது தெரிகின்றது. "அகஸ்தியர் ஞானவிளக்கம்" என்று ஒரு நூல் 1922இல், மதுரையில் வெளிவந்துள்ளது. இதில் "அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய ஞானவிளக்கம் 34" என்று தலைப்பிடப்பட்டுள்ளது; ஆனால் இதில் 35 பாடல்கள் உள்ளன. **30 பாடல்களும்** ஆங்காங்கே சிறிதும், பெரிதுமாக சொற்களை மாற்றியும், தொடர்களை மாற்றியும் பொருள் சிதைவும் மாற்றமும் செய்யப்பட்டுள்ளன. சில எடுத்துக் காட்டுகள் வருமாறு:

"காரணமாய் **தேவியரும்** நிறைந்த வாறும்" (பாடல்-1)
என்பது,

"காரணமாய் **தேவியருள்** நிறைந்தவாறு" (பாடல்-1)
என்றும்;

"பாடுகிறேன் **முப்பதுக்குள் பார்க்கத்தானே**" (பாடல்-1)
என்பது,

"பகருதற்குக் **கணேசனுட பாதங் காப்பே**" (பாடல்-1)
என்றும்;

"பதினெட்டுப் பேர்களுக்கு **மென்னேடாச்சே**" (பாடல்-5)
என்பது,

"பதினெட்டுப் பேர்களுக்கு **மேலா மாச்சே**" (பாடல்-5)
என்றும்;

"முகித்திட்டேன் முப்பதுக்குள் **முக்கியந்தானே**" (பாடல்-6)
என்பது,

"முடித்திட்டேன் முப்பதுக்குள் **முகில் போற்றானே**" (பாடல்-6)
என்றும்;

"பாடுகின்ற **முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்;**
பரமகுரு சொன்னபடி பாடினேனே."
என்பது,

'பாடுகின்ற **யெந்நூலில் வெளியாத் தோற்றும்**
பார்த்து நீ காமப்பா றைிந்திடாயே" (பாடல்-30)
என்றும்,

எழுதப்பட்டுள்ளன. மேலோட்டமாக இவைகளை ஒப்பிட்டுக் காணும்போது இதன் உள்நோக்கம் வெள்ளிடை மலையாய் விளங்குகின்றது.

அகத்தியர் ஞானம் என்னும் தமது நூலில் அகத்தியர் நான்கு பாடல்களில் (1,6,7,30) முப்பது பாடல்களில் பாடியுள்ளதைக் கூறியுள்ளார். ஆனால், அடுத்த நூலில் இரண்டு பாடல்களில் (6,7) மட்டும் குறித்துப் பாடப்பட்டுள்ளது.[182] முன்னோர் மொழிந்தனவற்றை இடைச்செருகல் முதலான பல வகைகளில் பின்னோர் பொருளைச் சிதைப்பதும், அழிப்பதும், கலைப்பதும், குழப்புவதும் தமிழ்மொழி இலக்கிய வரலாற்றில் காணக்கிடைக்கும் ஒரு போக்காகும். **அகத்தியர் ஞானம்** நூலுக்கும் இவ்வாறு ஏற்பட்டுள்ளதில் வியப்பேதும் இல்லை.

கிறிஸ்து பெருமானை, 'சற்குரு' என்றும் 'பரமகுரு' என்றும் கூறியுள்ளார். சற்குரு சதகம் என்றே இயேசுகிறிஸ்துவின் வரலாற்றை 100 பாடல்களில் அகமுருக வடித்து வைத்துள்ளார் ஜி.எஸ். வேதநாயகம் என்பவர். இவரே கிறிஸ்து பெருமானை அமலகுரு என்று அழைத்து, 'அமலகுரு சதகம்' என்னும் தலைப்பிலும் ஒரு நூல் செய்துள்ளார். எஸ். தாமஸ் இரத்தினம் என்பார் பரமகுரு என்று கிறிஸ்துவை அழைத்து நூல் செய்துள்ளார்.

கிறிஸ்து பெருமான் தாமே கூறியுள்ளதைக் காண்க: 'பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்தில் இருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்; நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப் படாதிருங்கள்; **கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்**' (மத்தேயு 23:9,10).

எ.ஆ.கிருஷ்ணபிள்ளையும் கிறிஸ்து பெருமானை '**சற்குரு**' என்றும் '**பரமகுரு**' என்றும் தமது இலக்கியப் படைப்புகளில் அழைத்து உள்ளார்.

"ஒருசின் மயசற் குருவாகி யுலகத் துதித்து சீவரட்சை
தருசன் மார்க்க நெறியிதெனத் தமநல் லொழுக்கஞ் சான்றாகத்
துருசின் மனத்தோடுபதேசஞ் சொல்லிச் சுகிர்த பலியாய்வெங்
குருசின் மடிந்த குருசிலைக்கை கூப்ப வாரும் செகத்தீரே."[183]

"வேதம் ஒன்றே மெய் உள்ளங்கை
நெல்லிக் கனிபோல் விளங்குதிதோ
நாதன் ஒருவன் உளர் உலகம்
நவிலும் சான்று நற்கதியின்
பாதை ஒன்றுண்டு அது கிறிஸ்து
மார்க்கம் இதனைப் பகுத்துணர்ந்து
கோதில் பரம குருபாதம்
கும்பிட்டு ஏத்தும் செகத்தீரே!"[184]

பரமகுரு சொன்னவாறு அகத்தியர் தம் நூலைப்பாடி நிறைவு செய்தார். நானும் பரமகுருவின் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படி இந்த ஆராய்ச்சியுரையை எழுதி அமைகிறேன்.

வாழ்க **பரமகுரு.** வாழ்க **மெய்ப்பொருள்.**

அடிக்குறிப்புகள்

1. **திருவள்ளுவ மாலை.**
2. ஷெ.,
3. **திருக்குள்-396.**
4. எ.ஆ. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய சமய நிர்ணயம்,** பக்.74-76.
5. ந.சி. கந்தையபிள்ளை, **இந்து சமய வரலாறு,** பக்.68-70,
6. ஞா. தேவநேயன், **தமிழர் மதம்,** பக்.122.
7. ந.சி. கந்தையபிள்ளை, **இந்து சமய வரலாறு,** பக்.80.

7A. வேலுப்பிள்ளை, ஆ, **தமிழ் இலக்கியத்தில் காலமும், கருத்தும்,** பக்.143-4.

8. ஞானக்கோவை என வழங்கும் **சித்தர் பாடல்கள்:** பதினெண் சித்தர் துதிபாடல்.
9. **கலைக்களஞ்சியம்,** நான்காம் தொகுதி.
10. கே.கே. பிள்ளை, **தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்,** பக்.409-10.
11. ஞானக்கோவை என வழங்கும் **சித்தர் பாடல்கள்** (1968), பக்.17-18.
12. Ka. Naa. Subramanyam, **The Catholic Community in India,** p.1.
13. **Foreign Notices of South India,** p.173.
14. Quoted, **The Catholic Community in India,** p.1.
15. See, Ibid, p.2,3.
16. Ibid., p.4.
17. Ibid., p.2.
18. cf, Ibid., p.2.

18A. எ.பி.சுந்தர் ராஜ், மதமாற்றம் என்னும் மயக்கம், பக்.10-20.

19. **The Catholic Community in India,** p.13.
20. **Foreign Notices of South India,** p.204.
21. S.N. Wald, **Saint Thomas The apostle of India**, pp.66-8.
22. **The Catholic Community in India,** p.9.
23. **Saint Thomas The apostle of India**, pp.69.
24. Ibid., p.76.
25. ஜே.எஸ். மாசிலாமணி, இந்து மதசங்கிரகம், பக்.99-100.

25A. ஆபிரகாம் பண்டிதர், **கருணாமிர்த சாகரம்**, பக்.38-40.

25B. Hedlund Roger, E.(Ed)., **Christianity is Indian**, p.210.

26. A.L. Basham, **The Wonder that was India**, p.332.

27. Quoted, T.P. Meenakshisundaram, **A History of Tamil Literature**, p.70.

28. S. Radhakrishnan, **Recovery of Faith**, p.150.

29. ஞானக்கோவை என வழங்கும் **சித்தர் பாடல்கள்**, பக்.15-17.

30. வேதநாயக சாத்திரியார், **ஞானத்தச்ச நாடகம், வெண்கல சற்பம்**, பக்.28-30.

30A. ஒய்.எம்.சாலமோன், **சத்தியானந்தப் பாடல்**, -14, பக்.13.

31. ஞானக்கோவை என வழங்கும் **சித்தர் பாடல்கள்**, பக்.294-303.

32. பரினெண்சித்தர் பெரிய ஞானக்கோவை (1907), பக்.306-312.

32A. W.J. Wilkins, **Hindu Mythology**, Vedic And Puranic, pp.368.

33. அகத்தியர் ஞானம், 30:6.

34. ஷெ. 30:25.

35. எ.ஆ. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.30.

36. ஷெ. 82-83.

37. திரு.வி. கலியாணசுந்தரனார், **சிவன் அருள்வேட்டல்:** கடந்தநிலை 1-2.

38. சு.தா. இரத்தினம்: பரமகுரு, பக்.10. மேலும் சாதுசெல்லப்பா இயற்றியுள்ள **ஓம்** என்னும் நூலில் பக்.20-22லுள்ள செய்தியையும் ஒப்பிட்டுக் காண்க.

39. சாதுசெல்லப்பா, **ஓம்**, பக்.19.

40. **போகர் ஏழாயிரம்:** 4ஆம் காண்டம், 500, 506-509.

மேற்கோள்: **முக்தி வழி,** பக்.110-111.

41. என்.ஜெ.எஸ். சிவசுந்தரம், முக்திவழி, பக்.104-105.

42. எ.ஆ. கிருஷ்ணபிள்ளை, **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.134-135.

43. A.C. Clayton, **The Rig-Veda and Vedic Religion**, pp.165-166.

44. ஞானக்கோவை என வழங்கும் **சித்தர் பாடல்கள்**, பக்.24-26.

45. ஷெ. பக்.326.

46. **இரட்சணிய மனோகரம்,** 3 & 4.

47. **இரட்சணிய யாத்திரிகம்**: நிதான பருவம்-இரட்சணிய நவநீதப் படலம், 2.

48. **இரட்சணிய மனோகரம்**, 618.

49. மேற்கோள் ஞா. தேவநேயன், **தமிழர் மதம்,** பக்.56.

50. ஷெ. பக்.56.

51. **திருக்குறள்,** 7.

52. **தாயுமானவர் பாடல்கள்**, பரசிவ.1.

53. **இரட்சணிய மனோகரம்**, 99.

54. ஞா. தேவநேயன், **தமிழர் மதம்,** பக்.53.

55. **இரட்சணிய யாத்திரிகம்**: இரட்சணிய நவநீதப் படலம், 1.

56. **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.161-162.

57. **இரட்சணிய மனோகரம்**, 131.

58. ஞா. தேவநேயன், **கிறித்தவக் கீர்த்தனம்,** முதற்பக்கம்.

59. மேற்கோள்: என்.ஜெ.எஸ். சிவசுந்தரம், **முக்திவழி**, பக்.229-230.

60. வேதநாயக சாஸ்திரியார், **சாஸ்திரக்கும்மி** - 597,606-608.

60. **A. Stone, Anthony, P., A Christian Looks At Astrology**, p.100.

61. மேற்கோள்: **முக்திவழி**, பக்.150-151.

62. ஷெ.

63. ஞானக்கோவை என வழங்கும் **சித்தர் பாடல்கள்**: வால்மீகர், சூத்திரஞானம் - 5.6 (பக்.316).

64. மேற்கோள் : **முக்திவழி**, பக்.150-151.

65. ஷெ. பக்.153-154.

66. **சித்தர் பாடல்கள்**, பக்.235.

67. வெர்ன்வோர்செஸ்டர், **பரலோகம்,** பக்.33-34.

68. திரு.வி.க. **கிறிஸ்துவின் அருள்வேட்டல்**: அறத்தின் இயல், 3-4.

69. மேற்கோள் : **முக்திவழி**, பக்.344,347.

70. மேற்கோள் : **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.147.

71. மேற்கோள் : ஷெ. பக்.147.

72. **இரட்சணிய யாத்திரிகம்**: இரட்சணிய சமய நிர்ணயம், 147.

73. **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.108-112.

74. E. Max Muller, **The Six System of Indian Philosophy**, p.113.

75. **முக்திவழி**, பக்.192-194.

76. மேற்கோள் : **முக்திவழி**, பக்.199-200.

77. ஒய்.எம். சாலமோன், **மகா பாபேல்**, பக்.9.

78. Quoted, A.C. Clayton, **The Rig-Veda and Vedic Religion**, p.31.

79. Ibid., p.31.

80. Ibid., p.31.

81. Muir, **Sanskrit Textd**, 111, p.85.

82. ந.சி.கந்தையபிள்ளை, **இந்து சமய வரலாறு**, பக்.22.

82. A.C. Clayton, **The Rig-Veda and Vedic Religion**, p.48-49.

83. **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.66.

84. மேற்கோள் : **மகா பாபேல்**, பக்.14.

85. **முக்திவழி**, பக்.423.

86. மேற்கோள்: பக்.150-152,153.

87. **இரட்சணிய யாத்திரிகம்**: இரட்சணிய நவநீதப்படலம், 25.

88. திரு.வி.க. **கிறிஸ்துவின் அருள்வேட்டல்**: அறத்தின் இயல் 3.

89. **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.150-160.

90. **இரட்சணிய யாத்திரிகம்**: இராச துரோகப்படலம், 1-2.

91. ஜான் மில்டன்: **கவர்க்க நீக்கம்**, 26-78.

92. **இரட்சணிய யாத்திரிகம்**: மெய்யுணர்ச்சிப் படலம், 1.

93. எ.ஆ.கி., **நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு**, பக்.19.

94. மேற்கோள் : **முக்திவழி**, பக்.233.

95. ஷெ., பக்.233.

96. ஷெ., பக்.250.

96A. **A Hindu World**, Vol.II, pp.256-257.

97. **திருக்குறள்**, 294.

98. மேற்கோள், **முக்தி வழி**, பக்.238.

99. ஷெ., பக்.239-240.

100. ஷெ.பக்.240.

101. ஊரன் அடிகள், **இராமலிங்க அடிகள்** வரலாறு, பக்.376-377.

102. சி.என். அண்ணாதுரை, **நாடும் ஏடும்.**

103. **இரட்சணிய யாத்திரிகம்**: இரட்சணிய நவநீதப் படலம், 39-53.

104. ஷெ. 34.

105. மேற்கோள், **முக்தி வழி**, பக்.240.

106. **இரட்சணிய மனோகரம்**, 354.

107. ஷெ. 618.

108. ஷெ. 735.

109. ஷெ. 595.

110. **கிறிஸ்துவின் அருள்வேட்டல்**: அறத்தின் இயல்-2.

111. **இரட்சணிய யாத்திரிகம்**: இரட்சணிய நவநீதப் படலம், 55.

112. மேற்கோள், **முக்தி வழி**, பக்.346.

113. ஜி.எஸ்.வேதநாயகம், **அமலகுரு சதகம்**, 5.

114. **இரட்சணிய மனோகரம்**, 332.

115. **கிறிஸ்தவ கீர்த்தனைகள்**, 49.

116. **இரட்சணிய மனோகரம்**, 346,348.

117. ஷெ.104, 126, 130.

118. **இரட்சணிய மனோகரம்**, இகபரசந்திப் படலம், 48.

119. **இரட்சணிய மனோகரம்**, 250-253.

120. ஷெ.339.

121. ஷெ. 52.

122. **இரட்சணிய யாத்திரிகம்**: பரமராச்சியப் படலம், 32,33.

123. **இரட்சணிய மனோகரம்**, 250-253.

124. **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.144-122.

125. மேற்கோள் : **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.147.

126. **இரட்சணிய யாத்திரிகம்**: இரட்சணிய நவநீதப் படலம்.

126A. **இரட்சணிய யாத்திரிகம்**: இரட்சணிய சரிதப் படலம், 124-129.

127. **இரட்சணிய மனோகரம்**, 325.

128. **வேதாகமத்தில் உள்ள திருச்சபை**, பக்.339-341.

129. **கிறிஸ்துவின் அருள்வேட்டல்**: அறத்தின் இயல்-2; பொய்யிலே 8.

130. **இரட்சணிய மனோகரம்**, 104,105.

131. ஷெ. 321, 329.

132. ஷெ. 252, 255, 257.

133. மேற்கோள் : **முக்தி வழி**, பக்.259.

134. **இரட்சணிய மனோகரம்**, 251.

135. **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.19-20.

136. **இரட்சணிய யாத்திரிகம்**: சுவிசேட மார்க்கப் படலம்-64.

137. ஷெ. பூர்வ பாதை படலம், 12.

138. திருவருட்பா, **கீர்த்தனைப் பகுதி**, அருட்காட்சி 3.

139. **நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு**, பக்.29.

140. **போற்றித் திருஅகவல்**, 7.

141. மேற்கோள், **பரமகுரு**, பக்.8.

142. ஷெ. பக்.56.

143. **நாமக்கல் கவிஞர் பாடல்கள்**, பக்.216.

144. **இரட்சணிய மனோகரம்**, 260,261.

145. **இரட்சணிய மனோகரம்**.

146. **இரட்சணிய யாத்திரிகம்**: ஆதிபருவம், சுவிசேட மார்க்கப் படலம்.

147. **நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு**, பக்.36.

148. **மகாகவி பாரதியார் பாடல்.**

149. **Tamil Lexicon,** Vol.V, Part 1, p.2920.

149A. A. Caldwell, Bishop R.A., **A History Tinnevelly**, pp.6,15.

150. புறநானூறு - 2.

150A. Walker, Benjamin, L., **Hindu World**, Vol.II, p.253.

151. **தேவனிடமிருந்து அன்புடன்**, பக்.34-40.

152. நெ.து. சுந்தரவடிவேலு, **புரட்சியாளர் பெரியார்**, பக்.69.

153. ஷெ., பக்.71.

154. ஷெ. பக்.46-47.

155. ஷெ, பக்.22-23.

156. **தமிழர் மதம்**, பக்.125.

157. மேற்கோள்: **முக்தி வழி**, பக்.240.

158. பெரிய ஞானக்கோவை (**சித்தர் பாடல்கள்**, 1907).

159. ஞானக்கோவை என வழங்கும் **சித்தர் பாடல்கள்**, பக்.204.

160. மேற்கோள் : **முக்தி வழி**, பக்.216-217.

161. ஷெ. பக்.219-220.

162. **இரட்சணிய மனோகரம்**, 322-324, 329-330.

163. **கிறிஸ்துவின் அருள்வேட்டல்**, பக்.16.

164. **வேதநாயக சாஸ்திரியார்**, ஜெபமாலை, பக்.15-17.

165. **இரட்சணிய மனோகரம்**, பக்.380.

166. **கிறிஸ்துவின் அருள்வேட்டல்**, பக்.17-18.

167. **வெர்ன் வோர்செஸ்டர்**, பக்.17-18.

168. மேற்கோள் : **எ.ஆ.கிருஷ்ணபிள்ளை நூல்கள் - ஓர் ஆராய்ச்சி**, பக்.294-295.

169. C.C. Crawford, **The Eternal Spirit: His Person and Powers**, pp.295ff.

169A. எ.ஆ. கிருஷ்ண பிள்ளை, **போற்றித் திருஅகவல்**, 40.

170. **இரட்சணிய மனோகரம்**-174,131.

171. **இரட்சணிய சமய நிர்ணயம்**, பக்.169-180.

172. **இரட்சணிய மனோகரம்**,332.

173. மேற்கோள் : **பரமகுரு**, பக்.48.

174. ஷெ. பக்.49.

175. **சற்குரு சதகம்**, பக்.44.

176. மேற்கோள்: **பரமகுரு**, பக்.1.

177. எச்.ஏ.பாப்வி, **சற்சமய விளக்கம்**, பக்.24-25. மேலும் சாது செல்லப்பா இயற்றிய **குரு யார்?** என்னும் சமய ஆராய்ச்சி நூலையும் காண்க.

178. மு. கோவிந்தசாமி, **இலக்கியத் தோற்றம்**, பக்.1, 172.

179. D. Rajarigam, **The History of Tamil Christian Literature**, pp.28-29.

180. **The Christian Literature Society 125th Anniversary Souvenir**, p.45.

181. **அகத்தியர் ஞானம்** (மூலப்படி), பக்.3.

182. மோசசு மைக்கேல் பாரடே: **தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும்**, பக்.171-179.

183. **இரட்சணிய யாத்திரிகம் :** நிதான பருவம்: இரட்சணிய நவநீதப் படலம்-55.

Appendix I

Two Thousand Years of Missions Before Carey

By

Lemuel call Barnes
First Published, Chicago, 1900.
Asian Educational Services Reprint
New Delhi, Chennai, 2001
P P 88-92 (83-87)

"83. India was known to the ancients, was conquered by Alexander, i.e., the northern borders of it, and is mentioned in the book of Esther. It has been conjectured, though without proof, that in the account of the dayof Pentecost we should read Indian instead of "Judean" - the words are more alike in Greek than in English it is clear from their names that many of the articles of commerce in Solomon's day came from India. It is certain also that there was a colony of Jews in India *from whom representatives might have come at Pentecost. Tradition asserts that the Apostle Thomas went as a missionary to India. A Christian community which has existed there from early times bears his name and even shows his grave.

"84. There is no reason to doubt that Christianity was taken to India in the first century. But the first positive name and date on record belongs to the second century, **Pantaenus,** between 180 and 190 A.D. Pantaenus was a stoic philospher who had become a Christian and the head of a famous Christian college in Alexandria. Egypet. His pupils, Clement and Origen, were among the greatest of early christian teaches and writers. clement says that Pantaenus was a man of learning who had penetrated most profoundly into the spirit of Scripture." Jerome, in one of his letters, says "Pantaenus was sent to India that he might preach Christ among the Brahmins." He found Christians already there and using an early edition of the Gospel of Matthew, from which he brought back a copy to Alexandria. There is no means of knowing the extent of the work of the primitive missionaries in India. At the council of Nice (A.D.325) there was present a "Bishop of India." He was really Bishop in Persia. As India had been included in the Persian Empire, the Christians there were counted within his jurisdiction.

*COMMENTATOR'S NOTE : There wsa a Jewish Cemetary on the sea shore opposite to Kasimedu Cemetery near Rayapuram (Chennai Harbour). In due course of time that was destroyed by sea erosion. This historical evidence pre-supposes a Jewish settlement aound this part of the great harbour city of Madras. Chennai - Pattanam was the old name recently restored.

In the Kerala (Then known as malabar) state, in the Cochin city still there is a very old jewish settlement with a synagogue. The population is gradually reduced, as they migrate to Israel.



NESTORIAN TABLET OF INDIA

"85. In the last chapter we saw how the Nestorians were scattered throughout Asia. If now we turn to a native Hindoo history of the Malabar coast, India, we find that one **Thomas Cannaneo**, a Syrian, was allowed by one of the Rajas to settle there. He became very wealthy and was the progenitor of a numerous family Again two Syrian Bishops, **Mar Saporo** and **Mar peroses**, were extremely well received by a Raja and were permitted to build a church.

"The tradition of the Malabar Christians, often called the St.Thomas Christians, is that the Thomas who led their forefathers to Christ was the Apostle of that name. But it was, doubtless, some later Thomas, probably one of the Nestorians leading a band of that sect after it was driven from the Greek Roman Empire by the Emperor Theodosius. The current names and customs of the people, their use of a form of the Syrian language, their well-known later ecclesiastical relations and other data, leave no question that the main evangelizing agency was Nestorian. In the sixth century an Egyptian merchant, Cosmos, surnamed Indicopleustes (Indian Voyager), turned monk and wrote vivid accounts of what he had learned. His work, entitled "Topographia Christiania," is an invaluable record of the early spread of Christianity. He says:

"So that I can speak with confidence of the truth of what I say, relating what I myself have seen and heard in many places that I have visited... Even in the Island of Taprobane (Ceylon), in Father India, where the Indian Sea is, there is a church of Christians with clergy and a congregation of believers, though I know not if there be any Christians father on in that direction, and such is also the case in the land called Male, where the pepper grows. And in the place called Kalliana (Malabar), there is a bishop appointed from Persia as well as in the isle called the Isle of Dioscoris (Socotra), in the same Indian Sea. The inhabitants of that island speak Greek, having been originally settled also ordained and sent from Persia to minister among the people of the island and a multitude of Christians. We sailed past the island,a but did not land. I met, however, with people from it who were on their way to Ethiopia, and they spoke Greek."

"There words were written not later than 547 A.D. Many of the early Nestorian converts were from the Brahmin and another of the highest of the Hindoo castes. For centuries the Christian community enjoyed great liberty and prosperity.

"86. A precious monument of the work of the Nestorian missionaries was unearthed near Madras about the year 1547. It is an altar slab with a dve hovering over a cross cut in relief. On the margin are inscriptions belonging to the seventh or eighth centuries, one in Syriac, "Let me not glory except in the cross of our Lord Jesus Christ," and one in Pahlavi, "Who is the true Messiah and God alone and Holy Ghost." A more impressive monument of Nestorian missions is the continued existence of Malabar Christians. One thousand years after the first Nestorian planting in India the Portuguese found there one hundred villages composed entirely of Nestorian Christians, and in all the country 1,400 churches, with

200,000 souls. These people paid a slight tribute to the Rajas, but were governed in matters both temporal and spiritual by their own archbishop, who received ordination from the Nestorian patriarch in Persia. They used Syriac in all their church services, permitted their priests to marry and admitted no images in their simple meeting-houses. Through native political oppression and through still more shameful Romish persecuiton they had been reduced by the time of Carey to 116 Churches all told, eighty-four united to Rome and thirty-two still independent. They recovered somewhat in the nineteenth century, so that they are as numerous now as they were four hundred years ago, when the Portuguese unhappily discovered them. It is a pleasure to know that the census of British India in 1891 found 200,467 souls as a living monument of the early Nestorian missions.

"87. During the Middle Ages a number of Franciscan and Dominican monks visited India with more or less vagrant missionary aims. But one need be mentioned here. Jordanus, a Dominican, was sent out in 1430 as a real missionary bishop. He wrote a book on the "Wonders of the East." The following passages indicates the temper of his work:

"In this India there is a scattered people, one here, another there, who call themselves Christians, but are not so, nor have they baptism, nor do they know anything else about the faith; nay, they believe St.Thomas the Great to be Christ! There, in the India I speak of, I baptized and brought into the faith about three hundred souls, of whom many were idolaters and Saracens. And let me tell you that mong the idolaters a man may with safety expound the Word of the Lord; nor is any one among the idolaters hindered from being baptized throughout all the East, whether they be Tatars, or Indians or what not!

"As God is my Witness, ten times better (Christians) and more charitable withal be those who be coverted by the Preaching Minor friars to our faith than our flok here, as experience hat taught me. And of the conversion of those nations of India I say this, that if there be two hundred or three hundred good friars who would faithfully and fervently preach the Catholic faith, there is not a year which would not see more that X. thousand persons converted to the Christians faith. For Whilst I was among these schismatics and unbelievers, I believe that more than X. thousand, or thereabouts, were converted to our faith; and because we, being few in number, could not occupy or even visit many parts of the land, many souls (woe is me!) have perished, and exceeding many do perish for lack of preachers of the Word of the Lord.

... How many times have I has my hair plucked out and been scourged and been stoned God Himself knoweth and I, who had to bear all this for my sins, yet have not attained to end my life as a martyr for the faith as did four of my brethren. Nay, five Preaching friars and four Minors were there in my time cruelly slain for the Catholic faith. Woe is me that I was not with them there!"

துணை நூல்கள்

அகத்தியர் : அகத்தியர் ஞானம் (ஞானோதயம்: The Dawn of Wisdom). Madras: M.R.T. & B.S. in Union with the C.L.S.

: அகத்தியர் ஞானம் 30, (பதிப்பாசிரியர் : அ.வள்ளிநாயகம் பிள்ளை) நெல்லை மாவட்டம்: விக்கிரமசிங்கபுரம், தூதன் அச்சகம், நாகர்கோவில்.

அண்ணாதுரை, சி.என். : நாடும் ஏடும், சென்னை: "மாலை மணி" பதிப்பகம்.

அருளப்பா, இரா. : இந்தியாவின் அப்போஸ்தலர், சென்னை.

ஆபிரகாம் பண்டிதர் : கருணாமிர்த சாகரம் ஏசியன் எடுகேசனல் சர்வீசஸ், புது தில்லி, 1984.

இரத்தினம், சு.தா. : பரம குரு. திருநெல்வேலி: கீழ் ஆம்பூர், 1968.

இராமலிங்க அடிகள் : திருஅருட்பா, வடலூர்: சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், 1972.

ஊரன் அடிகள் : இராமலிங்க அடிகள் வரலாறு, திருச்சிராப்பள்ளி: சமரச மார்க்க ஆராய்ச்சி நிலையம், 1971.

கதிரைவேற் பிள்ளை, நா. : தமிழ் மொழி அகராதி, நியு டெல்லி: ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், 1981.

கந்யைா பிள்ளை, ந.சி. : இந்து சமய வரலாறு, சென்னை, புரோகிரசிவ் அச்சகம், 1980.

கலியாண சுந்தரனார், திரு.வி. : சிவனருள் வேட்டல், சென்னை: சாது அச்சுக் கூடம், 2-ஆம் பதிப்பு, 1955.

: கிறிஸ்துவின் அருள்வேட்டல், 3ஆம் பதிப்பு, சென்னை: சாது அச்சுக்கூடம், 1856.

கிருஷ்ண பிள்ளை, எ.ஆ. : நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு (2ஆம் பதிப்பு), 1980.

: இரட்சணிய யாத்திரிகம், சென்னை: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1984.

: இரட்சணிய மனோகரம், சென்னை:1978.

	:	இரட்சணிய சமய நிர்ணயம், 2ஆம் பதிப்பு, தூத்துக்குடி, (பதிப்பாளர்: சு.சி.அ. வேதரத்தினம்), 1956.
	:	இரட்சணிய யாத்திரிகம், ஆசியவியல் நிறுவனம், சென்னை-1998.
	:	போற்றித் திருஅகவல், சென்னை, 1979.
கோவிந்தசாமி மு.	:	இலக்கியத் தோற்றம், சென்னை, 1960.
சாலமோன், ஒய்.எம்	:	சத்தியானந்தப் பாடல், சென்னை, 1982.
சிங்காரவேலு முதலியார், ஆ	:	அபிதான சிந்தாமணி, நியு டெல்லி, ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், 1981.
சித்தர் பாடல்கள்	:	சென்னை: பூம்புகார் பிரசுரம், 1979.
	:	சித்தர் பெரிய ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள், சென்னை: பிரேமா பிரசுரம், 1968.
சிவ சுந்தரம்,	:	முக்தி வழி, சுவிசேஷ பிரச்சார சேவை, சேலம், 1971.
சுப்பிரமணியப்பிள்ளை, கா.	:	இலக்கிய வரலாறு (முதற்பகுதி) கழக வெளியீடு, சென்னை, 1960.
சுந்தரவடிவேலு, நெ.து.	:	புரட்சியாளர் பெரியார், சென்னை: எஸ்.சந்த் அண்டு கம்பெனி லிமிடெட், 1979.
சுந்தர்ராஜ். எபி	:	மதமாற்றம் எனும் மயக்கம், பாரத்ஜோதி, சென்னை, 1999.
செல்லப்பா, சாது	:	"குரு யார்?" கோயம்புத்தூர் இந்திய சுவிசேஷ செயற்படு குழு, 1679.
	:	ஓம். கோயம்புத்தூர், இந்திய சுவிசேஷ செயற்படு குழு, இரண்டாம் பதிப்பு.
ஞானசிகாமணி, வீ.	:	எ.ஆ. கிருஷ்ணபிள்ளை நூல்கள் - ஓர் ஆராய்ச்சி, சென்னை, 1978.
டான் டீ வெல்ட்	:	வேதாகமத்திலுள்ள திருச்சபை, இரு பாகங்கள், சென்னை, 1977-79.
திருமூலநாயனார்	:	திருமந்திரம், ஸ்ரீவைகுண்டம் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி, வெளியீடு, 1960.

தெய்வநாயகம், மு. : திருவள்ளவர் கிறித்தவரா? சென்னை: மெய்ப்பொருள் பதிப்பகம்.

: ஐந்தவித்தான் யார்? சென்னை: மெய்ப்பொருள் பதிப்பகம்.

தேவநேயப் பாவாணர், ஞா. : கிறித்தவக் கீர்த்தனம், சென்னை, 1981.

: திருக்குறள் தமிழ் மரபுரை, காட்டுப்பாடி, நேசமணி பதிப்பகம்.

: பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், காட்டுப்பாடி விரிவு, நேசமணி பதிப்பகம், 1966.

: தமிழிலக்கிய வரலாறு, காட்டுப்பாடி, 1979.

: தமிழர் மதம், காட்டுப்பாடி, நேசமணி பதிப்பகம், 1972.

: மண்ணில் விண், காட்டுப்பாடி.

நாமக்கல் கவிஞர் : நாமக்கல் கவிஞர் பாடல்கள், (தொகுப்பாசிரியர்: புலவர்தணிகை உலகநாதன்) சென்னை, தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, 1960.

பவுல் இராம கிருட்டிணர், மு. : திருவடி மாலை, மதுரை, பவுல் பதிப்பகம், 1977.

பால்ராஜ். த. : அகத்தியர் அறைகூவல், திருச்சி.

பாப்லி, எச்.ஏ. : சற்சமய விளக்கம்.

பாரதியார், சுப்பிரமணி : பாரதியார் பாடல்கள்.

பிள்ளை, கே.கே. : தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1972.

புதிய ஏற்பாடு, (புதிய திருப்புதல்) சென்னை, இந்திய வேதாகமச் சங்கம்.

மதுரைத் தமிழிப் பேரகராதி, மதுரை, இ.மா. கோபால கிருஷ்ணக்கோன், 1937.

மறைமலையடிகள் : தமிழர் மதம், மறுபதிப்பு, சென்னை கழக வெளியீடு, 1965.

மாசிலாமணி, ஜெ.எஸ். : இந்துமத சங்கிரகம், சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1934.

மில்டன், ஜான். : சுவர்க்க நீக்கம், (தமிழாக்கம்: P.பச்சையப்பன்), வில்வராணி, தமிழ் நூல் நிலையம், 1970.

மைக்கேல் பாரடே, மோ. : தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும், சென்னை.

வரதராசன், மு. : தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதமி, புது தில்லி, 1972.

வேதநாயகம், ஜி.எஸ். : அமல குரு சதகம், (பதிப்பாசிரியர் S.தாமஸ் இரத்தினம், திருச்செந்தூர், 1968.

: சற்குரு சதகம்.

வேதநாயக சாஸ்திரியார் : சாஸ்திரக்கும்மி, C.C .S.தாமஸ் இரத்தினம் பதிப்பு, திருச்செந்தூர் 1969.

: ஜெபமாலை, தஞ்சாவூர், 1974.

: பெத்லேகம் குறவஞ்சி, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1964.

வேலுப்பிள்ளை, ஆ : தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், சென்னை, 1969.

வேதாகமம், (பழைய மொழிபெயர்ப்பு), சென்னை இந்திய வேதாகமச் சங்கம்.

பதினெண் சித்தர்கள் பெரியஞானக்கோவை, சென்னை, ஸ்ரீபத்ம நாபவிலாச அச்சுக்கூடம், 1907.

பதினெண் சித்தர் பெரிய ஞானக்கோவை (சுத்த பதிப்பு. பதிப்பாசிரியர்: வா.சரவண முத்துப்பிள்ளை) சென்னை: பி.இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ்.

Appasamy, S.P. : The Christian Literature Society 125th Anniversary Souvenir, Madras 1982.

Arunachalam, M. : The Siddha cult in Tamilnad, Madras.

Benjamin, Waker : Hindu World (Vol.1&2), Munshiram Manohaslal Publisher Pvt, Ltd., New Delhi, 1983.

Caldwell, Bishop R : A Comparative Grammar of Dravidian Languages, University of Madras, Chennai, 1975.

: A History of Tinnevelly, Asian Educational Services, 1982.

Clayton, A.C. : The Rig Veda and Vedic Religion, With Readings from the Vedas. Varanasi, Bharati Prakashan, 1980.

Devanesan, D.W. : Deductions on the origin of the Tamils, Palayamkottai, 1955.

George, P.V. : The Unique Christ and the Mystic Gandhi Tiruvalia: The Malabar Christian Offic,1934.

George, T.J.G. (Ed) : India 1000 - 2000, Express Publications, Madurai, Chennai, 2000.

Hedlund, Roger E. (Ed) : Christianity is Indian (The Emergence of an Indegenous Comunity Miis, Mulapore), ISPCK, Delhi, 2000.

Hoover, A.J. : The case for Teaching Creation, Know Truth Books, College Press USA, 1981.

Ilakkuvanar, S : Tholkappiyam with critical studies, Madurai, 1963.

Kanakasabai, V : The Tamis Eighteen Hundered Years Ago. New Delhi: Asian Educational Services, 1979.

Krishna Sastri : South Indian Images of Gods and Goddesses, Assian Educational Services, New Delhi, 1995.

Londsey, Hai : Satan is Alive and well on planet Earth. Michigan, Zondervan Publishing House, 1974.

Maxmuller, F. : The Six systems of Indian Philosophy. Madras: Longmans, 1916.

Moraes, F.M. : A History of Christianity in India. Bombay, Manaktalas, 1964.

Moore, Edward : The Hindu Pantheon, Asian Educational Services, New Delhi, 1981.

Nehru, J. : The Discovery of India, Madras: Asia Publishing House, 1973.

Nilakanta Sastri, K.A. : Foreign Notices of South India (from Megasthenes to Huan). Madras: University of Madras, 1972.

Palia, E.K. : Origin and Objects of Religion, Bangalore, 1956.

Panikkar, R. : The unknown Christ of Hinduism, Assian Traonil Corporation, Banglore, 1982.

Percival, P.Ed. : Manava Dharma Sastra, Assian Educational Services, New Delhi, 1982.

Radhakrishnan, S : Our Heritage, Delhi: Hind pocket books, 1973.

Rajarikam, D : The History of Tamil Christian Literature, Madras 1958.

Ramachandra Dikshitar, V.R. : Origin and Spread of the Tamils, Madras: Kazhagam, 1971.

Ratcker, J. Fr. : The Arsenal for the Christian Soldiers in India. Madras: Methodist Publishing House, 1910.

Simon Casie Chitty : The Tamil Plutarch, Assian Educational Services, New Delhi, 1982.

Slater, Gilbert : The Dravidian Element in Indian Culture, Assian Educational Service, New Delhi, 1982.

Srinivas Iyengar, P.T. : Life in Ancient India, AES., New Delhi, 1982.

Stone, Anthony, P. : A Christian looks at Astrology, Tyoti Pocket Books, Bombay, (GLS), 1974.

Wald, S.N. : Saint Thomas the apostle of India. Indore: Sat-Prachar Press, 1952.

WilKins, W.I. : Hindu mythology, Vedic and Puranic, Delhi, 1973.

இந்த நூல் இந்த உரை

“இது பெறற்கரிய செல்வம் என்பது முழுமையான உண்மை. தமிழகத்தில் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் உழைப்பும் உள்ளொளியும் நுண்மையும் செறிவும் ஆழமும் அருமையும் ஒருங்கே அமையப் பெற்ற நூல்கள் ஒருசில வெளியிடப்பட்டிருந்தால் அந்த ஒரு சிலவற்றுள் – உரையுடன் வெளியாகின்ற இந்த நூலும் ஒன்றாகும்,

“உரை அகத்தியர் ஞானத்தை நல்லதோர் இலக்கியமாகச் சிறப்பு செய்து காட்டுவதுடன், உரையே ஒரு தனி இலக்கியமாகவும் திகழ்கின்றது, வரலாறு, தத்துவம், அறிவியல், மொழியியல் ஆகிய பல இயலும் கூடியதொரு கருவூலம் என இந்நூலைப் போற்றுவேன்.”

– பேரா. பொன்னு ஆ. சத்திய சாட்சி

“தெய்வப் பணியில் தங்களை ஈடுபடுத்தியுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் இப்புத்தகத்தை வாசிப்பதும் இதிலுள்ள அகத்தியர் பாடல்களை மனனம் செய்வதும் மிக்க அவசியம் என்றே சொல்லுவேன், இப்படியாக அகத்தியர் பாடல்களை மேற்கோள் காட்டி பொது மக்களிடத்தில் கிறிஸ்தேசுவை மெய் தெய்வமாகவும் ஒரே பாவப் பரிகாரியாகவும் விளக்க முயலும்போது கேட்போரின் சிந்தனைகள் சிந்திக்கத் தூண்டப்படுகின்றன என்பது யான் ஊழியத்தில் கண்ட அனுபவம்.”

– பாகவதர் வேதநாயக சாஸ்திரியார்

“அகத்தியர் எழுதிய முப்பது பாடல்களைக் கொண்ட அகத்தியர் ஞானம் என்ற நூலை எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி ஒரு கிறிஸ்தவ நூலாகக் காணலாம். இதை வைத்து டாக்டர் ஞானசிகாமணி அவர்கள் இணையற்ற ஒரு ஆராய்ச்சி நூலைப் படைத்துள்ளார்.”

– எபி சுந்தர்ராஜ்

மதமாற்றம் எனும் மயக்கம், பக்.20